# பாரதியும் கடவுளும்

தொகுத்து எழுதியவர்

ம. ப. பெரியசாமித் தூரன்

வானதி பதிப்பகம்

தி. நகர் · சென்னை-17

முதற்பதிப்பு : மார்ச், 1981

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 11 - 00

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600014.

தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன்

அவர்களின்

# அணிந்துரை

தமிழில் கவிஞர்களுக்குப் பஞ்சம் இல்லை; அவர்கள் பாடிய கவிதைகளும் கொஞ்சம் அல்ல. வளர்ந்து படர்ந்த ஆலமரத்தின் நிழலிலே எந்தச் செடியும் வளம் பெற்று வளராது. அப்படி ஏதாவது ஒரு செடி வளருமானால் அதை ஓர் அற்புதம் என்றே சொல்ல வேண்டும்.

சங்ககாலத்துப் பாடல்களுக்குப் பிறகு வேறு பாடல்கள் தலை எடுக்கவில்லை. சில நூற்றாண்டுகளுக்குப்பின் சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்கள் எழுந்தன. அவற்றுக்குப்பின் ஒரே இருள். கம்பன் தோன்றித் தன்னுடைய இராமாயணத்தால் தமிழில் ஒரு புதிய ஒளியைப் பரவ விட்டான். பொட்டலான பாலைவனத்திலே அமுதமழை பெய்ததைப் போல அது எங்கும் இன்பத்தைப் பரப்பியது. சாதி சமய வேறுபாடின்றித் தமிழர்கள் கம்பராமாயண அமுதக்கடலில் குளித்து இன்புற்றார்கள். என்றும் இல்லாத கவிதைச் சுவையை நுகர்ந்தார்கள்.

மறுபடியும் ஒரு தேக்கம். அங்கும் இங்கும் சில மின்மினிப் பூச்சிகள் ஒளிவிட்டன. அந்த ஒளி இருளைப் போக்குமா? என்றாலும் செறிந்த இருளினிடையே அவற்றின் ஒளி சிறிது ஆறுதல் அளித்தது. பசியால் அவதியுறும் ஒருவனுக்குக் கடலைச் சுண்டல் கிடைத்ததுபோலே கிடைத்தது. அதை மென்று சுவை பார்த்தனர் தமிழர்கள். வயிறு நிரம்பவில்லை.

ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த பாரதத்தில் கலையும் கவிதையும் மங்கிக் கிடந்தன. எங்கும் ஆங்கில

மோகம். ஆங்கிலமே கோலே ஏந்தி ஆட்சி புரிந்தது. மக்கள் தனியே பேசும்போதுகூட ஆங்கிலத்தில் பேசுவதைப் பெருமையாக எண்ணினுர்கள். 'டமில்' பேச நாணினுர்கள்.

இந்த அறியாமை இருள் வெள்ளத்தினிடையே அமுது கொப்புளிக்கும் சந்திரன் ஒருவன் தோன்றினுன். கால வெளியின் தூரத்தில் இருக்கும் பொருளேயும் காட்டும் ஆற்றலுள்ள அமுத கிரணங்களே வீசினுன். அதில் தீயின் வெம்மையும் தேனின் சுவையும் இணேந்திருந்தன. பொய்ம்மை யையும் அச்சத்தையும் சாடுவதில் அந்தச் சந்திரனுடைய கதிர்களில் தீக்கொழுந்துகள் மூண்டன. ஞானத்தையும் அன்பையும் வீசுகையில் அதன் கதிர்கள் தண்ணென்று இருந்தன. வீரம் ஒருபக்கம், ஈரம் ஒருபக்கம்; துயரம் ஒரு பக்கம், துணிவு ஒருபக்கம்.

இவ்வாறு தண்டமிழ் வானில் தோன்றிய சந்திரன்தான் **மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**. அவருடைய கவிதைகள் தமிழ் நாட்டில் ஒரு புதிய யுகத்தையே தோற்றுவித்தன. புழுவைப் புலியாக்கவும், துரும்பை இரும்பாக்கவும் வலிமையுடைய வீரசக்தி அவற்றில் இருந்தன. பாரததேவியின் பெருமையை விளக்கும் பேரொளியை அவை விரித்தன. வேதநெறியையும் தமிழினிமையையும் அவை புகழ்ந்து பாராட்டின.

இந்த நாட்டின் கலேகளுக்கும், வாழ்க்கைக்கும், பழக்க வழக்கங்களுக்கும் அடிப்படையாக இருப்பது கடவுள் உணர்வு. எத்தனே கல்வி கற்ருலும், எவ்வளவு மகத்தான காரியங்களேச் சாதித்தாலும், கடவுள் உணர்வு இல்லாவிட்டால் அவை அத்தனேயும் வீண் என்பது இந்த நாட்டின் கொள்கை. நெட்டியால் வண்ண விசித்திரங்களுடன் ஒரு வீட்டைக் கட்டலாம்; அதைப் பார்த்து மகிழலாமேயன்றி அதில் புகுந்து வாழமுடியாது. அதற்கு அஸ்திவாரம் இல்லே. சுவர்களுக்கு உரம் இல்லே. கவர்ச்சியாகத் தோன்றும் நூல்கள் அந்த நெட்டி வீடுகளேப் போன்றவையே.

இந்த உண்மையை நன்கு உணர்ந்தவர் பாரதியார். கடவுள் உணர்விலே அவர் சிறந்து நின்றவர். மனிதன் நுகரும்

உணவுப் பண்டங்கள் பல வடிவங்களையும் வண்ணங்களையும் சுவைகளையும் பெற்றிருக்கின்றன. பொதுவாகச் சுவைகளை ஆறு என்று வகுத்திருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு சுவையிலும் எத்தனை வகை! புளியிலும் புளிப்பு உண்டு! எலுமிச்சம் பழத்திலும் புளிப்பு உண்டு. இரண்டும் ஒன்றாகுமா?

பல்வேறு மன இயல்புடையவர்கள் தங்கள் தங்களுக்கு விருப்பமான பண்டங்களைச் சுவைத்து இன்புறுவார்கள். ஒருவனுக்கு மி ள கா ய் க் கா ர ம் பிடிக்கும்; மிளகுக் காரம் பிடிக்காது. மற்றொருவனுக்கு மிளகுதான் பிடிக்கும். 'செத்தபிறகு சிவலோகம், வைகுந்தம் பெறலாம்' என்று சொல்வது அன்று இந்து மதம். அது இந்த உடம்போடு இருக்கும் போதே இறையருள் அநுபவத்தைப் பெறலாம் என்று சொல்கிறது. அவ்வாறு அநுபூதி பெற்ற பெரியவர்கள் இங்கே இருந்தார் கள்; இப்போதும் இருக்கிறார்கள்; இனியும் இருப்பார்கள்.

தம்முடைய உள்ளத்துக்கு உவப்பான திருவுருவத்தில் மனத்தைப் பதித்துத் தியானம் செய்து இன்புறுபவர்கள் பக்தர்கள். உண்மையான பக்தன் தன்னுடைய உபாசனா தெய்வத்தினிடம் பற்றுவைத்துச் சாதனை செய்து வருவான். ஆனால், பிற மூர்த்திகளிடம் வெறுப்புக் கொள்ளமாட்டான். அவரவர்கள் தம்வீட்டுப் புறக்கடையில் கிணறு தோண்டித் தண்ணீர் பெறுகிறார்கள். தன் வீட்டில் உள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் குளித்தும் குடித்தும் நலம் பெறுகிறவன், மற்றவர்கள் வீட்டுக் கிணறுகளில் தண்ணீர் இல்லை என்று சொல்லமாட்டான். எல்லாக் கிணறுகளிலும் தண்ணீர் உண்டு என்ற உண்மையை அவன் நன்கு அறிந்திருப்பான். ஆனாலும், தனக்கு வேண்டியபோதெல்லாம் பயன்படுவது தன் வீட்டுக் கிணற்றின் தண்ணீர் என்பதை அறிவான்.

ஒரு மூர்த்தியை வழிபடும் உண்மையான பக்தன், மற்றவர்கள் வழிபடும் மூர்த்திகளாக இருப்பவர் தன் உபாசனா தெய்வமே என்று எண்ணுவான். இதுதான் உண்மையான

சமரசம். தனக்கென்ற ஒரு வீட்டைப் படைத்தவன் பசிக்கும் போதெல்லாம் தன் வீட்டில் உண்ணுவான். எப்போதாவது வேறு நண்பர் வீட்டுக்குப் போனுல் அங்கும் உண்ணுவது உண்டு. அப்படியின்றித் தனக்கென்று உண்ண வீடில்லாமல் உழலுபவன் பிச்சைக்காரன். தனக்கென்று நிலேயான உபாசன மூர்த்தியைக் கொள்ளாதவர்கள் அத்தகையவர்களே.

பாரதியார் பராசக்தியைத் தம்முடைய வழிபடுகடவுளாகக் கொண்டவர். ஆனுல் மற்ற மூர்த்திகளிடத்தில் வெறுப்பின்றி அவற்றையும் பாடியிருக்கிருர். ஆதிசங்கரர் ஆறு மூர்த்திகளே வழிபடும் நெறிமுறைகளேச் செப்பம் செய்து அமைத்தார். அவர் காலத்துக்குப்பின் இந்தியாவில் வேறு பல சமயங்கள் புகுந்தன. கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள் இங்கே வந்தன. அவை இங்கே வந்த பிறகு வந்த பாரதியாரின் சமரச உணர்வு அவற்றையும் தழுவிக் கொண்டன. ஏசு கிறிஸ்துவை யும் அல்லாவையும் அவர் பாடினுர்.

விநாயகரைப் பாடும்போது அவரே எல்லாக் கடவுளுமாக இருக்கிருர் என்று சொன்னுர். எதைப் பாடினுலும் யாரைப் புகழ்ந்தாலும் பராசக்தி, "என்னேப்பாடு" என்று கேட்கிருளாம். ஆகையால் அந்தப் பெருமாட்டியைச் சரண்புகுந்து, அவளுடைய புகழைப் பலபல வகையில் விரித்துப் பாடுகிருர்.

"பாரதியும் கடவுளும்" என்ற இந்த நூல், பாரதியாரின் உண்மையான சமரச நோக்கைப் புலப்படுத்தும் அருமையான நூல். கவிதையிலும் உரைநடையிலும் அவர் கடவுளேப்பற்றிச் சொல்லுவனவற்றை யெல்லாம் தொகுத்துவைத்துக் காட்டும் அரிய தொகுப்பு இது.

பாரதியார் ஆழ்ந்த சக்தி பக்தர்; ஆனுல் அவர் மற்றத் தெய்வங்களேயும் வாழ்த்தத் தெரிந்தவர். பாரதியார் அத்துவைத வேதாந்தி; ஆனுல் கவிஞராகிய அவருக்கு எல்லாம் மாயை என்பதில் உடன்பாடு இல்லே. அவர் மூர்த்திகளே வழிபட்டு இன்புறுகிறவர்; ஆனுல் வெறும் விக்கிரக வழிபாட் டோடு நிற்பதை அவர் விரும்பவில்லே.

அவருக்குத் தொழிலும் உபாசனைதான்; பராசக்தி தொழில் செய்வாரிடமும் விளங்குகிறாள். ஞானியரின் மாசுமறு வற்ற உள்ளத்திலே கொலு வீற்றிருப்பவள், கைவருந்தி உழைப்பவர் தெய்வமாகவும் விளங்குகிறாள். உழைப்பில்லாத சோம்பேறியை வெறுப்பவர் அவர்; சோம்பலே பெரிய நோய் என்பது அவர் கொள்கை.

பல சாமியார்களைக் கண்டு பாரதியார் பேசுகிறார் அவர்கள் கூறிய உண்மைகளை உணர்ந்து மகிழ்கிறார். குள்ளச் சாமியின் நெடிய வடிவத்தைக் கண்டு வியக்கிறார். கோவிந்த சாமியைப் போற்றிப் புகழ்கிறார். அச்சமும் பொய்ம்மையும் போக்கினால் அதுவே மெய்ஞ்ஞானம் என்பது அவர் சித்தாந்தம்;

"பயமெனும் பேய்தனை அடித்தோம்—பொய்ம்மைப்
பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்"

என்று ஜய பேரிகை கொட்டுகிறார்.

தெய்வத்தை எங்கும் பார்க்கும் அகண்ட தரிசனம் அவருக்குக் கிடைக்கிறது.

"காக்கை குருவி எங்கள் சாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாம் அன்றி—வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"

என்ற பாடலில் அத்துவித நிலையைக் காட்டுகிறார். 'தன்னையன்றி வேறொன்று இருப்பதாகக் கொண்டால்தான் அச்சம் உண்டாகும். அத்வைத உணர்விலே அச்சத்துக்கு இடம் இல்லை' என்பது அத்வைத சித்தாந்தம்.

இதைக் கவிதையென்னும் யோகத்தில் கைவந்த பாரதியார் உணர்கிறார். "வானிற் பறக்கும் புள்ளெலாம் நான்" என்று பெருமிதத்தோடு பாடுகிறார். தின்னவரும் புலியிலும் பராசக்தியைக் காணுகிறார். அவருடைய கவிதை விசுவரூபம் எடுத்து, அகில உலகத்தையும் தன்னுள்ளே அடக்கிக் கொள்கிறது.

இத்தகைய உண்மைகளை யெல்லாம் இந்த நூலிலுள்ள கவிதைகளும் கட்டுரைகளும் வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொன்றின் தொடக்கத்திலும் அன்பர் திரு. தூரன் அவர்கள் சிறிய குறிப்பு ஒன்றை எழுதியிருக்கிருர். பாரதியாரின் உள்ளக் கிடக்கையைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுபவை அந்தக் குறிப்புகள்.

இந்த நூல் பாரதியாரின் கடவுளுணர்வைத் தனியே எடுத்துக் காட்டும் கண்ணுடி; அவர் கவிதையில் அந்த உணர்வு எப்படியெல்லாம் புகுந்து விளையாடுகிறது என்பதைப் புலப் படுத்தும் ஓவியம்.

வாழ்க திரு தூரன்; அவர் முயற்சிகள் வெல்க!

'காந்தமலை'
25-2-81

கி. வா. ஜகந்நாதன்

# முன்னுரை

**பா**ரதியார் ஓர் ஆத்ம ஞானி என்று மிகுந்த ஆராய்ச்சி செய்து ஓர் அன்பர் எழுதியிருக்கிறார். அவருடைய முயற்சியைப் பெரிதும் பாராட்ட வேண்டும். பாரதியாரிடத்து மிகுந்த பற்று நீண்டகாலமாகக் கொண்டிருக்கிறவன் நான். இப்படிப் பல கோணங்களிலிருந்து ஆழ்ந்த ஆராய்ச்சிகள் வெளி வரவேண்டும் என்பது என்னுடைய ஆசை. நான் பெரும் பாலும் பாரதியார் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி எழுதி யுள்ள நூல்களை எல்லாம் கவனத்தோடு படித்திருக்கிறேன். பாரதியார் ஓர் ஆத்ம ஞானி என்று தமது ஆராய்ச்சித் திறமையால் நிலைநாட்ட முயன்றிருக்கிறார் அந்த அன்பர். இது ஒரு புதிய கருத்தாகும். யாருமே அவ்வாறு பாரதியார் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி எழுதியவர்கள் இக்கருத்தைக் குறிப்பிடவே இல்லை. ஆனால், கண்ணன் பாட்டின் முதல் பதிப்பிற்கு முகவுரை எழுதிய அன்பர் திரு. பரலி சு. நெல்லையப்பப் பிள்ளை என்பவர்மட்டும் பாரதியார் தமிழ் நாட்டின் தவப்பயன் என்றும், ஜீவன் முக்தர் என்றும் குறிப் பிடுகின்றார். அது அவருக்கு பாரதியார் மேலுள்ள பேரன்பை மட்டும் காண்பிக்கிறது என்றுதான் கொள்ளவேண்டும். அதே கண்ணன் பாட்டின் இரண்டாம் பதிப்பிற்கு, மிகச் சிறந்த திறனாய்வாளரான திரு. வ. வே. சு. ஐயர் அவர்களும் பாரதியாரிடத்து மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறார் என்று அவருடைய முன்னுரையைப் படிக்கும்போது தெளிவாக விளங்கும்.

**சுற்றி நில்லாதே போ—பகையே**
**துள்ளி வருகுது வேல்.**
**கைதனில் வில்லும் உண்டு;**
**காண்டீவம் அதன்பேர்.**

என்று பாரதியார் எழுதியுள்ள கவிதை வரிகளுக்கு அட்சர லக்ஷம் பெறும் என்று மிகஉயர்வாக சொல்லியவர் திரு. வ. வே. சு. ஐயர் அவர்கள். பாரதியாரோடு பல ஆண்டுகள் புதுச்சேரியில் வாழ்ந்து வந்திருக்கிறுர். ஆகவே, அவருக்கு பாரதியாரைப் பற்றி மிக நன்ருகத் தெரியும் என்பது திண்ணம். பாரதியார் ஒரு ஜீவன் முக்தர் என்ருல், அது மானிடப் பிறவி எடுத்ததின் பயன் என்று பொதுவாக நாம் அனைவரும் கருதுகின்ரும். பாரதியார் ஓர் ஆத்ம ஞானி என்ருல் அவர் அதைக் குறிப்பிடத் தவறமாட்டார்.

படிப்பு அறிவு வேறு, உள் உணர்வு வேறு என்பதை நாம் நன்கு தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். எல்லாம் ஒன்று பிரம்மமயம் என்று சொல்லுவது எளிது. ஆனுல் அவ்வாறு உணர்வது மிகுந்த சிரமமான தொன்ருகும். "பாரதியார் கோபதாபம் மிகுந்தவர். வ. வே. சு. ஐயரைப் போல ஐம்புலன்களை அடக்கி வென்றவர் அல்ல" என்று என்னிடத்திலே பலமுறை அன்பர் பரலி சு நெல்லையப்பரே சொல்லியிருக்கின்ருர். அதற்குத் திருமதி யதுகிரி அம்மாள் அவர்களின் 'பாரதியார் நினைவுகள்' என்ற சுவையான நூல் சான்றுகள் பல பகர்கின்றது. புதுச்சேரி கடற்கரைக்குச் செல்லும்போதே பிணங்கிக் கொண்டு, ஒருகணம் தனியாக விலகிப்போய் உட்காருவாராம். அடுத்தகணம் சமாதானத் திற்கு வந்து விடுவாராம். இன்னும் இவைபோன்ற பல குறை நிறைகளை அந்த அம்மாள் படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள். வாழ்க்கை வரலாறு என்ருல் அவ்வாறுதான் உண்மையை வெட்ட வெளிச்சமாகச் சொல்லவேண்டும். It is a most human document of Bharathiyar. பாரதியாரைப் பற்றியும் அவருடைய குறைநிறைகளைப் பற்றியும் சொல்லுகின்ற சுவை யான நூல் அது.

ஐன்ஸ்டன் கோல்ட்ரிஜ் போன்ற பெரிய மேதைகளிடத்தில் சில வேடிக்கையான குறைகள் காணப்படுவதுண்டு. அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்துப் பார்க்கின்ற போது இவைகள் நன்ருக விளங்கும். மேதைகளின் உயர்ந்த தன்மைக்காக மட்டுமே அவர்களை நாம் போற்றுவதில்லை. இவ்வாறு சில குறைகளுக்காகவும் அவர்களைப் பெரிதும் போற்றுகின்ருேம்.

"பாரதியார் அபின் சாப்பிடுகின்ற தீய பழக்கம் கொண்டவர்" என்று யாரோ ஒருவர் சொன்ஞர்!

எனக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது.

"நீயும் அபின் சாப்பிடு. பாரதியாரைப் போல ஓர் உணர்ச்சி மிக்க கவிதை எழுத முடிந்தால் உன் காலில் விழுந்து கும்பிடுகிறேன்" என்று நான் கத்தினேன்.

பாரதியார் இந்த உலக இன்பங்களை நன்கு ரசிக்கத் தெரிந்தவர். "செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் என்பவரைப் பித்தமனிதராம்" என்று நையாண்டி செய்பவர்.

மனைவி தங்கச் சிலைபோல் நிற்கிருள். அவள் பொய்யா? மடங்களில் சொல்லுகின்ற இதே பழக்கத்தை வீட்டிலும் புகுத்திவிட்டார்கள். "மனைவி பொய் என்று சதா சொல்லிக் கொண்டு இருந்தால் அது அமங்கலமாகுமன்ருே?" என்று ஓர் கட்டுரையிலே சாடுகின்ருர் பாரதியார். பாரதியாருக்கு வேதங்களுடைய கருத்துக்கள், நம்மாழ்வாருடைய அருளிச் செயல்கள் முதலியவற்றை எல்லாம் கிரகித்து மனதில் பதித்து வைத்துக் கொள்ளும் ஓர் நுட்பமான அதி அற்புதமான திறமை உண்டு. அவற்றில் கண்டுள்ள ஆழ்ந்த சிந்தனைகளை எளிதாகத் தமிழில் கவிதையிலும், உரைநடையிலும் அழகாகத் தெளிவு படுத்தும் திறமையும் உண்டு. கண்ணன் பாட்டு இதற்குச் சான்று. மகான் அரவிந்தரின் சேர்க்கையில் வேத ரிஷிகளின் கவிதைகளைப் போலவே உரைநடையில் புதுக்கவிதை இயற்றியுள்ளார்.

காந்தியடிகள் அடிக்கடி கூறுவதுண்டு: "ஐந்து மடங்கு கற்ற அறிவைக் காட்டிலும் ஐந்து தோலா அனுபவமே மேல்" என்று சொல்லுவார். ஆகையால் படிப்பறிவைக் கொண்டு, அதுவேதான் பாரதியாருக்குக் கிடைத்த அனுபவம் என்று முடிவு கட்டி விடக்கூடாது. எல்லா மதங்களும் ஒரே உண்மையைத் தான் தெரிவிக்கின்றன என்று சொல்லுவது எளிது. ஆனல், ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சரைப்போல எல்லா மதங்களையும் பின்பற்றி அவற்றில் உண்மை கண்டார் என்று அறுதியிட்டுக் கூறுவதுதான் அரிது. இவ்வாறு சொல்லும்போது எனக்கும் மிகுந்த துயரமாக இருக்கிறது. ஏனென்ருல், பாரதியாரை அந்த அளவிற்குப் போற்றுகிறேன். ஆனல், நான் எனது ஆராய்ச்சிக்கு எட்டியவரையில் உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும். பாரதியார் வாழ்க்கையைக் கூர்ந்து கவனிக்கும் போது, பாரதியார் ஆத்ம ஞானியல்ல, அவர் ஒப்பற்றகவி, தமிழ் நாட்டிற்கு வாராது போலவந்த மாமணி. தமிழகத்தின் தவப்பயன். ஒரு புதிய விழிப்பை உண்டாக்கியவர். ஆகையால், என்றும் அழியாதிருப்பார் என்று சொல்லவே தோன்றுகிறது.

மேலும் ஒன்று. ஒரு ஞானிக்கு மரணபயம் இருக்கக் காரண மில்லை. பாரதியாருக்கோ மரணபயம் எப்போது பார்த் தாலும் பீடித்து வந்திருக்கிறது. மரணத்தை வெல்லும் உபாயத்தைப் பிற்காலத்தில் வெகுவாகக் கடைப்பிடித்து வந்திருக்கிருர். அதற்காக அவர் மௌனவிரதம் இருந்தும், ஒருசில சாமியார்களின் வழிகளைப் பின்பற்றியும் வந்திருக்கிருர். இந்த விபரீத போக்கைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று திரு. வ. வே. சு. ஐயர் அவர்களிடம் கேட்டுக் கொண்டதற்கு, "ஓர் புது வழி என்று கண்டால் பாரதியார் உற்சாகமாகக் கடைப்பிடிப்பார் என்றும், அதனைத் தடுக்க இயலாது" என்றும் திரு வ. வே. சு. ஐயர் கூறுகின்ருர்.

மேலும் அவர் கூறுகின்ருர், "மனத்தை ஆள்பவன்தான் திடமான மனிதன். சாமியார், பண்டாரம் முதலிய சிலரின் கூட்டுறவு அவரை வேறு வழியில் இழுத்துச் செல்கிறது" என்று கூறிவிட்டுக் கவலையோடு பெருமூச்செறிந்தாராம்.

புதுவையிலிருந்து மீண்டும் சுதேசமித்திரன் துணை ஆசிரியராக சென்னையில் அமர்ந்தபோதும், குள்ளச் சாமியாரை வரவழைத்த முயற்சி இங்கு கவனிக்கத்தக்கது.

தாயுமான சுவாமிகள் முடிந்த முடிவாக ரத்தினச் சுருக்கமாகப் பாடியிருப்பதைக் கேளுங்கள்.

"அருளால் எவையும் பார் என்றான்—அத்தை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்ட தல்லால்—கண்ட
என்னையுங் கண்டிலன் என்னடி தோழி?

இவ்வாறே பல மெய்ஞ் ஞானிகளும் தமது அனுபவத்தால் கண்டதைக் கூறியுள்ளனர். இதனை விளக்கமாக ஆராய்ந்து தீர்மானம் செய்துகொள்ள வேண்டும். விரிக்கில் பெருகும்.

மனித மனம் மிக அற்புதமானது. அதற்கு வசப்படாதது உலகில் ஒன்றும் இல்லை. மொத்தமாகத் தமிழ் இலக்கியப் படைப்புகளை நோக்கும்போது பாரதியாரை ஓர் ஆத்ம ஞானி என்றே சொல்லத் தோன்றலாம்; ஆனால் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் வேறு; பாரதியார் வேறு. அல்லது ஒருவேளை காலப் போக்கில் பாரதியார் ஓர் ஆத்ம ஞானி என்றே மெய்ப்பிக்கப் படுமாயின் என்னைவிட மகிழ்ச்சி அடையக் கூடியவர்கள் வேறு யாரும் இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

மேலும் ஒரு வார்த்தை. பாரதியார் வரிசையிலே எட்டு நூல்கள் மிக அழகாக வெளியிட்ட வானதி பதிப்பகத்தாருக்கும், என் முயற்சியைப் பாராட்டி அணிந்துரை வழங்கிய அறிஞர்களுக்கும் என் உளம் கனிந்த நன்றி உரியதாகும்.

ம. ப. பெரியசாமித் தூரன்

# பொருளடக்கம்

பக்கம்

## கவிதை


| | | |
|---|---|---|
| 1. | புதிய ஆத்திசூடி | 1 |
| 2. | விநாயகர் நான்மணிமாலை | 2 |
| 3. | விநாயகர் நான்மணிமாலை | 3 |
| 4. | விநாயகர் நான்மணிமாலை | 4 |
| 5. | முரசு | 5 |
| 6. | பாரதி அறுபத்தாறு | 5 |
| 7. | மணக்குளத்து விநாயகர் | 6 |
| 8. | ஆறு துணை | 14 |
| 9. | ஊழிக் கூத்து | 16 |
| 10. | காளிக்குச் சமர்ப்பணம் | 18 |
| 11. | மஹாசக்தி | 19 |
| 12. | திருமகளைச் சரண்புகுதல் | 22 |
| 13. | வெள்ளைத் தாமரை | 26 |
| 14. | மூன்று காதல் | 29 |
| 15. | அபேதாநந்தா | 33 |
| 16. | நிவேதிதா தேவி | 35 |
| 17. | ஜயம் உண்டு | 37 |
| 18. | யோக சித்தி | 38 |
| 19. | பகைவனுக் கருள்வாய் | 44 |
| 20. | யேசுகிறிஸ்து—அல்லா | 46 |
| 21. | சாகாவரம் | 48 |
| 22. | ஞாயிறு வணக்கம் | 49 |

| | | |
|---|---|---|
| 23. | ஆரிய தரிசனம் | 50 |
| 24. | காலனுக்கு உரைத்தல் | 55 |
| 25. | மாயையைப் பழித்தல் | 58 |
| 26. | சங்கு | 59 |
| 27. | அறிவே தெய்வம் | 60 |
| 28. | பரசிவ வெள்ளம் | 62 |
| 29. | வேள்வித் தீ | 65 |
| 30. | உலகத்தை நோக்கி வினவுதல் | 69 |
| 31. | நான் | 70 |
| 32. | பக்தி | 72 |
| 33. | சென்றது மீளாது | 75 |
| 34. | முருகன் பாட்டு | 76 |
| 35. | முத்து மாரி | 77 |
| 36. | அச்சமில்லை | 79 |
| 37. | ஜெயபேரிகை | 80 |
| 38. | கண்ணன் துதி | 81 |
| 39. | நந்த லாலா | 82 |
| 40. | கண்ணன் எனது சற்குரு | 84 |
| 41. | கண்ணன் என் குழந்தை | 87 |
| 42. | கண்ணம்மா—அங்க வர்ணனை | 90 |
| 43. | கண்ணம்மாவின் காதல் | 91 |
| 44. | கண்ணம்மா—என் காதலி | 93 |
| 45. | கோமதி மஹிமை! | 98 |
| 46. | காணி நிலம் | 101 |
| 47. | ஓம் சக்தி | 102 |
| 48. | கேட்பன | 104 |
| 49. | தேச முத்துமாரி | 105 |
| 50. | சக்தி | 107 |
| 51. | சிவசக்தி | 113 |
| 52. | பராசக்தி | 117 |
| 53. | காளி ஸ்தோத்திரம் | 130 |
| 54. | கலைமகளை வேண்டுதல் | 132 |

## உரைநடை


| | | |
|---|---|---|
| 1. | வைசாக்தன் என்ற பண்டாரத்தின் கதை | 137 |
| 2. | மஹாலக்ஷ்மி | 141 |
| 3. | வண்ணான் தொழில் | 142 |
| 4. | ஜீவன் முக்தி : அதுவே சிதம்பரம் | 147 |
| 5. | கடற்கரையாண்டி | 151 |
| 6. | செய்கை | 154 |
| 7. | உண்மை | 160 |
| 8. | நம்பிக்கை | 164 |
| 9. | இனி | 167 |
| 10. | வேத ரிஷிகளின் கவிதை | 172 |
| 11. | முதற்கிளை இன்பம் | 176 |
| 12. | தியானங்களும் மந்திரங்களும் | 179 |
| 13. | பாரத தேசத்தில் ஒவ்வொருவனும் செய்வதற்குரிய தியானம் | 183 |
| 14. | மூடபக்தி | 186 |
| 15. | சக்தி தர்மம் | 191 |
| 16. | புராணங்கள் | 198 |
| 17. | இரண்டாம் காட்சி | 205 |
| 18. | இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை | 208 |
| 19. | நவராத்திரி | 219 |

# 1. புதிய ஆத்திசூடி

[குறிப்பு : பாரதியார் இந்தப் பாடலில்தான் 'எல்லாச் சமயமும் ஒன்றே' என்ற தமது உள்ளக்கிடக்கையைத் தெளிவாக வெளியிடுகின்றார். 'மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன், ஏசுவின் தந்தை' எனப் பல மதத்தினர் உருவகத்தாலே உணர்ந்துணராது பலவகையாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே என்று, ஆணித்தரமாக வெளியிடுகின்றார். 'அதனியல் ஒளியுறும் அறிவாம்' என்று, அறிவே தெய்வம் என்றும் விளக்குகின்றார். இவ்வாறு சிவன், விஷ்ணு என்ற தெய்வங்களையும் ஒன்றே என்று, மூன்று இடத்தில் வருகின்றது. 'விநாயகர் நான்மணிமாலையில்' "சிவனே, கண்ணு, வேலா, சாத்தா, விநாயகா, மாடா, இருளா, சூரியா, இந்துவே, சக்தியே, வாணீ, காளீ, மாமகளேயோ, ஆணுய்ப் பெண்ணுய் அலியாய் உள்ளதியாதுமாய் விளங்கு மியற்கைத் தெய்வமே, வேதச்சுடரே' (விநாயகர் நான்மணி மாலை அகவல் — 20) என்றும், 'விநாயகதேவனுய், வேலுடைக்குமரனுய், நாராயணனுய், நதிச்சடை முடியனுய், பிறநாட்டிருப்போர் பெயர்பல கூறி, அல்லா யெஹோவா எனத் தொழுதன்புறும் தேவருந் தானுய், திருமகள் பாரதி உமையெனுந் தேவியருகந்த வான்பொருளாய், (விநாயகர் நான்மணிமாலை - அகவல் - 8).' என்று கூறுகின்றார். இவ்வாறே முரசு என்ற கவிதையிலும், தெள்ளத்தெளிவாக எல்லாச் சமயமும் ஒன்றே என்று கூறுகின்றார். ஆகவே, இவற்றிற்குத் தனிக் குறிப்பு எழுதப்படவில்லை.

இவ்வாறு பலமுறை கூறியதாக வேறு எந்த இடத்திலும் பார்க்க இயலாது. அது தெளிவுபற்றி வந்துள்ளது. பாரதியார் இக் கருத்துகளை வேறுவகையாகச் சொல்லியிருந்

தாலும், ஆறுமுறை சொல்லியது இங்கு தனிப்பட்ட சிறப்பாகும். ஆகவே, ஆறு பாடல்களையும் ஒன்றாக இணைத்துத் தந்துள்ளேன். ஆதிசங்கரர் பலதரப்பட்ட ஹிந்து மதங்களை ஒன்றுசேர்த்து ஆறுமதங்களாகச் செய்தவாறே, பாரதியாரும் கூறியுள்ளார் என்று நினைக்கத் தோன்றுகின்றதல்லவா? மேலும், ஆறு என்ற எண்ணிக்கை மிக முக்கியமானது. அது பிரணவ மந்திரங்களை அடக்கிக் கொண்டிருப்பது ஒரு தனிச்சிறப்பாகும். பாரதியாரும் 'ஆறு துணை' என்ற ஒரு சிறந்த கவிதை எழுதியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.]

(காப்பு—பரம்பொருள் வாழ்த்து.)

ஆத்திசூடி, இளம்பிறை யணிந்து,
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

## 2. விநாயகர் நான்மணிமாலை

### அகவல் 20

இறைவி இறையவ னிரண்டு மொன்றாகித்
தாயாய்த் தந்தையாய் சக்தியும் சிவனுமாய்
உள்ளொளி யாகி யுலகெலாந் திகழும்
பரம்பொரு ளேயோ! பரம்பொரு ளேயோ!

ஆதி மூலமே! அனைத்தையுங் காக்கும்
தேவ தேவா, சிவனே, கண்ணா,
வேலா, சாத்தா, விநாயகா, மாடா,
இருளா, சூரியா, இந்துவே, சக்தியே,
வாணீ, காளீ, மாமக ளேயோ,
ஆணாய்ப் பெண்ணாய் அலியாய் உள்ள
தியாதுமாய் விளங்கு மியற்கைத் தெய்வமே,
வேதச் சுடரே, மெய்யாங் கடவுளே,
அபயம் அபயம் அபயநான் கேட்டேன்,
நோவு வேண்டேன், நூறாண்டு வேண்டினேன்,
அச்சம் வேண்டேன், அமைதி வேண்டினேன்;
உடைமை வேண்டேன், உன்துணை வேண்டினேன்;
வேண்டா தனைத்தையு நீக்கி
வேண்டிய தனைத்தும் அருள்வதுன் கடனே.

## 3. விநாயகர் நான்மணிமாலை

### அகவல் 8

கடமை யாவன தன்னைக் கட்டுதல்,
பிறர்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல்,
விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய்,
நாரா யணனாய், நதிச்சடை முடியனாய்,
பிற நாட்டிருப்போர் பெயர்பல கூறி,
அல்லா யெஹோவா எனத்தொழு தன்புறும்
தேவருந் தானாய், திருமகள், பாரதி,
உமையெனுந் தேவிய ருகந்தவான் பொருளாய்,
உலகெலாங் காக்கு மொருவனைப் போற்றுதல்—
இந்நான் கேயிப் பூமியி லெவர்க்கும்
கடமை யெனப்படும்; பயனிதில் நான்காம்,

அறம், பொருள், இன்பம், வீடெனு முறையே,
தன்னை யாளுஞ் சமர்த்தெனக் கருள்வாய்,
மணக்குள விநாயகா, வான்மறைத் தலைவா,
தனைத் தாளுந் தன்மைநான் பெற்றிடின்,
எல்லாப் பயன்களுந் தாமே யெய்தும்;
அசையா நெஞ்ச மருள்வாய்; உயிரெலாம்
இன்புற்றிருக்க வேண்டி, நின்னிருதாள்
பணிவதே தொழிலெனக் கொண்டு
கணபதி தேவா, வாழ்வேன் களித்தே.

## 4. விநாயகர் நான்மணிமாலை

### அகவல் 16

நிழலினும் வெயிலினு நேர்ந்தநற் றுணையாய்த்
தழலினும் புனலினு மபாயந் தவிர்த்து
மண்ணினுங் காற்றினும் வானினு மெனக்குப்
பகைமை யொன்றின்றிப் பயந்தவிர்த் தாள்வான்
உள்ளத் தோங்க நோக்குறும் விழியும்
மௌன வாயும் வரந்தரு கையும்
உடையநம் பெருமான் உணர்விலே நிற்பான்
ஓமெனு நிலையி லொளியாத் திகழ்வான்
வேத முனிவர் விரிவாப் புகழ்ந்த
பிருஹஸ் பதியும் பிரமனும் யாவுந்
தானே யாகிய தனிமுதற் கடவுள்
யானென தற்றார் ஞானமே தானாய்
முக்தி நிலைக்கு மூலவித் தாவான்
ஸத்தெனவ சத்தெனச் சதுர்மறை யாளர்
நித்தமும் போற்று நிர்மலக் கடவுள்

ஏழையர்க் கெல்லா மிரங்கும் பிள்ளை
வாழும் பிள்ளை மணக்குளப் பிள்ளை
வெள்ளாடை தரித்த விட்டுணு வென்று
செப்பிய மந்திரத் தேவனை
முப்பொழு தேத்திப் பணிவது முறையே.

## 5. முரசு

தெய்வம் பலபல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலும் ஒன்றாய்—எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம்.

தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்
கோயில் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் யேசு மதத்தார்;

யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று;—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

## 6. பாரதி அறுபத்தாறு

"ஸாரமுள்ள பொருளினை நான் சொல்லிவிட்டேன்;
சஞ்சலங்கள் இனிவேண்டா, சரதந் தெய்வம்;
ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்;
எப்போதும் அருளைமனத் திசைத்துக் கொள்வாய்;

வீரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்;
எப்போதும் வீரமிக்க வினைகள் செய்வாய்;
பேருயர்ந்த ஏஹோவா அல்லா நாமம்
பேணுமவர் பதமலரும் பேணல் வேண்டும்.
—பாடல் 64

"பூமியிலே கண்டமைந்து, மதங்கள் கோடி!
புத்தமதம், சமணமதம், பார்ஸி மார்க்கம்
சாமியென யேசுபதம் போற்றும் மார்க்கம்,
ஸநாதனமாம் ஹிந்து மதம், இஸ்லாம், யூதம்,
நாமமுயர் சீனத்துத் "தாவு" மார்க்கம்,
நல்ல "கண்பூசி" மதம் முதலாப் பார்மேல்
யாமறிந்த மதங்கள் பல உளவாம் அன்றே;
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே.
—பாடல் 65

## 7. மணக்குளத்து விநாயகர்

[குறிப்பு : பாரதியார் புதுவை மணக்குளத்து விநாயகர் மீது நாற்பது அழகான பாடல்கள் இயற்றியுள்ளார். பிரணவப் பொருளான ஓம் என்பது வலிமைவாய்ந்த ஒரு சொல்லாகும். இதுபோன்ற ஒரு தந்திரச் சொல் ஒன்றைத் தமிழிலே கண்டு பிடிக்கப் பாரதியார் மிகவும் முயற்சி செய்திருக்கிறார். அதற்காக மௌன விரதமும் இருந்திருக் கிறார். இந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

இந்த விநாயகர் நான்மணி மாலையில் பாரதியாரின் அறிவு முதிர்ச்சியும் சொல்வளமும் ஒருங்கு அமைந்திருப் பதைக் காணலாம். விநாயகரே பல தெய்வங்களின் வடிவ மாகத் தோன்றுகிறார் என்பது பாரதியாரின் கருத்து.

விநாயகர் வணக்கம் பிற்காலத்திலே தோன்றியது என்றாலும், ஓம் என்னும் பிரணவப் பொருளாக அது மலர்ச்சியடைந்திருக்கிறது. விநாயகர் இல்லாத இடமே யில்லை என்றுகூடச் சொல்லலாம். விநாயகர் வழி பாட்டுக்கு மிக எளிதானவர். மஞ்சளைப் பிடித்து விநாயகர் செய்து விடலாம். அறுகம்புல்லையும் எருக்கம்பூ மாலையை யும் அணிந்தால் போதும்.

விநாயகரைப் பற்றிப் பலபல கதைகள் உண்டு. ஆடம்பரமாகப் போருக்குப் புறப்பட்டபோது, சிவ பெருமான் விநாயகரைப் போற்றி வணங்காமற் போன தால், அவர் ஏறிய தேர் அச்சுமுறிந்து விழுகின்றது என்பது கதை. இதனால் விநாயகரை முதலில் தொழ வேண்டும் என்ற உண்மையைப் புலப்படுத்துகின்றார். விநாயகர் நான்மணி மாலையில் இரண்டு அகவல்களையும் ஒரு வெண்பாவையும் கீழே தருகின்றேன். பாரதியார் இதில்தான்,

> "நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல்
> இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல்"

என்று, தமது தொழில் பற்றி விளக்கும் புகழ்பெற்ற வரிகள் வருகின்றன. பாரதியார் தமக்குத்தாமே வகுத்துக் கொண்ட தொழில் கவிதை என்று தெளிவாகக் கூறுகின்றார்.]

கற்பக விநாயகக் கடவுளே, போற்றி!
சிற்பர மோனத் தேவன் வாழ்க!
வாரண முகத்தான் மலர்த்தாள் வெல்க!
ஆரண முகத்தான் அருட்பதம் வெல்க!
படைப்புக் கிறையவன்; பண்ணவர் நாயகன்,
இந்திர:குரு, எனது இதயத் தொளிர்வான்

சந்திர மவுலித் தலைவன் மைந்தன்
கணபதி தானைக் கருத்திடை வைப்போம்;
குணமதிற் பலவாம்; கூறக் கேளீர்!
உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்;
அக்கினி தோன்றும் ஆண்மை வலியுறும்;
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்;
கட்செவி தன்னைக் கையிலே எடுக்கலாம்;
விடத்தையும் நோவையும் வெம்பகை யதனையும்
துச்சமென் றெண்ணித் துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து நிலைபெற் றோங்கலாம்;
அச்சந் தீரும், அமுதம் விளையும்;
வித்தை வளரும்; வேள்வி ஓங்கும்;
அமரத் தன்மை எய்தவும்
இங்குநாம் பெறலாம்; இஃதுணர் வீரே! 1

கடமை யாவன; தன்னைக் கட்டுதல்
பிறர்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல்,
விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய்
நாரா யணனாய், நதிச்சடை முடியனாய்
பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி,
அல்லா! யெஹோவா! எனத்தொழு தன்புறும்
தேவருந் தானாய், திருமகள் பாரதி,
உமையெனுந் தேவியர் உகந்தவான் பொருளாய்,
உலகெலாங் காக்கும் ஒருவனைப் போற்றுதல்,
இந்நான் கேயிப் பூமியி லெவர்க்கும்
கடமை யெனப்படும்; பயனிதில் நான்காம்;
அறம், பொருள், இன்பம், வீடெனு முறையே,
தன்னை யாளுஞ் சமர்த்தெனக் கருள்வாய்.
மணக்குள விநாயகா! வான்மறைத் தலைவா!
தனைத்தான் ஆளுந் தன்மைநான் பெற்றிடில்
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்,

அசையா நெஞ்சம் அருள்வாய்; உயிரெலாம்
இன்புற் றிருக்க வேண்டி, நின் னிருதாள்
பணிவதே தொழிலெனக் கொண்டு
கணபதி தேவா! வாழ்வேன் களித்தே. 2

சொல்லினுக் கரியனாய்ச் சூழ்ச்சிக் கரியனாய்ப்
பல்லுரு வாகிப் படர்ந்தவான் பொருளை,
உள்ளுயி ராகி உலகங் காக்கும்
சக்தியே தானாந் தனிச்சுடர்ப் பொருளை,
சக்தி குமாரனைச் சந்திர மவுலியைப்
பணிந்தவ னுருவிலே பாவனை நாட்டி,
ஓமெனும் பொருளை உளத்திலே நிறுத்தி,
சக்தியைக் காக்கும் தந்திரம் பயின்று
யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய்,
யார்க்கும் அன்பனாய், யார்க்கும் இனியனாய்
வாழ்ந்திட விரும்பினேன்; மனமே! நீயிதை
ஆழ்ந்து கருதி ஆய்தாய்ந்து பலமுறை
சூழ்ந்து, தெளிந்து, பின் சூழ்ந்தார்க் கெல்லாம்
கூறிக் கூறிக் குறைவறத் தேர்ந்து
தேறித் தேறிநான் சித்திபெற் றிடவே,
நின்னா லியன்ற துணைபுரி வாயேல்,
பொன்னால் உனக்கொரு கோயில் புனைவேன்;
மனமே! எனைநீ வாழ்வித் திடுவாய்!
வீணே யுழலுதல் வேண்டா,
சக்தி குமாரன் சரண்புகழ் வாயே! 3

நிழலினும் வெயிலினும் நேர்ந்த நற்றுணையாய்த்
தழலினும் புனலினும் அபாயந் தவிர்த்து,
மண்ணினும் காற்றினும் வானினும் எனக்குப்
பகைமை யொன்றின்றிப் பயந்தவிர்த் தாள்வான்,
உள்ளத் தோங்க நோக்குறும் விழியும்,

மௌன வாயும், வரந்தரு கையும்,
உடையநம் பெருமான் உணர்விலே நிற்பான்,
ஓமெனும் நிலையில் ஒளியாய்த் திகழ்வான்.
வேத முனிவர் விரிவாய்ப் புகழ்ந்த
பிருஹஸ் பதியும் பிரமனும் யாவும்
தானே யாகிய தனிமுதற் கடவுள்,
யானென தற்றார் ஞானமே தானாய்
முக்தி நிலைக்கு மூலவித் தாவான்,
சத்தெனவ சத்தெனச் சதுர்மறை யாளர்
நித்தமும் போற்றும் நிர்மலக் கடவுள்,
ஏழையர்க் கெல்லாம் இரங்கும் பிள்ளை,
வாழும் பிள்ளை, மணக்குளப் பிள்ளை,
வெள்ளாடை தரித்த விட்டுணு வென்று
செப்பிய மந்திரத் தேவனை
முப்பொழு தேத்திப் பணிவது முறையே. 4

இறைவி இறைவன் இரண்டும் ஒன்றாகித்
தாயாய்த் தந்தையாய் சக்தியும் சிவனுமாய்
உள்ளொளி யாகி உலகெலாந் திகழும்
பரம்பொரு ளேயோ! பரம்பொரு ளேயோ
ஆதிமூலமே! அனைத்தையும் காக்கும்
தேவ தேவா! சிவனே! கண்ணா
வேலா! சாத்தா! விநாயகா! மாடா!
இருளா! சூரியா! இந்துவே! சக்தியே!
வாணீ! காளீ! மாமக ளேயோ!
ஆணாய்ப் பெண்ணாய் அலியாய், உள்ளது
யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே!
வேதச் சுடரே! மெய்யாங் கடவுளே!
அபயம் அபயம் அபயம்நான் கேட்டேன்;
நோவு வேண்டேன், நூறாண்டு வேண்டினேன்;

அச்சம் வேண்டேன், அமைதி வேண்டினேன்;
உடைமை வேண்டேன் உன் துணை வேண்டினேன்;
வேண்டா தனைத்தையும் நீக்கி
வேண்டிய தனைத்தும் அருள்வதுன் கடனே.

### விருத்தம்

மேன்மைப் படுவாய் மனமே! கேள்
        விண்ணின் இடிமுன் விழுந்தாலும்,
பான்மை தவறி நடுங்காதே
        பயத்தால் ஏதும் பயனில்லை;
யான்முன் உரைத்தேன் கோடிமுறை,
        இன்னுங் கோடிமுறை சொல்வேன்,
ஆன்மா வான கணபதியின்
        அருளுண்டு அச்சம் இல்லையே.

### அகவல்

அச்ச மில்லை அமுங்குத லில்லை;
நடுங்குத லில்லை நாணுத லில்லை;
பாவ மில்லை பதுங்குத லில்லை;
ஏது நேரினும் இடர்ப்பட மாட்டோம்;
அண்டஞ் சிதறினால் அஞ்ச மாட்டோம்;
கடல்பொங்கி எழுந்தாற் கலங்க மாட்டோம்;
யார்க்கும் அஞ்சோம் எதற்கும் அஞ்சோம்;
எங்கும் அஞ்சோம் எப்பொழுதும் அஞ்சோம்;
வான முண்டு, மாரி யுண்டு;
ஞாயிறும் காற்றும் நல்ல நீரும்
தீயும் மண்ணும் திங்களும் மீன்களும்
உடலும் அறிவும் உயிரும் உளவே;
தின்னப் பொருளும் சேர்ந்திடப் பெண்டும்,

கேட்கப் பாட்டும் காணநல் லுலகமும்,
களித்துரை செய்யக் கணபதி பெயரும்
என்றுமிங் குளவாம்! சலித்திடாய்; ஏழை
நெஞ்சே! வாழி! நேர்மையுடன் வாழி!
வஞ்சகக் கவலைக் கிடங்கொடேல் மன்னோ!
தஞ்ச முண்டு சொன்னேன்,
செஞ்சுடர்த் தேவன் சேவடி நமக்கே.

### வெண்பா

நமக்குத் தொழில்கவிதை, நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்—உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்!
சிந்தையே, இம்மூன்றும் செய்.

### அகவல்

எனைநீ காப்பாய், யாவுமாந் தெய்வமே!
பொறுத்தா ரன்றே பூமி யாள்வார்;
யாவும்நீ யாயின் அனைத்தையும் பொறுத்தல்
செவ்விய நெறி அதிற் சிவநிலை பெறலாம்;
பொங்குதல் போக்கிப் பொறையெனக் கீவாய்;
மங்கள குணபதி; மணக்குளக் கணபதி!
நெஞ்சக் கமலத்து நிறைந்தருள் புரிவாய்;
அகல்விழி உமையாள் ஆசை மகனே!
நாட்டினைத் துயரின்றி நன்கமைத் திடுவதும்,
உளமெனும் நாட்டை ஒருபிழை யின்றி
ஆள்வதும், பேரொளி ஞாயிறே யனைய
சுடர்தரு மதியோடு துயரின்றி வாழ்தலும்
நோக்கமாக் கொண்டு நின்பதம் நோக்கினேன்
காத்தருள் புரிக கற்பக விநாயகா!
காத்தருள் புரிக கடவுளே! உலகெலாம்

கோத்தருள் புரிந்த குறிப்பரும் பொருளே!
அங்குச பாசமும் கொம்பும் தரித்தாய்
எங்குல தேவா போற்றி!
சங்கரன் மகனே! தாளிணை போற்றி!

## வெண்பா

போற்றி! கலி யாணி புதல்வனே! பாட்டினிலே
ஆற்ற லருளி அடியேனைத்—தேற்றமுடன்
வாணிபதம் போற்றுவித்து வாழ்விப்பாய்! வாணியருள்
வீணையொலி என் நாவில் விண்டு.

## கலித்துறை

விண்டுரை செய்குவன் கேளாய் புதுவை விநாயகனே
தொண்டுன தன்னை பராசக்திக் கென்றும்
தொடர்ந்திடுவேன்;
பண்டைச் சிறுமைகள் போக்கி, என்னுவிற் பழுத்த
சுவைத்
தெண்டமிழ்ப் பாடல் ஒருகோடி மேவிடச் செய்குவையே.

## விருத்தம்

செய்யாள் இனியாள் ஸ்ரீதேவி,
செந்தா மரையிற் சேர்ந்திருப்பாள்,
கையாளெனநின் றடியேன்செய்
தொழில்கள் யாவும் கைகலந்து
செய்வாள்; புகழ்சேர் வாணியுமென்
னுள்ளே நின்று தீங்கவிதை
பெய்வாள்! சக்தி துணைபுரிவாள்!
பிள்ளாய்; நின்னைப் பேசிடிலே.

## 8. ஆறு துணை

[குறிப்பு :—ஹிந்து மதம் சிதறுண்டு கிடந்தது. சுமார் 92-க்கும் மேற்பட்ட பிரிவுகளாக அலங்கோலமாகக் கிடந்தது. ·இவற்றையெல்லாம் ஓர் ஐக்கியப்படுத்தி காணுபத்யம், கௌமாரம், சாக்தம், வைணவம், சைவம் சௌரம் என ஆறு மதங்களாக நிறுவியவர் ஆதிசங்கரர் ஆவர். இதனுலேயே அவருக்கு ஷண்மத ஸ்தாபகர் என்னும் பெயர் உண்டாயிற்று. ஆதிசங்கரர் இல்லா விட்டால் இவ்வகையான வலிமை வாய்ந்த ஹிந்து மதத்தை உண்டாக்கியிருக்க முடியாது.

பாரதியார், புதுவகையாக ஆறு துணைகளை இக் கவிதையிலே நாடுகின்ருர். கணபதிராயன், பராசக்தி, வடிவேலன், கலைமகள், கண்ணன், திருமகள் என்பன இந்த ஆறு துணைகளாகும். இது ஓர் அற்புதமான கவிதையாகும்.

"வெற்றி வடிவேலன்—அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்;
சுற்றி நில்லாதே போ!—பகையே!
துள்ளி வருகுது வேல்."

என்ற அக்ஷர லக்ஷம் பொருந்திய இணையற்ற வரிகளைப் பாரதியார் அளித்திருக்கிருர்.

முருகன், கண்ணன், பராசக்தி—அவருக்குப் பிடித்த மான தெய்வங்களாகும். ஓம் சக்தி என்பதே புகழ்பெற்ற தாரக மந்திரமாகி விட்டது. பாரதியாருக்கு எல்லாத் தெய்வங்களும் ஒன்றுதான்; ஆனுல் இஷ்ட தெய்வம்

என்பது ஒன்று உண்டல்லவா? குழலிசை என்றாலே பாரதியாருக்குக் கண்ணன் நினைவு வந்து விடுகிறது. செல்வம் வேண்டும்; எப்படியாவது செல்வத்தை ஈட்டவேண்டும் என்பது பாரதியாரின் விருப்பம். இஃது ஓர் இணையற்ற பாடலாகும். பாரதியார் வாயிலிருந்து ஓம் சக்தி; ஓம் சக்தி என்று வீரகர்ஜனையோடு வெளிப்படும்போது மயிர்க் கூச்செறியும்.]

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் - பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் - பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

1. கணபதி ராயன் - அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குண முயர்ந் திடவே - விடுதலை
கூடி மகிழ்ந்திடவே.

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

2. சொல்லுக் கடங்காவே - பரா சக்தி
சூரத் தனங்க ளெல்லாம்;
வல்லமை தந்திடு வாள் - பராசக்தி
வாழி யென்றே துதிப்போம்.

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

3. வெற்றி வடிவேலன் - அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்;
சுற்றி நில்லாதே போ! - பகையே!
துள்ளி வருகுது வேல்.

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

4. தாமரைப் பூவினிலே சுருதியைத்
தனி யிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே - கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய் திடுவோம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

5. பாம்புத் தலைமேலே - நடஞ்செயும்
பாதத்தினைப் புகழ்வோம்
மாம்பழ வாயினிலே - குழலிசை
வண்மை புகழ்ந் திடுவோம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

6. செல்வத் திருமகளைத் - திடங் கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வ மெல்லாந் தருவாள் - நமதொளி
திக்கனைத்தும் பரவும்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

## 9. ஊழிக் கூத்து

[குறிப்பு : இது ஈடு இணையில்லாத ஓர் அற்புதமான கவிதை. ஊழிக்கூத்தை அப்படியே படம் பிடித்து விடுகிறார் நம் கவிஞர்.

"பொருளும், சந்தமும், லயவொளியும் சேர்ந்து, ஊழிக்கூத்து எவ்வாறு நடக்கிறதென்று பாரதியார் தெளிவாகக் காட்டுகின்றார். மிக அற்புதமான கவிதை நயத்தோடு, பொருள்தெரிந்து பாடினால் ஊழிக்கூத்தே கண்முன்பு நடைபெறுவதாகவும், இந்தக் கவிதை அமைந்

துள்ளது. இதற்கு இணை இதுவேதான். தமிழின் அழகு, தமிழின் வலிமை எல்லாம் கும்மாளமிட்டுக் கொண்டு இந்தக் கவிதை அமரத்துவம் வாய்ந்ததாகப் பாரதியார் தம் உள்ளத்திலே தோன்றியதை அப்படியே எழுதி விட்டார். இதற்கு வரிக்குவரி, சொல்லுக்குச் சொல், தங்கத் தேங்காயை உருட்டலாம். படித்துப் படித்து மகிழுங்கள்.]

*வெடிபடு மண்டத் திடிபல தாளம் போட - வெறும்*
*வெளியி லிரத்தக் களியொடு பூதம்பாடப் - பாட்டின்*
*அடிபடு பொருளுன் அடிபடு மொலியிற் கூடக் - களித்*
*தாடுங் காளீ! சாமுண் டீ! கங் காளீ!*
*அன்னே! அன்னே! ஆடுங் கூத்தை*
*நாடச் செய்தாய் என்னை.* 1

*ஐந்துறு பூதம் சிந்திப் போயொன் றாகப் - பின்னர்*
*அதுவும் சக்திக் கதியில் மூழ்கிப் போக - அங்கே*
*முந்துறும் ஒளியிற் சிந்தை நழுவும் வேகத் - தோடே*
*முடியா நடனம் புரிவாய், அடுதீ சொரிவாய்!*
*அன்னே! அன்னே! ஆடுங் கூத்தை*
*நாடச் செய்தாய் என்னை.* 2

*பாழாம் வெளியும் பதறிப் போய்மெய் குலையச் - சலனம்*
*பயிலும் சக்திக் குலமும் வழிகள் கலைய - அங்கே*
*ஊழாம் பேய்தான் "ஓஹோஹோ" வென் றலைய - வெறித்*
*துறுமித் திரிவாய், செருவெங் கூத்தே புரிவாய்!*
*அன்னே! அன்னே! ஆடுங் கூத்தை*
*நாடச் செய்தாய் என்னை.* 3

*சத்திப் பேய்தான் தலையொடு தலைகள் முட்டிச் - சட்டச்*
*சடசட சட்டென் றுடைபடு தாளங்கொட்டி - அங்கே*
*எத்திக் கினிலும் நின்விழியனல் போய் எட்டித் - தானே*
*எரியுங் கோலங் கண்டே சாகும் காலம்*

அன்னே! அன்னே! ஆடுங் கூத்தை
நாடச் செய்தாய் என்னே. 4

காலத் தொடுநிர் மூலம் படுமூ வுலகும் - அங்கே
கடவுள் மோனத் தொளியே தனியா யிலகும் - சிவன்
கோலங் கண்டுன் கனல்செய் தினமும் விலகும்—கையைக்
கொஞ்சித் தொடுவாய் ஆனந்தக்கூத் திடுவாய்!
அன்னே! அன்னே! ஆடுங் கூத்தை
நாடச் செய்தாய் என்னே. 5

## 10. காளிக்குச் சமர்ப்பணம்

[குறிப்பு: இந்தக் கவிதை சிறியதாக இருந்தாலும், ஒரு முக்கியமான வாழ்க்கைச் சம்பவத்தை வெளியிடுகின்றது. பாரதியார் 27 வருடங்கள் காத்திருக்கிறார். மின்னல்போல ஒளிவீசி அன்னை காளி தரிசனம் தந்தருள்கின்றாள். 'வந்திருந்து பல பயனாகும் வகை தெரிந்து கொள்' என்று பாரதியார் காளிக்குச் சமர்ப்பணம் செய்கின்றார்.)

இந்த மெய்யும் கரணமும் பொறியும்
இருபத் தேழு வருடங்கள் காத்தனன்;
வந்தனம்; அடி பேரருள் அன்னாய்;
வைர வீ! திறற் சாமுண்டி! காளி!

சிந்த னைதெளிந் தேனினி யுன்றன்
திருவ ருட்கெனை அர்ப்பணஞ் செய்தேன்;
வந்தி ருந்து பலபய னாகும்
வகைதெ ரிந்துகொள் வாழி யடி நீ.

# 11. மஹா சக்தி

[குறிப்பு: எல்லாத் தெய்வங்களும் ஒன்றே. "உண்மை ஒன்றேதான்; ஞானிகள் அதற்கு வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்" என்ற வேதவாக்கைப் பாரதியார் முற்றிலும் நம்புகின்றவர்.

என்றாலும், இஷ்டதெய்வம் ஒன்றிருக்க வேண்டுமல்லவா? இஷ்டதெய்வத்தை, இந்த உண்மையை நம்பி வழிபடுகின்றது தவறில்லை. எல்லா மதமும் ஒன்றேதான்; வீணைச் சண்டைபோடுவது தவறு என்று உலகிற்குக் காட்டவந்த இராமகிருஷ்ண பரமஹம்சரும், தமக்கு இஷ்டதெய்வமான காளியை வழிபட்டு வந்தார். சமரச சன்மார்க்கத்தை நிலை நாட்ட வந்த அருட்ஜோதி இராமலிங்க வள்ளலாரும், ஜோதியை வழிபட்டு வந்தார். ஆகவே இஷ்ட தெய்வ வழிபாட்டை யாரும் தவறு சொல்லமாட்டார்கள். உண்மையில், ஹிந்துக்களுக்குப் பல தெய்வங்கள் உண்டு. யார்யாருக்கு எது பிடிக்கிறதோ அதை இஷ்ட தெய்வமாக வணங்கலாம்.

ஹிந்துக்கள் பல தெய்வங்களை வணங்குகிறார்கள் என்று குறை கூறுவதுண்டு. குறைகூறுவோர், இந்த உண்மையை அறிய மாட்டாதவர்களாவார்கள். பிற்காலத்தில், தம்தம் கடவுளை உயர்ந்தவர் என்று அறியாமையினால் புராணங்கள் எழுதிவைத்து விட்டார்கள். அதை நம்பிப் பல சமயப் பூசல்கள் ஏற்பட்டுள்ளன. இது மூடத்தனமாகும். எல்லாத் தெய்வமும் ஒன்றே என்பதை மறந்துவிட்டு, விஷ்ணு உயர்வென்றும் சிவன் உயர்வென்றும் புராணங்களை நம்பி மூடத்தனமான பல சண்டைகள் நிகழ்ந்திருக்கின்றன என்பது வரலாறு கூறும்

ஒரு செய்தியாகும். "அரியும், சிவனும் ஒண்ணு; அறியாதவன் வாயில் மண்ணு," என்ற எளிய தமிழ்ப் பழமொழி மிக எளிமையானதும், அதே சமயத்தில் ஓர் அற்புதமான உண்மையைக் காட்டுவதும் ஆகும்.

பாரதியாருக்கோ எல்லாத் தெய்வமும் ஒன்றே. ஆனால் அவருக்கும் ஓர் இஷ்ட தெய்வம் உண்டு. அந்த இஷ்ட தெய்வந்தான் பராசக்தி என்பது இந்நூலை வாசிப்பவர்களுக்கு நன்றாக விளங்கும். அவர் அல்லாவைப் பற்றிப் பாடியிருக்கிறார்; இயேசு கிறிஸ்துவைப்பற்றிப் பாடியிருக்கிறார்; கண்ணன், முருகன், சிவன், முத்துமாரி, கோவிந்தன், திருமகள், கலைமகள், மலைமகள், ஞாயிறு ஆகிய பல பல ஹிந்துத் தெய்வங்களையும் அழகாகப் பாடியிருக்கிறார் என்ற உண்மை, 'பாரதியும் கடவுளும்' என்ற நூலை வாசிப்பவர்களுக்குத் தெளிவாக விளங்கும். ஆனால் தமது இஷ்டதெய்வமான பராசக்திமீதுதான் அதிகமாகப் பாடியிருக்கிறார். "சந்திரன் ஒளியில் அந்தப் பராசக்தியைக் கண்டேன்," என்றும், "பராசக்தி நீ யாதுமாகி நிற்கின்றாய்; எங்கும் நீ நிறைந்தவள்; நானே நீ; நீயே நான்' என்றும் ஓர் கவிதையில் பாடுகின்றார். "யாதுமாகி நின்றாய்" என்று தொடங்கும் கவிதை மிக உயர்வானது. இசையுடன் பாடுவதற்கு ஏற்றது.]

சந்திர னொளியில் அவளைக் கண்டேன்,
சரணமென்று புகுந்து கொண்டேன்,
இந்திரி யங்களை வென்று விட்டேன்,
எனதென் ஆசையைக் கொன்று விட்டேன். 1

பயனெண் ணுமல் உழைக்கச் சொன்னாள்,
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்,
துயரி லாதெனைச் செய்துவிட்டாள்,
துன்ப மென்பதைக் கொய்து விட்டாள். 2

மீன்கள் செய்யும் ஒளியைச் செய்தாள்.
வீசி நிற்கும் வளியைச் செய்தாள்,
வான்க ணுள்ள வெளியைச் செய்தாள்,
வாழி நெஞ்சிற் களியைச் செய்தாள். 3

## காளி ஸ்தோத்திரம்

யாது மாகி நின்றாய் - காளீ! - எங்கும் நீ நிறைந்தாய்,
தீது நன்மை யெல்லாம் - நின்றன் - செயல்க ளன்றி யில்லை
போதும் இங்கு மாந்தர் - வாழும் - பொய்ம்மை வாழ்க்கை
[யெல்லாம்.
ஆதி சக்தி, தாயே! - என்மீது - அருள்புரிந்து காப்பாய். 1

எந்த நாளும் நின்மேல் - தாயே! - இசைகள் பாடி
வாழ்வேன்,
கந்தனைப் பயந்தாய் - தாயே! கருணை வெள்ளமானாய்
மந்த மாரு தத்தில் - வானில் - மலையி னுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன் - செம்மை தோன்றும்
[அன்றே! 2

கர்ம யோக மொன்றே - உலகில் - காக்குமென்னும்
[வேதம்;
தர்ம நீதி சிறிதும் - இங்கே - தவற லென்பதின்றி
மர்ம மான பொருளாம் - நின்றன் - மலரடிக்கண்
[நெஞ்சம்,
செம்மை யுற்று நாளும் - சேர்ந்தே - தேசுகூடவேண்டும்! 3
என்ற னுள்ள வெளியில் - ஞானத் - திரவி யேற வேண்டும்;
குன்ற மொத்த தோளும் - மேருக் - கோல மொத்த
[வடிவும்,
நன்றை நாடு மனமும் - நீயெந் - நாளு மீதல் வேண்டும்;
ஒன்றை விட்டு மற்றோர் - துயரில் உழலும் நெஞ்சம்
[வேண்டா. 4

வான கத்தி ஞெளியைக் கண்டே - மனம கிழ்ச்சி பொங்கி,
யானெ தற்கும் அஞ்சேன் - ஆகி - எந்த நாளும் வாழ்வேன்;
ஞான மொத்த தம்மா! - உவமை - நானு ரைக்கொ
[ணுதாம்!
வான கத்தி ஞெளியின் - அழகை வாழ்த்து மாறியாதோ? 5

ஞாயி றென்ற கோளம் - தருமோர் - நல்ல பேரொ ளிக்கே
தேய மீதோர் உவமை - எவரே - தேடி யோத வல்லார்?
வாயி னிக்கும் அம்மா! - அழகாம் - மதியின் இன்ப ஒளியை!
நேயமோ டுரைத்தா ல் - ஆங்கே - நெஞ்சி ளக்க
[மெய்தும். 6

காளி மீது நெஞ்சம் - என்றும் - கசிந்து நிற்க வேண்டும்;
வேளை யொத்த விறலும் - பாரில் - வேந்த ரேத்து புகழும்,
யாளி யொத்த வலியும் - என்றும் - இன்பம் நிற்கும்
[மனமும்,
வாழி யீதல் வேண்டும் - அன்னாய்! - வாழ்க நின்றன்
[அருளே! 7

## 12. திருமகளைச் சரண்புகுதல்

[குறிப்பு : 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்பது பழமொழி. இதைப் பாரதியார் நன்கு அனுபவித் திருக்கிறார். "எங்கள் பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திடவேண்டும்" என்று எழுதிய அதே கையால்,

"வாதனை பொறுக்கவில்லை—அன்னை
மாமக ளடியிணை சரண்புகுவோம்,"

என்று எழுதியிருப்பாரா?

"வையமீதினில் வறுமையோர் கொடுமையன்றே"

என்று எழுதியிருக்கவும் மாட்டார். எப்படியாவது செல்வம் சேர்க்கவேண்டும் என்பது பாரதியார் மதம். மிகுந்த செல்வம் இருந்தால் அதை எப்படிச் செலவழித்திருப்பார் என்பதுவேறு விஷயம். ஆனால் அவர் பயனுள்ள செயல்களுக்குத்தான் செலவு செய்வார் என்பது நிச்சயம். பிற்காலத்தில் தமது அதிக நூல்களை வெளியிட வேண்டுமென்றும், அதற்கு நிதி வேண்டுமென்றும் எதிர்பார்த்து மிகவும் நம்பிக்கையுடன் ஒரு திட்டத்தை வெளியிட்டார். ஆனல், தமிழ் மக்கள் அதைக் கவனியாமல் இருந்துவிட்டது பெரிதும் வருந்துதற்குரியது. இதற்காகச் சோர்வோ, ஏமாற்றமோ அவர் அடைந்ததாகத் தெரியவில்லை. ஆனல் செல்வம் சேர்க்கவேண்டும் என்றுமட்டும் பல இடங்களில் தமது எண்ணத்தை வெளியிட்டுள்ளார்.

'தராசு' என்ற நூல் சொல்கிறது; "ஸ்ரீமான் காந்தி வாசம் செய்யும் ஆமதாபாதில் ஸத்யாக்கிரஹ ஆசிரமம் ஏற்படுத்தியிருக்கிறார். அந்த ஆசிரமத்தில் யௌவனப் பிள்ளைகள் பலரை வைத்துக் கொண்டு அவர்களை தேச ஸேவைக்குத் தயார் படுத்துகிறார். அவருடைய ஆசிரமத்திலே பயிற்சி பெறுவோருக்குச் சில விரதங்கள் அவசியமென்று ஏற்படுத்தியிருக்கிறார். உண்மையிலே லோகோபகாரம் செய்ய விரும்புவோர் எல்லோருமே மேற்படி விரதங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்பது அவருடைய கொள்கை. கிறிஸ்தவ சங்கத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் அந்த விரதங்களைக் குறித்துத்தான் பேசினர். விசேஷமாக அவர் வற்புறுத்திச் சொல்லிய விஷயங்கள் பதினென்று. அவை பின்வருமாறு :— 1. ஸத்ய விரதம் 2. அஹிம்ஸாவிரதம் 3. பிரமசரியம் 4. நாக்கைக் கட்டுதல் 5. உடைமை மறுத்தல் 6. சுதேசியம் 7. பயமின்மை 8. தீண்டல் 9. தேசபாஷை

10. தொழிற் பெருமை 11. தெய்வ பக்தி—இதுதான் ஸ்ரீகாந்தி செய்த பிரசங்கத்தின் ஸாராம்சம்.

தராசு சொல்லலாயிற்று :—"ஸ்ரீமான் காந்தி நல்ல மனுஷர். சொல்லுகிற ஸத்யவிரதம், அஹிம்ஸை, உடைமை மறுத்தல், பயமின்மை இந்த நான்கும் உத்தம தர்மங்கள்—இவற்றை எல்லோரும் இயன்றவரை பழக வேண்டும்."......"காந்தி பதினொரு விரதம் சொன்னார். நான் பன்னிரண்டாவது விரதமொன்று சொல்லுகிறேன். அது யாதெனில் —"எப்பாடுபட்டும் பொருள்தேடு; இவ்வுலகத்திலே உயர்ந்த நிலை பெறு." இப்பன்னிரண்டாவது விரதத்தைத் தேசமுழுதும் அனுஷ்டிக்க வேண்டும்.

பாரதியார் 'திருக்காதல்', 'திருவேட்கை', 'திருமகள் துதி', 'திருமகளைச் சரண் புகுதல்', 'மூன்று காதல்', என்னும் கவிதையில் உள்ள 'லக்ஷ்மி காதல்' என்ற கவிதைகளையும் இயற்றியுள்ளார்.]

மாதவன் சக்தியினைச் - செய்ய
மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்;
போதுமிவ் வறுமையெலாம் - எந்தப்
போதிலுஞ் சிறுமையின் புகைதனிலே
வேதனைப் படுமனமும் - உயர்
வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
வாதனை பொறுக்கவில்லை - அன்னை
மாமக ளடியிணை சரண் புகுவோம். 1

கீழ்களின் அவமதிப்பும் - தொழில்
கெட்டவ ரிணக்கமும் கிணற்றினுள்ளே
மூழ்கிய விளக்கினைப்போல் - செய்யும்
முயற்சியெல் லாங்கெட்டு முடிவதுவும்,

ஏழ்கட லோடியுமோர் - பயன்
எய்திட வழியின்றி இருப்பதுவும்,
வீழ்கஇக்கொடு நோய்தான் - வைய
மீதினில் வறுமையோர் கொடுமையன்றோ? 2

பாற்கட லிடைப் பிறந்தாள் - அது
பயந்தநல் லமுதத்தின் பான்மைகொண்டாள்;
ஏற்குமோர் தாமரைப்பூ - அதில்
இணைமலர்த் திருவடி இசைந்திருப்பாள்;
நாற்கரந் தானுடையாள் - அந்த
நான்கினும் பலவகைத் திருவுடையாள்;
வேற்கரு விழியுடையாள் - செய்ய
மேனியன் பசுமையை விரும்பிடுவாள். 3

நாரணன் மார்பினிலே - அன்பு
நலமுற நித்தமும் இணைந்திருப்பாள்;
தோரணப் பந்தரிலும் - பசுத்
தொழுவிலும், சுடர்மணி மாடத்திலும்,
வீரர்தந் தோளினிலும் - உடல்
வெயர்த்திட உழைப்பவர் தொழில்களிலும்
பாரதி சிரத்தினிலும் - ஒளி
பரவிட வீற்றிருந் தருள்புரிவாள். 4

பொன்னிலும் மணிகளிலும் - நறும்
பூவிலும் சாந்திலும் விளக்கினிலும்,
கன்னியர் நகைப்பினிலும் - செழுங்
காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்,
முன்னிய துணிவினிலும் - மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி - அவள்
பதமலர் வாழ்த்திநற் பதம்பெறுவோம், 5

# 13. வெள்ளைத் தாமரை

[குறிப்பு : கலைமகள் வணக்கம் சொல்லிய பாரதியார் ஒரு புதுக் கருத்தை இங்கே தெரிவிக்கிறார். ஏழைக்கு எழுத்து அறிவித்தல் என்பது கோடிகோடி புண்ணியம் என்கிறார் பாரதியார். இந்தப் பாடலைச் சங்கீத கலாநிதி மதுரை மணி அய்யர் அவர்கள் பாடிப்பாடி மிகவும் பிரபலப்படுத்தியிருக்கிறார், வீணை செய்யும் ஒலியில் இருப்பாள் என்று அவர் பாடும்போது, வீணையைக் கையேந்தி அங்கே கலைமகள் நிற்பது போலவும், அதில் அற்புதமான ஒலி கேட்பதுபோலவும் பிரமிப்பு ஏற்படும்.]

1. வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்,
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்;
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்;
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்.
(வெள்ளைத்)

2. மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்,
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்;
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்;
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள். (வெள்ளைத்)

3 வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்;
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்,
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்,
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம். (வெள்ளைத்)

4. தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்,
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்;
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்;
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்;
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்.
(வெள்ளைத்)

5. செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!
வந்த னம்இவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்!
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்தி ரம்இவள்பூசனை யன்றாம். (வெள்ளைத்

6. வீடு தோறும் கலையின் விளக்கம்,
வீதி தோறும் இரண்டொரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பல பல பள்ளி;

தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.
(வெள்ளைத்)

7. ஊணர் தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு;
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பாரசி கப்பழந் தேசம்
தோண லத்த மிருக்கும் மிசிரம்
சூழ்க டற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவியின் ஒளிமிகுந் தோங்க.
(வெள்ளைத்)

8. ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்,
ஊனம் இன்று பெரிதிழைக் கின்றீர்!
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்,
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போன தற்கு வருந்துதல் வேண்டா,
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்! (வெள்ளைத்)

9. இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்,
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்,

பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.
(வெள்ளைத்)

10. நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்!
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!
(வெள்ளைத்)

## 14. மூன்று காதல்

[குறிப்பு : பாரதியார் ஒரு நவராத்திரியின்போது திருமதி யதுகிரியம்மாளின் விருப்பத்திற்கிணங்க இப் பாடலைப் பாடினார். சரஸ்வதி காதல், லக்ஷ்மி காதல், காளி காதல் என்பன இந்த மூன்று பாடல்கள் ஆகும். ஒவ்வொன்றையும் வெவ்வேறு ராகங்களில் அமைத்துப் பாடியிருக்கின்றார் பாரதியார். கலைமகளிடம் காதல் கொண்டது பற்றியும், செல்வத்துக்குரியவளான லக்ஷ்மி யிடத்தில் காதல் கொண்டதையும், முதல் இரண்டு பாடல் களில் அழகாக வெளியிடுகின்றார்.

ஆனால் காளி காதலைப்பற்றிக் கூறும்போது, 'இவள் அன்னை வடிவமடா, இவள் இன்னருள், வேண்டுமடா, அத்தனை கோடி பொருளினுள்ளே நின்று வில்லை அசைப் பவளைத் தோத்திரம் பாடித் தொழுதிடுவோம்' என்கிறார் பாரதியார். காதல்கொண்டேன் என்று கூறத் துணிய வில்லை பாரதியார் என்பது மிகக் கவனத்திற்குரியது. வியாழக்கிழமை தோறும் புதுசேரியில் துய்ப்ளேக்ஸ் சிலையின் முன்னே பாண்டு வாசிப்பது வழக்கமாம். உச்சஸ்தாயியில் வாசித்துக் கொண்டிருந்துவிட்டு, உடனே கீழ்ஸ்தாயிக்கு பாய்கிறது இந்த மேல்நாட்டு சங்கீதம். 'இந்த மாதிரி சங்கீதம் நமது பாடல்களுக்கும் அமைத்தால் நன்றாக இருக்குமா?' என்ற கேள்வி பிறந்தது. அதற்கு பாரதியார் "பாடும் வகையில் பாடினால் நன்றாக இருக்கும். நாளைக்கு ஸரஸ்வதி பண்டிகை ஆதலால், இந்த மெட்டில் ஒருபாடல் இயற்றப் போகிறேன்" என்றாராம். அந்த வகையில் இசையமைப்பு உருவாகியிருக்கிறது இந்த மூன்று பாடல்களுக்கும். இந்தச் சுவையான செய்தியைப் பற்றி, 'பாரதி நினைவுகள்' என்ற திருமதி யதுகிரி அம்மாளின் நூலில் வெளியிட்டிருக்கிறார்.]

## முதலாவது—சரஸ்வதி காதல்

பிள்ளைப் பிராயத்திலே - அவள்
பெண்மையைக் கண்டு மயங்கி விட்டேனங்குப்
பள்ளிப் படிப்பினிலே - மதி
பற்றிட வில்லை யெனிலுந் தனிப்பட
வெள்ளை மலரணைமேல் - அவள்
வீணையுங் கையும் விரிந்த முகமலர்
விள்ளும் பொருளமுதும் - கண்டேன்
வெள்ளை மனது பறிகொடுத் தேனம்மா! 1

ஆடிவரு கையிலே - அவள்
அங்கொரு வீதி முனையில் நிற்பாள், கையில்
ஏடு தரித்திருப்பாள் - அதில்
இங்கித மாகப் பதம்படிப் பாள், அதை
நாடி யருகணைந்தால் - பல
ஞானங்கள் சொல்லி இனிமை செய்வாள், "இன்று
கூடிமகிழ்வ" மென்றால் - விழிக்
கோணத்தி லேநகை காட்டிச்செல் வாளம்மா! 2

ஆற்றங் கரைதனிலே - தனி
யானதோர் மண்டப மீதினிலே, தென்றற்
காற்றை நுகர்ந்திருந்தேன் - அங்குக்
கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள், அதை
ஏற்று மனமகிழ்ந்தே - "அடி
என்னோ டிணங்கி மணம்புரிவாய்" என்று
போற்றிய போதினிலே - இளம்
புன்னகை பூத்து மறைந்துவிட் டாளம்மா! 3

சிந்தந் தளர்ந்ததுண்டோ? - கலைத்
தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு
பித்துப் பிடித்ததுபோல் - பகற்
பேச்சும் இரவிற் கனவும் அவளிடை
வைத்த நினைவை யல்லால் - பிற
வாஞ்சை யுண்டோ? - வய தங்ஙன மேயிரு
பத்திரண் டாமளவும் - வெள்ளைப்
பண்மகள் காதலைப் பற்றிநின் றேனம்மா! 4

## இரண்டாவது—லக்ஷ்மி காதல்

இந்த நிலையினிலே - அங்கொர்
இன்பப் பொழிலி னிடையினில் வேறொரு
சுந்தரி வந்து நின்றாள் - அவள்
சோதி முகத்தின் அழகினைக் கண்டென்றன்

சிந்தை திறைகொடுத்தேன் - அவள்
செந்திரு வென்று பெயர்சொல்லி னாள், மற்றும்
அந்தத் தின முதலா - நெஞ்சம்
ஆரத் தழுவிட வேண்டுகின் றேனம்மா! 5

புன்னகை செய்திடுவாள் - அற்றைப்
போது முழுதும் மகிழ்ந்திருப்பேன்; சற்றென்
முன்னின்று பார்த்திடுவாள் - அந்த
மோகத்தி லேதலை சுற்றிடுங் காண்; பின்னர்
என்ன பிழைகள் கண்டோ - அவள்
என்னைப் புறக்கணித் தேகிடு வாள், அங்கு
சின்னமும் பின்னமுமா - மனஞ்
சிந்தியுளமிக நொந்திடு வேனம்மா! 6

காட்டு வழிகளிலே - மலைக்
காட்சியிலே, புனல் வீழ்ச்சி யிலே, பல
நாட்டுப் புறங்களிலே - நகர்
நண்ணு சிலசுடர் மாடத்தி லே, சில
வேட்டுவர் ·சார்பினிலே - சில
வீர ரிடத்திலும், வேந்த ரிடத்திலும்,
மீட்டு மவள் வருவாள் - கண்ட
விந்தை யிலேயின்ப மேற்கொண்டு போமம்மா! 7

## மூன்றாவது—காளி காதல்

பின்னோர் இராவினிலே - கரும்
பெண்மை யழகொன்று வந்தது கண்முன்பு,
கன்னி வடிவமென்றே - களி
கண்டு சற்றேயரு கிற்சென்று பார்க்கையில்
அன்னை வடிவமடா! - இவள்
ஆதி பராசக்தி தேவி யடா! - இவள்
இன்னருள் வேண்டுமடா! - பின்னர்
யாவு முலகில் வசப்பட்டுப் போமடா! 8

செல்வங்கள் பொங்கி வரும்; - நல்ல
 தெள்ளறி வெய்தி நலம்பல சார்ந்திடும்;
அல்லும் பகலுமிங்கே - இவை
 அத்தனை கோடிப் பொருளினுள்ளே நின்று
வில்லை யசைப்பவளை - இந்த
 வேலை யனைத்தையும் செய்யும் வினைச்சியைத்
தொல்லை தவிர்ப்பவளை - நித்தம்
 தோத்திரம் பாடித் தொழுதிடு வோமடா! 9

## 15. அபேதாநந்தா

[குறிப்பு :—ஸ்வாமி அபேதாநந்தரைப் பற்றி ஒரு கவிதையும் இயற்றியிருக்கிறார். அதனால் வெளிநாடு சென்று திரும்பிய மஹான்களுக்கு எவ்வளவு தூரம் மதிப்பு வைத்திருக்கின்றார் என்று தெரிகிறது. 1906 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் தேதி இக் கட்டுரை வெளிவந்திருக்கிறது.

"இந்த வாரத்தில் சென்னையிலே நடந்த சமாசாரங்களுக்குள் வெகு முக்கியமானது ஸ்வாமி அபேதாநந்தரின் வரவேயாகும். பாரதநாட்டு மகரிஷிகளில் ஒருவரும் ஜகத்பிரசித்தருமாகிய ஸ்வாமி விவேகாநந்த பரமஹம்ஸரது ஸகபாடியும், ஸ்ரீமத் ராமகிருஷ்ண பரப்ரஹ்மத்தின் சிஷ்யருமான அபேதாநந்தர், பல வருஷ காலமாக ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களில், மண்ணாசையிலும் பொன்னாசையிலும் அமிழ்ந்து கிடக்கும் மனிதர்களிடம் வேதாந்த மார்க்கம் உபதேசித்து, அவர்களுடைய இரும்பு நெஞ்சுகூட ஞானத்தீயில் இளகுமாறு செய்வித்துப் பெருங்கீர்த்தி பெற்றுவிட்டு, இப்போது தமது தாய் நாட்டிற்கு மீண்டு வந்திருக்கிறார்.

"இவரும் இவரது கூட்டாளிகளும் கடல்மீது எத்தனையோ ஆயிரம் காதம் கடந்துபோய் இத்தேசத்தின் பெயர் கேட்டவுடனே அந்நியர்கள் முடி வணங்குமாறு செய்யும் நன்மைக்கு நம்மவர்களால் என்ன கைம்மாறு செய்ய முடியும்? இந்த மகான்கள் தாம் என்ன கைம்மாறை எதிர் பார்க்கிறார்கள்? யாதொரு பற்று மில்லாமல், இரந்து உண்பவர்களாய் உலகத்தாரின் ஞான வழிக்கு ஏற்பட்டிருக்கும் மாயையாகிய குருட்டுத் தன்மையை நீக்கி, ஒளியளிக்க வேண்டுவதே கடமையாகக் கொண்டு நாள் கழித்துவரும் இப்பெரியார்களுக்கு உலகம் அளக்கத் தகாதவாறு கடமைப்பட்டிருக்கிறது."

எவ்வாறேனும் பாரத தேசத்தின் மதிப்பு உயர வேண்டும் என்ற பாரதியாரின் ஆவல் இங்கே தொனிக்கின்றது.

சுருதியும் அரிய உபநிட தத்தின்
தொகுதியும் பழுதற உணர்ந்தோன்,
கருதிடற் கரிய பிரமநன் னிலையைக்
கண்டுபே ரொளியிடைக் களித்தோன்,
அரிதினிற் காணும் இயல்பொடு புவியின்
அப்புறத் திருந்து நண்பகலில்
பரிதியி னொளியும் சென்றிடா நாட்டில்
மெய்யொளி பரப்பிடச் சென்றோன். 1

வேறு

ஒன்றேமெய்ப் பொருளாகும்; உயிர்களெலாம்
அதன் வடிவாம் ஒருங்காலை;
என்தேவன் உன்தேவன் என் றுலகர்
பகைப்பதெலாம் இழிவாம் என்று,

நன்றேயிங் கறிவுறுத்தும் பரமகுரு
ஞானமெனும் பயிரை நச்சித்
தின்றேபா ழாக்கிடுமைம் புலன்களெனும்
விலங்கினத்தைச் செகுத்த வீரன். 2

வேறு

வானந் தம்புகழ் மேவி விளங்கிய
மாசி லாதி குரவனச் சங்கரன்
ஞானந் தங்குமிந் நாட்டினைப் பின்னரும்
நண்ணி ஞானெனத் தேசுறு மவ்விவே—
கானந் தப்பெருஞ் சோதி மறைந்தபின்!
அவனி மைழத்த பெருந் தொழி லாற்றியே
ஊனந் தங்கிய மானிடர் தீதெலாம்
ஒழிக்கு மாறு பிறந்த பெருந்தவன். 3

வேறு

தூயஅபே தாநந்தனெனும் பெயர் கொண்
டொளிர் தருமிச் சுத்த ஞானி
நேயமுடன் இந்நகரில் திருப்பாதஞ்
சாத்தியருள் நெஞ்சிற் கொண்டு,
மாயமெலாம் நீங்கியினி தெம்மவர்நன்
னெறிசாரும் வண்ணம் ஞானம்
தோயநனி பொழிந்திடுமோர் முகில்போன்றுன்
இவன்பதங்கள் துதிக்கின் றேமே. 4

## 16. நிவேதிதா தேவி

[குறிப்பு : 1905 - ஆம் ஆண்டு காசியில் நடந்த காங்கிரஸுக்குச் சென்று திரும்பிய பாரதியார், கல்கத்தா அருகிலுள்ள டம்டம் என்ற இடத்திற்குச் சென்று, அங்கே

விவேகானந்தரின் தர்மபுத்திரியாகிய நிவேதிதா தேவியைச் சந்தித்தார். உடனே பாரதியார் வாழ்க்கை அடியோடு மாறிவிடுகின்றது. ஆகையினுல்தான், தாம் எழுதி வெளியிட்ட முதல் இரண்டு நூல்களையும் நிவேதிதா தேவிக்கு சமர்ப்பணம் செய்திருக்கிருர்.

நிவேதிதா தேவி ஓர் ஆங்கில மாது. இவர் இயற் பெயர் மார்கரட் இ. நோபிள் என்பதாகும். அவர் ஸ்வாமி விவேகானந்தரின் உணர்ச்சிமிக்க சொற்பொழிவைக் கேட்டுப் பழம்பெரும் புனிதபூமியான பாரதநாட்டிற்குத் தொண்டுபுரிவதே தமது வாழ்க்கையின் லட்சியம் என மேற்கொண்டவராகும்.

மேலும் "ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்தும நிலை விளக்கியதொப்ப, எனக்கு பாரத தேவியின் சம்பூர்ண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச் சிறு நூலை சமர்ப்பிக்கிறேன்." என்று பாரதியார் சமர்ப்பணம் செய்திருக்கிருர்.

1909-ல் பாரதியார் பாண்டிச்சேரி சென்ற பிறகு ஜன்ம பூமி என்ற பெயரில் ஸ்வதேச கீதங்கள் என்ற நூலுக்கு இரண்டாம் பாகம் வெளியிட்டார். அதையும் அவர் தமது குருமணியாகிய நிவேதிதா தேவிக்கு சமர்ப் பணம் செய்திருக்கிருர். அதன் வாசகம் வருமாறு :

"எனக்கு ஒரு கடிகையிலே மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாமலுணர்த்திய குருமணியும், பகவான் விவேகானந் தருடைய தர்மபுத்திரியும் ஆகிய நிவேதிதா தேவிக்கு இந் நூலைச் சமர்ப்பிக்கிறேன்—ஸி. சுப்பிரமணிய பாரதி."

அருளுக்கு நிவேதனமாய், அன்பினுக்கோர்
கோயிலாய், அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய் எமதுயர்நா
டாம்பயிர்க்கு மழையாய் இங்கு
பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப்
பெரும் பொருளாய்ப் புன்மைத் தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளங்கிய தாய்
நிவேதிதையைத் தொழுது நிற்பேன்.

## 17. ஐயம் உண்டு

[குறிப்பு : இது புகழ்பெற்ற பாடல்களில் ஒன்று. மணிமணியாகவும் நவரத்தினங்களாகவும் சொற்கள் விழுந்திருக்கின்றன. 'விசனப் பொய்க் கடலுக்குக் குமரன் கைக்கணையுண்டு.' என்ன அற்புதமான கவிதை! இவற்றில் எல்லாம்தான் பாரதியாரின் மேதாவிலாசமும் கவிதைச் சிறப்பும் தெரிகின்றன. அவர் ஒரு மஹாகவி என்பது நிலை நாட்டப் பெறுகின்றது. விடுதலைப் போராட்டத்தின் போது இப் பாடல் முழங்காத மேடையில்லை. ஜெயபேரிகை கொட்டடா என்பதும் புகழ்பெற்ற பாடல்தான். விடுதலைப் போராட்டத்திற்கு நேரிடையாக இது உரம் தரா விட்டாலும், இவற்றைப் பாடும்பொழுது எப்படியோ வலிமையும் துணிச்சலும் தாமாகவே ஏற்பட்டு விடுகின்றன. கவிதையின் மந்திரசக்தியே அதுதான். 'சுற்றி நில்லாதே போ பகையே துள்ளி வருகுது வேல்' என்ற அட்சர லக்ஷம் பெறும்படியான வரிகள் 'ஆறுதுணை' என்ற கவிதையிலே வந்திருக்கின்றது. இதற்குச் சமானமாகச் சொல்லலாம் இந்த வரிகளை. வீரத்தை நினைக்கும் போது, எப்படியோ முருகன் வந்து விடுகின்றான். அவன் வேலும் கணையும் வந்து விடுகின்றன.]

பல்லவி

ஐயமுண்டு பயமில்லை மனமே! - இந்த
ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு (ஜய)

அனுபல்லவி

பயனுண்டு பக்தியினாலே - நெஞ்சிற்
பதிவுற்ற குலசக்தி சரணுண்டு பகையில்லை. (ஜய)

சரணங்கள்

1. புயமுண்டு குன்றத்தைப் போலே - சக்தி
பொற்பாத முண்டு அதன் மேலே;
நியமமெல் லாம்சக்தி நினைவன்றிப் பிறிதில்லை;
நெறியுண்டு; குறியுண்டு; குலசக்தி வெறியுண்டு. (ஜய)

2. மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும் - தெய்வ
வலியுண்டு தீமையைப் போக்கும்;
விதியுண்டு தொழிலுக்கு விளைவுண்டு; குறைவில்லை
விசனப்பொய்க் கடலுக்குக் குமரன்கைக் கணையுண்டு.
(ஜய)

3. அலைபட்ட கடலுக்கு மேலே - சக்தி
அருளென்னுந் தோணியி னாலே,
தொலையெட்டிக் கரையுற்றுத் துயரற்று விடுபட்டுத்
துணிவுற்ற குலசக்தி சரணத்தில் முடிதொட்டு. (ஜய)

## 18. யோக சித்தி

(வரங் கேட்டல்)

[குறிப்பு : பாரதியார் 1913-ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் இந்த அருமையான கவிதையை எழுதியிருக்கின்றார். ஏதோ தமக்கு நேர்ந்த ஓர் இன்னலின் விளைவாக இந்தக் கவிதை எழுந்துள்ளது. 'சித்தக்

கடலில்' 1915, ஜூலை மாதம், 1-ஆம் தேதியில் இந்த உணர்ச்சியே மேலோங்கி நிற்கிறது என்பது, கீழ்க்கண்ட பாரதி வாக்கியத்தால் தெளிவாகும். "மகனே, உடல் வெற்றி கொள். அது எப்பொழுதும் நீ சொன்னபடி கேட்கவேண்டும். அது சொன்னபடி நீ கேட்கலாகாது. அது மிருகம். நீ தேவன்—அது யந்திரம். நீ யந்திரி."

"வயிறு வேதனை செய்கிறது, உஷ்ண மிகுதியால் நோயற்றிருப்பதற்கு சக்தியை ஓயாமல் வேண்டிக்கொள். நோயில்லை யென்று மனதை உறுதி செய். மனம் போல உடல்."

பாரதியார் மேலும் எழுதுகிறார்:

"இன்பமில்லையா?

பராசக்தீ, இந்த உலகத்தின் ஆத்மா நீ.

உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள் தோறும் உன்மீது பாட்டுப் பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களை யெல்லாம் கொடுத்துவிடக் கூடாதா?

முதலாவது, எனக்கு என்மீது வெற்றி வரவேண்டும். குழந்தைக்கு ஜ்வரம் வந்தது. நினது திருவருளால் குணமாய் விட்டது. இரண்டு மாதக் காலம் இரவும் பகலுமாக நானும் செல்லம்மாளும் புழுத் துடிப்பது போலத் துடித்தோம். ஊண் நேரே செல்லவில்லை—இருவருக்கும் உறக்கம் நேரே வரவில்லை—இருவருக்கும். எப்போதும் சஞ்சலம். பயம், பயம், பயம்! சக்தீ, உன்னை நம்பித் தானிருந்தோம். நீ கடைசியாகக் காப்பாற்றினாய். உன்னை வாழ்த்துகிறேன்.

கடன்காரர் தொல்லையும் அத்துடன் வந்து கலந்தது. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப்பம், குழப்பம்—தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்! பராசக்தீ, ஓயாமல்

கவிதை எழுதிக் கொண்டிருக்கும்படி திருவருள் செய்ய மாட்டாயா? கடன்களெல்லாம் தீர்ந்து, தொல்லையில்லாத படி என் குடும்பத்தாரும் என்னைச் சார்ந்த பிறரும் வாழ்ந்திருக்க, நான் எப்போதும் உன் புகழை ஆயிரவிதமான புதிய புதிய பாட்டுக்களில் அமைக்க விரும்புகின்றேன். உலகத்தில் இதுவரை எங்குமில்லாதபடி அற்புதமான ஒளிச் சிறப்பும், பொருட் பெருமையும் உடைய பாட்டொன்று என் வாயிலே தோன்றும்படி செய்ய வேண்டும்.

தாயே—என்னைக் கடன்காரர் ஓயாமல் வேதனைப் படுத்திக் கொண்டிருந்தால், நான் அரிசிக்கும், உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால் உன்னை எப்படிப் பாடுவேன்?"

பாரதியார், அனேகமாக இதை உணர்ச்சி வசப்பட்டுத் தான் வரங்கேட்டிருக்க வேண்டும்.

வரங்கேட்பதிலும் பாரதியாரின் தனித்தன்மை வெளிப்படுகின்றது. அவர் வரங்கொடு, வரங்கொடு என்று கெஞ்சவில்லை.

"மலர்த்தாளில் விழுந்தபயங் கேட்டேன்—அது
தாரா யெனிலுயிரைத் தீராய்"

என்றும்,

"பலநாளிங் கெனையலைக்க லாமோ?—உள்ளம்
நாடும் பொருளடைதற் கன்றோ?"

என்றும் மிடுக்கோடு வரம் கேட்கின்றார்.

மேலும் பாரதியார் தமக்குத் தனிப்பட்ட பணி யொன்று உண்டு என்பதையும் தெளிவாகக் காண்கிறார். தமிழ்நாடு, தமிழ் மறுமலர்ச்சி பெறவேண்டும் என்னும்

பணி எனக்கிருக்கின்றது. "நான் சாதாரண ாக வேடிக்கை மனிதரைப்போலே நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ?" என்றும் கேட்கின்றார்.

வலிமை பெறுவதற்குக் இது ஒரு மிக அழகிய கவிதை யாம். ஒருவேளை மாதக் கடைசியிலே பணம் கையில் இல்லாதபோது, திருமதி செல்லம்மாள் அவர்கள் வரம் கேட்கும்படி தூண்டினார்களோ என்னவோ தெரியாது. அப்படித் தூண்டியிருந்தால் ஓர் அழகான கவிதை கிடைத்ததுபற்றி திருமதி செல்லம்மாளுக்கு நாம் மிகுந்த நன்றி செலுத்த வேண்டும். வரங்கேளுங்கள் என்று தூண்டியதாகப் பாரதி நினைவுகள் என்ற திருமதி யதுகிரி அம்மாளின் நூல் பேசுகின்றது.

விண்ணும் மண்ணும் தனியாளும் - எங்கள்
வீறை சக்தி நின தருளே - என்றன்
கண்ணும் கருத்தும் எனக்கொண்டு - அன்பு
கசிந்து கசிந்து கசிந்துருகி - நான்
பண்ணும் பூசனைகள் எல்லாம் - வெறும்
பாலை வனத்தில் இட்ட நீரோ; - உனக்
கெண்ணுஞ் சிந்தை யொன்றிலையோ? - அறி
வில்லா தகிலம் அளிப்பாயோ? 1

நீயே சரணமென்று கூவி - என்றன்
நெஞ்சிற் பேருறுதி கொண்டு - அடி
தாயே! எனக்குமிக நிதியும் - அறந்
தன்னைக் காக்குமொருதிறனும் - தரு
வாயே என்றுபணிந் தேந்திப் - பல
வாறு நினது புகழ் பாடி - வாய்
ஓயே னவதுண ராயோ? - நின
துண்மை தவறுவதோர் அழகோ? 2

காளீ வலியசா முண்டி - ஓங்
காரத் தலைவியென் னிராணி - பல
நாளிங் கெனையலைக்க லாமோ? - உள்ளம்
நாடும் பொருளடைதற் கன்றோ! - மலர்த்
தாளில் விழுந்தபயங் கேட்டேன் - அது
தாரா யெனிலுயிரைத் தீராய் - துன்பம்
நீளில் உயிர்தரிக்க மாட்டேன் - கரு
நீலியென் னியல்பறி யாயோ? 3

தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்றுநினைத் தாயோ? 4

நின்னைச் சிலவரங்கள் கேட்பேன் - அவை
நேரே இன்றெனக்குத் தருவாய் - என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும் - இனி
என்னைப் புதிய வுயிராக்கி - எனக்
கேதுங் கவலையறச் செய்து - மதி
தன்னை மிகத்தெளிவு செய்து - என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய். 5

தோளை வலிவுடைய தாக்கி - உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி - அரி
வாளைக் கொண்டுபிளந் தாலும் - கட்டு
மாறா வுடலுறுதி தந்து - சுடர்

நாளைக் கண்டதோர் மலர்போல் - ஒளி
நண்ணித் திகழுமுகந் தந்து - மத
வேளை வெல்லு முறைகூறித் - தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்; 6

எண்ணுங் காரியங்க ளெல்லாம் - வெற்றி
யேறப் புரிந்தருளல் வேண்டும் - தொழில்
பண்ணப் பெருநிதியம் வேண்டும் - அதிற்
பல்லோர் துணைபுரிதல் வேண்டும் - சுவை
நண்ணும் பாட்டினொடு தாளம் - மிக
நன்று வுளத்தழுந்தல் வேண்டும் - பல
பண்ணிற் கோடிவகை இன்பம் - நான்
பாடத் திறனடைதல் வேண்டும். 7

கல்லை வயிரமணி யாக்கல் - செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல் - வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல் - பன்றிப்
போத்தைச் சிங்கவே றுக்கல் - மண்ணை
வெல்லத் தினிப்புவரச் செய்தல் - என
விந்தை தோன்றிட இந்நாட்டை - நான்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி - வெற்றி
சூழும் வீரமறி வாண்மை, 8

கூடுந் திரவியத்தின் குவைகள் - திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள் - இவை
நாடும் படிக்கு வினை செய்து - இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக் - கலி
சாடுந் திறனெனக்குத் தருவாய் - அடி
தாயே! உனக்கரிய துண்டோ? - மதி
மூடும் பொய்ம்மையிரு ளெல்லாம் - எனை
முற்றும் விட்டகல வேண்டும்,

ஐயம் தீர்ந்துவிடல் வேண்டும் - புலை
அச்சம் போயொழிதல்வேண்டும் - பல
பையச் சொல்லுவதிங் கென்னே! - முன்னைப்
பார்த்தன் கண்ணனிவர் நேரா - எனை
உய்யக் கொண்டருள வேண்டும் - அடி
உன்னைக் கோடிமுறை தொழுதேன் - இனி
வையத் தலைமையெனக் கருள்வாய் - அன்னை
வாழி! நின்னதருள் வாழி!

ஓம் காளி! வலிய சாமுண்டீ!
ஓங்காரத் தலைவி! என் இராணி!

## 19. பகைவனுக்கருள்வாய்

[குறிப்பு : பாரதியார் இயல்பாகவே இரக்க நெஞ்சம் படைத்தவர். பாண்டிச்சேரியில் உள்ளபோது முதல் உலக மஹாயுத்தம் நடந்துகொண்டிருந்தது. "அதில் பல வெள்ளையர்கள் மடிந்து போவதற்காக நான் கண்ணீர் சிந்தியதுண்டு. இத்தனைக்கும் நான் ஸ்வதேசியத்தில் கொஞ்சம் அழுத்தமானவன்" என்று பாரதியாரே எழுதியிருக்கிறார். ஆகவே பகைவனுக்கருள்வாய் என்ற கவிதை இயல்பாகவே மிக அழகாக எழுந்திருக்கின்றது. அவர் காட்டியுள்ள சிறந்த எடுத்துக்காட்டாக இக் கவிதை உருவாகியிருக்கின்றது. 'தின்ன வரும் புலி தன்னையும் அன்பொடு சிந்தையிற் போற்றிடுவாய்' என்று இவ்வாறான பலபிரயோகங்கள் அழகாக விழுந்திருக்கின்றன. காந்தி அடிகள் இக் கவிதையின் பொருளைத் தெரிந்து கொண்டிருப்பாராயின் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பார்.]

பகைவனுக் கருள்வாய் - நன்னெஞ்சே!
பகைவனுக் கருள்வாய்!

1. புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே - நன்னெஞ்சே!
பூமியிற் கண்டோமே.
பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான் - நன்னெஞ்சே!
பரமன் வாழ்கின்றான். (பகைவ)

2. சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ? - நன்னெஞ்சே!
குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்கத்திக்
கொடி வளராதோ? - நன்னெஞ்சே! (பகைவ)

3. உள்ள நிறைவிலொர் கள்ளம் புகுந்திடில்
உள்ளம் நிறைவாமோ - நன்னெஞ்சே!
தெள்ளிய தேனிலொர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனாமோ? நன்னெஞ்சே!
(பகைவ)

4. வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ? - நன்னெஞ்சே!
தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவா னென்ற
சாத்திரங் கேளாயோ? - நன்னெஞ்சே!
(பகைவ)

5. போருக்கு வந்தங் கெதிர்த்த கவுரவர்
போலவந் தானுமவன் - நன்னெஞ்சே!
நேருக் கருச்சுனன் தேரிற் கசைகொண்டு
நின்றதுங் கண்ணனன்றோ? - நன்னெஞ்சே!
(பகைவ)

6. தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய் - நன்னெஞ்சே!
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய் - நன்னெஞ்சே! (பகைவ)

## 20. யேசுகிறிஸ்து—அல்லா

[குறிப்பு : யேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட மூன்றும் நாள் உயிர்பெற்று எழுந்திருக்கிறார் என்பதற்கு பாரதியார் ஓர் புதிய விளக்கம் இக் கவிதையிலே கொடுத்திருக்கிறார். எல்லாத் தெய்வமும் ஒன்றுதான். அவனை யேசு என்னலாம், அல்லா என்னலாம். இதில் சமயப்பூசலுக்கு இடமேயில்லை என்பதற்கு பாரதியார் பாடல் நல்ல எடுத்துக்காட்டாகும். இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை என்ற ஒரு சொற்பொழிவையே பொட்டல்புதூரில் நிகழ்த்தியிருக்கிறார். நமது இஷ்ட தெய்வமாகிய பராசக்தியைப்பற்றி பல சிறந்த கவிதைகளை இயற்றியிருக்கின்றார் என்றாலும், யேசுகிறிஸ்து, அல்லா முதலிய தெய்வங்களில் யாதொரு ஏற்றமோ, தாழ்வோ யில்லை என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் கவிதைகள் அமைந்திருக்கின்றன. பொட்டல் புதூரில் நிகழ்த்திய சொற்பொழிவில், தாம் பாடிய அல்லா அல்லா அல்லா என்ற பாடலைப் பாடியப் பின்னரோ அச் சொற்பொழிவைத் தொடங்குகிறார் பாரதியார். என்பது கவனிக்கத்தக்கது.]

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்,
எழுந்துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்
நேசமா மரியா மக்த லேநா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்.

தேசத் தீர் இதன் உட்பொருள் கேளீர்;
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாசமின்றி நமை நித்தங் காப்பார்,
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால். 1

அன்புகாண் மரியா மக்த லேநா.
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து;
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்;
பொன்பொ லிந்த முகத்தினிற் கண்டே
போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை;
அன்பெனும் மரியா மக்த லேநா
ஆஹா! சாலப் பெருங்களி யிஃதே. 2

உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித் தவங்கொண் டடித்தால்,
வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மைகாண் மரியா மக்த லேநா,
பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து;
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
நொடியி லிஃது பயின்றிட லாகும். 3

பல்லவி

அல்லா, அல்லா. அல்லா!

சரணங்கள்

1. பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி யண்டங்கள்
எல்லாத் திசையிலுமோ ரெல்லை யில்லாவெளி
[வானிலே!

நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்
சொல்லாலும் மனத்தாலுந் தொடரொணாத பெருஞ்
சோதி!

(அல்லா, அல்லா, அல்லா!)

2. கல்லாதவ ராயினும் உண்மை சொல்லாதவ
ராயினும்,
பொல்லாதவ ராயினும் தவமில் லாதவராயினும்,
நல்லாருரை நீதியின்படி நில்லாதவ ராயினும்
எல்லாரும் வந்தேத்து மளவில் யமபயங் கெடச்
செய்பவன்

(அல்லா, அல்லா, அல்லா!)

## 21. சாகாவரம்

[குறிப்பு : இது பாரதியார் சாகாமல் இருப்பதற்குச் செய்யும் முயற்சிகளில் ஒன்ருகும் என்று கூறலாம். கடவுளை எந்த வடிவத்திலும் வணங்கலாம். இதில் சற்றும் மாறுபாடு இல்லை என்பதற்கு ராமனைத் தொழுவது ஓர் எடுத்துக்காட்டு. மற்றபடி இதில் தனிச்சிறப்பு இல்லை. தமது இஷ்ட தெய்வமாகிய பராசக்தியை தொழுவது போல, இதில் அழகிய சொற்கள் இல்லையென்பதும் ஆராய்க.]

பல்லவி

சாகா வர மருள்வாய், ராமா
சதுர் மறை நாதா—ஸரோஜ பாதா!

சரணங்கள்

1. ஆகாசந் தீ கால் நீர் மண்
அத்தனை பூதமும் ஒத்து நிறைந்தாய்

ஏகாமிர்த மாகிய நின் தாள்
இணை சரணென்றால் இது முடியாதா? (சாகா)

2. வாகார் தோள் வீரா, தீரா,
மன்மத ரூபா வானவர் பூபா
பாகார் மொழி ஸீதையின் மென்றோள்
பழகிய மார்பா! பதமலர் சார்பாச் (சாகா)

3. நித்யா, நிர்மலா, ராமா,
நிஷ் களங்கா, ஸர்வா தாரா,
ஸத்யா, ஸநாதநா, ராமா
சரணம், சரணம், சரண முதாரா! (சாகா)

## 22. ஞாயிறு வணக்கம்

[குறிப்பு : பாரதியார் கதிரவன் ஒளியிலே மூழ்கித் திளைப்பவர். தேன்போலக் கதிரவன் ஒளி பாய்கின்றது என்று ஓர் இடத்திலே வர்ணித்திருக்கின்றார். ஷெல்லி போன்ற மஹாகவிகளுக்கு, ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட பொருளைப் பார்ப்பது அழகாக இருக்குமாம். ஆனால் பாரதியாரோ எந்த நேரத்திலும், எல்லா வேளைகளிலும், கதிரவன் ஒளியில் எப்பொருளும் அழகாக இருப்பதைக் காண்கின்றார். ஆதலினால் "ஆதித் தாய் தந்தை நீவிர் உமக்கே ஆயிரந்தரம் அஞ்சலி செய்வேன்" என்று புகழ்கின்றார், கதிரவனையும் பூமியையும்.

ஹிந்து மதத்தை ஆறுவகையாக வகைப்படுத்தி ஆதி சங்கரர் அமைத்தார். அவற்றில் ஞாயிறு வணக்கமும் ஒன்று (சௌரம்) என்பது இங்கு நினைவுகூரத் தக்கது.

கடலின்மீது கதிர்களை வீசிக்
கடுகி வான்மிசை ஏறுதி யையா!
படரும் வானொளி யின்பத்தைக் கண்டு
பாட்டுப்பாடி மகிழ்வன புட்கள்!
உடல் பரந்த கடலுந் தன்னுள்ளே
ஒவ்வொரு நுண்டுளி யும்வழி யாகச்
சுடரும் நின்றன் வடிவையுட் கொண்டே
சுருதி பாடிப் புகழ்கின்ற திங்கே. 1

என்ற னுள்ளங் கடலினைப் போலே
எந்த நேரமும் நின்னடிக் கீழே
நின்று தன்னகத் தொவ்வோர் அணுவும்
நின்றன் ஜோதி நிறைந்தது வாகி
நன்று வாழ்ந்திடச் செய்குவை யையா
ஞாயிற் றின்கண் ஒளிதருந் தேவா!
மன்று வானிடைக் கொண்டுல கெல்லாம்
வாழ நோக்கிடும் வள்ளிய தேவா! 2

காதல் கொண்டனை போலும் மண்மீதே,
கண்பிறழ் வின்றி நோக்குகின் றாயே!
மாதர்ப் பூமியும் நின்மிசைக் காதல்
மண்டினாள், இதில் ஐயமொன் றில்லை;
சோதி கண்டு முகத்தில் இவட்கே
தோன்று கின்ற புதுநகை யென்னே!
ஆதித் தாய்தந்தை நீவிர் உமக்கே
ஆயிரந் தரம் அஞ்சலி செய்வேன். 3

## 23. ஆரிய தரிசனம்

[குறிப்பு : கீதை உபதேசத்தின் சாரமாகப் பாரதியார் இதை இயற்றியிருக்கின்றார். முதலாம் பாரதப் போரில் குருக்ஷேத்திரத்திலே பகைவர்கள் எல்லாரும் யார் யார்

என்று காணவேண்டி, ரதத்தைச் சற்று முன்னால் ஓட்டிச் செல்லுமாறு வேண்டுகின்றான் அர்ஜுனன். அப்பொழுது அவன் உள்ளம் சோர்ந்து விடுகின்றது. ஏனென்றால், தனக்கு முன்னால் நிற்பவர்களெல்லாம் நெருங்கிய உறவினர்கள் என்று தளர்ச்சியடைந்து, அம்பையும் வில்லையும் கீழே போட்டு விடுகின்றான். "இவ்வளவு பேர் நெருங்கிய உறவினர்களைக் கொன்றுவிட்டு, நான் ராஜ்யம் ஆளாவிட்டால் என்ன? மீண்டும் வனவாசத்திற்கே சென்றுவிடலாம்" என்று, அர்ஜுனன் சொல்லுகின்றான்.

இவ்வாறு மிதமிஞ்சிய இரக்கம் உள்ளவனாய் அர்ஜுனன் கலங்கி நிற்கிறான். அப்பொழுதுதான், ஓர் ஒப்பற்ற உண்மையைக் கண்ணன் வெளியிடுகின்றான். "அர்ஜுனா நீ வருந்துவது முற்றிலும் தவறு. எதிரிகளின் ஆன்மாவைப்பற்றி வருந்துகின்றாயா? அல்லது அவர்களின் உடலைப்பற்றி வருந்துகின்றாயா? இரண்டும் சரியல்ல. ஆன்மா என்றும் அழிவற்றது. அதைக் கத்தியால் வெட்டவும் தீயினால் எரிக்கவும் முடியாது. உடலோ அழியும் இயல்பு வாய்ந்தது. நீ அழிக்காவிடினும் அது தானே அழிய வேண்டியதுதான். ஆன்மாவுக்கு ஒருடல் அழிந்ததும், மற்றோருடல் தானே வந்து சேரும். ஆத்மாவின் இயற்கையை எண்ணி, உனக்கு ஏற்படுத்தப் பட்ட செயல்களை நீ செய்தே தீரவேண்டும். ஆகவே,

செய்தலுன் கடனே - அறஞ்
செய்தலுன் கடனே - அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே

ஆதலால்,
வில்லினை யெடடா! - கையில்
வில்லினை யெடடா! - அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா!

என்று அதட்டிச் சோர்வைப் போக்குகின்ருன் கண்ணன். பகவத் கீதையின் வடித்தெடுக்கப்பட்ட அழகிய இன்பக் கவிதைகளைப் பாரதியார் இதில் நமக்குத் தந்திருக்கின்ருர்.]

## ஓர் கனவு

கனவென்ன கனவே - என்றன்
கண் துயி லாது நனவினிலே யுற்ற (கன)

1. கானகங் கண்டேன் - அடா
கானகங் கண்டேன் - உச்சி
வானகத்தே வட்ட மதியொளி கண்டேன். (கன)

2. பொற்றிருக் குன்றம் - அங்கொர்
பொற்றிருக் குன்றம் - அதைச்
சுற்றியிருக்கும் சுனைகளும் பொய்கையும். (கன)

## புத்த தரிசனம்

3. குன்றத்தின் மீதே - அந்தக்
குன்றத்தின் மீதே - தனி
நின்றதொர் ஆல நெடுமரங் கண்டேன். (கன)

4. பொன்மரத் தின் கீழ் - அந்தப்
பொன்மரத் தின்கீழ் - வெறுஞ்
சின்மய மானதோர் தேவன் இருந்தனன். (கன)

5. புத்த பகவன் - எங்கள்
புத்த பகவன் - அவன்
சுத்தமெய்ஞ் ஞானச் சுடர்முகங் கண்டேன். (கன)

6. காந்தியைப் பார்த்தேன் - அவன்
காந்தியைப் பார்த்தேன் - உப
சாந்தியில் மூழ்கித் ததும்பிக் குளித்தனன். (கன)

7. ஈதுநல் விந்தை! - என்னே!
ஈதுநல் விந்தை! புத்தன்
சோதி மறைந்திருள் துன்னிடக் கண்டனன். (கன)

8. பாய்ந்ததங் கொளியே! - பின்னும்
பாய்ந்ததங் கொளியே! - அருள்
தோய்ந்த தென்மேனி சிலிர்த்திடக் கண்டேன். (கன)

## கிருஷ்ணார்ஜுன தரிசனம்

9. குன்றத்தின் மீதே - அந்தக்
குன்றத்தின் மீதே - தனி
நின்ற பொற்றேரும் பரிகளும் கண்டேன். (கன)

10. தேரின்முன் பாகன் - மணித்
தேரின்முன் பாகன் - அவன்
சீரினைக் கண்டு திகைத்துநின் றேனிந்தக் (கன)

11. ஓமென்ற மொழியும் - அவன்
ஓமென்ற மொழியும் - நீலக்
காமன்றன் உருவுமவ் வீமன்றன் திறலும் (கன)

12. அருள் பொங்கும் விழியும் - தெய்வ
அருள் பொங்கும் விழியும் - காணில்
இருள்பொங்கு நெஞ்சினர் வெருள்பொங்குந்
திகிரியும். (கன)

13. கண்ணனைக் கண்டேன் - எங்கள்
கண்ணனைக் கண்டேன் - மணி
வண்ணனை ஞான மலையினைக் கண்டேன். (கன)

14. சேனைகள் தோன்றும் - வெள்ளச்
சேனைகள் தோன்றும் - பரி
யானையுந் தேரும் அளவில தோன்றும். (கன)

15\. கண்ணன் நற் றேரில் - நீலக்
கண்ணன் நற் றேரில் - மிக
எண்ணயர்ந் தானோர் இளைஞனைக் கண்டேன். (கன)

16\. விசையென்கொ லிவனே! - விறல்
விசையன்கொ லிவனே! - நனி
இசையும் நன்கிசையுமிங் கிவனுக் கிந்நாமம். (விசை)

17\. வீரிய வடிவம்! - என்ன
வீரிய வடிவம்! - இந்த
ஆரியன் நெஞ்சம் அயர்ந்ததென் விந்தை! (விசை)

18\. பெற்றதென் பேறே - செவி
பெற்றதென் பேறே - அந்தக்
கொற்றவன் சொற்கள் செவியுறக் கொண்டேன்.
(கன)

19\. "வெற்றியை வேண்டேன்; - ஐய
வெற்றியை வேண்டேன்! - உயிர்
அற்றிடு மேனும் அவர்தமைத் தீண்டேன். (பெற்ற)

20\. சுற்றங் கொல்வேனோ? - என்றன்
சுற்றங் கொல்வேனோ? - கிளை
அற்றபின் செய்யும் அரசுமோர் அரசோ?" (பெற்ற)

21\. மிஞ்சிய அருளால் - மித
மிஞ்சிய அருளால் - அந்த
வெஞ்சிலை வீரன் பலசொல் விரித்தான். (கன)

22\. இம்மொழி கேட்டான் - கண்ணன்
இம்மொழி கேட்டான் - ஐயன்
செம்மலர் வதனத்திற் சிறுநகை பூத்தான். (கன)

23\. வில்லினை யெடடா! - கையில்
வில்லினை யெடடா! - அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா!(வில்லினை)

24. வாடி, நில்லாதே; - மனம்
வாடி, நில்லாதே; - வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே. (வில்லினை)

25. ஒன்றுள துண்மை - என்றும்
ஒன்றுள துண்மை - அதைக்
கொன்றிடவொண்ணது குறைத்த லொண்ணது.
(வில்லினை)

26. துன்பமு மில்லை - கொடுந்
துன்பமு மில்லை - அதில்
இன்பமு மில்லை பிறப்பிறப் பில்லை.

27. படைகளுந் தீண்டா - அதைப்
படைகளுந் தீண்டா - அனல்
சுடவுமொண் ணது புனல்நனை யாது. (வில்லினை)

28. செய்தலுன் கடனே - அறஞ்
செய்தலுன் கடனே - அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே
(வில்லினை)

## 24. காலனுக்கு உரைத்தல்

[குறிப்பு : பாண்டிச்சேரியில் இருந்தபோது பாரதியார் சாகாதிருக்க வழி கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இதற்காகப் பலநாள் மௌன விரதமும் அனுஷ்டித்திருக்கிறார். குள்ளச்சாமி போன்ற சாமியார்களின் தூண்டுதலாலே, இந்த முயற்சியை மேற்கொண்டாரோ என்னவோ அறியோம். ஆனல் ஒரு புதிய வழியைக் காணும்போது, உற்சாகமாக அந்த

வழியைக் கடைப்பிடிப்பது கவிஞரது இயல்பு. யார் தடுத்தாலும் கேட்கமாட்டார். சமூக சீர்திருத்தம் செய் வதற்கு எவ்வாறு துடித்தாரோ, அவ்வாறே, ஒரு புதுவழி யைக் காணும்போதும், அதிலே பாரதியார் மிக உற்சாக மாக ஈடுபடுவார். சாகாதிருக்கலாம் என்று பாரதியார் முழுமனதோடு நம்பினார். இந்த நம்பிக்கை இறுதிவரை யிலும் அவரை விடவில்லை. 1921-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4ந்தேதி எழுதிய 'என் ஈரோடு யாத்திரை' என்ற கட்டுரையிலும் இந்த நம்பிக்கையை வெளிப்படுத்து கின்றார். கருங்கல் பாளையம் என்ற ஈரோட்டிற்கு அண்மையில் உள்ள ஊரிலே ஒரு வாசகசாலை உண்டு. அதன் முக்கியஸ்தராக திரு. தங்கப்பெருமாள் பிள்ளை என்ற தேசபக்தர் அப்பொழுது இருந்தார். ஆண்டுவிழா விற்குப் பல பெரியோர்களை அழைத்துக் கொண்டாடுவது பழக்கமாக இருந்தது.

பாரதியாரின் பெருமையைக் கேள்விப்பட்ட திரு. தங்கப்பெருமாள் பிள்ளை, ஆண்டுவிழாவிற்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அதன் காரணமாகவே இக் கட்டுரை எழுந்திருக்கிறது. பாரதியார் கூறுகின்றார் : ''எனக்கு ஒரு விஷயந்தான் முக்கியமாகத் தெரியும். அதையே அங்கும் எடுத்துப் பேசினேன். அதாவது இந்த உலகத்தில் மானுடர் எக்காலத்திலும் மரணமில்லாமல் இருக்கக் கூடு மென்ற விஷயம்.

''ப்ரஹ்லாதனைப் போன்ற தெய்வப் பக்தியும், மன் மதனைப் போன்ற ஏக பத்தினி விரதமும் ஒருவன் கைக் கொண்டிருப்பானாயின், அவன் இந்த உலகத்திலேயே ஜீவன் முக்தியடைந்து, எல்லா அம்சங்களிலும் தேவ பதவி எய்தியவனாய், எப்பொழுதும் மகிழ்ச்சி கொண்

டிருப்பான் என்பது என்னுடைய கொள்கை. இந்தக் கொள்கையை நான் வேத புராண சாஸ்த்ரங்கள், இதர மதநூல்கள், ஐரோப்பிய ஸயன்ஸ் சித்தாந்தங்கள், ஸ்ரீமான் ஜகதீஸ் சந்திரவஸுவின் முடிவுகள் என்னும் ஆதாரங்களாலே ருஜுப்படுத்தினேன். அங்குள்ள பெரிய வித்வான்கள் எல்லோரும் கூடி, என்னுடைய தர்க்கத்தில் யாதொரு பழுதுமில்லை என்று அங்கீகாரஞ் செய்து கொண்டனர்."

இந்த நம்பிக்கை பாரதியாருக்கு இறுதி மூச்சுவரை இருந்தது. ஆனால் பாரதியாருடைய நம்பிக்கை பொய் போனதில்லை. அவர் தமது இணையற்ற இலக்கியத்தால் என்றும் சிரஞ்சீவியாக வாழ்கிறார்.

"காலா, உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன். என்றன் காலருகே வாடா, சற்றே உனை மிதிக்கிறேன்" என்று கூறியவர், என்றும் வாழ்வார். அவருடைய இலக்கியம் இன்னும் ஆண்டு செல்லச் செல்ல மேலும் மேலும் புகழ் பெற்று ஓங்குவது திண்ணம்.]

பல்லவி

காலா ! உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன்; என்றன்
காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன் - அட (காலா)

1. வேலாயுத விருதினை மனதிற் பதிக்கிறேன் - நல்ல
வேதாந்த முரைத்த ஞானியர் தமை யெண்ணித்
[துதிக்கிறேன் - ஆதி
மூலா வென்று கதறிய யானையைக் காக்கவே - நின்றன்
முதலைக்கு நேர்ந்ததை மறந்தாயோ கெட்ட
[மூடனே? அட (காலா)

2. ஆலாலமுண்டவனடி சரணென்ற மார்க்கண்டன் - தன
தாவி கவரப்போய் நீ பட்ட பாட்டினை
[யறிகுவேன் - இங்கு
நாலாயிரம் காதம் விட்டகல்! உனைவிதிக்கிறேன் - ஹரி
நாராயண ணுகநின் முன்னே உதிக்கிறேன் - அட
(காலா)

## 25. மாயையைப் பழித்தல்

[குறிப்பு : எல்லாம் மாயை என்கிற எண்ணம் பாரதியாருக்கு உடன்பாடு இல்லை. இதைப் பல இடங்களிலேயே விளக்கியிருக்கிறார். அப்படி உருவான கவிதைதான் இது.]

உண்மை யறிந்தவர் உன்னைக் கணிப்பாரோ?
மாயையே - மனத்
திண்மை யுள்ளாரை நீ செய்வது
மொன்றுண்டோ! - மாயையே! 1

எத்தனைகோடி படைகொண்டு வந்தாலும்
மாயையே - நீ
சித்தத் தெளிவெனுந் தீயின்முன்
நிற்பாயோ? - மாயையே! 2

என்னைக் கெடுப்பதற் கெண்ணமுற்றாய்
கெட்ட மாயையே! - நான்
உன்னைக் கெடுப்ப துறுதியென்
றேயுணர் - மாயையே! 3

சாகத் துணியிற் சமுத்திர மெம்மட்டு
மாயையே! - இந்தத்
தேகம் பொய் யென்றுணர் தீரரை யென்
செய்வாய்! - மாயையே! 4

இருமை யழிந்தபின் எங்கிருப்பாய், அற்ப
மாயையே! - தெளிந்
தொருமை கண்டார் முன்னம் ஓடாது
நிற்பையோ? - மாயையே! 5

நீதரும் இன்பத்தை நேரென்று கொள்வனோ
மாயையே - சிங்கம்
நாய்தரக் கொள்ளுமோ நல்லர
சாட்சியை - மாயையே! 6

என்னிச்சை கொண்டுனை யெற்றிவிட
வல்லேன் மாயையே! - இனி
உன்னிச்சை கொண்டெனக் கொன்றும்
வராது காண் - மாயையே! 7

யார்க்கும் குடியல்லேன் யானென்ப
தோர்ந்தனன் மாயையே! - உன்றன்
போர்க்கஞ்சு வேனோ பொடியாக்குவேன்
உன்னை - மாயையே! 8

## 26. சங்கு

[குறிப்பு : செத்த பிறகு சிவலோகம், வைகுண்டம் சேர்ந்திடலாமென எண்ணியிருப்பவர் பித்தர் மனிதராம் என்கிறார் பாரதியார். இதைச் சங்கு கொண்டே வெற்றி முழக்கம் செய்வோம் என்கிறார் கவிஞர்.]

செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி யிருப்பார்
பித்த மனிதர், அவர் சொலுஞ் சாத்திரம்
பேயுரை யாமென் றிங் கூதேடா சங்கம்! 1

இத்தரை மீதினி லேயிந்த நாளினில்
இப்பொழு தேமுக்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிலேயிற் களிப்பவர்
தூயவ ராமென்றிங் கூதேடா சங்கம்! 2

பொய்யுறு மாயையைப் பொய்யெனக் கொண்டு
புலன்களை வெட்டிப் புறத்தே எறிந்தே
ஐயுற லின்றிக் களித்திருப் பாரவர்
ஆரிய ராமென்றிங் கூதேடா சங்கம்! 3

மையுறு வாள்விழி யாரையும் பொன்னேயும்
மண்ணெனக் கொண்டு மயக்கற் றிருந்தாரே
செய்யுறு காரியம் தாமன்றிச் செய்வார்
சித்தர்க ளாமென்றிங் கூதேடா சங்கம்! 4

## 27. அறிவே தெய்வம்

[குறிப்பு : வேதம் அறிவே தெய்வம் என்கின்றது. வீணுக ஆயிரம் தெய்வம் உண்டென்று அலேயவேண்டாம்; உண்மை ஒன்று; ஞானிகள் இதைப் பல பேரிட்டு அழைக்கின்றனர் என்று தெளிவாகக் கூறுகின்றது. பாரதியார். இதைப் பலமுறை வற்புறுத்தியிருக்கிறுர். அறிவுதான் தெய்வம் என்பதை வற்புறுத்திப் பாடியிருக்கின்றுர் நம் கவிஞர். வேடம் கோடி உண்டு. ஆனல் அந்த வேடத்தைக் கொண்டு மயங்கவேண்டாம். அந்த வேடத்திற்குள் உண்மை ஒன்றிருக்கிறது. வேடத்தைக்கொண்டு இந்த உண்மையை அறியாமல் வீணுகச் சண்டை போடுவதேன்? அது மடமை என்கிறுர் பாரதியார்.]

### கண்ணிகள்

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! - பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ? 1

மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள்! - எத
னூடும்நின் றோங்கும் அறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ? 2

சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ - பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை யழிவீரோ? 3

வேடம்பல் கோடியோர் உண்மைக் குளவென்று
வேதம் புகன்றிடுமே - ஆங்கோர்
வேடத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றவ்
வேத மறியாதே. 4

நாமம்பல் கோடியோர் உண்மைக் குளவென்று
நான்மறை கூறிடுமே - ஆங்கோர்
நாமத்தை நீருண்மை யென்று கொள் வீரென்றந்
நான்மறை கண்டிலதே. 5

போந்த நிலைகள் பலவும் பராசக்தி
பூணு நிலையாமே - உப
சாந்த நிலையே வேதாந்த நிலையென்று
சான்றவர் கண்டனரே. 6

கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
காட்டும் மறைகளெல்லாம் - நீவிர்
அவலை நினைந்துமி மெல்லுதல் போலிங்கு
அவங்கள் புரிவீரோ? 7

உள்ள தனைத்திலும் உள்ளொளி யாகி
ஒவிர்ந்திடும் ஆன்மாவே - இங்கு,
கொள்ளற் கரிய பிரமமென் றேமறை
கூவுதல் கேளீரோ? 8

மெள்ளப் பலதெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங் கதைகள் சேர்த்துப் - பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
காட்டவும் வல்லீரோ? 9

ஒன்று பிரமமுள துண்மை யஃதுன்
உணர்வெனும் வேதமெல்லாம் - என்றும்
ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்
உணர்வெனக் கொள்வாயே. 10

## 28. பரசிவ வெள்ளம்

[குறிப்பு : "காவித்துணி வேண்டாம். கற்றைச் சடை முதலிய வேடங்கள் வேண்டாம். என் உள்ளத்துக் குள்ளே ஈசன் நிரம்பியிருக்கிருன் என்ற மெய்யுணர்வே போதும்" என்பது பாரதியாரின் தெளிந்த கருத்தாகும். ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர், ரமண மகரிஷிகள், ராம லிங்க வள்ளலார் போன்ற மஹான்களின் வாழ்க்கையில் இதைத் தெளிவாகக் காணலாம். திருவண்ணுமலை ஜோதியாக விளங்கும் ரமண மஹரிஷிகள் காவியுடுத்த வில்லை; வேறு எவ்வித வேடமும் புனைந்து கொள்ள வில்லை; அவருக்குக் கோவணமே ஆடை; இருந் தாலும், எங்கும் நிறைந்திருந்த பரப்ரம்ம வடிவ மாகவே அந்த ஞானிகள் அனைத்தையும் கண்டார். ஆகவே வேடம் முக்கியமல்ல.]

உள்ளும் புறமுமாய் உள்ள தெலாந் தானாகும்
வெள்ளமொன்றுண் டாமதனைத் தெய்வமென்பார்
[வேதியரே. 1

காணுவன நெஞ்சிற் கருதுவன உட்கருத்தைப்
பேணுவன யாவும் பிறப்பதந்த வெள்ளத்தே. 2

எல்லை பிரி வற்றதுவாய் யாதெனுமோர் பற்றிலதாய்
இல்லையுள தென்றறிஞர் என்றுமய லெய்துவதாய் 3

வெட்டவெளி யாயறிவாய் வேறுபல சக்திகளைக்
கொட்டுமுகி லாயணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய். 4

தூல வணுக்களாய்ச் சூக்குமமாய்ச் சூக்குமத்திற்
சாலவுமே நுண்ணியதாய்த் தன்மையெலாந் தானாகி, 5

தன்மையொன் றிலாததுவாய்த் தானே ஒரு பொருளாய்த்
தன்மைபல வுடைத்தாய்த் தான்பலவாய் நிற்பதுவே. 6

எங்குமுளான் யாவும்வலான் யாவுமறி வானெனவே
தங்கு பல மதத்தோர் சாற்றுவதும் இங்கிதையே. 7

வேண்டுவோர் வேட்கையாய் வேட்பாராய் வேட்பாருக்
கீண்டுபொரு ளாயதனை யீட்டுவதாய் நிற்குமிதே. 8

காண்பார்தங் காட்சியாய்க் காண்பாராய்க் காண்பொரு
[ளாய்
மாண்பாரந் திருக்கும், வகுத்துரைக்க வொண்ணாதே. 9

எல்லாந் தானாகி யிருந்திடினும் இஃதறிய
வல்லார் சிலரென்பர் வாய்மையெல்லாங் கண்டவரே. 10

மற்றிதனைக் கண்டார் மலமற்றார் துன்பமற்றார்;
பற்றிதனைக் கொண்டார் பயனனைத்துங் கண்டாரே. 11

இப்பொருளைக் கண்டார் இடருக்கோர் எல்லைகண்டார்;
எப்பொருளுந் தாம்பெற்றிங் கின்பநிலை யெய்துவரே. 12

வேண்டுவ வெலாம் பெறுவர் வேண்டா ரெதனையுமற்
றீண்டுபுவி யோரவரை யீசரெனப் போற்றுவரே. 13

ஒன்றுமே வேண்டா துலகனைத்தும் ஆளுவர்காண்;
என்றுமே யிப்பொருளோ டேகாந்தத் துள்ளவரே. 14

வெள்ளமடா தம்பி விரும்பியபோ தெய்திநின
துள்ளமிசைத் தானமுத வூற்றாய்ப் பொழியுமடா! 15

யாண்டுமிந்த இன்பவெள்ளம் என்றுநின்னுள் வீழ்வதற்கே
வேண்டு முபாயம் மிகவுமெளி தாகுமடா! 16

எண்ணமிட்டா லேபோதும் எண்ணுவதே இவ்வின்பத்
தண்ணமுதை யுள்ளே ததும்பப் புரியுமடா! 17

எங்கு நிறைந்திருந்த ஈசவெள்ள மென்னகத்தே
பொங்குகின்ற தென்றெண்ணிப் போற்றி நின்றாற்
[போதுமடா! 18

யாதுமாம் ஈசவெள்ளம் என்னுள் நிரம்பியதென்
றோதுவதே போதுமதை உள்ளுவதே போதுமடா! 19

காவித் துணிவேண்டா, கற்றைச் சடைவேண்டா;
பாவித்தல் போதும் பரமநிலை யெய்துதற்கே 20

சாத்திரங்கள் வேண்டா சதுமறைக ளேதுமில்லை;
தோத்திரங்க ளில்லையுளந் தொட்டுநின்றாற்
[போதுமடா; 21

தவமொன்று மில்லையொரு சாதனையு மில்லையடா!
சிவமொன்றே யுள்ளதெனச் சிந்தைசெய்தாற்
[போதுமடா 22

சந்ததமு மெங்கு மெல்லாந் தானாகி நின்றசிவம்.
வந்தெனுளே பாயுதென்று வாய்சொன்னாற்
[போதுமடா! 23

நித்தசிவ வெள்ள மென்னுள் வீழ்ந்து நிரம்புதென்றுன்
சித்தமிசைக் கொள்ளுஞ் சிரத்தை யொன்றே
போதுமடா! 24

# 29. வேள்வித் தீ

[குறிப்பு : இக் கவிதையைப் பற்றி சுவையான செய்தி ஒன்று, 'பாரதி நினைவுகள்' என்ற, திருமதி யதுகிரி அம்மாளின் நூலிலே காணப்படுகிறது.

பாரதியார் எந்தக் கவிதை புதிதாகப் படைத்திருந் தாலும், உடனே அதைப் பலருக்குப் படித்துக் காட்டுவாராம்.

இக் கவிதையை இயற்றினபோதும் அவ்வாறே படித்துக் காண்பித்தார். ரிஷிகள் என்ற பகுதி வந்த விடத்து உணர்ச்சியோடு உச்சஸ்தாயியிலும், அசுரர் என்ற பகுதி வந்தபோது மெலிந்த ஸ்தாயியிலும் பாரதியார் பாடிக் காட்டினாராம். அருகில் அதைக் கேட்டுக் கொண்டிருந்த மனைவியார் திருமதி செல்லம்மாவுக்கு அழுகை அடக்க முடியவில்லை; கண்ணீர் விட்டுக் கொண்டே கேட்டாராம்.

"ஏன், அசுரர் மாய்ந்தொழிந்து போவதில் அத்தனை வருத்தமோ?" என்று கேட்டார் பாரதியார்.

"இல்லை. அதற்காகக் கண்ணீர் விடவில்லை. நீங்கள் எந்தப் பாட்டுப் பாடினாலும் உணர்ச்சியோடு பாடுவதால் கண்ணீரை அடக்க முடிவதில்லை" என்று திருமதி செல்லம்மா பதிலளித்தார்.

"இந்தப் பாட்டை எழுதிக் கொடுத்தால் ஊருக்குச் செல்லும்போது எடுத்துக்கொண்டு செல்வேன். ஆனால் போலீஸ்காரர் தொல்லைதான் பெருந்தொல்லையாக இருக் கிறது. சென்ற தடவை பாரதியார் பாட்டு என்றவுடனே

அதைப் பிடுங்கிக் கொண்டார்கள்'' என்று வருத்தத்தோடு தெரிவித்தாள், திருமதி யதுகிரி அம்மாள்.

''யதுகிரி, நீ அந்தப் பாடலுக்கு அக்நிஹோமம் என்று தலைப்பிலே பெரிய எழுத்தில் எழுதி விடு. போலீசார் பொருள் தெரியாமல் விட்டுவிடுவார்கள்.'' என்று தமது இயல்பான நகைச்சுவையுடன் பதிலளித்தார் பாரதியார்.

யதுகிரி அம்மாள் செல்லும்போது வழக்கப்படி சோதனை நடந்தது. பாரதியார் கூறியது போலவே, 'வேள்வித் தீ' என்ற அழகிய கவிதையை விட்டுவிட்டார்கள்! பாரதியார் ''வலிமை மைந்தன் சுகமா?'' என்று கேட்டாராம். முதலில் அனைவரும் பொருள் தெரியாது மௌனமாக இருந்தனர்.

''புதுச்சேரியில் புயற்காற்று பலமாக அடித்தபோது அந்தக் குழந்தை பிறந்தது. அதனால் வலிமை மைந்தன் என்று சொன்னேன்'' என்று விளக்கிய போதுதான் அனைவருக்கும் புரிந்தது.

வலிமை மைந்தன் என்ற சொற்றொடரை இங்கே பாரதியார் கையாண்டிருப்பது கவனத்திற்குரியது.]

ரிஷிகள்: எங்கள் வேள்விக் கூடமீதில்
ஏறுதே தீ! தீ - இந்நேரம்
பங்கமுற்றே பேய்க ளோடப்
பாயுதே தீ! தீ! - இந்நேரம். 1

அசுரர்: தோழரே, நம் ஆவி வேவச்
சூழுதே தீ! தீ! - ஐயோ! நாம்
வாழ வந்த காடு வேவ
வந்ததே தீ! தீ - அம்மாவோ! 2

ரிஷிகள்: பொன்னை யொத்தோர் வண்ணமுற்றான்
போந்து விட்டானே! - இந்நேரம்
சின்ன மாகிப் பொய் யரக்கர்
சிந்தி வீழ்வாரே! - இந்நேரம் 3

அசுரர்: இந்திராதி தேவர் தம்மை
ஏசி வாழ்ந்தோமே! - ஐயோ! நாம்
வெந்து போக மானிடர்க்கோர்
வேத முண்டாமோ! - அம்மாவோ! 4

ரிஷிகள்: வானை நோக்கிக் கைகள் தூக்கி
வளருதே தீ! தீ! - இந்நேரம்,
ஞானமேனி உதய கன்னி
நண்ணி விட்டாளே! - இந்நேரம். 5

அசுரர்: கோடி நாளாய் இவ்வனத்திற்
கூடி வாழ்ந்தோமே - ஐயோ! நாம்
பாடி வேள்வி மாந்தர் செய்யப்
பண்பிழந் தோமே! - அம்மாவோ! 6

ரிஷிகள்: காட்டில் மேயுங் காளை போன்றான்
காணுவீர் தீ! தீ! - இந்நேரம்
ஓட்டி யோட்டிப் பகையை யெல்லாம்
வாட்டு கின்றானே! - இந்நேரம், 7

அசுரர்: வலியி லாதார் மாந்த ரென்று
மகிழ்ந்து வாழ்ந்தோமே - ஐயோ! நம்
கலியை வென்றோர் வேத வுண்மை
கண்டு கொண்டாரே; - அம்மாவோ! 8

ரிஷிகள்: வலிமை மைந்தன் வேள்வி முன்னோன்
வாய்திறந் தானே! - இந்நேரம்
மலியு நெய்யுந் தேனுமுண்டு
மகிழ வந்தானே! - இந்நேரம் 9

அசுரர்: உயிரை விட்டும் உணர்வை விட்டும்
ஓடி வந்தோமே - ஐயோ! நாம்
துயிலுடம்பின் மீதிலுந் தீ
தோன்றி விட்டானே! - அம்மாவோ! 10

ரிஷிகள்: அமரர் தூதன் சமர நாதன்
ஆர்த் தெழுந்தானே! - இந்நேரம்
குமரி மைந்தன் எமது வாழ்விற்
கோயில் கொண்டானே! இந்நேரம் 11

அசுரர்: வருணன் மித்ரன் அர்ய மானும்
மதுவை யுண்பாரோ - ஐயோ! நாம்
பெருகு தீயின் புகையும் வெப்பும்
பின்னி மாய்வோமோ! - அம்மாவோ! 12

ரிஷிகள்: அமர ரெல்லாம் வந்து நம்முன்
அவிகள் கொண்டாரே! - இந்நேரம்
நமனு மில்லை பகையுமில்லை
நன்மை கண்டோமே! - இந்நேரம். 13

அசுரர்: பகனு மிங்கே யின்ப மெய்திப்
பாடுகின்றானே - ஐயோ! நாம்
புகையில் வீழ இந்திரன் சீர்
பொங்கல் கண்டீரோ! - அம்மாவோ! 14

ரிஷிகள்: இளையும் வந்தாள் கவிதை வந்தாள்
இரவி வந்தானே! - இந்நேரம்,
விளையு மெங்கள் தீயினாலே
மேன்மை யுற்றோமே! - இந்நேரம் 15

ரிஷிகள் : அன்ன முண்பீர் பாலும் நெய்யும்
அமுது முண்பீரே! - இந்நேரம்
மின்னி நின்றீர் தேவ ரெங்கள்
வேள்வி கொள்வீரே! - இந்நேரம், 16

ரிஷிகள்: சோமமுண்டு தேவர் நல்கும்
ஜோதி பெற்ரோமே! - இந்நேரம்
தீமை தீர்ந்தே வாழியின்பஞ்
சேர்ந்து விட்டோமே! - இந்நேரம் 17

ரிஷிகள்: உடலுயிர்மே லுணர்விலுந் தீ
ஓங்கி விட்டானே! - இந்நேரம்
கடவுளர் தாம் எம்மை வாழ்த்திக்
கை கொடுத்தாரே! - இந்நேரம் 18

ரிஷிகள்: எங்கும் வேள்வி அமர ரெங்கும்
யாங்கணும் தீ! தீ! - இந்நேரம்,
தங்கு மின்பம் அமர வாழ்க்கை
சார்ந்து நின்ரோமே! - இந்நேரம். 19

ரிஷிகள்: வாழ்க தேவர்! வாழ்க வேள்வி!
மாந்தர் வாழ்வாரே! - இந்நேரம்.
வாழ்க வையம்! வாழ்க வேதம்!
வாழ்க தீ! தீ! தீ! இந்நேரம். 20

## 30. உலகத்தை நோக்கி வினவுதல்

[குறிப்பு: பாரதியாருக்கு, உலகமெலாம் மாயையென்றும், கனவு என்றும் சொல்லுவது பிடிப்பதேயில்லே. இதைப் பலகவிதைகளில் வெளிப்படுத்தி இருக்கிருர்.நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம் கனவுகள் தாஞே? உம்முள் ஆழ்ந்த பொருள் இல்லையா? என்ற கேள்விகளே எழுப்பிக்கொண்டு,காண்பதெல்லாம் மறையுமென்ருல் மறைந்ததெல்லாம் மீண்டும் காண்பமென்ரே? என்ற சரியான பதிலேயும் கொடுக்கிருர். காண்பது சக்தியாம், இந்தக் காட்சியே நித்யம் என்கிருர் பாரதியார்.]

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்க ளெல்லாம்
சொற்பனந் தானோ? பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே! கேட்பதுவே. கருதுவதே நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ? உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ? 1

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே நீங்களெல்லாம்
கானலின் நீரோ? - வெறுங் காட்சிப் பிழைதானோ?
போனதெல்லாம் கனவினைப்போற் புதைந்தழிந்தே
[போனதனால்
நானுமோர் கனவோ? - இந்த ஞாலமும் பொய்தானோ? 2

காலமென்றே ஒரு நினைவும் காட்சியென்றே பலநினைவும்
கோலமும் பொய்களோ? அங்குக் குணங்களும்
[பொய்களோ?
சோலையிலே மரங்களெல்லாம் தோன்றுவதோர்
[விதையிலென்றால்,
சோலை பொய்யாமோ? - இதைச்சொல்லோடு சேர்ப்பாரோ?

காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம்
[காண்பமன்றோ?
வீண்படு பொய்யிலே - நித்தம் விதிதொடர்ந் திடுமோ?
காண்பதுவே உறுதிகண்டோம் காண்பதல்லால்
[உறுதியில்லை
காண்பது சக்தியாம் - இந்தக் காட்சி நித்தியமாம். 4

## 31. நான்

[குறிப்பு: விண்ணில் தெரிகின்ற மீனெல்லாம் நான்; அனைத்துமே நான் என்கிறார் பாரதியார். இது பெரிய ஆராய்ச்சிக்குரியது. அறிவு ஒன்று கூறும்; ஆனால் அதை

உள் உணர்வு, மெய்தானு என்று ஏற்பது பெரிய விஷயம். கடந்த ஞானிகளுக்கெல்லாம் எட்டாத ஒன்றை, இயல் பாகவே பெற்றுவிடுவது ஓர் அரிய சாதனைதான். யோகி களுக்கு சக்ஜ சமாதி என்ற நிலை வரப்பெற்ருல் இதனுல் பலகோடி மக்கள் பயன் பெறுவார்கள் என்பது நமது சித்தாந்தம். ஆனுல், அந்த ஸக்ஜ சமாதி நிலை அடையப் பெற்றவரா அல்லது எல்லாம் தானுகவே அறிவு கூறு கின்றது, அதை இக்கவிதையிலே சொல்லுகின்ருரா என்பது ஆராய்வதற்குரியது. நானே ப்ரம்மம் என்று சொல்வது எளிது. ஆனுல் அதை உண்மையாகவே உணர்வது அரிது. இதுபற்றி முன்னுரையில் விரிவாக ஆராயும் நோக்க முடையேன். ஆதலின் இத்துடன் நிறுத்திக் கொள் கிறேன்.]

இரட்டைக்குறள் வெண் செந்துறை

வானில் பறக்கின்ற புள்ளெல்லாம் நான்;
மண்ணில் திரியும் விலங்கெல்லாம் நான்;
கானிழல் வளரும் மரமெலாம் நான்,
காற்றும் புனலும் கடலுமே நான். 1

விண்ணில் தெரிகின்ற மீனெலாம் நான்
வெட்ட வெளியின் விரிவெலாம் நான்,
மண்ணில் கிடக்கும் புழுவெலாம் நான்,
வாரியி லுள்ள உயிரெலாம் நான். 2

கம்ப னிசைத்த கவியெலாம் நான்,
காருகர் தீட்டும் உருவெலாம் நான்;
இம்பர் வியக்கின்ற மாட கூடம்
எழில் நகர் கோபுரம் யாவுமே நான். 3

இன்னிசை மாத ரிசையுளேன் நான்;
இன்பத் திரள்கள் அனைத்துமே நான்;
புன்னிலை மாந்தர் தம் பொய்யெலாம் நான்;
பொறையருந் துன்பப் புணர்ப்பெலாம் நான். 4

மந்திரங் கோடி இயக்குவோன் நான்,
இயங்கு பொருளின் இயல்பெலாம் நான்,
தந்திரங் கோடி சமைத்துளோன் நான்,
சாத்திர வேதங்கள் சாற்றினேன் நான். 5

அண்டங்கள் யாவையும் ஆக்கினேன் நான்,
அவை பிழையாமே சுழற்றுவோன் நான்;
கண்டநற் சக்திக் கணமெலாம் நான்,
காரண மாகிக் கதித்துளோன் நான். 6

நானெனும் பொய்யை நடத்துவோன் நான்;
ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்
ஆனபொருள்கள் அனைத்தினும் ஒன்றாய்
அறிவாய் விளங்குமுதற் சோதிநான்! 7

# 32. பக்தி

[குறிப்பு : பட்டினி கிடந்தாலும் கிடக்கலாம். ஆனால் பக்தியை விடாதே என்று பாரதியார் மிக அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார். பக்தியினால்தான் கொடிய வறுமையையும் சமாளித்து நிற்கக்கூடிய வலிமை ஏற்படுகின்றது. பக்தியினால் சோர்வுகள் போகும்; கல்வி வளரும்; சோம்பல் அழியும் என்று, இவ்வாறு பக்தியின் பயன்களை அடுக்கிக் கொண்டே போகிறார் பாரதியார். காந்தி அடிகளுக்கு ராமனுடைய நாம ஜபத்தாலேயே, அளவற்ற பலம் கிடைத்திருக்கிறது என்பது இங்கே கவனித்தக்கது.]

**பல்லவி**

பக்திஞயிலே— தெய்வ— பக்தியிஞலே

**சரணங்கள்**

1. பக்தியிஞலே - இந்தப்
பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடீ
சித்தந் தெளியும், - இங்கு
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்,
வித்தைகள் சேரும், - நல்ல
வீர ருறவு கிடைக்கும், மனத்திடைத்
தத்துவ முண்டாம், நெஞ்சிற்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும். (பக்தி)

2. காமப் பிசாசைக் - குதி
கால்கொண் டடித்து விழுத்திடலாகும்; இத்
தாமசப் பேயைக் - கண்டு
தாக்கி மடித்திடலாகும்; எந்நேரமும்
தீமையை எண்ணி - அஞ்சுந்
தேம்பற் பிசாசைத் திருகியெ றிந்துபொய்ந்
நாம மில்லாதே - உண்மை
நாமத்தி ஞலிங்கு நன்மை விளைந்திடும். (பக்தி)

3. ஆசையைக் கொல்வோம், - புலை
அச்சத்தைக் கொன்று பொசுக்கிடுவோம், கெட்ட
பாச மறுப்போம், - இங்குப்
பார்வதி சக்தி விளங்குதல் கண்டதை
மோசஞ் செய்யாமல் - உண்மை
முற்றிலுங் கண்டு வணங்கி வணங்கியோர்
ஈசனைப் போற்றி - இன்பம்
யாவையு முண்டு புகழ்கொண்டு வாழ்குவம்
(பக்தி)

4. சோர்வுகள் போகும், - பொய்ச்
சுகத்தினைத் தள்ளிச் சுகம்பெறலாகும், நற்
பார்வைகள் தோன்றும் - மிடிப்
பாம்பு கடித்த விஷமகன் றேநல்ல
சேர்வைகள் சேரும், - பல
செல்வங்கள் வந்து மகிழ்ச்சி விளைந்திடும்,
தீர்வைகள் தீரும் - பிணி
தீரும், பலபல இன்பங்கள் சேர்ந்திடும். (பக்தி)

5. கல்வி வளரும், - பல
காரியங் கையுறும், வீரிய மோங்கிடும்,
அல்ல லொழியும், - நல்ல
ஆண்மை யுண்டாகும், அறிவு தெளிந்திடும்,
சொல்லுவ தெல்லாம் - மறைச்
சொல்லினைப் போலப் பயனுள தாகும், மெய்
வல்லமை தோன்றும், - தெய்வ
வாழ்க்கையுற் றேயிங்கு வாழ்ந்திடலாம் உண்மை.
(பக்தி)

6. சோம்ப லழியும் - உடல்
சொன்ன படிக்கு நடக்கும், முடி சற்றுங்
கூம்புத லின்றி நல்ல
கோபுரம் போல நிமிர்ந்த நிலைபெறும்,
வீம்புகள் போகும் - நல்ல
மேன்மை யுண்டாகிப் புயங்கள் பருக்கும், பொய்ப்
பாம்பு மடியும் - மெய்ப்
பரம்வென் று நல்ல நெறிகளுண் டாய்விடும்
(பக்தி)

7. சந்ததி வாழும் - வெறுஞ்
சஞ்சலங் கெட்டு வலிமைகள் சேர்ந்திடும்,
இந்தப் புவிக்கே - இங்கோர்
ஈசனுண்டா யின் அறிக்கையிட் டேனுன்றன்

கந்த மலர்த்தாள் - துணை;
காதல் மகவு வளர்ந்திட வேண்டும், என்
சிந்தை யறிந்தே - அருள்
செய்திடவேண்டும் என்றால் அருளெய்திடும்.
(பக்தி)

## 33. சென்றது மீளாது

[குறிப்பு : பல வேளைகளில் இப்படிச் செய்திருக்க வேண்டும் அல்லது அப்படிச் செய்திருக்கவேண்டும், செய் திருந்தால் வாழ்க்கை மிகவும் மேம்பட்டிருக்கும் என்று சதா சிந்தனையில் மூழ்கியிருப்பார்கள் பல பேர். அதற்கு வருத்தப்படவும் செய்வார்கள். இவ்வாறு செய்வதுதான் பலருடைய இயல்பாகும். சென்றது மீளாது மூடரே, நீர் சென்றதையே சிந்தை செய்து கவலையின் குழியில் வீழ்ந்து குமையாதீர் என்று ஒரேயடியாக அடித்து விடுகிறார் பாரதியார். இன்று புதிதாகப் பிறந்தோம் என்று எண்ணி இன்புற் றிருந்து வாழ்வீர் என்று தெளிவாகச் சொல்லி விடுகின்றார் நமது கவிஞர். பலருக்கு இந்த நற்போதனை அருமருந்தாகும். பாரதி அறுபத்தாறில் இக் கருத்தைக் கொண்ட சொற்கள் மீண்டும் வருகின்றன.]

சென்றதினி மீளாது மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்.
இன்றுபுதி தாய்ப்பிறந்தோம் என்று நீவிர்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு
தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்;
தீமையெலாம் அழிந்துபோம், திரும்பி வாரா.

# 34. முருகன் பாட்டு

[குறிப்பு : 'உள்ளத்தே ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்றபடி இது ஒளிபெற்ற பாடல்களில் ஒன்ருகும். பாரதியார் பாடும்போது நேரில் கேட்கும் பாக்கியம் பெறவில்லை. ஆனல் அவருடைய மாமாவான ஒரு பெரியவர் பாட்டைப் பாட நான் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். அந்தப் பாட்டைக் கேட்டுவிட்டு என் மகிழ்ச்சியைத் தெரிவித்தபோது, "பாரதியார் பாடலை அவர் வாயாலே கேட்டிருக்க வேண்டும். நான் பாடியது நூறில் ஒருபங்குகூட அதற்குச் சமானமாகாது" என்று உள்ளம் நெகிழ்ந்து சொல்லுவார்.

பாரதியார் பாடும்போது நெருப்புப்பொறி பறக்குமாம். அத்தனை அழகான பாடல் இது. சுமார் இருபது பேர் கூட்டமாக உணர்ச்சியுடன் பாடினல், ஆவேசமே வந்துவிடுமாம்.]

**பல்லவி**

முருகா!—முருகா!—முருகா!

**சரணங்கள்**

1. வருவாய் மயில் மீதினிலே
 வடிவே லுடனே வருவாய்!
 தருவாய் நலமும் தகவும் புகழும்
 தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா)

2. அடியார் பலரிங் குளரே;
 அவரை விடுவித் தருள்வாய்!
 முடியா மறையின் முடிவே! அசுரர்
 முடிவே கருதும் வடிவே லவனே (முருகா)

3. சுருதிப் பொருளே, வருக
துணிவே, கனலே, வருக!
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல். (முருகா)

4. அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வே லவனே, சரணம்! (முருகா)

5. அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறுவே லுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய்! (முருகா)

6. குருவே! பரமன் மகனே!
குகையில் வளருங் கனலே!
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
சமரா திபனே! சரணம் சரணம்! (முருகா)

## 35. முத்து மாரி

[குறிப்பு : இது ஓர் புகழ்பெற்ற பாடல்,

மணி வெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
மனம் வெளுக்க வழியில்லை, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

என்ற மாணிக்க வரிகளை உடையது இப்பாடல். ஒரு பக்தனின் வேண்டுகோளுக்கு இணங்கி, இப்பாடலை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார் பாரதியார். எங்கள் முத்து

மாரி எங்கள் முத்து மாரி என்று அவர் கூறும்போது மெய் சிலிர்க்குமாம். எல்லாத் தெய்வங்களும் ஒன்று என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு. பாரதி அன்பராகிய திரு ரா. அ. பத்மநாபன் அவர்கள் இந்தக் கோயிலைப் பற்றி ஒரு போட்டோ எடுத்துத் தமது அருமையான சித்திரபாரதி என்னும் நூலில் வெளியிட்டிருக்கிறார்.]

உலகத்து நாயகியே! - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
உன்பாதம் சரண்புகுந்தோம், - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
கலகத் தரக்கர்பலர், - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
பலகற்றும் பலகேட்டும், - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
பயனொன்று மில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
நிலையெங்கும் காணவில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
நின்பாதம் சரண்புகுந்தோம், - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி! 1

துணிவெளுக்க மண்ணுண்டு, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
மணிவெளுக்கச் சாணையுண்டு, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
மனம் வெளுக்க வழியில்லை, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

பிணிகளுக்கு மாற்றுண்டு, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
பேதைமைக்கு மாற்றில்லை, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
அணிகளுக்கொ ரெல்லையில்லாய் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
அடைக்கலமிங் குனைப்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி! 2

## 36. அச்சமில்லை

(பண்டாரப் பாட்டு)

[குறிப்பு : விடுதலைப் போராட்டத்தின்போது புகழ் பெற்ற பாரதியார் பாடல்களில் இதுவும் ஒன்று. அச்சமில்லை என்று உணர்ச்சியோடு பாடுங்காலத்தில் உண்மையாகவே அச்சம் மறைந்துவிட்டது என்று நாம் எளிதில் உணரலாம். போலீஸ் குறுந்தடி ஒரு பக்கம்; எந்த நேரத்திலே அதை வீசுவார்களோ தெரியாது. மண்டைகள் உடைபடும் ரத்தவெள்ளம் பெருக்கோடும். ஆனால் 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்' என்று பாடிவிட்டால் அச்சம் அகன்றுவிடும். உயிரைத் துச்சமாக மதித்து அஹிம்சைப் போரை நடத்தத் தொண்டர்கள் முன்•வருவார்கள். அவ்வளவு காம்பீர்யம் நிறைந்தது இப் பாடல். பண்டாரப்பாட்டு என்று குறிப்பிட்டிருந்த போதிலும், அரசியல் போராட்டங்களிலே மிகச் சிறந்த துணிச்சல் தந்தது இப்பாடல்தான்.]

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்துநின்ற போதினும்,

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட
[போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே! 1

கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள்வீசு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
நச்சைவாயிலே கொணர்ந்து நண்பரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பச்சையூ னியைந்த வேற்படைகள் வந்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அக்சமென்ப தில்லையே. 2

## 37. ஜெயபேரிகை

[குறிப்பு : இதுவும் ஒரு புகழ் பெற்ற பாடலாகும். பாரதியார் பாடும்போது கேட்டவர்கள் சிம்மகர்ஜனை போன்று ஒலிப்பதைக் கேட்டிருப்பார்கள். ஞானப் பாடல்கள் என்ற தலைப்பில் வந்திருந்தாலும், அரசியல் போராட்டங்களிலே துணிச்சல் கொடுப்பதற்காகவே எழுதப்பட்டது இப்பாடல். 'காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்று பாடும்பொழுது பாரதியாரது ஒருமைப்பாட்டு உணர்ச்சி களை வெளிப்படுத்தியதை நாம் உணர்வோம். தாய்மொழி தமிழாக இல்லாவிட்டாலும், தமிழைச் சரியாகப் புரிந்து

கொள்ளக் கூடியவர்களாயிருப்பினும், இதில் ஏதோ ஒரு மந்திர சக்தி இருப்பதைச் சொல்லி மகிழ்வதை நான் கேட்டிருக்கிறேன்.]

பல்லவி

ஜய பேரிகை கொட்டடா! - கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!

சரணங்கள்

1. பயமெனும் பேய்தனை யடித்தோம் - பொய்ம்மைப்
பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்;
வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப் பிடித்தோம்
(ஜய பேரிகை)

2. இரவியி னொளியிடைக் குளித்தோம் - ஒளி
இன்னமு தினையுண்டு களித்தோம்;
கரவினில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும்
காலன் நடுநடுங்க விழித்தோம். (ஜய பேரிகை)

3. காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்;
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க நோக்கக் களியாட்டம். (ஜய பேரிகை)

## 38. கண்ணன் துதி

[குறிப்பு : சிறிய பாடல்தான். ஆனல் மிக அழகான கவிதை.

"காயிலே புளிப்பதென்னே? கண்ணபெருமானே; நீ
கனியிலே இனிப்பதென்னே? கண்ணபெருமானே!

என்ற வரிகள் வைரம்போல விழுந்திருக்கின்றன.

காயிலே புளிப்பதென்னே, கண்ண பெருமானே? - நீ
கனியிலே இனிப்பதென்னே, கண்ண பெருமானே?
நோயிலே படுப்பதென்னே, கண்ண பெருமானே? - நீ
நோன்பிலே உயிர்ப்ப தென்னே, கண்ண பெருமானே?

காற்றிலே குளிர்ந்ததென்னே, கண்ண பெருமானே? - நீ
கனலிலே சுடுவதென்னே, கண்ண பெருமானே?
சேற்றிலே குழம்பலென்னே, கண்ண பெருமானே? - நீ
திக்கிலே தெளிந்ததென்னே, கண்ண பெருமானே?

ஏற்றிநின்னைத் தொழுவதென்னே, கண்ண பெருமானே?
எளியர் தம்மைக் காப்பதென்னே, கண்ண பெருமானே?
போற்றினோரைக் காப்பதென்னே, கண்ணபெருமானே? - நீ
பொய்யர் தம்மை மாய்ப்பதென்னே, கண்ண பெருமானே?

## 39. நந்தலாலா

[குறிப்பு : இதுவும் சிறிய கவிதையாயினும், விலை மதிக்க முடியாத மாணிக்கம் ஆகும். நந்தலாலா கவிதையை நினைக்கும்போது, வடநாட்டுப் புகழ்பெற்ற ஓவியர் ஒருவர் தீட்டிய ஓவியம் ஒன்று நினைவுக்கு வருகின்றது. ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு கண்ணன் முக அழகைப் பார்ப்பதற்காக ஆசை கொண்ட கோபியர் பெண்மணி ஒருத்தி வருகின்றாள். மாலை நேரம். இருள் கூடுகின்றது. உடனே விளக்கேற்றி வைக்க வேண்டுமல்லவா? அந்த காரணத்தைச் சொல்லிக் கொண்டு வருகின்றாள் ஒருத்தி. ஒருவர் வீட்டிலிருந்து மற்றொருவர் வீட்டிற்கு விளக்கேற்றிக் கொண்டுபோவது இயல்பாக நடக்கும் வழக்கமாகும். அந்த வழக்கத்தைக்

கூறிக் கொண்டு விளக்கேற்றிக் கொள்ளுவதற்காக வருகின்ற அந்த கோபியர் பெண்மணி உண்மையில் விளக்கேற்றிக் கொள்ளவில்லை. கண்ணனது அழகைக் கண்டு அப்படியே சொக்கி நிற்கின்றாள். முக அழகைப் பார்த்துக்கொண்டேயிருந்தவள், வேறு ஒரு நினைப்புமின்றி ஒருவிரலையே அந்தத் தீபத்தில் வைத்துவிடுகின்றாள். அவளுக்கு விரல் பற்றி எரிகின்றதே என்ற நினைவேயில்லை. அப்படியே கடவுளிடம் தன்னை மறந்து ஐக்கியமாகி விடுகின்றாள். 'தீக்குள் விரலை வைத்தால் உன்னைத் தீண்டுமின்பம் தோன்றுதடா நந்தலாலா' என்ற அற்புத மான வரிகளை நினைக்கும்போது, இந்த அழகிய ஓவியம் நினைவிற்கு வருகின்றது. மேலும் பாரதியார், தம் அன்புக் குரிய திருமதி யதுகிரி அம்மாவிடம் சொன்னாராம்: "இந்த பாடல்கள் சிறியதாக இருக்கிறதென்றாலும் பிற்காலத்தில் மிக அழகான இசையமைத்து நிச்சயமாகப் பாடப்படும். அவை போற்றி மதிக்கப்படும். தமிழ்நாடு இன்னும் குழந்தைப்பருவத்தில் இருக்கிறது. இப்பொழுதுதான் கண் திறந்திருக்கிறது" என்று கூறினாராம். இவை இப்பொழுது உண்மையாகிவருகின்றதை நாம் அறிவோம்.]

*காக்கைச் சிறகினிலே நந்த லாலா! நின்றன்*
*கரியநிறந் தோன்றுதையே, நந்த லாலா!* 1

*பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்த லாலா! நின்றன்*
*பச்சைநிறந் தோன்றுதையே, நந்த லாலா;* 2

*கேட்கு மொலியிலெல்லாம் நந்த லாலா! - நின்றன்*
*கீத மிசைக்குதடா, நந்த லாலா!* 3

*தீக்குள் விரலை வைத்தால் நந்த லாலா! - நின்னைத்*
*தீண்டுமின்பந் தோன்றுதடா நந்த லாலா!* 4

## 40. கண்ணன் எனது சற்குரு!

[குறிப்பு : அறிவாகிய சுடர் ஒன்று இருக்கிறது. அதன் ஆடல்தான் உலகம் என்பதை ஓர் அழகிய கவிதையில் விளக்குகிறார் பாரதியார்.]

*சாத்திரங் கள்பல தேடினேன் - அங்கு*
*சங்கையில் லாதன சங்கையாம் - பழங்*
*கோத்திரங்கள் சொல்லு மூடர்தம் - பொய்மைக்*
*கூடையில் உண்மை கிடைக்குமோ? - நெஞ்சில்*
*மாத்திரம் எந்த வகையிலும் - சக*
*மாயம் உணர்ந்திடல் வேண்டுமே - என்னும்*
*ஆத்திரம் நின்ற திதனிடை - நித்தம்*
*ஆயிரந் தொல்லைகள் சூழ்ந்தன.* 1

*நாடு முழுதிலுஞ் சுற்றிநான் - பல*
*நாட்கள் அலைந்திடும் போதினில், நிறைந்*
*தோடும் யமுனைக் கரையிலே - தடி*
*ஊன்றிச் சென்றாரோர் கிழவனார்; - ஒளி*
*கூடு முகமும், தெளிவுதான் - குடி*
*கொண்ட விழியும், சடைகளும், - வெள்ளைத்*
*தாடியும் கண்டு வணங்கியே - பல*
*சங்கதி பேசி வருகையில்.* 2

*என்னுளத் தாசை யறிந்தவர் - மிக*
*இன்புற் றுரைத்திட லாயினர் - "தம்பி,*
*நின்னுளத் திற்குத் தகுந்தவன், - சுடர்*
*நித்திய மோனத் திருப்பவன், - உயர்*

மன்னர் குலத்தில் பிறந்தவன் - வட
    மாமது ரைப்பதி யாள்கின்றான்; - கண்ணன்
தன்னைச் சரணென்று போவையேல் - அவன்
    சத்தியங் கூறுவன்" என்றனர். 3

மாமது ரைப்பதி சென்றுநான் - அங்கு
    வாழ்கின்ற கண்ணனைப் போற்றியே - என்றன்
நாமமும் ஊரும் கருத்துமே - சொல்லி
    நன்மை தருகென வேண்டினேன்; - அவன்
காமனைப் போன்ற வடிவமும் - இளங்
    காளையர் நட்பும் பழக்கமும் - கெட்ட
பூமியைக் காக்குந் தொழிலிலே - எந்தப்
    போதுஞ் செலுத்திடுஞ் சிந்தையும், 4

ஆடலும் பாடலும் கண்டுநான், 'முன்னர்
    ஆற்றங் கரையினில் கண்டதோர் - முனி
வேடந் தரித்த கிழவரைக் - கொல்ல
    வேண்டு'மென் றுள்ளத்தில் எண்ணினேன் - 'சிறு
நாடு புரந்திடு மன்னவன் - கண்ணன்
    நாளுங் கவலையில் மூழ்கினோன்; - தவப்
பாடுபட் டோர்க்கும் விளங்கிடா - உண்மை
    பார்த்திவன் எங்ஙனம் கூறுவான்?' 5

என்று கருதி யிருந்திட்டேன்; - பின்னர்
    என்னைத் தனியிடங் கொண்டுபோய், - "நினை
நன்று மருவுக! மைந்தனே! - பர
    ஞான முரைத்திடக் கேட்பைநீ; - நெஞ்சில்
ஒன்றுங் கவலையில் லாமலே - சிந்தை
    ஊன்ற நிறுத்திக் களிப்புற்றே - தன்னை
வென்று மறந்திடும் போழ்தினில் - அங்கு
    விண்ணை யளக்கும் அறிவுதான்! 6

சந்திரன் சோதி யுடையதாம்; - அது
சத்திய நித்திய வஸ்துவாம்; - அதைச்
சிந்திக்கும் போதினில் வந்துதான் - நினைச்
சேர்ந்து தழுவி அருள்செயும்; - அதன்
மந்திரத் தாலிவ் வுலகெலாம் - வந்த
மாயக் களிப்பெருங் கூத்துக்காண் - 'இதைச்
சந்ததம் பொய்யென் றுரைத்திடும் - மடச்
சாத்திரம் பொய்' யென்று தள்ளடா! 7

"ஆதித் தனிப்பொரு ளாகுமோர்; - கடல்
ஆருங் குமிழி உயிர்களாம்; - அந்தச்
சோதி யறிவென்னும் ஞாயிறு - தன்னைச்
சூழ்ந்த கதிர்கள் உயிர்களாம் - இங்கு
மீதிப் பொருள்கள் எவையுமே - அதன்
மேனியில் தோன்றிடும் வண்ணங்கள்; - வண்ண
நீதி யறிந்தின்பம் எய்தியே - ஒரு
நேர்மைத் தொழிலில் இயங்குவார். 8

'சித்தத்தி லேசிவம் நாடுவார், - இங்கு
சேர்ந்து களித்துல காளுவார்; - நல்ல
மத்த மதவெங் களிறுபோல் - நடை
வாய்ந்திறு மாந்து திரிகுவார்; - இங்கு
நித்தம் நிகழ்வ தனைத்துமே - எந்தை
நீண்ட திருவரு ளால்வரும் - இன்பம்
சுத்த சுகந்தனி யாநந்தம்' - எனச்
சூழ்ந்து கவலைகள் தள்ளியே; 9

"சோதி அறிவில் விளங்கவும் - உயர்
சூழ்ச்சி மதியில் விளங்கவும் - அற
நீதி முறைவழு வாமலே - எந்த
நேரமும் பூமித் தொழில்செய்து - கலை

ஓதிப் பொருளியல் கண்டுதாம் - பிறர்
உற்றிடுந் தொல்லைகள் மாற்றியே - இன்பம்
மோதி விழிக்கும் விழியினூர் - பெண்மை
மோகத்தில், செல்வத்தில் கீர்த்தியில், 10

"ஆடுதல், பாடுதல், சித்திரம் - கவி
யாதி யினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட் டென்றும் நடப்பவர் - பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார் - அவர்
நாடும் பொருள்கள் அனைத்தையும் - சில
நாளினில் எய்தப் பெறுகுவார் - அவர்
காடு புதரில் வளரினும் - தெய்வக்
காவனம் என்றதைப் போற்றலாம். 11

"ஞானியர் தம்மியல் கூறினேன் - அந்த
ஞானம் விரைவினில் எய்துவாய்" - எனத்
தேனி லினிய குரலிலே - கண்ணன்
செப்பவும் உண்மை நிலைகண்டேன் - பண்டை
ஈன மனிதக் கனவெலாம் - எங்ஙன்
ஏகி மறைந்தது கண்டிலேன்! - அறி
வான தனிச்சுடர் நான் கண்டேன் - அதன்
ஆட லுலகென நான் கண்டேன்! 12

## 41. கண்ணன் என் குழந்தை

[குறிப்பு : பாரதியார் எழுதிய கண்ணன் பாட்டு ஓர் அற்புதமான இலக்கியப் படைப்பு. 'இதைக் கவிஞர் வாயிலாகவே கேட்கும் பாக்கியம் பெற்றவர்கள் ஒவ்வொன்றும் மாணிக்கங்களாகக் கருதுவர்' என்று வியந்து போற்றி பாராட்டியிருக்கிறார், கம்பராமாயண

ரசனைச்சுவை என்னும் மதிப்புமிக்க நூலை எழுதிய வ. வே. சு. ஐயர் அவர்கள். பாரதியாருடைய குழந்தை அன்பு இதில் மிகத் தெளிவாகத் தெரிகின்றது. அழுது கொண்டு வந்த சகுந்தலா (பாப்பா)விற்கு மகிழ்ச்சியுண்டாகும்படி பாப்பா பாட்டுப் பாடியிருக்கின்றார் பாரதியார். வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கு இது ஒன்றே போதும். பாப்பா பாட்டு, முரசு என்பன விலைமதிக்க முடியாத ரத்தினங்கள் ஆகும்.

ஒரு சமயம் பாப்பா நோய்வாய்ப்பட்டு இருந்தபோது, தான் புழுப்போல் துடித்ததாகக் கூறுகின்றார் நம் கவிஞர். இதில் இருந்து குழந்தைகளிடம் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார் எனத் தெரியவருகின்றது. ஒவ்வொரு சொல்லும் மணி மணியாக விழுந்திருக்கிறது இக்கவிதையிலே. இதைப் பல சங்கீத வித்வான்கள் மேடையிலே கையாண்டு மேலும் சிறப்புறச் செய்திருக்கிறார்கள்.]

*சின்னஞ் சிறு கிளியே, - கண்ணம்மா!*
*செல்வக் களஞ்சியமே!*
*என்னைக் கலிதீர்த்தே - உலகில்*
*ஏற்றம் புரிய வந்தாய்!* 1

*பிள்ளைக் கனியமுதே, - கண்ணம்மா*
*பேசும்பொற் சித்திரமே!*
*அள்ளி யணைத்திடவே - என் முன்னே*
*ஆடி வருந் தேனே!* 2

*ஓடி வருகையிலே - கண்ணம்மா!*
*உள்ளங் குளிரு தடீ!*
*ஆடித் திரிதல் கண்டால் - உன்னைப்போய்*
*ஆவி தழுவு தடீ!* 3

உச்சி தனை முகந்தால் - கருவம்
ஓங்கி வளரு தடீ;
மெச்சி யுனையூரார் - புகழ்ந்தால்
மேனி சிலிர்க்கு தடீ. 4

கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளு தடீ;
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா
உன்மத்த மாகு தடீ; 5

சற்றுன் முகஞ் சிவந்தால் - மனது
சஞ்சல மாகு தடீ;
நெற்றி சுருங்கக் கண்டால் - எனக்கு
நெஞ்சம் பதைக்கு தடீ; 6

உன்கண்ணில் நீர்வழிந்தால் - என்னெஞ்சில்
உதிரங் கொட்டு தடீ!
என்கண்ணிற் பாவையன்றோ? கண்ணம்மா!
என்னுயிர் நின்ன தன்றோ? 7

சொல்லு மழலையிலே - கண்ணம்மா!
துன்பங்கள் தீர்த்திடு வாய்!
முல்லைச் சிரிப்பாலே - எனது
மூர்க்கந் தவிர்த்திடு வாய். 8

இன்பக் கதைக ளெல்லாம் - உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ?
அன்பு தருவதிலே - உனைநேர்
ஆகுமோர் தெய்வ முண்டோ? 9

மார்பில் அணிவதற்கே - உன்னைப்போல்
வைர மணிகளுண்டோ?
சீர்பெற்று வாழ்வதற்கே - உன்னைப்போல்
செல்வம் பிறிது முண்டோ? 10

## 42. கண்ணம்மா—அங்க வர்ணனை

[குறிப்பு : பாரதியாருக்கு கண்ணம்மா ஓர் அழகின் வடிவமாகத் தென்படுகிருள். ஆகையால் அதை நினைக்கும் பொழுது பாரதியாருக்கு உற்சாகம் பொங்கிவிடுகிறது. கண்ணன் பாட்டு என்ற நூலிலும், கண்ணம்மா என் காதலி என்று பல அழகிய பாடல்கள் இயற்றியுள்ளார். இதுவும் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த அங்க வர்ணனையாகும்.]

### பல்லவி

எங்கள் கண்ணம்மா நகை புது ரோஜாப் பூ;
எங்கள் கண்ணம்மா விழி இந்த்ர நீலப் பூ;
எங்கள் கண்ணம்மா முகஞ் செந்தாமரைப் பூ;
எங்கள் கண்ணம்மா நுதல் பால ஸூர்யன்.

### சரணங்கள்

1. எங்கள் கண்ணம்மா எழில் மின்னலை நேர்க்கும்;
எங்கள் கண்ணம்மா புருவங்கள் மதன் விற்கள்;
திங்களை மூடிய பாம்பினைப் போல
செறி குழல்; இவள் நாசி எட் பூ. (எங்கள்)

2. மங்கள வாக்கு நித்யானந்த ஊற்று;
மதுர வாய் அமிர்தம்; இதழமிர்தம்;
ஸங்கீத மென்குரல் ஸரஸ்வதி வீணை;
சாய லரம்பை; சதுர் அயிராணி. (எங்கள்)

3. இங்கித நாத நிலையமிரு செவி;
சங்கு நிகர்த்த கண்டம் அமிர்த சங்கம்;
மங்களக் கைகள் மஹா சக்தி வாஸம்;
வயி றாலிலை; இடை அமிர்த வீடு. எங்கள்

4. சங்கரனைத் தாங்கு நந்தி பத சதுரம்;
தாமரை யிருதாள் லக்ஷ்மீ பீடம்
பொங்கித் ததும்பித் திசையெங்கும் பாயும்
புத்தன்பும் ஞானமும் மெய்த்திருக் கோலம். (எங்கள்)

## 43. கண்ணம்மாவின் காதல்

[குறிப்பு : கண்ணன், கண்ணம்மா என்ற இந்த இரு தெய்வங்களையும் நினைத்தாலே பாரதியாருக்கு உற்சாகம் பொங்கி வழிகின்றது. என்னவெல்லாம் கற்பனைகள் தோன்றுகின்றனவோ? அறியேன். ஆனால் கண்ணன் என் காதலன் என்று ஆறு அழகான கவிதைகள் பாடி இருக்கின்றார். தங்கப் பாட்டும் பொங்கி யெழுகின்றது. கண்ணம்மா என் காதலி என்ற முறையிலே ஆறு அற்புதமான கவிதைகள் உருவாக்கியிருக்கின்றார். கண்ணம்மாவின் காதல் என்றும் கவிதை பாடியிருக்கின்றார். அழகெல்லாம் திரண்டு ஒரு வடிவமானதாய்ப் பாரதியார் கற்பனை செய்திருக்க வேண்டும். காதல், வரம்பை மீறிப் பொங்கி வழிந்திருக்கிறது. அதனால்தான் பாரதியார் நண்பரான திரு. வ. வே. சு. ஐயர் என்பவர் எழுதுகின்றார்; "நாயகா நாயகி பாவத்தை கையாள்வதென்றால் கத்தி முனையில் நடப்பதுபோல நடக்கவேண்டும். கொஞ்சம் தவறினாலும் இந்தப் பாவத்திற்கு இழுக்கு நேர்ந்துவிடும். ஆனால் பாரதியார் கவிஞர் என்ற பாங்கிலேயே இதை அணுகுகின்றார். சுகபிரம்மத்திற்கும் இந்த இடம் வழுக்கிவிட்டது. ஆதலால் கவிஞரை நோக்கிக் குற்றம்சாட்டுவது சரியில்லை. மாலை வேளைகளில் கவிஞருடைய கற்பனை கர்வத்துடன் காம்பீரியமாகப்பாடும்பொழுது கேட்டவர் இக்கவிதைகளை மாணிக்கங்களாகக் கருதுவர்." மிகச் சிறந்த திறனாய்வாள

ரான ஐயர் அவர்களே நன்கு எடைபோட்டுச் சொல்லி விட்டார்கள். இனிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது.

கண்ணம்மாவின் காதல் ஒரு சிறந்த கவிதை. அமுதூற்றினை யொத்த இதழ்கள், நிலவூறித் ததும்பும் விழிகள், என்றெல்லாம் மிக அழகிய உவமைகள் கும்மாள மிடுகின்றன. உன்றன் நினைவிலே நான் விண்ணவனாகி விட்டேன்; துயர் போயின போயின என்ற உற்சாகத்துடன் பாடுகின்றார் பாரதியார்.]

காற்று வெளியிடைக் கண்ணம்மா; - நின்றன்
காதலை யெண்ணிக் களிக்கிறேன்; - அமு
தூற்றினை யொத்த இதழ்களும் - நில
வூறித் ததும்பும் விழிகளும் - பத்து
மாற்றுப்பொன் னொத்தநின் மேனியும் - இந்த
வையத்தில் யானுள்ள மட்டிலும் - எனை
வேற்று நினைவின்றித் தேற்றியே - இங்கோர்
விண்ணவ னாகப் புரியுமே! - இந்தக் (காற்று) 1

நீயென தின்னுயிர் கண்ணம்மா! - எந்த
நேரமும் நின்றனைப் போற்றுவேன் - துயர்
போயின, போயின துன்பங்கள் - நினைப்
பொன்னெனக் கொண்ட பொழுதிலே - என்றன்
வாயினி லேயமு தூறுதே - கண்ணம்
மாவென்ற பேர்சொல்லும் போழ்திலே - உயிர்த்
தீயினி லேவளர் சோதியே - என்றன்
சிந்தனையே, என்றன் சித்தமே! - இந்தக் (காற்று) 2

# 44. கண்ணம்மா - என் காதலி

[குறிப்பு : கண்ணன் பாட்டு முழுதுமே அமரத்வம் வாய்ந்த இலக்கியமாகும். அதன் சிறப்பையும் இசையை யும் பெரிதும் மதிக்கின்றவர்களில் நானும் ஒருவனாகும். 'கண்ணம்மா என் காதலி' என்ற பாடல் நாயகா நாயகி பாவத்தில் மிகவும் பொருள் செறிந்தவாறு எழுதப் பெற்றுள்ளது. கண்ணம்மா வேடிக்கையாகப் பின்புறத்தில் வந்து கவிஞனின் கண்ணைப் பொத்துகிறாள். கண்ணம்மா தான் இந்த வேடிக்கை செய்கிறாள் என்று உடனே அறிந்து கொள்கிறார் கவிஞர். ஒட்டும் இரண்டுளத்தின் தட்டி லறிந்தேன் என்பது மிகஉயர்ந்த ரத்தினத் துண்டு போன்ற வரியாகும். சிரித்த ஒலியில் கண்ணம்மா கைவிலக்கி 'நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்டாய்? நீல வானில் என்ன கண்டிட்டாய்? திரண்டு உருண்டுவரும் நுரையில் என்ன கண்டிட்டாய்? சின்னக் குமிழியில் என்ன கண்டிட் டாய்? பிரித்துப் பிரித்து மேகத்தை அளந்து ஆராய்ந்து பார்த்ததில் என்ன கண்டிட்டாய்' என்று கேட்கிறாள். அப் பொழுது உடனே கவிஞரின் பதில் வருகிறது. "திரைக் கடலில் நின் முகம் கண்டேன். நீலவானில் நின்முகம் கண்டேன். திரண்டு உருண்டு வரும் நுரைகளில் நின்முகம் கண்டேன். சின்னக் குமிழிகளிலும் நின்முகம் கண்டேன். பிரித்துப் பிரித்து ஆராய்ந்து பார்த்து மேகத் தினிடையே நின்முகங்கண்டேன் என்று பதில் வருகின்றது. தின்னும் வெற்றிலையிலும் பருகும் நீரிலும் கண்ணன் எம் பெருமானது முகத்தையே காண்கின்றேன் என்ற ஆழ் வாரது பொருள் செறிந்த பாடல் இங்கு நினைவிற்கு வரும். எங்கும் கண்ணனையே காண்பதாகப் பாரதியார் கூறியிருப் பது, எல்லாவிடத்திலும் எப்பொருளிலும் கண்ணபிரானே

காட்சியளிக்கின்றான் என்ற உயர்ந்த தத்துவத்தைக் கொண்டுள்ளது. உயர்ந்த தத்துவம் ஆயினும் பாரதியார் தமது தனிப்பட்ட மேதைமையால் மிக எளிதாக விளக்கி விடுகின்றார்.

மேலும் கண்ணன் பாட்டு முழுதுமே சிறப்பான இசையமைப்புக் கொண்டது. இசைபற்றித் திறனாய்வதில் மிக உயர்ந்து விளங்கும் வ. வே. சுப்பிரமண்ய ஐயர் கூறுவதை ஆழ்ந்து நோக்கிக் கவனிக்க வேண்டும். அவர் கண்ணன் பாட்டுக்கு இரண்டாம் பதிப்பு வெளிவந்த காலத்தில், தமது முன்னுரையிலே இசையைப்பற்றி கூறுகின்ற பகுதி' யில் பின்வருமாறு கூறுகின்றார்:

'இன்னொன்று: கவிதையழகை மாத்திரம் அனுபவித்து விட்டு, இந்நூலின் பண்ணழகை மறந்துவிடக் கூடாது. இதிலுள்ள பாட்டுக்களில் பெரும்பாலனவை தாளத்தோடு பாடுவதற்காகவே எழுதப்பட்டவையா யிருக்கின்றன. கடற்கரையில், சாந்திமயமான சாயங்கால வேளையில் உலகனைத்தையும் மோஹ வயப்படுத்தி நீலக்கடலையும் பாற்கடலாக்கும் நிலவொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனை கர்வத்தோடும், சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய காம்பீரமான குரலில் பாடினதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந்நூலிலுள்ள பாட்டுக்களை மாணிக்கங்களாக மதிப்பர்." பாரதியார் தமது காம்பீரமான குரலில் பாடக்கேட்க நாம் கொடுத்து வைக்கவில்லை, ஆனால், சங்கீத கலாநிதி திருமதி டி. கே. பட்டம்மாள், சங்கீத கலாநிதி திரு. என். பாலசுப்பிரமண்யம், திரு டி. என். கிருஷ்ணன். திரு. லால்குடி ஜெயராமன் போன்ற இசைமேதைகள் தமது கச்சேரிகளிலே வாய்ப்பாட்டாகவும், வயலின் இசையிலும் இசைக்கும்போது கேட்டுப் பரவச மெய்துகின்றோம்.]

(1)

மாலைப் பொழுதிலொரு மேடைமிசையே
வானையும் கடலையும் நோக்கியிருந்தேன்;
மூலைக் கடலினையவ் வான வளையம்
முத்தமிட்டே தழுவி முகிழ்த்தல் கண்டேன்
நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி,
நேரங் கழிவதிலும் நினைப்பின்றியே
சாலப் பலபல நற் பகற்கனவில்
தன்னை மறந்தலயந், தன்னில் இருந்தேன். (1)

ஆங்கப் பொழுதிலென் பின்புறத்திலே,
ஆள் வந்து நின்றெனது கண் மறைக்கவே,
பாங்கினிற் கையிரண்டுந் தீண்டியறிந்தேன்,
பட்டுடை வீசுகமழ் தன்னிலறிந்தேன்
ஓங்கிவரு முவகை யூற்றிலறிந்தேன்;
ஒட்டு மிரண்டுளத்தின் தட்டி லறிந்தேன்;
"வாங்கி விடடிகையை யேடி கண்ணம்மா!
மாய மெவரிடத்தில்?" என்று மொழிந்தேன்? (2)

சிரித்த ஒலியிலவள் கைவிலக்கியே
திருமித்தழுவி "என்ன செய்திசொல்" என்றேன்;
"நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்டாய்?
நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?
திரித்த நுரையினிடை என்ன கண்டிட்டாய்?
சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்டாய்?
பிரித்து பிரித்துநிதம் மேகம் அளந்தே
பெற்ற நலங்கள் என்ன? பேசுதி" என்றாள்? (3)

"நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்;
நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்;
திரித்த நுரையினிடை நின் முகங்கண்டேன்;
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்;

பிரித்துப் பிரித்துநிதம் மேகம் அளந்தே
　　பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை!
சிரித்த ஒலியினிலுன் கைவிலக்கியே,
　　திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன்." (4)

## (2) யோகம்

[குறிப்பு : காதலைப் பற்றிய இது ஓர் அற்புதமான கவிதை. இயற்கையை அனுபவிக்க வேண்டும்; காதல் இன்பம் அளவோடு நுகரவேண்டும்; இசையை அனுபவிக்க வேண்டும் என்பது பாரதியார் கருத்து. 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா' என்ற பாடலிலும் இதே கருத்துத்தான் நிலவுகிறது. உலகம் என்பது மாயை; வெறுங்கனவு என்பதை பாரதியார் ஒத்துக் கொள்வதே யில்லை. 'இன்பத்தில் எல்லாம் காதல் இன்பம்தான் பெரிது' என்பது பாரதியார் கருத்து. காதல் இல்லா விட்டால் சுடுகாடுதான் மிஞ்சும் என்பது நமது மஹா கவியின் வாக்காகும்.

காதல் இன்பம் எவ்வாறு உயர்வானது என்பதை சந்திரிகையின் கதையில் தெளிவு படுத்துகிறார். அவர் அந்த நூலில் கூறுகின்றார், "காதல் என்பது தேவலோகத்து வஸ்து. இவ்வுலகத்துக்கு வாழ்க்கை மாறியபோதிலும் அது மாறாது. ஸாவித்திரியும் ஸத்யவானும்; லைலாவும் மஜ்னூவும்; ரோமியோவும் ஜூலியெத்தும் கொண்டிருந் தார்களே, அந்த வஸ்துக்குக் காதலென்று பெயர். அது அழியாத நித்ய வஸ்து. ஹிமயமலை கடலில் மிதந்த போதிலும், காதல் பொய்த்துப் போகாது."

காதலின் பெருமையை ஒரு யோகமே என்று பாரதியார் கருதுகின்றார்.

காதல் காதல் காதல்
காதல் போயில் காதல் போயில்
சாதல் சாதல் சாதல்

என்ற குயில் பாட்டின் வரிகளும் இங்கு நோக்கத்தக்கன]

பாயுமொளி நீ எனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு;
தோயும் மது நீ யெனக்கு, தும்பியடி நானுனக்கு;
வாயுரைக்க வருகுதில்லை, வாழி நின்றன் மேன்மையெல்லாம்
தூயசுடர் வானொளியே! சூறையமுதே! கண்ணம்மா! 1

வீணையடி நீ எனக்கு, மேவும் விரல் நானுனக்கு;
பூணும் வட நீ யெனக்கு, புதுவயிரம் நானுனக்கு;
காணுமிடந்தோறு நின்றன் கண்ணினொளி வீசுதடி!
மாணுடைய பேரரசே! வாழ்வு நிலையே! கண்ணம்மா! 2

வானமழை நீ யெனக்கு, வண்ணமயில் நானுனக்கு
பானமடி நீ எனக்கு, பாண்டமடி நானுனக்கு;
ஞானவொளி வீசுதடி, நங்கை நின்றன் சோதிமுகம்;
ஊனமறு நல்லழகே! ஊறு சுவையே! கண்ணம்மா! 3

வெண்ணிலவு நீ யெனக்கு, மேவு கடல் நானுனக்கு;
பண்ணுசுதி நீ யெனக்கு, பாட்டினிமை நானுனக்கு;
எண்ணியெண்ணிப் பார்த்திடிலோர் எண்ணமிலை
[நின் சுவைக்கே
கண்ணின்மணி போன்றவளே! கட்டியமுதே! கண்ணம்மா! 4

வீசுகமழ் நீ யெனக்கு, விரியுமலர் நானுனக்கு;
பேசுபொருள் நீ யெனக்கு, பேணுமொழி நானுனக்கு;
நேசமுள்ள வான்சுடரே! நின்னழகை யேதுரைப்பேன்?
ஆசை மதுவே, கனியே, அள்ளு சுவையே கண்ணம்மா! 5

காதலடி நீ யெனக்கு, காந்தமடி நானுனக்கு;
வேதமடி நீ யெனக்கு வித்தையடி நானுனக்கு;
போதமுற்ற போதினிலே பொங்கிவருந் தீஞ்சுவையே!
நாதவடி வானவளே; நல்ல உயிரே கண்ணம்மா! 6

நல்லவுயிர் நீ யெனக்கு, நாடியடி நானுனக்கு;
செல்வமடி நீ யெனக்கு, சேம நிதி நானுனக்கு
எல்லையற்ற பேரழகே! எங்கும் நிறை பொற்சுடரே!
முல்லைநிகர் புன்னகையாய்! மோதுமின்பமே! கண்ணம்மா! 7

தாரையடி நீ யெனக்கு தண்மதியம் நானுனக்கு;
வீரமடி நீ யெனக்கு, வெற்றியடி நானுனக்கு;
தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெல்லாம்
ஒருருவ மாய்ச் சமைந்தாய்! உள்ளமுதே கண்ணம்மா! 8

## 45. கோமதி மஹிமை!

[குறிப்பு : பாரதியார் 'அரியும் சிவனும் ஒன்றேதான், கொஞ்சமும் ஏற்றத்தாழ்வு இல்லை, வீணுகப் பூசலிட்டுக் கொள்ளாதீர்கள்' என்று இக்கவிதையிலே காட்ட முயல் கிறார். இந்தப் பூசல் பிற்காலப் புராணங்களை எண்ணி எழுந்ததாகும். நல்ல வேளையாக காஞ்சிப் பெரியவர் அவர்கள் திருப்பாவை திருவெம்பாவை ஒன்ருக நடைபெற வேண்டும் என்று சிறந்ததோர் திட்டம் செய்தார். இதனுல் இப்பூசல் சிறிது மறைந்தது என்று சொல்லலாம். இக் கவிதை முற்றுப்பெருவிடினும் ஒரு உண்மையைக் காட்டுகின்றது என்பதற்காக இதில் சேர்க்கப்படுகிறது.

[சங்கர நயினுர் கோயில் ஆவுடையம்மையின் புகழ் சிவபிரான் தானும் திருமாலும் ஒரு பொருளென்று உணர்த்தி ஒரு வடிவங் காட்டிய சரித்திரம்.]

தாருக வனத்தினிலே - சிவன்
சரண நன் மலரிடை யுளம் பதித்துச்
சீருறத் தவம் புரிவார் - பர
சிவன் புகழமுதினை யருந்திடுவார்;
பேருயர் முனிவர் முன்னே - கல்விப்
பெருங்கடல் பருகிய சூதனென்பான்
தேரு மெய்ஞ் ஞானத்தினால் - உயர்
சிவநிகர் முனிவரன் செப்புகின்றான்: 1

"வாழிய, முனிவர்களே, - புகழ்
வளர்ந்திடுஞ் சங்கரன் கோயிலிலே,
ஊழியைச் சமைத்த பிரான், - இந்த
உலக மெலா முருக்கொண்ட பிரான்,
ஏழிரு புவனத்திலும் - என்றும்
இயல்பெறும் உயிர்களுக் குயிராவான்,
ஆழு நல்லறிவா வான், - ஒளி
யறிவினைக் கடந்த மெய்ப் பொருளாவான், 2

தேவர்க் கெலாந்தேவன், - உயர்
சிவ பெருமான் பண்டொர் காலத்திலே
காவலி னுலகளிக்கும் - அந்தக்
கண்ணனுந் தானுமிங் கோருருவாய்
ஆவ லொடருந் தவங்கள் - பல
ஆற்றிய நாகர்களிருவர் முன்னே
மேவி நின்றருள் புரிந்தான், - அந்த
வியப் புறு சரிதையை விரும்புகின்றேன்: 3

கேளீர் முனிவர்களே, - இந்தக்
கீர்த்தி கொள் சரிதையைக் கேட்டவர்க்கே,
வேள்விகள் கோடி செய்தால் - சதுர்
வேதங்க ளாயிர முறை படித்தால்

மூளு நற் புண்ணியந்தான் - வந்து
மொய்த்திடும்; சிவணியல் விளங்கி நிற்கும்;
நாளு நற் செல்வங்கள் - பல
நணுகிடும்; சரத மெய் வாழ்வுண்டாம். 4

இக் கதை யுரைத்திடுவேன், -உளம்
இன்புறக் கேட்பீர், முனிவர்களே!
நக்க பிரானருளால் - இங்கு
நடைபெறு முலகங்கள் கணக்கிலவாம்;
தொக்கன அண்டங்கள் - வளர்
தொகை பலகோடி பல் கோடிகளாம்!
இக்கணக் கெவ ரறிவார்? புவி
எத்தனை யுளதென்பதியா ரறிவார்? 5

நக்க பிரானறிவான்; - மற்று
நானறியேன், பிற நர ரறியார்;
தொக்க பேரண்டங்கள் - கொண்ட
தொகைக்கெல்லை யில்லையென்று சொல்லுகின்ற
தக்க பல சாத்திரங்கள்; - ஒளி
தருகின்ற வானமொர் கடல் போலாம்;
அக்கட லதனுக்கே - எங்கும்
அக்கரை யிக்கரை யொன்றில்லையாம். 6

இக்கட லதனகத்தே - அங்கங்
கிடை யிடை தோன்றும் புன் குமிழிகள்போல்
தொக்கன உலகங்கள்; - திசைத்
தூவெளி யதனிடை விரைந்தோடும்;
மிக்கதொர் வியப்புடைத்தாம் - இந்த
வியன்பெரு வையத்தின் காட்சி, கண்டீர்;
மெய்க்கலை முனிவர்களே! - இதன்
மெய்ப்பொருள் பரமசிவன் சக்தி, கண்டீர் 7

எல்லை யுண்டோ இலையோ? - இங்
கியாவர் கண்டார் திசை வெளியினுக்கே?
சொல்லு மொரர் வரம்பிட்டால் - அதை
(இது முற்றுப்பெற லை)

## 46. காணி நிலம்

[குறிப்பு : ஜப்பானியர் ஒரு சமயம் தமக்குச் ந்த மான நிலங்களையெல்லாம் பகிர்ந்தளித்து விட்ட ராம். இதையறிந்த பாரதியார் செய்த ஒவ்வொருவருக்கு நிலம் எவ்வளவு வேண்டும் என்ற ஆராய்ச்சியின் பயனாகவே இப்பாடல் எழுந்துள்ளது. இது ஓர் புகழ் பெற்ற டல். காணி நிலம் வேண்டுமென்றும், அவற்றின் அருகே ஒரு கேணி இருக்கவேண்டும் என்றும், பக்கத்திலே பத்துப் பனிரண்டு தென்னைமரம் இருக்கவேண்டும் என்றும் கவிஞர் தமது ஆவலை இப்பாடலில் வெளியிட்டு இருக்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாகப் பாட்டுக் கலந்திடவே அங்கே ஒரு பத்தினிப் பெண் வேண்டும் என்றும், எங்கள் கூட்டுக் களியினிலே பல கவிதைகள் உருவாக வேண்டும் என்றும், தமது கவிதைகளின் மூலம் இந்த உலகத்தை மேன்மையுறச் செய்யவேண்டும் என்றும் பாடுகின்றார் கவிஞர். உயர்ந்த சிந்தனைகள் அழகிய இசைப் பாடலாக அமைந்திருக்கின்றது.]

காணி நிலம் வேண்டும், - பராசக்தி
காணி நிலம் வேண்டும்; - அங்கு
தூணி லழகிய தாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்

காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும்; - அங்கு
கேணியருகினிலே - தென்னைமரம்
கீற்று மிள நீரும், 1

பத்துப் பனிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும்; - நல்ல
முத்துச் சுடர் போலே - நிலாவொளி
முன்பு வரவேணும்; - அங்கு
கத்துங் குயிலோசை - சற்றேவந்து
காதிற்பட வேணும்; - என்றன்
சித்த மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல் வரவேணும். 2

பாட்டுக் கலந்திடவே - அங்கேயொரு
பத்தினிப் பெண் வேணும்; - எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டுதர வேணும்; - அந்தக்
காட்டு வெளியினிலே, - அம்மா, நின்றன்
காவலுற வேணும்; - என்றன்
பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப்
பாலித்திட வேணும். 3

## 47. ஓம் சக்தி

[குறிப்பு : ஓம் சக்தி ஓம் என்ற என்ற மந்திரச் சொல்லாக அமைந்திருக்கின்றது இப்பாடல். ஓம்சக்தி என்று நினைத்தாலே கவிஞருக்கு உற்சாகம் பொங்கி விடுகின்றது. 'எனது ஈரோடு யாத்திரை' என்ற கட்டுரையிலும், ஈரோட்டிற்கு அருகில் உள்ள கருங்கல்பாளையத்

திற்கு ஓர் ஆண்டுவிழாவிற்காகச் சென்றவர், ஓர் அறையில் புகுந்துகொண்டு ஓம்சக்தி ஓம்சக்தி என்று உற்சாகமாக முழங்குகிறாராம். பாரதியார் கூறுகிறார் : "கலைமகளே! உனக்கு ஒரு விண்ணப்பம் செய்திடுவேன். எள்ளத்தனைப் பொழுதும் பயனின்றியிராதென்றன் நாவினிலே வெள்ளமெனப் பொழிவாய்" என்று வேண்டுகின்றார் பாரதியார். இப் பாடலைப் பிரபலப்படுத்தியவர் தமிழ் நாட்டிலே தெய்விகக் குரல்பெற்ற சங்கீத கலாநிதி திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஆவார்கள்.]

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர் மணிப் பூண்
பஞ்சுக்கு நேர் பல துன்பங்களாம், இவள்
பார்வைக்கு நேர் பெருந்தீ
வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்த ரெல்லாம்
தஞ்சமென்றே யுரைப்பீர் அவள்பேர், சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம். 1

நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
நலத்தை நமக் கிழைப்பாள்;
"அல்லது நீங்கும்" என்றே யுலகேழும்
அறைந்திடுவாய், முரசே!
சொல்லத் தகுந்த பொருளன்று காண்! இங்கு
சொல்லு மவர் தமையே
அல்லல் கெடுத் தமரர்க் கிணையாக்கிடும்
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம். 2

நம்புவதே வழியென்ற மறை தன்னை
நாமின்று நம்பி விட்டோம்.
கும்பிட் டெந்நேரமும் "சக்தி" யென்றுலுனைக்
கும்பிடுவேன், மனமே!

அம்புக்குந் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில் லாத படி
உம்பர்க்கு மிம்பர்க்கும் வாழ்வுதரும் பதம்
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம். 3

பொன்னைப் பொழிந்திடு, மின்னை வளர்த்திடு,
போற்றி யுனக் கிசைத்தோம்;
அன்னை பராசக்தி யென்றுரைத்தோம்; தளை
யத்தனையுங் களைந்தோம்;
சொன்ன படிக்கு நடந்திடுவாய், மன
மே, தொழில் வேறில்லை, காண்;
இன்னுமிதே யுரைப்போம், சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம். 4

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாக விளங்கிடுவாய்!
தெள்ளு கலைத்தமிழ் வாணி, நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன்,
எள்ளத்தனை பொழுதும் பயனின்றி
யிரா தென்றன் நாவினிலே
வெள்ளமெனப் பொழிவாய், சக்திவேல், சக்தி
வேல், சக்திவேல், சக்தி வேல்! 5

## 48. கேட்பன

[குறிப்பு: பாரதியார் எழுதிய இதுவும் புகழ்பெற்ற பாடலாகும். "ஒரு நல்ல வீணை செய்து அதைப் புழுதியில் எறியலாமா? என்னைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய். இந்த மாநிலம் பயன்படும்படி வாழ வல்லமை

தாராயோ?" என்று சிவசக்தியைப் பார்த்துக் கேட்கிறார் நம் கவிஞர்.

'தசையினில் தீ சுடினும் சிவசக்தியைப் பாடு நல்லகங் கேட்டேன்' என்பது விலைமதிக்க முடியாத வரிகளாகும். இது சிறப்பான முறையில் இசைவகுத்துப் பாடுவதற்கும் ஏற்றது.]

நல்லதோர் வீணைசெய்தே - அதை
நலங்கெடப் புழுதியி லெறிவதுண்டோ?
சொல்லடி, சிவசக்தி! - எனைச்
சுடர்மிகு மறிவுடன் படைத்துவிட்டாய்.
வல்லமை தாராயோ, இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி, சிவசக்தி! - நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ? 1

விசையுறு பந்தினைப்போல் - உள்ளம்
வேண்டியபடி செலும் உடல் கேட்டேன்,
நசையறு மனங் கேட்டேன், - நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்,
தசையினைத் தீ சுடினும் - சிவ
சக்தியைப் பாடுநல் லகங் கேட்டேன்,
அசைவறு மதிகேட்டேன்; - இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ? 2

## 49. தேச முத்துமாரி

[குறிப்பு : மாரி என்பது அன்னை பராசக்தி வடிவமே என்பது பாரதியார் கருத்து. ஆகவே தாம் வணங்கும்

தேசமுத்துமாரியின் பேரில் ஒரு பாட்டியற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டபோது, பாரதியார் உற்சாகத்தோடு சம்மதிக்கிறார். 'உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரி' என்று பாரதியார் எழுதியிருப்பதும் புகழ் பெற்ற பாடல்தான். இவற்றில் எது பாரதியார் இயற்றியது என்பது நிச்சயமாகத் தெரியாது. 'நம்பினார் கெடுவதில்லை; நான்கு மறைத் தீர்ப்பு; அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்' என்று இவ்வாறு அழகிய கருத்துக்களைக் கொண்டது தேசமுத்துமாரி என்னும் பாடல்.]

தேடியுனைச் சரணடைந்தேன்,
தேச முத்து மாரி!
கேடதனை நீக்கிடுவாய்,
கேட்ட வரந் தருவாய். 1

பாடியுனைச் சரணடைந்தேன்
பாச மெல்லாங் களைவாய்
கோடி நலஞ் செய்திடுவாய்,
குறைக ளெல்லாந் தீர்ப்பாய். 2

எப்பொழுதுங் கவலையிலே
இணங்கி நிற்பான் பாவி;
ஒப்பியுன தேவல் செய்வேன்
உன தருளால் வாழ்வேன். 3

சக்தி யென்று நேரமெல்லாந்
தமிழ்க் கவிதை பாடி,
பக்தியுடன் போற்றி நின்றால்
பய மனைத்துந் தீரும். 4

ஆதாரம் சக்தி யென்றே
அருமறைகள் கூறும்;
யாதானுந் தொழில் புரிவோம்;
யாது மவள் தொழிலாம். 5

துன்பமே யியற்கை யெனும்
சொல்லை மறந் திடுவோம்;
இன்பமே வேண்டி நிற்போம்;
யாவு மவள் தருவாள். 6

நம்பினார் கெடுவதில்லை;
நான்கு மறைத் தீர்ப்பு;
அம்பிகையைச் சரண்புகுந்தால்
அதிக வரம் பெறலாம். 7

# 50. சக்தி

[குறிப்பு : இது பராசக்தியின் லீலையைப் பாடுகின்றது. பாரதியார் தமது இஷ்டதெய்வமான பாரசக்தியின் வல்லமைகளைப் புதுக்கவிதையிலே கூறுகின்றார்.

“மண்ணிலே வேலி போடலாம். வானத்திலே வேலி போடலாமா” என்று கேட்டவர், மண்ணிலே வேலி போடலாம் வானத்திலேயும் வேலிபோடலாம். பராசக்தியின் அருள் இருந்தால் இவை அனைத்தும் முடியும் என்கிறார்.

மூன்று காதலைப் பற்றி பேசவந்த பாரதியார், “இவை அத்தனை பொருளின் உள்ளே நின்று வில்லை அசைப்பவளை” என்று பராசக்தியின் லீலையைப் பாடித் துதிக்கின்றார். “இப்போது என்னுள்ளே சக்தி கொலு வீற்றிருக்கின்றாள்.

அவள் நீடுழிவாழ்க. அவளைப் போற்றுகின்றேன், புகழ்கின்றேன், வாய் ஓயாமல் துாழ்த்துகின்றேன் என்று வாயார வாழ்த்துகின்றார் பாரதியார்.]

"மண்ணிலே வேலி போடலாம். வானத்திலே வேலி போடலாமா?" என்றான் ராமகிருஷ்ண முனி.

ஜடத்தைக் கட்டலாம். சக்தியைக் கட்டலாமா?

உடலைக் கட்டலாம். உயிரைக் கட்டலாமா?

என்னிடத்தே சக்தி எனதுயிரிலும் உள்ளத்திலும் நிற்கின்றாள்.

சக்திக்கு அநந்தமான கோயில்கள் வேண்டும்.

தொடக்கமும் முடிவுமில்லாத காலத்திலே நிமிஷந்தோறும் அவளுக்குப் புதிய கோயில்கள் வேண்டும்!

இந்த அநந்தமான கோயில்களிலே ஒன்றுக்கு 'நான்' என்று பெயர்.

இதனை ஓயாமல் புதுப்பித்துக் கொண்டிருந்தால் சக்தி இதில் இருப்பாள்.

இது பழமைப்பட்டுப் போனவுடன், இதை விட்டு விடுவாள்.

இப்போது அவள் என்னுள்ளே நிறைந்திருக்கின்றாள்.

இப்போது எனதுயிரிலே வேகமும் நிறைவும் பொருந்தி யிருக்கின்றன.

இப்போது எனதுடலிலே சுகமும் வலிமையும் அமைந்திருக்கின்றன.

இப்போது என்னுள்ளத்திலே தெளிவு நிலவிடுகின்றது.

இது எனக்குப் போதும்.

சென்றது கருதமாட்டேன். நாளைச் சேர்வது நினைக்க மாட்டேன்.

இப்போது என்னுள்ளே சக்தி கொலு வீற்றிருக்கின்றாள்.

அவள் நீடூழி வாழ்க.

அவளைப் போற்றுகின்றேன், புகழ்கின்றேன், வாய் ஓயாமல் வாழ்த்துகின்றேன்.

"மண்ணிலே வேலி போடலாம். வானத்திலே வேலி போடலாமா?" போடலாம்.

மண்ணிலும் வானந்தானே நிரம்பி யிருக்கின்றது?

மண்ணைக் கட்டினால் அதிலுள்ள வானத்தைக் கட்டினதாகாதா?

உடலைக் கட்டு. உயிரைக் கட்டலாம்.

உள்ளத்தைக் கட்டு. சக்தியைக் கட்டலாம்.

அந்த சக்திக்குக் கட்டுப்படுவதிலே வருத்தமில்லை.

என் முன்னே பஞ்சுத் தலையணை கிடக்கிறது.

அதற்கு ஒரு வடிவம், ஓரளவு, ஒரு நியமம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நியமத்தை அறியாதபடி, சக்தி பின்னே நின்று காத்துக் கொண்டிருக்கிறாள்.

மனித ஜாதி இருக்குமளவும் இதே தலையணை அழி வெய்தாதபடி காக்கலாம்.

அதனை அடிக்கடி புதுப்பித்துக் கொண்டிருந்தால், அந்த வடிவத்திலே சக்தி நீடித்து நிற்கும்.

புதுப்பிக்கா விட்டால் அவ் வடிவம் மாறும்.

அழுக்குத் தலையணை; ஓட்டைத் தலையணை, பழைய தலையணை,—அதிலுள்ள பஞ்சை யெடுத்துப் புதிய மெத்தையிலே பொடு. மேலுறையைக் கந்தையென்று வெளியே எறி அந்த வடிவம் அழிந்துவிட்டது .

வடிவத்தைக் காத்தால்,
சக்தியைக் காக்கலாம்;

அதாவது சக்தியை, அவ்வடிவத்திலே காக்கலாம்.

வடிவம் மாறினும் சக்தி மாறுவதில்லை.

எங்கும், எதனிலும், எப்போதும், எல்லா விதத் தொழில்களும் காட்டுவது சக்தி.

வடிவத்தைக் காப்பது நன்று, சக்தியின் பொருட்டாக. சக்தியைப் போற்றுதல் நன்று, வடிவத்தைக் காக்குமாறு.

ஆனால் வடிவத்தை மாத்திரம் போற்றுவோர் சக்தியை இழந்துவிடுவர்.

பாம்புப் பிடாரன் குழலூதுகின்றான்.

"இனிய இசை சோக முடையது" என்பது கேட்டுள்ளோம்.

ஆனால், இப் பிடாரன் ஒலிக்கும் இசை மிகவும் இனியதாயினும் சோக ரஸந் தவிர்ந்தது.

இஃதோர் பண்டிதன் தர்க்கிப்பது போலிருக்கின்றது.

ஒரு நாவலன் பொருள் நிறைந்த சிறியசிறிய வாக்கியங்களை அடுக்கிக்கொண்டுபோவது போலிருக்கிறது.

இந்தப் பிடாரன் என்ன வாதாடுகிறான்?

"தானதந்தத் தானதந்தத் தா - தனத்
தானதந்தன தானதந்தன தா -
தந்தனத்தன தந்தனத்தன தா."

அவ்விதமாகப் பலவகைகளில் மாற்றிச் சுருள் சுருளாக வாசித்துக்கொண்டு போகிறான். இதற்குப் பொருள் என்ன?

ஒரு குழந்தை இதற்குப் பின்வருமாறு பொருள் சொல்லலாயிற்று :—

"காளிக்குப் பூச்சூட்டினேன். அதைக் கழுதை யொன்று தின்ன வந்ததே.

பராசக்தியின் பொருட்டு இவ்வுடல் கட்டினேன்.

அதைப் பாவத்தால் விளைந்த நோய் தின்ன வந்தது.

பராசக்தியைச் சரணடைந்தேன்.

நோய் மறைந்து விட்டது.

பராசக்தி ஒளியேறி என் அகத்திலே விளங்கலாயினள்

அவள் வாழ்க."

பாம்புப் பிடாரன் குழலூதுகின்றான்.

குழலிலே இசை பிறந்ததா? தொளையிலே பிறந்ததா?

பாம்புப் பிடாரன் மூச்சிலே பிறந்ததா?

அவனுள்ளத்திலே பிறந்தது; குழலிலே வெளிப் பட்டது.

உள்ளம் தனியே ஒலிக்காது; குழல் தனியே இசை புரியாது; உள்ளம் குழலிலே ஒட்டாது.

உள்ளம் மூச்சிலே ஒட்டும்; மூச்சுக் குழலிலே ஒட்டும்; குழல் பாடும்.

இஃது சக்தியின் லீலை.

அவள் உள்ளத்திலே பாடுகிறாள். அது குழலின் தொளையிலே கேட்கிறது.

பொருந்தாத பொருள்களைப் பொருத்தி வைத்து அதிலே இசை யுண்டாக்குதல்—சக்தி.

தொம்பப் பிள்ளைகள் பிச்சைக்குக் கத்துகின்றன.

பிடாரன் குழலையும் தொம்பக் குழந்தைகளின் குரலையும் யார் சுருதி சேர்த்துவிட்டது? சக்தி.

"ஜரிகை வேணும்; ஜரிகை!" என்றொருவன் கத்திக் கொண்டு போகிறான், அதே சுருதியில்.

ஆ! பொருள் கண்டு கொண்டேன்.

பிடாரன் உயிரிலும், தொம்பக் குழந்தைகளின் உயிரிலும், ஜரிகைக்காரன் உயிரிலும் ஒரே சக்தி விளையாடுகின்றது.

கருவி பல. பாணன் ஒருவன்.

தோற்றம் பல. சக்தி ஒன்று.

அஃது வாழ்க.

பராசக்தியைப் பாடுகின்றோம்.

இவள் எப்படி உண்டாயினாள்? அதுதான் தெரியவில்லை.

இவள் தானே பிறந்த தாய்; 'தான்' என்ற பரம் பொருளி னிடத்தே.

இவள் எதிலிருந்து தோன்றினாள்? 'தான்' என்ற பரம் பொருளிலிருந்து எப்படித் தோன்றினாள்? தெரியாது.

படைப்பு நமது கண்ணுக்குத் தெரியாது; அறிவுக்கும் தெரியாது.

சாவு நமது கண்ணுக்குத் தெரியும்; அறிவுக்குத் தெரியாது.

வாழ்க்கை நமது கண்ணுக்குத் தெரியும்; அறிவுக்கும் தெரியும்.

வாழ்க்கையாவது சக்தியைப் போற்றுதல்; இதன் பயன் இன்பமெய்தல்.

உள்ளம் தெளிந்திருக்க; உயிர் வேகமும் சூடும் உடையதாக; உடல் அமைதியும் வலிமையும் பெற்றிருக்க.

மஹா சக்தியின் அருள் பெறுதலே வாழ்தல். நாம் வாழ்கின்றோம்.

நம்மை வாழ்வுறச் செய்த மஹா சக்தியை மீட்டும் வாழ்த்துகின்றோம்.

## 51, சிவசக்தி

[குறிப்பு : பாரதியார் தமது இஷ்ட தெய்வமாகிய பராசக்தியின் பெருமையைப் பலவகையாகப் புகழ்ந்து பாடியுள்ளார். இன்பமென்றும், துன்பமென்றும், இயற்கையென்றும், ஐம்பூதங்களின் சேர்க்கையென்றும், பராசக்தியை வாயாரப் புகழ்கின்றார். பாரதியார் தம்மிடம் வந்து பராசக்தி தனக்கு விரும்பியவாறு கவிதை எழுதவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள் என்கின்றார். ஏழையேன் கவிதை யாவும் பராசக்தி தனக்கெனக் கேட்கின்றாள். நான் என்ன செய்யட்டும்? "சொல்லினுக்கெளிதாகவும் நின்றிடாள். சொல்லை வேறிடஞ் செல்ல வழிவிடாள்" என்கிறார் பாரதியார்.]

இயற்கையென் றுரைப்பார் - சிலர்
இணங்கும்ஐம் பூதங்கள் என்றிசைப்பார்;
செயற்கையின் சக்தியென்பார் - உயிர்த்
தீயென்பர், அறிவென்பர், ஈசனென்பர்;

வியப்புறு தாய்நினக்கே - இங்கு
வேள்விசெய் திடுமெங்கள் 'ஓம்' என்னும்
நயப்படு மதுவுண்டே? - சிவ
நாட்டியங் காட்டிநல் லருள் புரிவாய். 1

அன்புறு சோதியென்பர் - சிலர்
ஆரிருட் காளியென் றுனைப்புகழ்வார்;
இன்பமென் றுரைத்திடுவார் - சிலர்
எண்ணருந் துன்பமென் றுனைஇசைப்பார்;
புன்பலி கொண்டுவந்தோம் - அருள்
பூண்டெமைத் தேவர்தங் குலத்திடுவாய்
மின்படு சிவசக்தி - எங்கள்
வீரைநின் திருவடி சரண்புகுந்தோம். 2

உண்மையில் அமுதாவாய்; - புண்கள்
ஒழித்திடு வாய்களி உதவிடுவாய்;
வண்மைகொள் உயிர்ச்சுடராய் -.இங்கு
வளர்ந்திடு வாய்என்றும் மாய்வதிலாய்;
ஒண்மையும் ஊக்கமுந்தான் - என்றும்
ஊறிடுந் திருவருட் சுனையாவாய்;
அண்மையில் என்றும் நின்றே - எம்மை
ஆதரித் தருள்செய்யும் விரதமுற்றாய். 3

தெளிவுறும் அறிவினைநாம் கொண்டு
சேர்த்தனம், நினக்கது சோமரசம்,
ஒளியுறும் உயிர்ச்செடியில் - இதை
ஒங்கிடு மதிவலி தனிற் பிழிந்தோம்;
களியுறக் குடித்திடுவாய் - நின்றன்
களிநடங் காண்பதற் குளங்கனிந்தோம்;
குளிர்சுவைப் பாட்டிசைத்தே - சுரர்
குலத்தினிற் சேர்ந்திடல் விரும்புகின்றோம். 4

அச்சமும் துயரும் என்றே - இரண்டு
அசுரர்வந் தெமையிங்கு சூழ்ந்துநின்றார்;
துச்சமிங் கிவர்படைகள் - பல
தொல்லைகள் கவலைகள் சாவுகளாம்;
இச்சையுற் றிவரடைந்தார் - எங்கள்
இன்னமு தைக்கவர்ந் தேகிடவே,
பிச்சையிங் கெமக்களித்தாய் - ஒரு
பெருநகர் உடலெனும் பெயரினதாம். 5

கோடிமண் டபந்திகழும் - திறற்
கோட்டையிங் கிதையவர் பொழுதனைத்தும்,
நாடிநின் றிடர்புரிவார் - உயிர்
நதியினைத் தடுத்தெமை நலித்திடுவார்;
சாடுபல் குண்டுகளால் - ஒளி
சார்மதிக் கூடங்கள் தகர்த்திடுவார்;
பாடிநின் றுனைப்புகழ்வோம் - எங்கள்
பகைவரை அழித்தெமைக் காத்திடுவாய். 6

நின்னருள் வேண்டுகின்றோம் - எங்கள்
நீதியுந் தர்மமும் நிலைப்பதற்கே;
பொன்னவிர் கோயில்களும் - எங்கள்
பொற்புடை மாதரும் மதலையரும்,
அன்னநல் லணிவயல்கள் - எங்கள்
ஆடுகள் மாடுகள் குதிரைகளும்,
இன்னவை காத்திடவே - அன்னை
இணைமலர்த் திருவடி துணைபுகுந்தோம். 7

எம்முயி ராசைகளும் - எங்கள்
இசைகளும் செயல்களும் துணிவுகளும்
செம்மையுற் றிடஅருள்வாய் - நின்றன்
சேவடி அடைக்கலம் புகுந்துவிட்டோம்.

மும்மையின் உடைமைகளும் - திரு
முன்னரிட் டஞ்சலி செய்து நிற்போம்;
அம்மைநற் சிவசக்தி - எமை
அமரர்தம் நிலையினில் ஆக்கிடுவாய். 8

### பராசக்தி

கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்
காவி யம்பல நீண்டன கட்டென்பார்
விதவிதப் படு மக்களின் சித்திரம்
மேவி நாடகச் செய்யுளை மேவென்பார்;
இதயமோ எனிற் காலையும் மாலையும்
எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்,
எதையும் வேண்டில தன்னை பராசக்தி
இன்ப மொன் றினைப் பாடுதல் அன்றியே. 1

நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென் றொரு தெய்வங் கூறுமே;
கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்
கொண்டு வையம் முழுதும் பயனுறப்
பாட்டி லேயறங் காட்டெனு மோர்தெய்வம்;
பண்ணில் இன்பமுங் கற்பனை விந்தையும்
ஊட்டி எங்கும் உவகை பெருகிட
ஓங்கும் இன்கவி ஓதெனும் வேறொன்றே. 2

நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானி லத்தவர் மேனிலை யெய்தவும்
பாட்டி லேதனி யின்பத்தை நாட்டவும்
பண்ணிலே களி கூட்டவும் வேண்டி, நான்
மூட்டும் அன்புக் கனலொடு வாணியை
முன்னு கின்ற பொழுதி லெல்லாங்குரல்
காட்டி அன்னை பராசக்தி ஏழையேன்
கவிதை யாவுந் தனக்கெனக் கேட்கின்றாள். 3

மழைபொ ழிந்திடும் வண்ணத்தைக் கண்டு நான்
வானி ருண்டு கரும்புயல் கூடியே
இழையு மின்னல் சரேலென்று பாயவும்,
ஈரவாடை இரைந்தொலி செய்யவும்
உழைய லாம்இடை யின்றியிவ் வானநீர்
ஊற்றுஞ் செய்தி உரைத்திட வேண்டுங்கால்,
'மழையுங் காற்றும் பராசக்தி செய்கைகாண்
வாழ்க தாய்!" என்று பாடுமென் வாணியே. 4

சொல்லினுக்கெளி தாகவும் நின்றிடாள்
சொல்லை வேறிடஞ் செல்ல வழிவிடாள்;
அல்லி னுக்குட் பெருஞ்சுடர் காண்பவர்
அன்னை சக்தியின் மேனி நலங்கண்டார்,
கல்லி னுக்குள் அறிவொளி காணுங்கால்,
கால வெள்ளத் திலேநிலை காணுங்கால்.
புல்லி னில்வயி ரப்படை காணுங்கால்,
பூத லத்தில் பராசக்தி தோன்றுமே! 5

## 52. பராசக்தி

[குறிப்பு : சக்தி, சக்தி விளக்கம், சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம், சக்தி திருப்புகழ், சிவசக்திபுகழ், மஹாக்தி— இப் பாடல்கள் எல்லாம் .பக்தி மேலீட்டால் பாடப்படுவன ஆகும். இது ஒவ்வொருவருடைய அனுபவத்திலும் வருவதுதான். பாரதியார் எவ்வாறு தமது இஷ்டதெய்வமாகிய பராசக்தியை ஒவ்வொரு உறுப்பாக சமர்ப்பணம் செய்கின்ருர் என்பது கவனிக்கத்தக்கது. இது ஓர் ஆழ்ந்த பக்திநிலையைக் குறிப்பதாகும். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், அருட்சோதி இராமலிங்க வள்ளலார் என்ற மஹான்களின் வாக்குகளை ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை நமக்குப் புலனுகும்.]

துன்ப மிலாத நிலையே சக்தி.
தூக்க மிலாக்கண் விழிப்பே சக்தி;
அன்பு கனிந்த கனிவே சக்தி,
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி;
இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி,
எண்ணத் திருக்கும் எரியே சக்தி;
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி,
முக்தி நிலையின் முடிவே சக்தி. 1

சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி,
சொல்லில் விளங்கும் சுடரே சக்தி;
தீம்பழந் தன்னில் சுவையே சக்தி,
தெய்வத்தை எண்ணும் நினைவே சக்தி;
பாம்பை அடிக்கும் படையே சக்தி,
பாட்டினில் வந்த களியே சக்தி;
சாம்பரைப் பூசி மலைமிசை வாழும்,
சங்கரன் அன்புத் தழலே சக்தி. 2

வாழ்வு பெருக்கும் மதியே சக்தி,
மாநிலங் காக்கும் மதியே சக்தி;
தாழ்வு தடுக்குஞ் சதிரே சக்தி;
சஞ்சலம் நீக்குந் தவமே சக்தி;
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி,
விண்ணை யளக்கும் விரிவே சக்தி;
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி,
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி. 3

## சக்தி விளக்கம்

ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் - அதை
அன்னை எனப்பணிதல் ஆக்கம்,
சூதில்லை காணுமிந்த நாட்டீர்! - மற்றத்
தோல்லை மதங்கள் செய்யும் தூக்கம். 1

மூலப் பழம்பொருளின் நாட்டம் - இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்!
காலப் பெருங்களத்தின் மீதே - எங்கள்
காளி நடமுலகக் கூட்டம். 2

காலை இளவெயிலின் காட்சி - அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி;
நீல விசும்பினிடை இரவில் - சுடர்
நேமி யனைத்துமவள் ஆட்சி. 3

நாரண னென்று பழவேதம் - சொல்லும்
நாயகன் சக்தி திருப்பாதம்;
சேரத் தவம் புரிந்து பெறுவார் - இங்கு
செல்வம் அறிவு சிவபோதம். 4

ஆதி சிவனுடைய சக்தி - எங்கள்
அன்னை யருள்பெறுதல் முக்தி;
மீதி உயிரிருக்கும் போதே - அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி. 5

பண்டை விதியுடைய தேவி - வெள்ளைப்
பாரதி யன்னையருள் மேவி,
கண்ட பொருள் விளக்கும் நூல்கள் - பல
கற்றலில் லாதவனோர் பாவி. 6

மூர்த்திகள் மூன்று, பொருள் ஒன்று, - அந்த
மூலப் பொருள் ஒளியின் குன்று,
நேர்த்தி திகழும் அந்த ஒளியை - எந்த
நேரமும் போற்று சக்தி என்று. 7

## சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம்

கையைச், சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சாதனைகள் யாவினையும் கூடும் - கையைச்
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்தியுற்றுக் கல்லினையுஞ் சாடும். 1

கண்ணைச், சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
சக்தி வழியினை அது காணும் - கண்ணைச்
சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
சத்தியமும் நல்லருளும் பூணும். 2

செவி, சக்தி தனக்கே கருவியாக்கு - சிவ
சக்திசொலும் மொழியது கேட்கும் - செவி
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்தி திருப் பாடலினை வேட்கும். 3

வாய், சக்தி தனக்கே கருவியாக்கு - சிவ
சக்தி புகழினையது முழங்கும் - வாய்
சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
சக்திநெறி யாவினையும் வழங்கும். 4

சிவ, சக்திதனை நாசி நித்தம் முகரும் - அதைச்
சக்தி தனக்கே கருவி யாக்கு - சிவ
சக்தி திருச் சுவையினை நுகரும் - சிவ
சக்தி தனக்கே எமது நாக்கு. 5

மெய்யைச், சக்தி தனக்கே கருவியாக்கு - சிவ
சக்திதருந் திறனதி லேறும் - மெய்யைச்
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சாதலற்ற வழியினைத் தேறும் 6

கண்டம், சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சந்ததமும் நல்லமுதைப் பாடும் - கண்டம்
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்தியுடன் என்றும்உற வாடும். 7

தோள், சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
தாரணியும் மேலுலகுந் தாங்கும் - தோள்
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்தி பெற்று மேருவென ஓங்கும். 8

நெஞ்சம், சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்தியுற நித்தம் விரிவாகும் - நெஞ்சம்
சக்தி தனக்கே கருவியாக்கு - அதைத்
தாக்க வரும் வாளொதுங்கிப் போகும். 9

சிவ, சக்தி தனக்கே எமது வயிறு - அது
சாம்பரையும் நல்லவுண வாக்கும் - சிவ
சக்தி தனக்கே எமது வயிறு - அது
சக்திபெற உடலினைக் காக்கும். 10

இடை, சக்தி தனக்கே கருவியாக்கு - நல்ல
சக்தியுள்ள சந்ததிகள் தோன்றும் - இடை
சக்தி தனக்கே கருவியாக்கு - நின்றன்
சாதிமுற்றும் நல்லறத்தில் ஊன்றும். 11

கால், சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
சாடியெழு கடலையுந் தாவும் - கால்
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சஞ்சலமில் லாமலெங்கும் மேவும். 12

மனம், சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சஞ்சலங்கள் தீர்ந்தொருமை கூடும்-மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
சாத்துவிகத் தன்மையினைச் சூடும். 13

மனம், சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்தியற்ற சிந்தனைகள் தீரும் - மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு - அதில்
சாரும்நல்ல உறுதியும் சீரும். 14

மனம், சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
சக்திசக்தி சக்தியென்று பேசும் - மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு - அதில்
சார்ந்திருக்கும் நல்லுறவும் தேசும். 15

மனம், சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்திநுட்பம் யாவினையும் நாடும் - மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்திசக்தி யென்றுகுதித் தாடும். 16

மனம், சக்தி தனக்கே கருவியர்க்கு - அது
சக்தியினை எத்திசையும் சேர்க்கும் - மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
தான் விரும்பில் மாமலையைப் பேர்க்கும். 17

மனம், சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சந்தமும் சக்திதனைச் சூழும் - மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு - அதில்
சாவுபெறும் தீவினையும் ஊழும். 18

மனம், சக்தி தனக்கே உரிமையாக்கு - எதைத்
தான் விரும்பி னாலும்வந்து சாரும் - மனம்
சக்தி தனக்கே உரிமையாக்கு - உடல்
தன்னிலுயர் சக்திவந்து சேரும். 19

மனம், சக்தி தனக்கே கருவியாக்கு - இந்தத்
தாரணியில் நூறுவய தாகும் - மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு - உன்னைச்
சாரவந்த நோயழிந்து போகும். 20

மனம், சக்தி தனக்கே கருவியாக்கு - தோள்
சக்திபெற்று நல்ல தொழில் செய்யும் - மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு - எங்கும்
சக்தியருள் மாரிவந்து பெய்யும். 21

மனம், சக்தி தனக்கே கருவியாக்கு - சிவ
சக்தி நடை யாவும் நன்கு பழகும் - மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு - முகம்
சார்ந்திருக்கும் நல்லருளும் அழகும். 22

மனம், சக்தி தனக்கே கருவியாக்கு - உயர்
சாஸ்திரங்கள் யாவும் நன்கு தெரியும் - மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு - நல்ல
சத்திய விளக்கு நித்தம் எரியும். 23

சித்தம், சக்தி தனக்கே உரிமையாக்கு - நல்ல
தாளவகை சந்தவகை காட்டும் - சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு - அதில்
சாரும் நல்ல வார்த்தைகளும் பாட்டும். 24

சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு - அது
சக்தியை யெல்லோர்க்கு முணர் வுறுத்தும்— [சித்தம்
சக்தி தனக்கே உரிமையாக்கு - அது
சக்திபுகழ் திக்கனைத்தும் நிறுத்தும். 25

சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு - அது
சக்திசக்தி யென்று குழலூதும் - சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு - அதில்
சார்வதில்லை அச்சமுடன் சூதும். 26

சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு - அது
சக்தி யென்று வீணைதனில் பேசும் - சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு - அது
சக்திபரி மளமங்கு வீசும். 27

சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு - அது
சக்தியென்று தாளமிட்டு முழக்கும் - சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு - அது
சஞ்சலங்கள் யாவினையும் அழிக்கும். 28

சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு - அது
சக்திவந்து கோட்டைகட்டி வாழும் - சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு - அது
சக்தியருட் சித்திரத்தில் ஆழும். 29

மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
சங்கடங்கள் யாவினையும் உடைக்கும் - மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அங்கு
சத்தியமும் நல்லறமும் கிடைக்கும். 30

மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
சாரவருந் தீமைகளை விலக்கும் - மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
சஞ்சலப் பிசாசுகளைக் கலக்கும். 31

மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
சக்தி செய்யும் விந்தைகளைத் தேடும் - மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
சக்தியுறை விடங்களை நாடும். 32

மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
தர்க்கமெனுங் காட்டிலச்சம் நீக்கும்- மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அதில்
தள்ளி விடும் பொய்ந்நெறியும் தீங்கும். 33

மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு - அதில்
சஞ்சலத்தின் தீயவிருள் விலகும் - மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அதில்
சக்தியொளி நித்தமுநின் றிலகும். 34

மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு - அதில்
சார்வதில்லை ஐயமெனும் பாம்பு - மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அதில்
தான் முளைக்கும் முக்திவிதைக் காம்பு. 35

மதி, சக்தி தனக்கே அடிமையாக்கு - அது
தாரணியில் அன்பு நிலை நாட்டும் - மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
சர்வசிவ சக்தியினைக் காட்டும். 36

மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
சக்திதிரு வருளினைச் சேர்க்கும் - மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
தாமதப் பொய்த் தீமைகளைப் போக்கும். 37

மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
சத்தியத்தின் வெல்கொடியை நாட்டும் - மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
தாக்க வரும் பொய்ப்புலியை ஓட்டும். 38

மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
சத்தியநல் லிரவியைக் காட்டும் - மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு - அதில்
சாரவரும் புயல்களை வாட்டும். 39

மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
சக்திவிர தத்தை யென்றும் பூணும் - மதி
சக்திவிர தத்தை யென்றுங் காத்தால் - சிவ
சக்திதரும் இன்பமும்நல் லூணும். 40

மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு - தெளி
தந்தமுப் பொய்கையென ஒளிரும் - மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
சந்தமும் இன்பமுற மிளிரும். 41

அகம், சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
தன்னையொரு சக்தியென்று தேரும் - அகம்
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
தாமதமும் ஆணவமும் தீரும். 42

அகம், சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
தன்னையவள் கோயிலென்று காணும் - அகம்
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
தன்னையெண்ணித் துன்பமுற நாணும். 43

அகம், சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
சக்தியெனும் கடலிலோர் திவலை - அகம்
சக்தி தனக்கே உடைமை யாக்கு - சிவ
சக்தி யுண்டு நமக்கில்லை கவலை. 44

அகம், சக்தி தனக்கே உடைமை யாக்கு - அதில்
சக்திசிவ நாதநித்தம் ஒலிக்கும் - அகம்
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
சக்திதிரு மேனியொளி ஜ்வலிக்கும். 45

சிவ, சக்தி என்றும் வாழி! என்று பாடு - சிவ
சக்திசக்தி என்று குதித் தாடு - சிவ
சக்தி என்றும் வாழி! என்று பாடு - சிவ
சக்திசக்தி என்றுவிளை யாடு. 46

## சக்தி திருப்புகழ்

சக்திசக்தி சக்தீ சக்தீ சக்தி சக்தி என்றோது;
சக்திசக்தி சக்தீ என்பார் - சாகார் என்றே நின்றோது. 1

சக்திசக்தி என்றே வாழ்தல் - சால்பாம் நம்மைச் சார்ந்தீரே
சக்திசக்தி என்றீ ராகில் - சாகா உண்மை சேர்ந்தீரே! 2

சக்திசக்தி என்றால் சக்தி - தானே சேரும் கண்டீரே!
சக்திசக்தி என்றால் வெற்றி - தானே நேரும் கண்டீரே! 3

சக்திசக்தி என்றே செய்தால் - தானே செய்கை நேராகும்!
சக்திசக்தி என்றால் அஃது - தானே முக்தி வேராகும். 4

சக்திசக்தி சக்தி சக்தி என்றே - ஆடோமோ?
சக்திசக்தி சக்தியென்றே - தாளங்கொட்டிப் பாடோமோ?5

சக்திசக்தி என்றால் துன்பம் - தானே தீரும் கண்டீரே!
சக்திசக்தி என்றால் இன்பம் - தானே சேரும் கண்டீரே! 6

சக்திசக்தி என்றால் செல்வம் - தானே ஊறும் கண்டீரோ!
சக்திசக்தி என்றால் கல்வி - தானே தேறும் கண்டீரோ? 7

சக்திசக்தி சக்தீ சக்தீ - சக்தீ சக்தீ வாழீ நீ!
சக்திசக்தி சக்தீ சக்தீ - சக்தீ சக்தீ வாழீ நீ! 8

சக்திசக்தி வாழீ என்றால் - சம்பத் தெல்லாம் நேராகும்;
சக்திசக்தி என்றால் சக்தி - தாசன் என்றே பேராகும். 9

## சிவசக்தி புகழ்

ஓம், சக்திசக்தி சக்தியென்று சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு;
சக்திசக்தி சக்தியென்று சொல்லி - அவள்
சந்நிதியி லேதொழுது நில்லு. 1

ஓம், சக்திமிசை பாடல்பல பாடு - ஓம்
சக்திசக்தி என்று தாளம் போடு;
சக்திதருஞ் செய்கைநிலந் தனிலே சிவ
சக்திவெறி கொண்டுகளித் தாடு: 2

ஓம், சக்திதனையே சரணங் கொள்ளு - என்றும்
சாவினுக்கொ ரச்சமில்லை தள்ளு.
சக்திபுக ழாமமுதை அள்ளு - மது
தன்னிலினிப் பாகுமந்தக் கள்ளு. 3

ஓம், சக்திசெய்யும் புதுமைகள் பேசு - நல்ல
சக்தியற்ற பேடிகளை ஏசு;
சக்திதிருக் கோயிலுள்ள மாக்கி - அவள்
தந்திடுநற் குங்குமத்தைப் பூசு. 4

ஓம், சக்தியினைச் சேர்ந்ததிந்தச் செய்கை - இதைச்
சார்ந்து நிற்ப தேநமக்கொ ருய்கை;
சக்தியெனும் இன்பமுள்ள பொய்கை - அதில்
தன்னமுத மாரிநித்தம் பெய்கை. 5

ஓம் சக்திசக்தி சக்தியென்று நாட்டு - சிவ
சக்தியருள் பூமிதனில் காட்டு;
சக்திபெற்ற நல்லநிலை நிற்பார் - புவிச்
சாதிகளெல் லாமதனைக் கேட்டு 6

ஓம், சக்திசக்தி சக்தியென்று முழங்கு - அவள்
தந்திரமெல் லாமுலகில் வழங்கு;
சக்தியருள் கூடிவிடு மாயின் - உயிர்
சந்ததமும் வாழுநல்ல கிழங்கு. 7

ஓம், சக்திசெய்யுந் தொழில்களை எண்ணு - நித்தம்
சக்தியுள்ள தொழில்பல பண்ணு;
சக்திகளை யேயிழந்து விட்டால் - இங்கு
சாவினையும் நோவினையும் உண்ணு. 8

ஓம், சக்தியரு ளாலுலகில் ஏறு - ஒரு
சங்கடம்வந் தாலிரண்டு கூறு;
சக்திசில சோதனைகள் செய்தால் - அவள்
தண்ணருளென் றேமனது தேறு. 9

ஓம் சக்திதுணை என்றுநம்பி வாழ்த்து - சிவ
சக்திதனையே அகத்தில் ஆழ்த்து;
சக்தியும் சிறப்பும்மிகப் பெறுவாய் - சிவ
சக்தியருள் வாழ்கவென்று வாழ்த்து! 10

## மஹாசக்தி

சந்திர னொளியில் அவளைக் கண்டேன்,
சரண மென்று புகுந்து கொண்டேன்,
இந்திரி யங்களை வென்று விட்டேன்.
எனதென் ஆசையைக் கொன்று விட்டேன் 1

பயனெண் ணாமல் உழைக்கச் சொன்னாள்,
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்,
துயரி லாதெனைச் செய்துவிட்டாள்,
துன்ப மென்பதைக் கொய்து விட்டாள். 2

மீன்கள் செய்யும் ஒளியைச் செய்தாள்.
வீசி நிற்கும் வளியைச் செய்தாள்,
வான்க ணுள்ள வெளியைச் செய்தாள்,
வாழி நெஞ்சிற் களியைச் செய்தாள். 3

# 53. காளி ஸ்தோத்திரம்

[குறிப்பு : அது ஓர் அருமையான கவிதை. யாதுமாக நின்ருய் காளி. எங்கும் நீ நிறைந்தாய். தீது நன்மை எல்லாம் உன்றன் செயல்கள் அன்றி இல்லே. இது கருத்துச் செறிவுள்ள கவிதையாகும். ஸதாசிவ பிரம்மேந்திரர் பாடலேப்போல இதற்கு யாரேனும் ஒருவர் இசையமைத்து உதவிஞல் மிகவும் நன்ருகயிருக்கும். தமிழ்நாடு இன்னும் குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. இருந்தாலும், இன்னும் விழிப்புணர்ச்சியோடு இருக்கவில்லை என்று பாரதியார் கூறியுள்ளது இந்த இடத்திலே நினேவுக்கு வருகின்றது. எப்பொழுது கண் திறக்குமோ?]

யாது மாகி நின்ருய் - காளீ! - எங்கும் நீநி றைந்தாய்,
தீது நன்மை யெல்லாம் - நின்றன் - செயல்க ளன் றி யில்லே.
போதும் இங்கு மாந்தர் - வாழும் - பொய்மை வாழ்க்கை
[யெல்லாம்,
ஆதி சக்தி, தாயே! - என்மீது - அருள் புரிந்து காப்பாய்! 1

எந்த நாளும் நின்மேல் - தாயே! - இசைகள் பாடி வாழ்வேன்
கந்தனேப் பயந்தாய் - தாயே! - கருணே வெள்ள மாஞய்!
மந்த மாரு தத்தில் - வானில் - மலேயி னுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன் - செம்மை தோன்றும்
[அன்றே! 2

கர்மயோக மொன்றே - உலகில்காக்கு - மென்னும் வேதம்;
தர்ம நீதி சிறிதும் - இங்கே - தவற லென்பதின் றி,
மர்ம மான பொருளும் - நின்றன் - மலர டிக்கண் நெஞ்சம்
செம்மையுற்று நாளும் - சேர்ந்தே - தேசுகூட வேண்டும். 3

என்ற னுள்ள வெளியில் - ஞானத் - திரவி யேற
வேண்டும்,
குன்ற மொத்த தோளும் - மேருக் - கோல மொத்த
வடிவும்,
நன்றை நாடு மனமும் - நீயெந் - நாளு மீதல் வேண்டும்;
ஒன்றை விட்டு மற்றோர் - துயரில் - உழலும் நெஞ்சம்
வேண்டாம்: 4

வான கத்தி னொளியைக் - கண்டே - மனம கிழ்ச்சி
பொங்கி,
யானெ தற்கும் அஞ்சேன் - ஆகி - எந்த நாளும்வாழ்வேன்;
ஞான லயத்த தம்மா? - உவமை - நானுரைக் கொணுதாம்?
வான கத்தி னொளியின் - அழகை - வாழ்த்து மாறி
யாதோ? 5

ஞாயி றென்ற கோளம் - தருமோர் - நல்ல பேரொளிக்கே
தேய மீதோர் உவமை - எவரே - தேடி யோத வல்லார்?
வாயினிக்கும் அம்மா! - அழகாம் - மதியின் இன்ப ஒளியை,
நேயமோ டுரைத்தால் - ஆங்கே - நெஞ்சிளக்க
மெய்தும். 6

காளி மீது நெஞ்சம் - என்றும் - கலந்து நிற்கவேண்டும்;
வேளை யொத்த விறலும் - பாரில் - வேந்த ரேத்து புகழும்,
யாளி யொத்த வலியும் - என்றும் - இன்பம் நிற்கும்
மனமும்,
வாழி யீதல் வேண்டும் - அன்னய்! - வாழ்க நின்றன்
அருளே!

## 54. கலைமகளை வேண்டுதல்

[குறிப்பு : பாரதியார் ஒருசமயம் மூன்று மாதம் புதிய கவிதை இயற்றவில்லையாம். இதைப்பற்றிக் கவலையோடு கேட்டதற்கு பாரதியார் பதில் சொல்லுகிறார். "ராஜாராம் என்ற புதுவை நண்பர் ஒருவர் தமது தந்தையார் தமிழில் மொழிபெயர்த்த ஒரு நூலைச் செப்பனிடும்படி கேட்டுக் கொண்டார். அதனால் மூன்று மாதம் புதிய கவிதையே இயற்றவில்லை. இப்பொழுது அது முடிந்துவிட்டது. கலைமகள் துதியுடன் இனிப் புதிய கவிதைகள் இயற்றுவேன்" என்று பதில் சொன்னாராம்.

எங்ஙனம் சென்றிருந்தீர் - எனது
இன்னுயிரே! என்றன் இசையமுதே!

என்ற வரிகள் இச்செய்தியைக் குறிப்பாகக் காட்டுகின்றன.]

(நொண்டிச்சிந்து)

எங்ஙனம் சென்றிருந்தீர் - எனது
இன்னுயிரே! என்றன் இசையமுதே!
திங்களைக் கண்டவுடன் - கடல்
திரையினைக் காற்றினைக் கேட்டவுடன்,
கங்குலைப் பார்த்தவுடன் - கடல்
காலையில் இரவியைத் தொழுதவுடன்
பொங்குவீர் அமிழ்தெனவே - அந்தப்
புதுமையி லேதுயர் மறந்திருப்பேன். 1

மாதமொர் நான்காநீர் - அன்பு
    வறுமையி லேயெனை வீழ்த்திவிட்டீர்;
பாதங்கள் போற்றுகின்றேன் - என்றன்
    பாவமெலாங் கெட்டு ஞானகங்கை
நாதமொ டெப்பொழுதும் - என்றன்
    நாவினி லேபொழிந் திடவேண்டும்;
வேதங்க ளாக்கிடுவீர்! - அந்த
    விண்ணவர் கண்ணிடை விளங்கிடுவீர்! 2

கண்மணி போன்றவரே! - இங்குக்
    காலையும் மாலையும் திருமகளாம்
பெண்மணி யின்பத்தையும் - சக்திப்
    பெருமகள் திருவடிப் பெருமையையும்,
வண்மையில் ஓதிடுவீர் - என்றன்
    வாயிலும் மதியிலும் வளர்ந்திடுவீர்!
அண்மையில் இருந்திடுவீர்! - இனி
    அடியனைப் பிரிந்திடில் ஆற்றுவனோ? 3

தானெனும் பேய்கெடவே, - பல
    சஞ்சலக் குரங்குகள் தலைப்படவே,
வானெனும் ஒளிபெறவே, - நல்ல
    வாய்மையி லேமதி நிலைத்திடவே,
தேனெனப் பொழிந்திடுவீர் - அந்தத்
    திருமகள் சினங்களைத் தீர்த்திடுவீர்!
ஊனங்கள் போக்கிடுவீர் - நல்ல
    ஊக்கமும் பெருமையும் உதவிடுவீர்! 4

தீயினை நிறுத்திடுவீர்! - நல்ல
        தீரமுந் தெளிவுமிங் கருள்புரிவீர்!
மாயையில் அறிவிழந்தே - உம்மை
        மதிப்பது மறந்தனன்; பிழைகளெல்லாம்
தாயென உமைப் பணிந்தேன் - பொறை
        சார்த்திநல் அருள்செய வேண்டுகின்றேன்;
வாயினிற் சபதமிட்டேன்; இனி
        மறக்கிலேன், எனை மறக்ககிலீர்! 5

# உரைநடை

# 1. வைசாக்தன் என்ற பண்டாரத்தின் கதை

*[குறிப்பு: எல்லாத் தெய்வங்களும் ஒன்று தான் என்பதை விளக்க பாரதியார் ஒரு கதை வடிவமாகச் சொல்கின்றார். கதையைக் கேட்பதில் எல்லாருக்கும் விருப்பம் தான். ஆகவே இந்தத் துறையையும் சுவையாகக் கையாளுகின்றார் பாரதியார். விஷ்ணு தங்கை பார்வதி; பார்வதி புருஷன் சிவன். இதை கதாகாலட்சேபங்களில் ஓயாது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் விஷ்ணு உயர்வா? சிவன் உயர்வா? என்ற கேள்வி எழுகின்ற காலத்திலே சண்டை போட்டுக் கொள்கிறார்கள். நல்லவேளையாக இந்தச் சண்டை கொஞ்சம் ஓய்ந்திருக்கிறது. இப்பொழுது காஞ்சி காமகோடி பீடத்து நடமாடும் தெய்வமாகிய ஜகத்குரு சங்கராசாரியர் முயற்சியினால் மார்கழித் திங்களிலே திருப்பாவை, திருவெம்பாவை முதலிய சொற்பொழிவுகளை ஒரே மேடையில் பேசக் கேட்கின்றோம். வைசாக்தன் என்ற பண்டாரத்தின் கதையிலும் பாரதியார் இதே கருத்தை ஒரு கதை வடிவமாகச் சுவையாக விளக்க முயலுகின்றார்.]*

வேதபுரத்தின் வீதியில் ஒரு பண்டாரம் நன்றாகப் பாட்டுப் பாடிக்கொண்டு வந்தான்.

அவன் நெற்றியிலே ஒரு நாமம். அதன் மேலே விபூதிக் குறுக்கு, நடுவில் ஒரு குங்குமப்பொட்டு.

"உனக்கு எந்த ஊர்?" என்று கேட்டேன்.

"நடுப்பட்டி" என்று அந்தப் பண்டாரம் சொன்னான்.

"நீ எந்த மதம்?" என்று கேட்டேன்.

"வைசாக்தம்" என்றான்.

சிரிப்புடன், "அதற்கர்த்த மென்ன?" என்று கேட்டேன்.

"வைஷ்ணவ— சைவ— சாக்தம்" என்று விளக்கினான்.

"இந்த மதத்தின் கொள்கை யென்ன?" என்று கேட்டேன்.

அப்போது பண்டாரம் சொல்லுகிறான் :—

"விஷ்ணு தங்கை பார்வதி; பார்வதி புருஷன் சிவன். எல்லா தெய்வங்களும் ஒன்று. ஆதலால் தெய்வத்தை நம்பவேண்டும். செல்வத்தைச் சேர்க்கவேண்டும். இவ்வளவு தான் எங்கள் மதத்தினுடைய கொள்கை" என்றான்.

"இந்த மதம் யார் உண்டாக்கினது?" என்றுகேட்டேன்.

"முன்னோர்கள் உண்டாக்கினது. தனித் தனியாகவே நல்ல மதங்கள் மூன்றையும் ஒன்று சேர்த்தால் மிகவும் நன்மையுண்டாகு மென்று எனக்குத் திருப்பதி வெங்க டேசப் பெருமாளும், தில்லை நடராஜரும் கனவிலே சொன்னார்கள். ஆதலால் ஒன்றாகச் சேர்த்தேன்" என்று அந்தப் பண்டராம் சொன்னான்.

## சிறு கதை

ஒரு வீட்டில் ஒரு புருஷனும் ஸ்திரீயும் குடியிருந் தார்கள். ஒரு நாள் இரவில் புருஷன் வீட்டுக்கு வரும் போது ஸ்திரீ சமையல் செய்துகொண்டிருந்தாள். சோறு பாதி கொதித்துக் கொண்டிருந்தது. அந்த ஸ்திரீ அன்றிரவு

கொஞ்சம் உடம்பு அசௌகரியமாக யிருந்தபடியால், தனக்கு ஆஹாரம் வேண்டாமென்று நிச்சயித்துப் புருஷனுக்கு மாத்திரமென்று சமைத்தாள்.

புருஷன் வந்தவுடன், "நான் இன்றிரவு விரதமிருக்கப் போகிறேன். எனக்கு ஆஹாரம் வேண்டாம்" என்றான்.

உடனே பாதி கொதிக்கிற சோற்றை அவள் அப்படியே சும்மா விட்டுவிட்டு அடுப்பை நீரால் அவித்துவிடவில்லை. தங்களிருவருக்கும் உபயோக மில்லாவிடினும், மறுநாள் காலையில் வேலைக்காரிக்கு உதவு மென்று நினைத்து, அது நன்றாகக் கொதிக்கும்வரை காத்திருந்து வடித்து வைத்து விட்டுப் பிறகு நித்திரைக்குச் சென்றாள்.

அதுபோலவே, கர்மயோகி தான் ஒரு தொழில் செய்யத் தொடங்கி, இடையிலே அது தனக்குப் பயனில்லை யென்று தோன்றினால், அதை அப்படியே நிறுத்தி விடமாட்டான். பிறருக்குப் பயன் தருமென்பதைக் கொண்டு, தான் எடுத்த வேலையை முடித்த பிறகே வேறு காரியம் தொடங்குவான்.

## பிரார்த்தனை

கிழவனுடைய அறிவு முதிர்ச்சியும், நடுவயதிற்குள்ள மனத்திடனும், இளைஞருடைய உத்ஸாகமும், குழந்தையின் ஹ்ருதயமும், தேவர்களே, எனக்கு எப்போதும் நிலைத்திருக்கும்படி அருள் செய்க.

# சில வேடிக்கைக் கதைகள்

## 1

## ஆனைக்கால் உதை

ஒரு ஊரில் ஆனைக்கால் வியாதிகொண்ட ஒருவன் பழக்கடை வைத்திருந்தான். அந்தத் தெருவின் வழியாகச் சில பிள்ளைகள் அடிக்கடி போவதுண்டு. போகும்போதெல்லாம் அவர்களுக்கு அந்தப் பழங்களில் சிலவற்றை எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. கிட்டப்போனால் ஆனைக்கால்காரன் தனது பிரம்மாண்டமான காலைக் காட்டிப் "பயல்களே, கூடையிலே கைவைத்தால் உதைப்பேன் ஜாக்கிரதை!" என்பான்.

"சாதாரணக் காலால் அடித்தால் கூட எவ்வளவோ நோகிறதே, இந்த ஆனைக் காலால் அடிபட்டால் நாம் செத்தே போவோம்" என்று பயந்து பிள்ளைகள் ஓடி விடுவார்கள்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் கடைக்காரன் பராக்காக இருக்கும் சமயம் பார்த்து, ஒரு பையன் மெல்லப் போய்க் கூடையிலிருந்து ஒரு பழத்தைக் கையிலெடுத்தான். இதற்குள் கடைக்காரன் திரும்பிப் பார்த்து, தனது பெரிய காலை சிரமத்துடன் தூக்கிப் பையனை ஒரு அடி அடித்தான். பஞ்சுத் தலையணையால் அடித்ததுபோலே அடி மெத்தென்று விழுந்தது. பையன் கலகலவென்று சிரித்துத் தெரு முனையிலே இருந்த தனது நண்பர்களைக் கூவி, "அடே எல்லோரும் வாருங்கடா! வெறும் சதை; எலும்பில்லை" என்றான். மனிதர்களெல்லாரும் பல விஷயங்களில் குழந்தைகளைப் போலவே காணப்படுகிறார்கள். "வெறுஞ்

சதை" யாக இருக்கும் கஷ்டங்களைத் தூரத்திலிருந்து "எலும்புள்ள" கஷ்டங்களாக நினைத்துப் பிறர் அவதிப் படுவதை நாம் பார்த்ததில்லையா? நாம் அங்ஙனம் அவதிப்பட்டதில்லையா?

## 2. மஹாலக்ஷ்மி

[குறிப்பு : இல்லறம் பெரிதா ? துறவறம் பெரிதா ? என்பதை பாரதியார் சுவையாக ஒரு கதையின்மூலம் விளக்குகிறார். இரண்டும் ஒன்று தான் என்பது பாரதியார் முடிவு. துறவறத் தையே பெரிதாக மதிப்பது பாரதியாருக்கு சம்மதமில்லை என்பது கவனத்திற்குரியது.]

"இல்லறம் பெரிதா, துறவறம் பெரிதா? என்பது கேள்வி.

ரிஷி சொல்கிறார் :—"அரசனே, நீ என்னோடு பாதசாரி யாக வருவாயானால் தெரியப்படுத்துகிறேன்" என்று.

அப்படிக்கு பாதசாரியாகப் போகும்போது, கன்னட தேச ராஜகுமாரத்திக்கு விவாகம் நிச்சயித்திருப்பதால், ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் ராஜகுமாரத்தியின் விவாகத்திற்கு வந்திருக்கிறபோது, அவ்விடத்திற்கு மேற் படி அரசனும் ரிஷியும் இருவருமாகப் போய்ச்சேர்ந்தார் கள். இப்படி எல்லோரும் விவாகமண்டபத்தில் கூடி யிருக்க, அந்த விவாகமண்டபத்தில் ஒரு பால்ய ஸந்யாஸி யும் வேடிக்கை பார்க்க வந்தார். "கன்னடத்து ராஜ குமாரி ! எந்த ராஜகுமாரனை விவாகம் செய்துகொள்ளு கிறாய்?" என்று தோழியானவள் கேட்டுக்கொண்ட

போனுள், அவ்விடத்து ராஜகுமாரர்களையெல்லாம் 'வேண்டாம், வேண்டாம்' என்று களைந்து போய், இந்த பால்ய ஸந்யாஸியைக் கண்டு புஷ்ப மாலையை அணிந்தாள். அந்த புஷ்ப மாலையானது பாம்பாகி மேற்படி ஸந்யாஸியின் கழுத்தில் யமனுடைய பாசம்போல் வந்துவிழ, அவன் திடுக்கிடாமல் "ஓம் சக்தி" "ஓம் சக்தி" என்ற மந்திரத்தை ஜபித்து மனதை தைரியப்படுத்திக் கொண்டான். பிறகு அதே மாலை பரிமள கந்தமுடைய புஷ்பமாலையாய் விட்டது.

இதனை மேற்படி மகரிஷியானவர், அந்த ராஜனிடத்திலே காண்பித்து, "இல்லறத்தில் வாழ்ந்தால் இப்படிப் பட்ட தைரியத்துடன் வாழவேண்டும். மணமாலையே பாம்பாக வந்து விழுந்தபோதிலும் மனம் பதறக்கூடாது. தைரியம் பாம்பைக்கூட மணமாலையாக மாற்றிவிடும். இவ்விதமான தைரியத்தில் நிற்பார் வீடு பெறுவர். துறவறத்துக்கும் இதுவே வழி. ஆகவே "இரண்டும் ஒன்றுதான்" என்று சொன்னர்.

## 3. வண்ணுன் தொழில்

[குறிப்பு :—பாண்டிச்சேரியில் குள்ளச்சாமி என்ற பரதேசி இருக்கிருர். இவருக்கும் பாரதியாருக்கும் எப்படியோ தொடர்பு ஏற்பட்டு இருக்கிறது. அவர் ஒரு அழுக்கு மூட்டையை முதுகில் சுமந்துகொண்டு வருவாராம். "ஏன் இவ்வாறு அழுக்கு மூட்டையைச் சுமக்கிறீர்?" என்று கேட்டால், "நான் அழுக்கு மூட்டையை வெளியே சுமக்கிறேன்; நீ உள்ளே சுமக்கிருய்.

முதலாவது நாக்கை வெளுக்க வேண்டும். பொய் சொல்லக் கூடாது. அந்தக் கரணத்தை சுத்தி செய்துவிட்டால் விடுதலை உண்டாகும்" என்று பதில் சொல்லுகிறார்.

இந்த குள்ளச்சாமியிடம் நெடுநாள் தொடர்பு பாரதியாருக்கு இருந்திருக்கிறது. பாண்டிச் சேரியை விட்டுச் சென்னை அடைந்தபோதும் பாரதியாரைத் தேடிவந்திருக்கிறார். இவருடைய தொடர்பினுல்தான் ஒரு சில தீய வழக்கங்கள் பாரதியாருக்கு ஏற்பட்டிருக்கின்றன. பாரதி அறுபத்தாறு என்ற கவிதையிலும், பாரதியார் இவரைப்பற்றிப் பாடியுள்ளதை நாம் அறிந்திருக் கிறோம். திரு வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களை யும் சென்னைக்கு வந்தபோது இவர் சென்று கண்டிருக்கிறார். ஆனுல் சிதம்பரம் பிள்ளை அவர்கள் கண்ணுக்கு குள்ளச்சாமி சாதாரண மனிதர்போலவே காணப்படுகிறார் என்பது கவனிக்கத்தக்கது.]

**வே**தபுரத்தில் குள்ளச்சாமி என்றொரு பரதேசி இருக் கிறார். அவருக்கு வயது ஐம்பதோ, அறுபதோ, எழுபதோ, எண்பதோ யாருக்கும் தெரியாது. அவருடைய உயரம் நாலரை அடியிருக்கும். கருநிறம். குண்டு சட்டியைப் போல முகம். உடம்பெல்லாம் வயிரக்கட்டை போலே நல்ல உறுதியான பெயர்வழி.

அவருக்கு வியாதி என்பதே கிடையாது. சென்ற பத்து வருடங்களில் ஒரே தடவை அவர் மேலே கொஞ்சம் சொறி சிறங்கு வந்தது. பத்து நாளிருந்து நீங்கி விட்டது. அந்த மனுஷ்யன் ஜட பரதருடைய நிலமையிலே இருப்ப தாகச் சொல்லலாம். பேசினுல் பயித்தியக்காரன் பேசுவது

போலிருக்கும். இழுத்து, இழுத்து, திக்கித் திக்கி, முன் பின் சம்பந்தமில்லாமல் விழுங்கி விழுங்கிப் பேசுவார். தெரு விலே படுத்துக் கிடப்பார். பசித்தபோது எங்கேனும் போய்ப் பிச்சை வாங்கிச் சாப்பிடுவார். கள் குடிப்பார். கஞ்சாத் தின்பார். மண்ணிலே புரளுவார். நாய்களுடன் சண்டை போடுவார்.

வீதியிலே பெண்பிள்ளைகளுக்கெல்லாம் அவரைக் கண் டால் இரக்கமுண்டாகும். திடீரென்று ஒரு வீட்டுக்குள் நுழைந்து, வீட்டிலிருக்கும் அந்த குழந்தைகள் நெற்றியிலே திருநீற்றைப் பூசிவிட்டு ஓடிப்போவார். யாராவது திட்டி ணுலும், அடித்தாலும் பொறுத்துக்கொண்டு உடனே அவ்விடத்தை விட்டு ஓடிப்போய்விடுவார்.

ஸாமானிய ஜனங்கள் அவருக்கு நூறு வயதுக்கு மேலே ஆகிவிட்டதென்றும், நெடுங்காலமாக இப்போதிருப்பது போலவே, நாற்பத்தைம்பது வயது போலேதான் இருக்கிரு ரென்றும் சொல்லுகிருர்கள். ஆனல் இந்த வார்த்தை எவ்வளவு நிச்சய மென்பதை நிர்ணயிக்க இடமில்லை.

அவர் கையால் விபூதி வாங்கிப் பூசிக் கொண்டால் நோய் தீர்ந்து விடுமென்ற நம்பிக்கையும் பலர் கொண் டிருக்கிருர்கள்.

மேற்படி குள்ளச்சாமியார் ஒருநாள் தாம் வீதியில் நடந்து வரும்போது, முதுகின் மேலே கிழிந்த பழங் கந்தை களை யெல்லாம் ஒரு பெரிய அழுக்கு மூட்டை கட்டிச் சுமந்து கொண்டு வந்தார். இந்தச் சாமியாரைக்கண்டால் நான் கும்பிடுவது வழக்கம். அப்படியே கும்பிட்டேன். ஈயென்று பல்லைக் காட்டிப் பேதைச் சிரிப்புச் சிரித்தார். கண்ணைப் பார்த்தால் குறும்பு கூத்தாடுகிறது.

"ஏ சாமி, உனக்கென்ன பயித்தியமா? கந்தைகளைக் கட்டி ஏன் முதுகிலே சுமக்கிறாய்?" என்று கேட்டேன்.

"நீ நெஞ்சுக்குள்ளே சுமக்கிறாய், நான் முதுகின் மேலே சுமக்கிறேன்" என்று சொல்லி ஓடிப்போய்விட்டார். உடனே நான் பொருள் தெரிந்து கொண்டேன். அஞ்ஞானப் பழங் குப்பைகளையும், பழங் கவலைகளையும், பழந் துன்பங்களையும், பழஞ் சிறுமைகளையும் மனதில் வீணாய்ச் சுமந்து திரியும் ஸாமான்ய மனிதனுடைய அறிவீனத்தை விளக்கும் பொருட்டு ஷி சாமியார் இந்த திருஷ்டாந்தத்தைச் சொன்னாரென்று தெரிந்து கொண்டேன்.

பின்னொரு நாள், அவரிடம் பரிகாசமாக நான், "சாமி, இப்படிப் பிச்சை வாங்கித் தண்டச் சோறு தின்றுகொண்டு ஜீவனம் பண்ணுகிறாயே, ஏதேனும் தொழில் செய்து பிழைக்கக் கூடாதா?" என்று கேட்டேன். அந்தப் பரதேசி சொல்லுகிறார் :—

"தம்பி, நானும் தொழில் செய்து தான் பிழைக்கிறேன். எனக்கு வண்ணான் வேலை. ஐம்புலன்களாகிய கழுதைகளை மேய்க்கிறேன். அந்தக்கரணமான துணி மூட்டைகளை வெளுக்கிறேன்" என்றார்.

ஆம், பரிசுத்தப் படுத்துகிறவனே ஆசார்யன். அவனுடைய சொல்லை மற்றவர் ஆசரிக்க வேண்டும். மேலே சாமியாருடைய புறநடைகள் குடும்பம் நடத்தும் கிருஹஸ்தர்களுக்குத் தகுதியல்ல. ஆனால் அவருடைய உள்ள நடையை உலகத்தார் பின்பற்ற வேண்டும். ஐம்புலன்களாகிய கழுதைகளை மீறிச் செல்லாதபடி கட்டுப் படுத்தி ஆள வேண்டும். உள்ளத்தை மாசில்லாதபடி சுத்தமாகச் செய்துகொள்ளவேண்டும்.

அழுக்குத் தீர்க்கும் தொழில் செய்வோர் நமது தேசத்தில் மாகாணத்துக்கு லக்ஷம் பேர் வேண்டும். ஹிந்துக்கள் தற்காலத்தில் குப்பைக்குள் முழுகிப் போய்க் கிடக்கிறார்கள். வீட்டையும், தெருவையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை. ஜலதாரைகளை ஒழுங்கு படுத்தவில்லை. கிணறுகளையும், குளங்களையும், சுனைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை. கோயிற் குளங்களில் ஜலம் புழுத்து நெளிகிறது. நாற்றம் குடலைப் பிடுங்குகிறது.

மனுஷ்யாபிவிருத்தி யாவது யாது?

புழுதியை நீக்கித் தரையைச் சுத்த மாக்குதல். அழுக்குப் போகத் துணியையும், நாற்ற மில்லாதபடி குளத்தையும், பொதுவாக எல்லா விஷயங்களையும் சுத்தமாக்கி வைத்துக் கொள்ளுதல்.

நான் மேற்படி சாமியாரிடம், "சாமியாரே, ஞான நெறியிலே செல்ல விரும்புவோன் முக்கியமாக எதை ஆரம்பத் தொழிலாகக் கொள்ள வேண்டும்?" என்று கேட்டேன்.

குள்ளச்சாமி சொல்லுகிறார் :—

"முதலாவது, நாக்கை வெளுக்க வேண்டும். பொய் சொல்லக்கூடாது. புறஞ் சொல்லக் கூடாது. முகஸ்துதி கூடாது. தற்புகழ்ச்சி கூடாது. வருந்தச் சொல்லலாகாது. பயந்து பேசக்கூடாது. இதுதான் வண்ணான் தொழில் ஆரம்பம். பிறகு அந்தக்கரணத்தை வெளுத்தல் சுலபம். சில இடங்களில் பொய் சொல்லித் தீரும்படியாக இருந்தால், அப்போது மௌனத்தைக் கொள்ள வேண்டும். மௌனம் ஸர்வார்த்த ஸாதகம். அதை விட்டுப் பேசும் படி நேர்ந்தால் உண்மையே சொல்ல வேண்டும். உண்மை விரதம் தவறக்கூடாது. தவற வேண்டிய அவசியமில்லை;

உண்மை கூறினால் தீங்கு நேரிடுமென்று நினைப்போர் தெய்வம் உண்மை யென்பதை அறியமாட்டார்கள். தெய்வம் உண்மை. அதன் இஷ்டப்படி உலகம் நடக்கிறது. ஆதலால் பயப்படுகிறவன் மூடசிகாமணி. அந்தக் கரணத்தை வெளுத்தலாவது அதிலுள்ள பயத்தை நீக்குதல். அந்தக்கரணத்தை சுத்தி செய்து விட்டால் விடுதலை யுண்டாகும்'' என்றார்.

பின்னு மொரு ஸமயம், மேற்படி குள்ளச்சாமி என்னிடம் வந்து, ''தம்பி, நீ இலக்கணக்காரனாச்சுதே! 'வண்ணான்' என்ற வார்த்தையை உடைத்துப் பொருள் சொல்லுவாயா?'' என்று கேட்டார்.

நான் நகைத்து ''சாமி, உடைக்கிற இலக்கணம் எனக்குத் தெரியாது'' என்றேன்.

அப்போது குள்ளச்சாமி சொல்லுகிறார் :— ''வண்—ஆன் : வண்ணான். ஆன் என்பது ரிஷபம். வள்ளலாகிய ரிஷபம் நந்திகேசுரர். அவருடைய தொழில் சுத்தஞான மூர்த்தியாகிய சிவனைச் சுமந்து கொண்டிருத்தல். தமிழ் நாட்டு ஞானசாரியர்களுக்கு ஆதிமூர்த்தியும் வள்ளலுமாகி நிற்கும் இந்த நந்தி பகவானுடைய தொழிலாகிய ஆசார்யத் தொழிலையே நான் வண்ணான் தொழிலென்று சொல்லுகிறேன். எனக்கு வண்ணான் தொழில்'' என்று மேற்படி குள்ளச்சாமி சொன்னார்.

## 4. ஜீவன் முக்தி : அதுவே சிதம்பரம்

[குறிப்பு : குள்ளச்சாமி என்ற ஜடபரதரைப் பற்றி பாரதியார் பல கட்டுரைகள் எழுதியிருக்கின்றார். பாரதி அறுபத்தாறு என்ற கவிதை

யிலும் இவரைப்பற்றிக் குறிப்பிடுகின்ருர். இவர் ஒரு பரமஹம்சர் என்றே பாரதியார் சொல்லு கின்ருர். சிறு குழந்தை போன்றவர் என்றும் கூறுகின்ருர். சிதம்பரமே ஸ்ரீரங்கம் என்றும் அதுவே பழனிமலே என்றும் பாரதியார் இக் கட்டுரையிலே குறிப்பிடுகின்ருர். இவற்றிலிருந்து சிதம்பரம், பழனிமலே, ஸ்ரீரங்கம் என்ற திருப்பதி கள் பாரதியார் உள்ளத்தைக் கவர்ந்தவைகள் என்று உணரலாம்.

'சும்மா' என்ற கட்டுரையில் குள்ளச்சாமி பற்றி ஒரு சுவையான செய்தி வெளிவந்துள்ளது.

இப்படி ஏகாந்தமாய் மேல் மொட்டை மாடியில் உலவியவரை, அங்கே தேடி வந்து, குள்ளச்சாமியின் அருமை பெருமைகளே விவரிக் கிறது "சும்மா" என்ற கட்டுரை. "கண் மூடித் திறக்கு முன்ஞகவே கைச்சுவர்மேல் ஒரு பாய்ச்சல் பாய்ந்து அங்கிருந்து மேல் மெத்தைக்கு இரண் டாம் பாய்ச்சலில் வந்து விட்டார் சாமியார்" என்கிருர் பாரதியார். சாமியாரைத் தொடர்ந்து தானும் பாய்ந்தேற முயன்று கீழே விழுந்த வஸ் தாது வேணுமுதலி என்ற நண்பனுக்கு பலத்த ஊமைக் காயங்கள்!

இந்தச் சம்பவம் நடந்த தினம் சாமியார் களே வேணுமுதலி ஏதோ குறை கூற, "ஹிந்துஸ் தானத்து மஹா யோகிகளின் மகிமையைப் பார்" என்று குள்ளச்சாமி ஒரு அதிசயம் செய்து காட் டிஞர். திடீரென குள்ளச்சாமி நெடியசாமி ஆகி விட்டார்! பாரதி கூறுகிருர்: "நாலேமுக்கால்

அடிபோல் தோன்றிய குள்ளச்சாமி ஏழேமுக்கால் அடி உயரம் வளர்ந்துவிட்டார். ஒரு கண்ணைப் பார்த்தால் சூரியனைப்போல் இருந்தது; மற்றொரு கண்ணைப் பார்த்தால் சந்திரனைப்போல் இருந்தது. முகத்தின் வலப்புறம் பார்த்தால் பார்வதியைப் போல் இருந்தது. இடப்புறம் பார்த்தால் சிவன்போல் இருந்தது. குனிந்தால் பிள்ளையார் போலிருந்தது. நிமிர்ந்து பார்க்கும் போது விஷ்ணுவின் முகத்தைப் போலே தோன்றிற்று.''

நானே பரமபுருஷன் என்று சாமியார் சொன்னார்; மதபேதங்களை நீக்கி ஒருமையைக் காணென்றார். வேணு முதலி மூர்ச்சையாகி விட்டார்; பாரதியும் மூர்ச்சையாகி விட்டார். மூர்ச்சை தெளிந்தபோது சாமியார் போய் விட்டார்!

இந்த குள்ளச்சாமியார் பாரதியாரின் உள்ளங் கவர்ந்தவர்களில் ஒருவராவர். மேலும் பாரதி அறுபத்தாறில் குறிக்கப்பட்டுள்ள கோவிந்தசுவாமி முதலிய சில சாமியார்கள் இவரைக் கவர்ந்தவர்கள். இவர்களால் அபின் சாப்பிடும் பழக்கமும் மீண்டும் ஏற்பட்டது. இளம் பருவத்தே இவர் எட்டயபுரம் மன்னரால் தூண்டப்பெற்று, பூரணாதி லேகியம் சாப்பிட்டவரல்லவா? அந்த வழக்கம் திரும்பவும் பற்றிக் கொண்டது. தமது வறுமைப் பிணியைப் பாரதியார் இவ்வாறு மறக்க முயன்றார் என்றும் கூறலாம். இதுவே பாரதியாரின் அகாலமரணத்திற்குக் காரணமாய் முடிந்தது.]

குள்ளச்சாமி யாரென்பதை நான் முன்னொருமுறை சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதிய "வண்ணான் கதை" யில் சொல்லியிருக்கிறேன். இவர் ஒரு பரமஹம்ஸர். ஜடபரதரைப்போல், யாதொரு தொழிலும் இல்லாமல், முழங்காலுக்குமேல் அழுக்குத்துணி கட்டிக்கொண்டு, போட்ட இடத்தில் சோறு தின்றுகொண்டு, வெயில் மழை பாராமல் தெருவிலே சுற்றிக்கொண்டிருக்கிறார். இவருடைய ஒழுக்க விநோதங்களை மேற்படி வண்ணான் கதையிலே* காண்க. இவர் வந்து சோறு போடு என்று கேட்டார். தாம் திருவமுது செய்யுமுன்பாக, ஒரு பிடி அன்னம் என் கையில் நைவேத்தியமாகக் கொடுத்தார். நான் அதை வாங்கியுண்டேன். அப்பொழுது சாமியார் போஜனம் முடித்த பிறகு, என்னுடன் மேல் மெத்தைக்கு வந்தார். 'கண்ணை மூடிக்கொள்' என்றார். கண்ணை மூடிக் கொண்டேன். நெற்றியில் விபூதியிட்டார். 'விழித்துப் பார்' என்றார். கண்ணை விழித்தேன். நேர்த்தியான தென்றல் காற்று வீசுகிறது. சூரியனுடைய ஒளி தேனைப் போலே மாடமெங்கும் பாய்கின்றது. பலகணி வழியாக இரண்டு சிட்டுக் குருவிகள் வந்து கண் முன்னே பறந்து விளையாடுகின்றன. குள்ளச்சாமியார் சிரிக்கிறார். கடைக் கண்ணால் தளத்தைக் காட்டினார். கீழே குனிந்து பார்த்தேன். ஒரு சிறிய ஓலைத் துண்டு கிடந்தது. அதை நான் எடுக்கப் போனேன். அதற்குள்ளே அந்தக் குள்ளச்சாமி சிரித்துக்கொண்டு வெளியே ஓடிப்போனார். அவரைத் திரும்பவும் கூப்பிட்டால் பயனில்லை என்பது எனக்குத் தெரியும். அவர் இஷ்டமான போது வருவார்; இஷ்டமானபோது ஓடிப் போவார். சிறு குழந்தை போன்றவர். மனுஷ்ய விதிகளுக்குக் கட்டுப் பட்டவரில்லை. ஆகவே நான் அவரைக் கூப்பிடாமலே கீழே கிடந்த ஓலையை எடுத்து வாசித்துப் பார்த்தேன்.

---

*பாரதி அறுபத்தாறு 30, 31 பாடல்களையும் காண்க.

"1. எப்போதும் வானத்திலே சுற்றும் பருந்துபோல், போக விஷயங்களினுல் கட்டுப்படாமல், பரமாத்மாவின் ஞானக் கதிரை விழித்து நோக்குதலே விடுதலே. அதுதான் சிதம்பரம். மகனே! சிதம்பரத்துக்குப் போ. 2. சிதம் பரத்தில் நடராஜருடன் சிவகாம சக்தி பக்தருக்கு வர தானம் கொடுக்கிருர். போய் வரம் வாங்கு. 3. சிதம் பரமே ஸ்ரீ ரங்கம்; அதுவே பழனிமலே. எல்லாப்புண்ணிய க்ஷேத்திரங்களும் ஜீவன் முக்திச் சின்னங்கள் என்று தெரிந்துகொள். உனக்கு க்ஷேமமும் நீண்ட வயதும் ஜீவன் முக்தியும் விளேக" என்று எழுதியிருந்தது. இந்த வசனங் கள் நமது புராதன வேத தர்மத்திற்கு முற்றும் ஒத்திருக்கிற படியால், அவற்றைச் சுதேசமித்திரன் பத்திரிகை மூலமாக வெளியிடலானேன்.

## 5. கடற்கரையாண்டி

[குறிப்பு : இந்தச் சுவையான காதையிலே கந்தர் அலங்காரத்தில் ஓர் அழகிய பாடலேப் பற்றிச் சொல்லுகின்ருர். அருணகிரிநாதர் எங்ஙனம் தமக்கு விதி அழிந்துபோயிற்று என்று இந்தப் பாடலில் விளக்கி இருக்கின்ருர். அந்தப் பாடலே நாடராகத்தில் பாடும்போது எவ்வாறு தமக்கு மெய்சிலிக்கும்படியாண அனுபவம் ஏற்பட்டது என்று விவரிக்கிருர். முருகனிடத்தில் ஈடுபாடு கொண்டவர் என்பதையும் சொல்லாமல் சொல்லுகிருர்.]

ஒரு நாள், நடுப்பகல் நேரத்திலே, நான் வேத புராத்தில் கடற்கரை மணலின்மேல் அலேக்கு'எதிரே போய்

உட்கார்ந்திருந்தேன். காலை முதலாகவே வானத்தை மேகங்கள் மூடி மந்தாரமாக இருந்தபடியால் மணல் சுடவில்லை. உச்சிக்கு நேரே ஸூரியன். மேகப்படலத்துக் குட்பட்டு சந்தேகத்தால் மறைக்கப்பட்ட ஞானத்தைப் போல் ஒளிகுன்றியிருந்தான். அலைகள் எதிரே மோதின. வடகீழ்த்திசையிலிருந்து சில்லென்று குளிர்ந்த காற்று வீசிற்று. குருட்டு வெயில் கடல்மீது படுவதனால், அலைகளைப் பார்க்கும்போது கொஞ்சம் கண் கூசிற்று. சிறிது தொலைவில் ஒரு வெளிநாட்டு வியாபாரக்கப்பல் வந்து நின்றது. நானும் பொழுது போகாமல், ஒரு தோணிப் புறத்திலேயிருந்து கடலையும் அலையையும் பற்றி யோசனை செய்து கொண்டிருந்தேன். 'அடா! ஓயாமல், ஓயாமல், எப்போதும் இப்படி ஓலமிடுகிறதே! எத்தனை யுகங்களா யிற்றோ! விதியன்றோ இந்தக் கடலை இப்படி ஆட்டுவது? விதியின் வலிமை பெரிது.

'விதியினால் அண்ட கோடிகள் சுழல்கின்றன. விதிப் படியே அணுக்கள் சலிக்கின்றன. மனுஷ்யர், தேவர், அசுரர் முதலிய பல கோடி ஜீவராசிகளின் மனங்களும், செயல்களும் விதிப்படி நடக்கின்றன. இந்த ஸூரியன் விதிக்குக் கட்டுப்பட்டிருக்கிறான். மேகங்களெல்லாம் விதிப்படி பிறந்து, விதிப்படி ஓடி, விதிப்படி மாய்கின்றன. இவ்வாறு யோசனை செய்து கொண்டிருக்கையிலே, அங்கொரு யோகி வந்தார். இவருக்கு வேதபுரத்தார் "கடற்கரை யாண்டி" என்று பெயர் சொல்லுவார்கள். ஏழைகள் இவரைப் பெரிய சித்தரென்றும், ஞானி யென்றும் கொண்டாடுவார்கள். கண்ட இடத்தில் சோறு வாங்கித் தின்பார். வெயில் மழை பார்ப்பது கிடையாது. சில மாதங்கள் ஓரூரிலிருப்பார். பிறகு வேறெங்கேனும் போய், ஓரிரண்டு வருஷங்களுக்குப்பின் திரும்பி வருவார். இவருடைய தலையெல்லாம் சடை. அரையிலொரு காவித்

துணி. வேதபுரத்தில் தங்கும் நாட்களிலே இவர் பெரும் பாலும் கடலோரத்தில் உலாவிக் கொண்டிருப்பார். அல்லது தோணிகளுக்குள்ளே படுத்துத் தூங்குவார். இந்தக் கடற்கரையாண்டி நடுப்பகலில் நான் அலைகளைப் பார்த்து யோசனை செய்வது கண்டு புன்சிரிப்புடன் வந்து என்னருகே மணலின்மேல் உட்கார்ந்து கொண்டு, "என்ன யோசனை செய்கிறாய்?" என்று கேட்டார்.

"விதியைப் பற்றி யோசனை செய்கிறேன்" என்றேன். "யாருடைய விதியை" என்று கேட்டார்.

"என்னுடைய விதியை; உம்முடைய விதியை; இந்தக் கடலின் விதியை; இந்த உலகத்தின் விதியை" என்று சொன்னேன். அப்போது கடற்கரையாண்டி சொல்லுகிறார்: —

"தம்பி உனக்கும், கடலுக்கும், உலகத்துக்கும் விதி தலைவன். எனக்கு விதி கிடையாது. ஆதலால் உங்கள் கூட்டத்தில் என்னைச் சேர்த்துப் பேசாதே" என்றார்.

"எதனாலே?" என்று கேட்டேன்.

அப்போது, அந்த யோகி மிகவும் உரத்த குரலில், கடலோசை தணியும்படி பின் வரும் பாட்டை ஆச்சரிய மான நாட ராகத்தில் பாடினார்.

"சேல்பட் டழிந்தது
செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது
பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது
வேலையும் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்த திங்
கென்றலை மேலயன் கையெழுத்தே!"

கந்தரலங்காரத்தில் நான் பல முறை படித்திருக்கும் மேற்படி பாட்டை அந்த யோகி பாடும்போது, எனக்குப் புதிதாக இருந்தது. மேலெல்லாம் புளகமுண்டாய் விட்டது. முதலிரண்டடி சாதாரணமாக உட்கார்ந்து சொன்னார். மூன்றாவது பதம் சொல்லுகையில் எழுந்து நின்று கொண்டார். கண்ணும், முகமும் ஒளிகொண்டு ஆவேசம் ஏறிப்போய்விட்டது. "வேல் பட்டழிந்தது வேலை (கடல்)" என்று சொல்லும்போது சுட்டு விரலால் கடலைக் குறித்துக் காட்டினார். கடல் நடுங்குவதுபோல் என் கண்ணுக்குப் புலப்பட்டது.

பிறகு சொன்னார் :—

தெய்வத்தின் வேலாலே கடல் உடைந்தது, மலை தூளாய் போய்விட்டது. சூரபத்மன் சிதறிப்போனான். அந்த முருகனுடைய திருவடி என் முடிமீது தொட்டது. நான் விடுதலை கொண்டேன். 'விடுதலைப்பட்டது பாச வினை விலங்கே."

இங்ஙனம் அவர் சொல்லிக்கொண்டிருக்கையில் மழை வந்து விட்டது. நானெழுந்து வீட்டுக்குப் புறப்பட்டேன். அவர் அப்படியே அலையில் இறங்கி ஸ்நானம் செய்யப் போனார். நான் மணலைக் கடந்து சாலையில் ஏறும்போது, கடற்புறத்திலிருந்து சிங்கத்தின் ஒலி போலே 'விடுதலை; விடுதலை; விடுதலை' என்ற ஒலி கேட்டது.

## 6. செய்கை

[குறிப்பு : செய்கை என்ற கட்டுரையில் பாரதியாருக்கும் இடி பள்ளிக்கூடத்துப் பிரம்ம ராய அய்யருக்கும் வீரப்பமுதலியாருக்கும் நடந்த

சுவையான உரையாடலைப் பற்றி வருகின்றது. இதில்தான்,

"வில்லினை யெடடர் - கையில்
வில்லினை யெடடா - அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்திசெய்திடடா!

என்ற அற்புதமான கவிதை வரிகள் வருகின்றன. இதை ஒருவகையில் கீதை உபதேச சாரமாகக் கொள்ளலாம்.]

வேதபுரத்தில் வேதபுரீசர் ஆலயம் என்ற சிவன் கோவில் இருக்கிறது. அத்தக் கோவிலில் எழுந்தருளி யிருக்கும் சுப்ரமணியக் கடவுளுக்குப் பல அடியார் ரத்ந மிழைத்த வேல் சாத்தும் கிரியை சென்ற திங்கட்கிழமை மாலையிலே நிகழ்ந்தது. அன்று காலையில் ஸ்வாமிக்குப் பலவிதமான அபிஷேகங்கள் நடந்தன. சந்தனாபிஷேகம் நடக்கும் ஸமயத்தில் நான் ஸந்நிதிக்குப் போய்ச் சேர்ந்தேன். எனக்கு முன்னாகவே என்னுடைய ஸ்நேகிதர் பிரம்மராய ஐயர் அங்கு வந்து தரிசனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

"சூரபத்மனை அடித்த உஷ்ணம் அமரும் பொருட்டாக எம்பெருமான் சந்தனாபிஷேகம் செய்து கொள்ளுகிறான்" என்று பிரம்மராய ஐயர் சொன்னார். அங்கே ஒரு பிச்சி (பிடித்துக் கொண்டவள் போலே காணப்பட்ட பெண்) வந்து கந்தர் ஷஷ்டி கவசம் சொல்லிக்கொண்டு ஸந்நிதியிலே நின்று நர்த்தனம் செய்தாள். இந்த விநோதமெல்லாம் கண்டு, பிறகு தீபாராதனை சேவித்துவிட்டு, நானும் பிரம்மராய ஐயரும் திருக்குளத்துக் கரைமண்டபத்தில் போய் உட்கார்ந்தோம். அங்கே விடுதலையைப்பற்றி பிரம்மராய ஐயர் என்னிடம் சில கேள்விகள் கேட்டார்.

பிறகு நாட்டியத்தைப்பற்றிக் கொஞ்சம் ஸம்பாஷணை நடந்தது. ஸங்கீதத்தில் நம்மவர் தற்காலத்தில் சோக ரஸம், சிங்கார ரஸம் என்ற இரண்டுமாத்திரம் வைத்துக் கொண்டு மற்ற ஏழையும் மறந்து போய்விட்டது போல, நாட்டியத்திலும் சோகம் சிங்காரம் இரண்டு தான் வைத் திருக்கிறார்கள். மற்ற ஏழும் ஏறக்குறைய கிருஷ்ணார்ப் பணம் என்று பல விதமாகப் பேசினார். "நாட்டியம் மிகவும் மேலான தொழில். இப்போது அந்தத் தொழிலை நமது நாட்டில் தாஸிகள் மாத்திரமே செய்கிறார்கள். முற் காலத்தில் அரசர் ஆடுவதுண்டு. பக்தர் ஆடுவது லோகப் ப்ரஸித்தம். கண்ணன் பாம்பின்மேலும், சிவன் சிற்சபை யிலும் ஆடுதல் கண்டோம். கணபதி, முருகன், சக்தி முதலிய தெய்வங்களுக்கெல்லாம் தனித்தனியே பிரத்தி யேகமான கூத்து வகைகள் சாஸ்த்ரங்களிலே சொல்லப் பட்டிருக்கின்றன. கவலையை வெல்லுதல் குறி. கவலை நீங்கினால் ஆட்டமும் பாட்டமும் இயற்கையிலே பிறக்கும். பூர்வீக ராஜாக்கள் அனுபவித்த சுகமும் அடைந்த மேன்மையும் இக்காலத்தில் இல்லை. ராஜ யோகியானால் அவனுக்கு நாட்டியம் முதலிய தெய்வ கலைகள் இயற்கை யிலே சித்தியாகும்."

இங்ஙனம் பிரம்மராய ஐயர் பேசிக்கொண்டிருக் கையில் அவ்விடத்துக்கு மேல்படி கோயில் தர்மகர்த்தா வாகிய வீரப்ப முதலியாரும் வந்து சேர்ந்தார். வீரப்ப முதலியார் நல்ல தீரன்; பல பெரிய கார்யங்களை எடுத்து ஸாதித்தவர். இவருடைய குமாரன் மஹா வீரனென்று போர்க்களத்தில் கீர்த்தி யடைந்திருக்கிறான். இவர் வந்தவுடனே ஸம்பாஷணை கொஞ்சம் மாறுபட்டது. ஏதேதோ விஷயங்கள் பேசிக்கொண்டிருந்தார். அப்போது கோவில் பணிவிடைக்காரன் ஒருவன் கையிலே மஞ்சள் காயிதங்கள் கொண்டு வந்து ஆளுக்கொன்று வீதம்

கொடுத்தான். அதென்ன காயித மென்ருல், "அன்று மாலை கோயிலில் நடக்கப் போகிற பெரிய பாளையம் மடாதிபதியின் உபந்யாசத்துக்கு எல்லாரும் வந்து "சிறப்பிக்க வேண்டும்" என்ற அழைப்புக் காயிதம்.

அந்தக் காயிதத்தின் மகுடத்தில் ஒரு விருத்தம் எழுதியிருந்தது. அவ்விருத்தத்தின் பின்னிரண்டடிகள் பின் வருமாறு :—

"தோகை மேல் உலவும் கந்தன்
சுடரிக் கரத்திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவ தெமக்கு வேலை."

(மயிலின் மேலே உலவுகின்ற கந்தனுடைய கையில் வெற்றிமாலை சூடி நிற்கும் வேலாயுதத்தை வணங்குவதே நம்முடைய தொழில்.)

இவ்விரண்டு பாதங்களையும் படித்துப் பார்த்துவிட்டு, பிரம்மராய ஐயர், "நல்ல பாட்டு" என்ருர். வீரப்ப முதலியார் பின் வருமாறு ப்ரஸங்கம் செய்யலாஞர் :—

"கேளும் காளி தாஸரே, பிரம்மராய ஐயரே, நீரும் கேளும். தெய்வத்தைப் போற்றுவதே நம்முடைய வேலையென்றும், அதைத்தவிர நமக்கு வேறு எவ்விதமான தொழிலும் கிடையாதென்றும் சொல்லிக் கொண்டிருப்போர், சோம்பரில் முழுகிப் போய்த் தம்முடைய வாணுளையும் வீணுகச் செய்து பிறரையும் கெடுக்கிருர்கள். செய்கை பிரதானம். செய்கையை விடுதல் பாவம். கடவுள் நமக்கு ஐம்புலன்களையும், அறிவையும் கொடுத்து எப்போதும் உழைப்பிஞலேயே தனக்கும் பிறர்க்கும் நன்மை தேடும்படி ஏற்பாடு செய்திருக்கிருர். அதற்கு மாருகச் செய்கையற்றுச் சும்மா இருப்பதை இன்பமென்று

நினைப்போர் நாசத்தை அடைவார்கள். தெய்வம், கிய்வம் எல்லாம் வீண் பேச்சு. வேலை செய்தவன் பிழைப்பான்; வேலை செய்யாதவன் செத்துப் போவான்'' என்றார். அப்போது பிரம்மராய ஐயர் :—

சோம்பேறி தெய்வத்தின் பெயரை ஒரு முகாந்தரமாகக் காட்டித் தன்னுடைய சோம்பரை ஆதரிப்பதாகச் சொன்னீர்கள். இருக்கலாம். அதினாலே தெய்வத்தை நம்பிச் செய்கைப் பொறுப்பில்லாமல் இருப்போரெல்லாம் சோம்பேறிகளென்று நினைப்பது குற்றம். உண்மை அப்படியில்லை. இயற்கையின் வலிமையிலே இயற்கையின் கொள்கைப்படி, இயற்கையே மனிதரின் செயல்களையெல்லாம் நடத்துகிறான். இது மறுக்க முடியாத ஸத்யம். இதை உணர்ந்தவன் ஞானி. இந்த ஞானமுண்டாகித் தான் செய்யும் செய்கைகளுக்குத் தான் பொறுப்பில்லையென்றும் தெய்வமே பொறுப்பென்றும் தெரிந்துகொண்டு நடக்கும் பெரியோர் சோம்பரிலே முழுகிக் கிடப்பதில்லை. அவர்கள் அக்நியைப் போலே தொழில் செய்வார்கள். எப்போதும் ஆனந்தத்திலே இருப்பதனால் அவர்களிடம் அற்புதமான சக்திகள் பிறக்கும். அந்த சக்திகளைக் கொண்டு அவர்கள் செய்யும் தொழில் உலகத்தாருக்குக் கணக்கிட முடியாத நன்மைகளைச் செய்யும். பகவான் கீதையிலே என்ன சொல்லுகிறார்? தெய்வமே செய்கிறது. தான் செய்வதாக நினைப்பவன் மூடன். ஆதலாலே முன் பின் யோசனை செய்யாமல் அப்போதப்போது நேரிடும் தர்மத்தை அனல் போலே செய்யவேண்டும். ஆதலால் ஹே அர்ஜுனா!

''வில்லினை யெடடா - கையில்
வில்லினை யெடடா - அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா!

வாடி நில்லாதே - மனம்
வாடி நில்லாதே - வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே!

ஒன்றுள துண்மை - என்றும்
ஒன்றுள துண்மை - அதைக்
கொன்றிடொண்ணாது குறைத்தலொண்ணாது!

துன்பமுமில்லை - கொடுந்
துன்பமுமில்லை - அதில்
இன்பமுமில்லை பிறப்பிறப்பில்லை!

படைகளுந் தீண்டா - அதைப்
படைகளுந் தீண்டா - அனல்
சுடவு மொண்ணாது புனல் நனையாது!

செய்தலுன் கடனே - அறம்
செய்தலுன் கடனே - அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே
வில்லினை யெடடா"

என்று பகவான் சொன்னார்.

ஆதலால் பக்தனுக்குத் தொழிலிலே பொறுப்பில்லை, ஆனால் தொழிலுண்டு. அது தெய்வத்தாலே கொடுக்கப் படும். உண்மையான தெய்வபக்தி உடையவர்கள் செய்யும் செய்கையினால் கிருதயுகம் விளையும். அவர்கள் எவ்விதமான செய்கையும் தமக்குவேண்டியதில்லை யென்று உதறி விட்டவுடனே பகவான் அவர்களைக் கருவியாகக் கொண்டு மஹத்தான செய்கைகளைச் செய்வான்" என்று பிரம்மராய ஐயர் சொன்னார்.

அப்போது வீரப்ப முதலியார் என்னை நோக்கி, "உமது கருத்தென்ன?" என்று கேட்டார். நான் "எனக்கெனச்

செயல் யாதொன்றுமில்லை'' என்ற முன்னோர் பாடலை எடுத்துச் சொல்லி, சக்தி நாமத்தைக்கூறி, ''நான் செய்கை யற்று நிற்கின்றேன். பராசக்தி என் மூலமாக எது செய் வித்தாலும் அவளுடைய இஷ்டமே யன்றி என்னுடைய இஷ்டமில்லை'' என்றேன்.

இந்த சமயத்தில் தண்டபாணிக்குப் பூஜை நடந்து தீபாராதனையாய்க் கொண்டிருப்பதாக ஒருவன் வந்து சொன்னான். எல்லாரும் எழுந்து ஸேவிக்கப் புறப்பட் டோம். சபை கலைந்தது.

## 7. உண்மை

(ரத்தினக் களஞ்சியம்)

[குறிப்பு : இந்தக் கட்டுரை 1916 ஜூன் மாதம் 26ம் தேதி வெளியாகியுள்ளது. பாரதி யார் தமது சமயக் கொள்கையை இதிலே தெளி வாகக் கூறுகின்றார் - நம்பிக்கையே காமதேனு என்று 1617 - ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் தேதி ''நம்பிக்கை'' என்ற கட்டுரை வெளியாயிருக் கின்றது.

இதன் முடிவுரை நமது கவனத்திற்குரியது. இதில்தான் முடிந்த முடிவாக தமது சமயக் கருத் துக்களை திரட்டிக் கூறுகின்றார்.

பாரதியார் கூறுகின்றார் ''எனவே, எல்லா மதங்களும் உண்மைதான். ஒரு மதமும் முழு உண்மையன்று. ஆதலால் மதப்பிரிவுகளைக் கருதி மனிதர் பிரிந்துவிடக் கூடாது. எல்லா மதஸ்தரும்

ஒரே தெய்வத்தைத்தான் வணங்குகிறார்கள். லௌகிக விஷயங்களைப் போலவே மதவிஷயங்களிலும் ஒப்பு, உடன்பிறப்பு, விடுதலை மூன்றும் பாராட்டவேண்டும்.

பாரதியார் பல இடங்களில் தமது கடவுட் கொள்கையைக் கூறியிருந்த போதிலும், இத்தனை தெளிவாக உரைநடையில் கூறவில்லை என்று கருதியதால், இதற்குத் தனியிடம் தந்துள்ளேன்.]

பூமண்டலத்தில் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு காலங்களிலே பிறந்து, மனுஷ்ய ஜாதியாருக்கு ஞான தானம் செய்த சில பெரியோரின் வசனங்களை இங்கு கோத்தெழுதுகிறேன். தயவுசெய்து சிரத்தையுடன் படிக்கும்படி தமிழ் நாட்டு மஹா ஜனங்களை வேண்டுகிறேன்.

தெலுங்கு தேசத்து ஞானியாகிய வேமன்ன கவி சொல்லுகிறார் :—

"கல்லைக் குவித்துப் பெரிய கோயில்கள் ஏன் கட்டுகிறீர்கள்? தெய்வம் உள்ளுக்குள்ளே யிருப்பதை யறியாமல், வீணாக ஏன் தொல்லைப் படுகிறீர்கள்?"

ஸ்வாமி விவேகானந்தர் :—"ஒவ்வொரு மனிதனுடைய அறிவிலும் பரமாத்மா மறைந்து நிற்கிறது, வெளியுலகத்தையும் உள்ளுலகத்தையும் வசப்படுத்தி உள்ளே மறைந்திருக்கும் தெய்வத்தை வெளிப்படுத்துவதே நாம் செய்யவேண்டிய காரியம். செய்கை, அன்பு, யோகம், ஞானம் இவற்றினால் அந்தப் பொருளையடைந்து விடுதலை பெற்று நில்லுங்கள். தர்ம முழுதும் இஃதேயாம். மற்றப்படி மதங்கள், கொள்கைகள், கிரியைகள், சாஸ்திரங்கள், கோயில்கள், ஆசாரங்கள் எல்லாம் இரண்டாம் பக்ஷமாகக் கருதத்தக்க உபகரணங்களே யன்றி வேறில்லை,"

அமெரிக்கா தேசத்து மஹா வித்வானும் ஞானியுமாகிய எமெர்ஸன் சொல்லுகிறார் :—

"எவன் வந்தாலும் சரி, அவனிடமுள்ள தெய்வத்தை நான் பார்ப்பதற்குத் தடை யுண்டாகிறது, ஒவ்வொருவனும் தன்னுள்ளே யிருக்கும் திருக்கோயிலின் கதவுகளை மூடி வைத்துவிட்டு, மற்றொருவனுடைய தெய்வத்தையும், மற்றொருவனுக்கு வேறொருவன் சொல்லிய தெய்வத்தையும் பற்றிப் பொய்க்கதைகளை என்னிடம் சொல்ல வருகிறான்."

த்ஸென் - தஸே - த்ஸூங் என்ற சீனதேசத்து ஞானி சொல்லுகிறார் :—

"பழைய காலத்திலிருந்து வந்ததென்று கருதி ஒரு மதம் உண்மையென்பதாக நிச்சயித்து விடலாகாது. உண்மை இதற்கு நேர் மாறானது. மனித ஜாதி நாளாக நாளாக வாழ்க்கையின் உண்மை விதிகளை நன்றாகத் தெரிந்து கொள்ளுகிறது. நமது பாட்டன்மாரும் பூட்டன் மாரும் நம்பிய விஷயங்களையே நாமும் நம்ப வேண்டுமென்ற விஷயமானது, குழந்தையாக இருக்கும்போது தைத்த உடுப்புகளையே பெரியவனான போதும் போட்டுக் கொள்ள வேண்டுமென்பதற்கு ஒப்பாகும்."

மேற்கூறிய எமெர்ஸன் பண்டிதரின் சிஷ்யரும் நல்ல ஞானியுமான தோரோ சொல்லுகிறார் :—

"என்ன ஆச்சரியம்! உண்மையின் பிரகாசங்களில் நமது காலத்துக்குப் பயன்படாத பழையனவற்றை உலகம் ஒப்புக் கொள்ளுகிறது. இப்போது புதிய ஞானிகள் கண்டு சொல்லும் உண்மைகளை வீணாக மதிக்கிறது; சிற்சில சமயங்களில் பகைக்கவும் செய்கிறது. என்ன ஆச்சரியம்!"

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் :—

"ஆச்சரிய சித்திகள் காட்டுவதாகச் சொல்லும் மனிதர் இருக்குமிடத்துக்குப் போகவேண்டாம். அவர்கள் உண்மை நெறியினின்றும் தவறிவிட்டார்கள்."

ருஷியா தேசத்து ஞானியாகிய டால்ஸ்டாய் (தோல்ஸ்தோய்):—

"நமது மதக் கொள்கைகளில் பயனில்லாதது, ஜடமாவது, புறவடிவமாவது, தெளிவில்லாதது, நிச்சயமில்லாதது - இவற்றை நாம் பயனில்லாமல் தள்ளிவிட வேண்டும். அதன் ஸாரத்தை மாத்திரம் கொள்ள வேண்டும். எத்தனைக்கெத்தனை இந்த ஸாரத்தை நாம் சுத்தப்படுத்துகிறோமோ, அத்தனைக்கத்தனை ஜகத்தின் உண்மை விதி நமக்குத் தென்படும்."

எது தெய்வம்?

'ஹெர்மெஸ்' என்ற புராதன மிசிர (ஈஜிப்டு) தேசத்து ஞானி சொல்லுகிறார் :—

"உடலில்லாதது, தோற்றமில்லாதது, வடிவமற்றது, ஜடமில்லாதது, நமது புலன்களுக்கு எட்டாதது - இது தெய்வம்."

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் : - "ஈசன் ஒளி; எல்லாப் பொருள்களிலும் திரைக்குள் மறைந்தது போல் மறைந்து நிற்கும் ஒளியே தெய்வம்."

பட்டினத்துப்பிள்ளை :—"எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்குமொன்றாய் முட்டித் ததும்பி முளைத்தோங்கும் ஜோதி."

தாயுமானவர் :'—'சுத்த அறிவே சிவம்."

ரிக்வேதம் :—"உண்மைப் பொருள் ஒன்று. அதனைப் புலவோர் பலவாறு சொல்லுகிறார்கள்."

நம்மாழ்வார் :—"திடவிசும்பு, எரி, வளி, நீர், நிலம் இவை மிசைப்படர் பொருள் முழுவதும் ஆய், அவை யவைதோறும் உடல்மிசை உயிரெனக் கரந்துளன்."

ஹெர்மெஸ் :—"தெய்வம் எது? ஜகத்தின் உயிர்."

முடிவுரை

எனவே, எல்லா மதங்களும் உண்மைதான் .ஒரு மதமும் முழு உண்மையன்று. ஆதலால் மதப்பிரிவுகளைக் கருதி மனிதர் பிரிந்துவிடக் கூடாது. எல்லா மதஸ்தரும் ஒரே தெய்வத்தைத்தான் வணங்குகிறார்கள். லௌகிக விஷயங்களைப் போலவே மதவிஷயங்களிலும் ஒப்பு, உடன் பிறப்பு, விடுதலை மூன்றும் பாராட்ட வேண்டும்.

## 8. நம்பிக்கை

[குறிப்பு : நம்பிக்கையின் வலிமை அளவிட முடியாதது. நம்பிக்கையே காமதேனு என்கிறார் பாரதியார், பாரதியார் இந்த நம்பிக்கையில் பெரிதும் நம்பிக்கை வைத்திருக்கிறார். 'நம்பினோர் கெடுவதில்லை; நான்கு மறைத் தீர்ப்பு' என்றும் அவர் சொல்வதை இங்கு கவனிக்க வேண்டும்.]

மயிலாப்பூரில் ஸ்ரீ. கலவல கண்ணன் செட்டியார் ஏற்படுத்திய புதிய ஸம்ஸ்க்ருத கலாசாலையின் க்ருஹப் பிரவேசத்தை ஒட்டி, நீதிப்ரவீண ஸ்ரீ. சுப்பிரமணிய அய்யர் செய்த ஆசி வசனங்களிடையே, ராமானுஜாசார்யருடைய மகிமையைப்பற்றி சில வார்த்தைகள் சொன்னார். ஸ்ரீமான் நீதி மணி அய்யர் பிரம்ம வேதாந்தியாகையால் இவருக்குத் துவைதம், விசிஷ்டாத்துவைதம், அத்வைதம் என்ற

மூன்று கட்சியும் ஸம்மதம். ஸத்யம் ஒன்று; அதனை ஆராதனை செய்யும் வழிகள் பல; அத்வைத ஸ்தாபனம் செய்த சங்கராச்சாரியரே ஷண்மத ஸ்தாபனமும் செய்த தாக அவருடைய சரித்திரம் சொல்லுகிறது.

பக்தியின் பெருமையை உலகத்துக்கு விளங்கக் காட்டிய மஹான்களிலே ராமானுஜாசாரியார் ஒருவர். பக்தியாவது தெய்வத்தை நம்புதல்; குழந்தை தாயை நம்புவது போலவும், பத்தினி கணவனை நம்புவது போல வும், பார்த்தபொருளைக் கண் நம்புவதுபோலவும், தான் தன்னை நம்புவது போலவும் தெய்வத்தை நம்பவேண்டும். இரவிலும் பகலிலும், இன்பத்திலும் துன்பத்திலும், தொழிலிலும் ஆட்டத்திலும், எப்போதும் இடைவிடாமல் நெஞ்சம் தெய்வ அருளைப்பற்றி நினைக்கவேண்டும். நோய் வந்தால், அதனைத் தீர்க்கும்படி தெய்வத்தைப் பணிய வேண்டும். செல்வம் வேண்டுமானால், தெய்வத்தினிடம் கேட்க வேண்டும். கல்வி, அறிவு, புகழ், ஆயுள் முதலிய எல்லா மங்களங்களையும் தெய்வத்தினிடம் உண்மையுடன் கேட்டால் அது கொடுக்கும். தெய்வம் கொடுக்கா விட்டாலும் அதை நம்பவேண்டும். கேட்டவுடனே கொடுப் பது தெய்வத்திற்கு வழக்கமில்லை. பக்தி பக்குவமடைந்த பிறகுதான் கேட்டவரம் உடனே கிடைக்கும். அதுவரை தாமஸங்கள் உண்டாகும். இது கர்மவிதி. 'அடுத்து முயன் றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா.' எனவே, நாம் தெய்வத்தினிடம் பயன் கைகூடுவதற்கு எத்தனை காலமானபோதிலும், அதைரியப்படாமல், தெய்வபக்தி யையும் அதனாலுண்டாகும் ஊக்கத்தையும், முயற்சியையும் துணையாகக்கொண்டு நடக்கவேண்டும். விதியின் முடிவுகளை தெய்வபக்தி வெல்லும். இந்த உலக முழுமைக்கும் ஈசனே தலைவன். அவனும் பக்தர்களுக்கு வசப்பட்டவன். பக்தன் எது கேட்டாலும் கைகூடும். நம்பு; கேள். ஓயாமல்

தொழில் செய்துகொண்டிரு. பயனுக்கு அவசரப்படாதே. தெய்வம் நிச்சயமாக வரம் கொடுக்கும். தெய்வம் பிரஹ்லாதனை ஹிரண்யனிடமிருந்து காத்தது. முதலை வாயிலிலிருந்து யானையை விடுவித்தது. பாஞ்சாலியின் மானத்தைக் காத்தது. தெய்வம் விக்கிரமாதித்யனுக்கும், காளிதாஸனுக்கும், சிவாஜி ராஜாவுக்கும், நிகரில்லாத வெற்றியும் தீராத புகழும் கொடுத்தது. இவ்விதமான தெய்வபக்தியை ராமாநுஜர் மனிதருடைய இஹபர வாழ்வுக்கு முதல் ஸ்தானமாகச் சொன்னார். ஆழ்வார்களுடைய பாட்டில் விடுதலையொளி நிற்பதுகண்டு, அவற்றை வேதம் போல் கருதவேண்டுமென்று போதனை செய்தார்.

ஆழ்வார்களுடைய குலம் நானாவிதம்; அப்படியிருந்தும் அவர்களைக் கோயிலில் வைத்துப் பூஜை செய்யலாமென்று ராமாநுஜர் நியமித்தார். முற்காலத்தில் பிராமணர் இதர ஜாதியாரை இழிவாகவைத்துக் கெடுத்தார்களென்றும், ஞானத்துக்குத் தகாதவரென்று சொல்லி அடிமைப்படுத்தினார்களென்றும் பொய்க்கதைகள் சொல்லி, ஹிந்து தர்மத்தை அழிக்க விரும்புகிற கிருஸ்துவப் பாதிரிகளும், அவ்விடத்து சிஷ்யர்களும் ராமாநுஜாசாரியர் பிராமணர் என்பதை அறிய மாட்டார் போலும். சூத்திரராகிய திருக்கச்சி நம்பியை ராமாநுஜர் குருவாகக்கொண்டு அவருடைய உச்சிஷ்டத்தை உண்ணத் திருவுளங் கொண்டார். திருநாராயணபுரத்தில், பறையர் ஒருசமயம் கோயிலுக்குள் வரலாமென்று ஸ்ரீ ராமாநுஜர் நியமித்தருளிய முறை இன்றைக்கும் நடந்துவருகிறது.

இப்படிப்பட்ட மனுஷ்யர்களுடைய தர்மத்தை இக்காலத்தில் வளரும்படி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் ஸ்ரீ. கண்ணன் செட்டியார் ஏற்படுத்தியிருக்கும்

கலாசாலையில், பிற மதங்களும் உண்மையென்ற சமரஸ ஞானத்தை ஊட்டத் தவறலாகாது. இந்த ஸமரஸ ஞானம் இல்லாவிட்டால் எந்த சித்தாந்தமும் நாளடைவில் பொய் யாகவும், குருட்டு நம்பிக்கையாகவும், வீண் அலங்கார மாகவும் முடிந்து ஜனங்களை மிருகங்களைப் போலாக்கிவிடும். வேத தர்மம் ஒன்று. அதில் ராமாநுஜர் தர்மம் ஒரு கிளை. பாஷ்ய விசாரணை நல்லது. உண்மையான பக்தியே அமிர்தம். எல்லா உயிர்களிடத்திலும் நாராயணன் விளங்கு வது கண்டு, அந்த ஞானத்தாலே கலியை வென்று தர்ம ஸ்தாபனம் செய்வதற்குள்ள பயிற்சி மேற்படி கண்ணன் செட்டியார் கலாசாலையிலும், அதுபோன்று எல்லாப் பாடசாலைகளிலும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்தால், தேசம் மறுபடி மேன்மையடையும். இது கைகூடும் வண்ணம் பராசக்தி அருள் செய்க.

## 9. இனி

[குறிப்பு : பாரதியார் இக் கட்டுரையிலே சில முக்கியமான கருத்துக்களைத் தெரிவிக்கிறார். "உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லோரும் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம்" என்கிறார். மேலும் அவர் சொல்லுகிறார், "கவனி! நல்ல பச்சைத் தமிழில் சொல்லுகிறேன். ஆணாகிய நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண்தெய்வம் எல்லாம், உனது தாய், மனைவி, சகோதரி, மகள் முதலிய பெண் களினிடத்தே வெளிப்படாமல் இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தியின் மகிமையைக்

குறிப்பிடுகின்றன. அம்மன் தாய்; அவளைப் போலவே நம்முடைய பெண்கள், மனைவி, சகோதரி, மாதா முதலியோர் ஒளிவீச நாம் பார்க்கவேண்டும் என்று தெளிவாகச் சொல்லுகிறார்.

ஆண்தெய்வமெல்லாம், நீ, உன் பிதா, உன் சகோதரர், உன் மகன், உன்னைச் சேர்ந்த ஆண் மக்கள் அடையவேண்டிய நிலைமையைக் குறிப்பிடுகின்றன.

சிவன் நீ; சக்தி உன் மனைவி.

விஷ்ணு நீ; லக்ஷ்மிஉன் மனைவி.

பிரம்மா நீ; ஸரஸ்வதி உன் மனைவி.

பெண்களுக்கு 'சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்று பாடியவர் இப்பொழுது அவர்களை தெய்வநிலைக்கு உயர்த்திவிட்டார் என்பதை கவனிக்க வேண்டும்.]

நடந்ததெல்லாம் போக; இனிமேல் நடக்கவேண்டிய காரியத்தை நாம் யோசனை செய்யவேண்டும்.

கோவில் குருக்களுக்கு இனி நம்முடைய தேசத்து ஜனங்கள் ஒத்து நடக்க வேண்டுமானால், ஜனங்களிடம் பூசாரிகள் எதையும் மறைக்காமல், எந்த விஷயத்திலும் ஜனங்களை ஏமாற்றாமல், விஷயத்தைச் சொல்லவேண்டும்.

'கடவுள் எங்கும் இருக்கிறாரே? எல்லாம் கடவுள் தானே? ஊருக்கு நடுவில் ஒரு கோவிலைக் கட்டி, அதில் ஒரு கல்லையோ செம்பையோ நட்டு, அங்கேதான் எல்லோரும் வந்து கும்பிட வேண்டும் என்ற நியமம் எதற்காக?' என்றால், ஜனங்களுக்குள் ஐக்யம் ஏற்படுவதற்காக,

கல்லில் மாத்திரம் தெய்வம் இருக்கிறதென்று நம்பி, நம்மைச் சூழ்ந்த ஜனங்களிடம் தெய்வம் இல்லையென்று நம்பலாமா?

கவனி! அண்ட பகிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளே இருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே நம்மைச் சூழும் அநந்த கோடி ஜீவராசிகளாக நின்று சலிக்கிறது.

இதுதான் வேதத்தின் கடைசியான கருத்து. 'தன்னிடத்தில் உலகத்தையும் உலகத்தினிடம் தன்னையும் எவன் காண்கிறானோ அவனே கண்ணுடையவன்' என்பது முன்னோர் கொள்கை.

உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை - எல்லோரும் ஒரே உயிர், அந்த உயிரே தெய்வம்.

ஒன்றுகூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்து, மனிதரின் மனங்கள் ஒருமைப்பட்டுத் தமக்குள் இருக்கும் ஆத்மவொருமையை அவர்கள் தெரிந்துகொள்ள இடமுண்டாகுமென்று கருதி முன்னோர் கோவில் வகுத்தார்கள்.

ஊரொற்றுமை கோவிலால் நிறைவேறும். வீட்டுக்குள் தனியாகச் சிலை வைத்துக் கும்பிடுவது குடும்ப ஒற்றுமை உண்டாகும் பொருட்டாக.

கவனி! நல்ல பச்சைத் தமிழில் சொல்லுகிறேன். ஆணாகிய நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண் தெய்வம் எல்லாம், உனது தாய், மனைவி, சகோதரி, மகள் முதலிய பெண்களினிடத்தே வெளிப்படாமல் இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தியின் மகிமையைக் குறிப்பிடுகின்றன. அம்மன் தாய்; அவளைப்போலவே நம்முடைய பெண்கள், மனைவி, சகோதரி, மாதா முதலியோர் ஒளி வீச, நாம் பார்க்கவேண்டும் என்பது குறிப்பு.

ஆண் தெய்வமெல்லாம், நீ, உன் பிதா, உன் சகோதரர், உன் மகன், உன்னைச் சேர்ந்த ஆண் மக்கள் அடைய வேண்டிய நிலைமையைக் குறிப்பிடுகின்றன.

சிவன் நீ; சக்தி உன் மனைவி.

விஷ்ணு நீ; லக்ஷ்மி உன் மனைவி.

பிரம்மா நீ; ஸரஸ்வதி உன் மனைவி.

இதைக் காட்டி மிருக நிலையிலிருந்து மனிதரை தேவ நிலையிற் கொண்டு சேர்க்கும் பொருட்டாக ஏற்பட்ட தேவப் பள்ளிக்கூடங்களே கோயில்களாம்.

இதைப் பூசாரிகள் மறைக்கிறார்கள்.

கும்பிடுவோர் நித்ய அடிமைகளாகவும், தெய்வாம்சம் உடையோர் தாமாகவும் இருந்தால் நல்லதென்று பூசாரி யோசனை பண்ணுகிறான். பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்புவோரிடம் தெய்வாம்சம் ஏற்படாது.

அப்படியிருக்கப் பல பூசாரிகள் தம்மிடம் தெய்வாம்சம் இருப்பதுபோலே நடித்து ஜனங்களை வஞ்சனை செய்து பணம் பிடுங்குகிறார்கள்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள். எத்தனை காலம் ஒரு மோசக்கார மனிதனை மூடி வைத்து அவனிடம் தெய்வங் காட்ட முடியும்? ஆகையால் இந்தப் பூசாரிகளுடைய சாயம் சீக்கிரம் வெளுத்துப் போகிறது. ஜனங்கள் பூசாரிகளை அவமதிப்பாக நடத்தி பழைய மாமூலை உத்தேசித்துக் கல்லை மாத்திரம் கும்பிடுகிறார்கள். அப்படிப்பட்ட கல் வரம் கொடுக்கவே கொடுக்காது. எப்படி சாதாரணமாக ஒரு கல்லில் நல்ல சாதுக்கள் பக்தியுடன் மந்திரம் ஜபித்துக் கும்பிட்ட மாத்திரத்தில் பகவான் நேரே வந்து நர்த்தனம் பண்ணுவாரோ, அதுபோல் யோக்யதையில்லாத பூசாரி தொட்ட மாத்திரத்தில்

பகவான் அந்தக் கல்லேவிட்டுப் போய்விடுவார். அது மறுபடி சாதாரண ரஸ்தா உருளே ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்துவிடும்.

கோவிலுக்குப் போனாலும் சரி; போகாவிட்டாலும் சரி; தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி; கும்பிடா விட்டாலும் சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால், தெய்வம் அருள் புரியும். துளிகூட, ஒரு அணுக்கூட, மற்றவர்களே ஏமாற்றுவதே கிடையாதென்று ஒருவன் பரி பூரண சித்தி அடைவானாகில், அவனே ஈசுவரன். குருவி, காக்கை, புழு, எறும்பு, ஒரு ஜந்துவுக்கும் வஞ்சனே பண்ணக்கூடாது. வஞ்சனேயில்லாமல் "ஏதோ உலகத்திற் பிறந்தோம். தெய்வம் விட்டதே வழி" என்று ஆற்றின் மீது மிதந்து செல்லும் கட்டைபோல் உலக வெள்ளத்தில் மிதந்து செல்லவேண்டும். அங்ஙனம் முற்றிலும் பராதீனனாய் எவன் ஈசுவரன்மீது ஸகல பாரத்தையும் போட்டுவிட்டு நடக்கிறானே, அவனுக்கு தெய்வத்தன்மை உண்டாகும். இதில் ஸந்தேஹமே கிடையாது.

பலஹீன ஜந்துக்களுக்கு மனிதன் எதுவரை அநியாயம் செய்கிறானே அதுவரை கலியுகம் இருக்கும். அநியாயம் நீங்கினால் கலியில்லே. உலகம் முழுதும் கலியில்லே. "உலகம் முழுதும் அநியாயத்தை விட்டு சமீப காலத்தில் நீங்குமென்று நினேக்க ஏதுவில்லேயாதலால் கிருதயுகம் வரப் போவதில்லே. நாம் மாத்திரம் ஏன் நியாயம் செய்யவேண்டும்?" என்று விபரீதமாக யோசித்து, எவனும் தான் நடக்கும் அநியாய வழியிலே தொடர்ந்து செல்லக்கூடாது. எவன் அநியாயத்தை விடுகிறானே, அவனுக்குக் கிருதயுகம் அந்த க்ஷணமே கைமேலே கிடைக்கும். இதில் ஸந்தேஹமில்லே.

ஒருவன் கலியை உடைத்து நொறுக்கினால், அவனேப் பார்த்துப் பத்துப்பேர் உடனே நொறுக்கி விடுவார்கள்.

இங்ஙனம் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லக்ஷம், கோடியாக, மனித ஜாதியில் ஸத்யயுகம் பரவுதலடையும் காலம் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. இதில் ஸந்தேஹம் இல்லை.

## 10. வேத ரிஷிகளின் கவிதை
(முடிவுரை)

[குறிப்பு : வேதகாலத்தில் கோவில் கிடையாது; கோவிலும் மடமும் பௌத்தமதப் பழக்கத்தால் ஏற்பட்டதென்றும் கட்சி பேதங்கள் இல்லையென்றும் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் பாரதியார். புதுச்சேரியில் புயற்காற்று அடித்தபோது உலகமே அழிந்து போகும்படியாக பூமி நடுங்கிற்றும். ஆனால், பாரதியார் இதைப்பற்றிக் கவலைப்படவேயில்லை. இந்த சம்பவத்தை நினைட்வுடுவது இக்கட்டுரை.]

வேத ரிஷிகள் காலத்தில் கோவில் கிடையாது; விக்ரஹாராதனை கிடையாது; ஸந்யாஸம் கிடையாது. அத்வைத த்வைத விசிஷ்டா த்வைதப் பிரிவுகள் கிடையா; பக்தி மாத்திரந் தானுண்டு.

கோவிலும் மடமும் பௌத்தமதப் பழக்கத்தால் வெளி நாடுகளிலிருந்து நமக்குக் கிடைத்த பேறுகளென்று சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். ஆனால், இப்போது ஹிந்துமதப் பயிற்சிகளுள்ளே கோவிலும் சிலையும் நெடுந்தூரம் ஆழ்ந்து போய்விட்டன. ஆதலால், இப்போது ஹிந்து மதத்திலிருந்து கோவிலைப் பிரிக்க முடியாது. கோவில்களுக்குள்ளே பரஸ்பரம் பொறாமையும், சண்டையுமில்லாதபடி எல்லாக் கோவில்களும் ஸாக்ஷாத் ஸவிதாவாகவும், அக்னி குமாரனாகவும், ருத்ரனாகவும், இந்த்ர

ஞகவும், வாயுவாகவும், விஷ்ணுவாகவும், வருணனுகவும் விளங்குகிற பரமாத்மாவின் கோவில்களென்றும், கோயில் களுக்குள்ளே கக்ஷி பேதங்கள் கிடையாவென்றும் பண்டித பாமரர்கள் நன்ருகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

ப்ரக்ருதி இயற்கைத் தோற்றம்; காணப்படுகிற உலகம் விஷ்ணுவுடைய சரீரம். இதற்குள்ளே வ்யாபித்து நிற்கும் ஆத்மாவே விஷ்ணு. விஷ்ணுவைச் சிலையிலும் வணங் கலாம், மலையிலும் வணங்கலாம், தூணிலும் துரும்பிலும் வணங்கலாம். சிலைகளிலே வணங்குதல் ஒரு வகை யோகம். வேதரிஷிகள் இந்த விஷ்ணுவை, இந்த்ரனை, ஸூர்யனை, ருத்ரனை நேராகக் கண்டு வணங்கினுர்கள். உலகமே இவனுடைய உடம்பாதலால் அவர்கள் உலகத்தை வணங் கினர். அறிவுக்குள்ளே வானமும் ஸூர்யனுமிருப்பது போலே வெளியுலகத்திலும் இருக்கின்றன. உள்ளும் புறமும் ஒன்று.

மற்ருெரு முறை விளங்கச் சொல்லுகிறேன். புயற் காற்றடித்தது. வேத ரிஷிகள் அதன் முன்னே போய் நின்ருர்கள். ஆயிர மின்னல்கள் வாள்போலே வீசின. உலகம் குலுங்கிற்று. அண்டங்கள் இடிவது போலே சத்தம் கேட்டது. மேற்படி ரிஷிகள் பயப்படவில்லை. மந்திரங்களைப் பாடினுர்கள். ருத்ரனுடைய உடம்பு தானே உலகம்? வாயுவே ருத்ரன். வாயுவினுடைய உடற் செய்கை தானே புயற்காற்று? இந்திரன் மின்னலையும் இடி யையும் காட்டுகிருன். மேகங்கள் சிதறுகின்றன. பூமிக்குத் தண்ணீர் கிடைக்கிறது. இதில் பயத்துக் கிட மெங்கே? ரிஷி புயற்காற்றைத் துதிக்கிருர். பிறகு, இரவு நீங்கி ஸூர்யோதயம் உண்டாகிறது; ஒளி தோன்றுகிறது. அதைப் பார்த்து நேரே கைகூப்பி ரிஷி மந்திரம் பாடுகிருர். பக்ஷிகள் பாடுகின்றன. பூக்கள் மலர்கின்றன. நீரும் காற்றும் சிரிக்கின்றன. இஃதத்தனையும் இயற்கை

தெய்வத்தின் காட்சி. இதை ரிஷி போற்றும்போது ப்ரத்யக்ஷ நாராயணனைப் போற்றுகிறார்.

வீட்டிலே நெருப்பு வளர்த்து அதிலே தெய்வத்தைக் கண்டு தொழும் வழக்கம் அக்காலத்தில் மிகுதிப்பட்டது. பொதுவாக இயற்கை வணக்கம் வழக்கமில்லாமல் போன பிறகும் அக்நி பூஜையும், ஸூர்ய பூஜையும் இன்றுவரை நமக்குள்ளே மிஞ்சி நிற்கின்றன. ஸந்த்யா வந்தனாதிகளில் ஸூர்ய பூஜை நியதமாக நடந்துவருகிறது. ஸர்வ வைதிக கிரியைகளும் ஹோமம் வளர்த்துப் பூஜை பண்ணாமல் நடப்பதில்லை.

ப்ரக்ருதியை நேரே தொழும் வழக்கம் மிகுதிப் பட்டால் வேதம் ஒளிபெறும்.

சரணாகதியே வழி.

வேதரிஷிகள் வேறு வழி காட்டியதாக ஸம்ஹிதை களிலே தெரியவில்லை.

குருவுக்கு மரியாதை செய்யவேண்டு மென்றும், பரமாத்மா ஒருவனுக்கே சரணாகதி தகுமென்றும் என்னுடைய அபிப்ராயம்.

மனத்தைக் கட்டி ஆளுவதற்கு மந்திரத்தை உச்சரிப் பதே வழி. மந்திரத்தின் ஒலியைத் தியானம் செய்வதில் பயன் கிடைக்குமென்று தோன்றவில்லை. அதன் பொருளைத் தியானிக்கவேண்டும். பின்வரும் பாட்டில் பரம்பொரு ளாகிய நாராயணனுக்கு சக்தி நாமம் வழங்கப்படுகிறது.

பாட்டு[1]

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்,

---

1. 'தனத தனத தனத தனத தனத தனத தாம்.
என்று தாளம் போட்டுக்கொண்டு, மேற்படி பாட்டை இஷ்டமான ராகத்தில் பாடலாம்.

பஞ்சுக்கு நேர்பல துன்பங்க ளாமிவள்
    பார்வைக்கு நேர் பெருந் தீ,
வஞ்சக மின்றிப் பகையின்றிச் சூதின்றி
    வையக மாந்த ரெல்லாம்
தஞ்சமென் றேயுரைப்பீர்; அவள் பேர், சக்தி
    ஓம், சக்தி ஓம், சக்தி ஓம். (1)

நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
    நலத்தை நமக்கிழைப்பாள்;
அல்லது நீங்குமென்றே யுலகேழும்
    அறைந்திடு வாய் முரசே!
சொல்லத் தகுந்த பொருளன்று காணிங்கு
    சொல்லு மவர் தமையே
அல்லல் கெடுத் தமரர்க்கிணை யாக்கிடும்
    ஓம், சக்தி ஓம், சக்தி ஓம். (2)

நம்புவ தேவழி யென்ற மறைதன்னை
    நாமின்று நம்பிவிட்டோம்;
கும்பிட்டெந் நேரமும் சக்தியென்றுலனைக்
    கும்பிடுவேன் மனமே!
அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
    அச்சமில்லாத படி
உம்பர்க்கு மிம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
    ஓம், சக்தி ஓம், சக்தி ஓம். (3)

பொன்னைப் பொழிந்திடு, மின்னை வளர்த்திடு,
    போற்றி யுனக்கிசைத்தோம்;
அன்னை பராசக்தி யென்றுரைத் தோம்; தளை
    யத்தனையுங் களைத்தோம்;
சொன்னபடிக்கு நடந்திடுவாய்,
    மனமே தொழில் வேறில்லைக ாண்;
இன்னும தேயுரைப் போம், சக்தி ஓம், சக்தி
    ஓம், சக்தி ஓம், சக்தி ஓம். (4)

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாகி விளங்கிடு வாய்,
தெள்ளு கலைத் தமிழ் வாணி, யுனக்கொரு,
விண்ணப்பஞ் செய்திடுவேன்;
எள்ளத்தனை பொழுதும் பயனின்றி
யிரா தென்ற னுவினிலே
வெள்ள மெனப் பொழிவாய், சக்தி வேல், சக்தி
வேல், சக்தி வேல், சக்தி வேல்! (5)

## 11. முதற்கிளை இன்பம்

[குறிப்பு : 'இவ்வுலகமே மாயை' என்பதைப் பாரதியார் ஒப்புக்கொள்வதில்லை. "உலகம் பொய்; அது மாயை; அது பந்தம்; அது துன்பம்; அது விபத்து; அதைவிட்டுத் தீர வேண்டும். இந்த வார்த்தைதான் எங்கே பார்த்தாலும் அடிபடு கிறது. ஒரு தேசத்திலே படித்தவர்கள், அறிவுடை யோர், சாஸ்திரக்காரர் எல்லோரும் ஒரே மொத்த மாக இப்படிக் கூச்சலிட்டால், அங்கே லௌகிக காரியங்கள் வளர்ந்தேறுமா? மனம்போல வாழ்க் கையன்றோ?

பூர்வ மதாசார்யர் 'பாரமார்த்திக' மாகச் சொல்லிப்போன வார்த்தைகளை நாம் ஓயாமல் லௌகிகத்திலே சொல்லிக் கொண்டிருப்பது சரியா? வெகுஜனவாக்கு நமது தேசத்தில் பலித்துப்போய் விடாதோ? இகலோகம் துன்ப மென்று நம்பினல், அது துன்பமாகத்தான் முடியும். இந்த உலகம் இன்பம். இதிலுள்ள

தொழில், வியாபாரம், படிப்பு, கேள்வி, வீடு, மனைவி, மக்கள் எல்லாவற்றிலும் ஈசன் அளவிறந்த இன்பத்தைக் கொட்டி வைத்திருக்கிறான். விதிப்படி நடப்போர் இந்த ஸௌகங்களை நன்றாக அனுபவிக்கிறார்கள். ஈசனுடைய விதி தவறும் கூட்டத்தார் துன்பமடைகிறார்கள்" ('தராசு' என்ற நூலில் இருந்து எடுத்து எழுதப்பட்டது.)

"தீ, குளிர்காய்ந்தால் இன்பம், இதன் தாக்குதல் இன்பம்; காற்று இதைத் தீண்டினால் இன்பம்; உயிர்களுடனே பழகினால் இன்பம்....... இவ்வுலகத்தில் உண்ணுதல் இன்பம்; உழைத்தல் இன்பம், உறங்கல் இன்பம்; ஆடுதல் இன்பம், கற்றல், கேட்டல், பாடுதல், எண்ணுதல், அறிதல் ...... எல்லாம் இன்பம்தான்", என்று, 'அமிர்தம் தேடுதல்' என்ற கட்டுரையிலே எழுதியிருக்கிறார். இதைப் பல இடங்களிலே சொல்லி இருக்கின்றார். என்றாலும், இதற்காகவே ஒரு தனிக்கட்டுரையும் வரைந்திருக்கிறார். இதைக் கட்டுரை என்று கூறுவதைவிட, வசன கவிதையும் உரை நடையும் கலந்தது என்றுங் கூறலாம்.]

## 1

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமையுடைத்து; காற்றும் இனிது.

தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.

ஞாயிறு நன்று; திங்களும் நன்று.

வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.

மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.

**கடல் இனிது. மலை இனிது. காடு இனிது.**
**ஆறுகள் இனியன.**
**உலோகமும், மரமும், செடியும், கொடியும்,**
**மலரும் காயும், கனியும் இனியன. பறவைகள் இனியன.**

மெய்யகத்தே சட வஸ்துவில்லை!
மண்ணும் கல்லும் சடமில்லை!
மெய்யுரைப்பேன் பேய் மனமே!
மேலும் கீழும் பயமில்லை!— (1)

பையப் பையத் தேரடா!
படையும் விஷமுங் களவடா!
பொய்யு மெய்யுஞ் சிவனடா!
பூமண்டலத்தே பயமில்லை!— (2)

சாவு நோவுஞ் சிவனடா!
சண்டையும் வாளுஞ் சிவனடா!
பாவியு மேழையும் பாம்பும் பசுவும்
பண்ணுந் தானமுந் தெய்வமடா; (3)

எங்குஞ் சிவனைக் காணடா!
ஈனப் பயத்தைத் துரத்தடா!
சங்கைச் சடையா, காலன் கூற்றே
காமன் பகையே வாழ்க நீ!— (4)

பாமுந் தெய்வம் பதியுந் தெய்வம்
பாலை வனமுங் கடலுந் தெய்வம்
ஏழு புவியும் தெய்வம் தெய்வம்
எங்குந் தெய்வம் எதுவுந் தெய்வம். (5)

வையத்தே சடமில்லை,
மண்ணுங் கல்லுந் தெய்வம்
மெய்யுரைப்பேன் பாழ் மனமே
மேலுங் கீழும் பயமில்லை!—" (6)

இந்தக் கண்ணிகள் அந்தப் பண்டாரங்கள் பாதி யிரவில் பாடுவதை அந்த சமசானத்தில் பாடக் கேட்ட போது எனக்கு மயிர்ச் சிலிர்ப்புண்டாயிற்று. அப்போது தலைமைப் பரதேசி என்னை நோக்கிச் சொல்லுகிறான் :— "காளிதாஸா! அடே! அந்தப் பெண்கள் தீவட்டி வைத்துக் கொண்டு பாட்டுப் பாடி ஆட்டமாடிப் போயினரே' அவர்கள் யார், நீ அறிவாயா!" என்றான்.

"அறியேன், அவர்கள் யார் சொல்லு" என்றேன். "அவர்கள் அத்தனை பேரும் பேய்கள். இங்கு மாறுவேஷம் பூண்டு, உனக்கு வேடிக்கை காட்டும் பொருட்டுத் தருவித் தேன்" என்றான்.

"நீ யார்?" என்று கேட்டேன்.

"நான் இந்தச் சுடுகாட்டிலுள்ள பேய்களுக்கெல்லாம் தலைவன்" என்றான்.

## 12. தியானங்களும் மந்திரங்களும்

[குறிப்பு : பாரதியாருக்கு தியானத்திலும், மந்திரங்களிலும் மிகுந்த நம்பிக்கை உண்டு. நான் ஸுகம்; நானே பலம்; நான் சக்தி; எனக்குச் சாவு கிடையாது என்று சொல்லிக் கொள்வதில் கவிஞர் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். உலகியலின்படி பார்த்தாலும் இதற்கு ஆதாரம் இருக்கின்றது. நான் சக்தியற்றவன்; என்னால் இது முடியாது என்று சொல்லிக்கொள்வதைவிட, நான் சக்தி மிகுந்தவன்; என்னால் முடியும் என்று சொல்லிக் கொள்வதில் அதிக நன்மை உண்டு.

இதை ஆங்கிலத்தில் 'தன் கருத்தேற்றம்'— 'auto suggestion' என்பார்கள். மந்திரங்கள் இப்படித்தான் வலிமை பெறுகின்றன.

பாரதியாரே பல நாள் மௌனவிரதம் இருந்து, மந்திரச்சொல்லை கண்டுபிடிக்க வேண்டு மென்று மிகவும் முயன்றாராம். இந்தச் செய்தி திருமதி. யதுகிரி அம்மாள் அவர்கள் எழுதிய 'பாரதி நினைவுகள்' என்ற சுவைவாய்ந்த நூலில் காணப்படுகின்றது.

"ஜெயமுண்டு பயமில்லை, ஜெயபேரிகை கொட்டடா.
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்.
வந்தே மாதரம் என்போம்."

போன்ற வலிமை வாய்ந்த மந்திரச் சொற்களை உண்டாக்கியவர் பாரதியார். ஓம் என்பது பிரணவமந்திரம் என்பது எல்லார்க்கும் தெரியும். மிக்க சக்தி வாய்ந்தது. அதைப்போல ஒரு சொல் உண்டாக்க வேண்டுமென்று மௌனவிரதம் இருந்து முயன்று பார்த்தாராம் பாரதியார்.

அவர் கவிதைக்கு எவ்வளவு தூரம் வலிமை இருக்கின்றது, எவ்வளவு தூரம் தமிழ் மக்கள் உணர்ச்சி வசப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளும் முன்னரே அமரராகிவிட்டார் என்பது மிகவும் வருந்தத்தக்கது.]

### விடுதலைக்கு வழி

என் அறிவில் தெய்வத் தன்மை காணப்படுகிறது. நான் ஒரு தேவனைப்போலே சிந்தனை செய்யவல்லேன்.

இனி என் செய்கைகளிலும் தெய்வத்தன்மை விளங்குதற்குரிய வழி செய்யவேண்டும்.

நான் இவ்வுலகத்துப் பொருள்களின்மீது பேரவாக் கொள்வதில்லை. நான் இவ்வுலகத்தின் நாதன். இதற்கு நான் அடிமையில்லை. என் கையில் இயற்கை கொணர்ந்து தரும் பொருள்களைக்கொண்டு நான் திருப்தி எய்தக் கடவேன்.

நான் வேண்டிக் கரையத்தக்கது யாது? அதிகாரத்தை வேண்டி வருந்துவேனா? ருஷிய ஜார் சக்கரவர்த்தி வரம்பற்ற அதிகாரம் படைத்திருந்தான். அதினின்றும் என்ன பயனைக் கண்டான்? அன்றி, நான் செல்வத்தை வேண்டி அழுங்குவேனா? செல்வம் என்ன பயன் தரும்? நோவின்றிக் காக்குமோ? அன்று; நோவுகளை விளைக்கும்; பகையின்றிக் காக்குமா? அன்று; பகையைப் பெருக்கும்; கவலைகளும் அச்சங்களும் இன்றிக் காக்குமா? அன்று; அவற்றை மிகுதிப்படுத்தும். மரணமின்றிக் காக்குமா? காக்காது. எனில், அதனை வேண்டி அழுங்குதல் பெரும் பேதைமையன்றோ?

இரப்போன் தன்னைத்தான் விலைபடுத்திக் கொள்கிறான். பசுவுக்குத் தண்ணீர் வேண்டும் என்றுகூடப் பிறரிடம் யாசித்தல் பெரிய அவமானம் என்று திருவள்ளுவர் சொல்லுகிறார். நான் எவரிடத்தும் ஒரு பொருள் வேண்டுமென்று கேட்கமாட்டேன். கடவுள் தன் அருளால் கொடுப்பவற்றை ஏற்று மகிழ்வேன்.

## ஆரோக்கிய ஸம்பந்தமான மந்திரங்கள்

நான் நோயற்றேன். நான் வலிமையுடையேன். என் உடம்பின் உறுப்புக்கள் என் தெய்வ வலிமையைப் பெற்றுக்கொண்டு விட்டன. அவை திறனுடையன;

இலாகவமுடையன; இன்பந் தரித்தன; மிக எளிதில் இயங்குவன; மஹாசக்தியின் வீடுகளாயின. என் உடம்பில் நோயின் வேகமே கிடையாது. நான் நோய்களையெல்லாம் புறத்தே வீசியெறிந்துவிட்டேன். நான் ஸுகம்; நானே பலம்; நான் சக்தி. பொய் பலஹீன முடையது; நான் ஸத்யம்; நான் கடவுள்; நான் ஆற்றல்; நான் வலிமை யின்றி நோயுறல் யாங்ஙன மியலும்?

ஆஹா! வலிமையும், நோயின்மையும், ஆற்றலுமிருப் பதால் எனக்கு விளையுமின்பத்தை என்னென்றுரைப்பேன்? தேவத்தன்மையால் நான் எய்தும் ஆனந்தத்தை ஏதென்று சொல்வேன்? நான் தேவன்; நான் தேவன்; நான் தேவன்.

என் தலை, என் விழிகள், எனது நாசி, என் வாய், என் செவிகள், என் கழுத்து, மார்பு, வயிறு, கைகள், இடை, கால்கள்—இவையெல்லாம் முற்றிலும் ஆரோக்கிய முடையன; நோயற்றன; நோயுறத்தகாதன; எக்காலும் நோயுற மாட்டா.

என் மனம் ஆரோக்கியமே வடிவுகொண்டது. என் மனமும், ஹ்ருதயமும் எவ்வித நோய்ப் பூச்சிகளாலும் தாக்கப்படாதன.

நோய்களையும் அசுத்தங்களையும் நான் அறவே எறிந்து விட்டேன். அவை மீண்டு வராதபடி அவற்றைச் சூன்யத் திற்குள்ளே வீழ்த்தி விட்டேன்.

நானே ஆரோக்கியம். நான் தேவன்.

### அமரத் தன்மையைக் குறித்த மந்திரங்கள்

**நான்** அமரன். எனக்குச் சாவு கிடையாது. நாழிகைகள் கழிக. நாட்கள் ஒழிக. பருவங்கள் மாறுக. ஆண்டுகள் செல்க. நான் மாறுபட மாட்டேன், நான்

எக்காலமும் உறுதியாகவும் ஸ்திரமாகவும் இருப்பேன். என்றும் உயிர்வாழ்வேன். எப்போதும் ஸத்யமாவேன். எப்போதும் களித்திருப்பேன். இதை யெல்லாம் நான் தேர்ந்துகொண்டேன். இஃதெல்லாம் உண்மையென்று அறிவேன்.

நான் கடவுள், ஆதலால் சாகமாட்டேன். தெய்வம் என்னுள் எப்போதும் வந்து பொழிந்து கொண்டிருக்கும் படி என்னைத் திறந்து வைத்திருக்கிறேன்.

## 13. பாரத தேசத்தில் ஒவ்வொருவனும் செய்வதற்குரிய தியானம்

[குறிப்பு : "தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்க வேண்டாம்" என்று எடுத்த எடுப்பி லேயே முதலடியைத் தொடங்குகிறார் பாரதியார். "பாரத தேசத்தில் ஒவ்வொருவனுக்கும் தற்காலத்தில் நல்ல தியானம் இன்றியமையாதது. சோற்றை விட்டாலும், ஒரு தனியிடத்தே போயிருந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக்கூடிய சிந்தனைகள், பலம் தரக்கூடிய சிந்தனைகள், துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள்—இவற்றால் அறிவை நிரப்பிக் கொண்டு தியானம் செய்வதை ஒரு நாளேனும் தவறவிடாதே" என்று எச்சரிக்கிறார் பாரதியார்.

பக்தி என்ற ஒரு அழகான கவிதையை இயற்றியிருக்கிறார். பக்தியினால் விளையக்கூடிய நன்மை எவை என்றும் அதிலே குறிப்பிடுகின்றார். இக்கட்டுரை ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும்.]

தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்கவேண்டாம். மனிதன் தான் விரும்புகிறபடியே ஆகிறான். இதைக் காரணங்கள் காட்டி ருஜுப்படுத்த வேண்டுமானால், அது ஒரு பத்திரிகைக் குறிப்பின் அளவுக்குள் முடிவுபெற மாட்டாது. ஆனால், அநுபவத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

ஒருவன் மனத்தில் நிமிஷத்துக்கு நிமிஷம் தோன்றி மறையும் தோற்றங்களெல்லாம் தியானமாக மாட்டா. புதர்க்கூட்டத்திலே தீப்பிடித்தாற்போல மனத்திலுள்ள மற்றக் கவலைகளையும் எண்ணங்களையும் எரிக்கும் ஒரே ஜோதியாக விளங்கும் பெரிய விருப்பத்தைத் தியான மென்று கூறுகிறோம். உள்ளத்தில் இவ்வித அக்னி ஒன்று வைத்துக் கொண்டிருப்போமானால், உலகத்துக் காரியாதிகளெல்லாம் நமது உள்ள நிலைக்கு இணங்கிய வாறே மாறுபடுகின்றன.

சுவாமிகள் ஆத்ம நாசத்திற்கு இடமான ஒரு வகை இன்பத்தையே தியானமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உலகத்திலுள்ள மெய்யான இன்பத்தை யெல்லாம் நுகர்ந்து, தமக்கும் பிறர்க்கும் நிலைத்த பயன்கள் விளைவதற்குரிய நற்காரியங்கள் செய்து, உள்ளத்திலுள்ள குழப்பங்களும் துன்பங்களும் நீங்கி, ஸந்தோஷமும் புகழும் பெற வேண்டுமென்ற இச்சை உடையவர்கள், தமது இச்சையை நிறைவேற்றிக்கொள்வது அசாத்தியமன்று. அது இவ்வுலகத்திலேயே இந்த ஜன்மத்திலேயே சாத்தியமாகும்.

அஃதெப்படி என்றால், தமது உள்ளத்திலே தீரத் தன்மை, அமைதி, பலம், தேஜஸ், சக்தி, அருள், பக்தி, சிரத்தை இந்த எண்ணங்களையே நிரப்பவேண்டும்.

'இவற்றை யெல்லாம் நான் எனது உடமையாக்கிக்கொள்வேன். இவற்றுக்கு எதிர்மறையான சிந்தனைகள்

எனது அறிவினுள்ளே நுழைய இடங்கொடுக்க மாட்டேன்' என்று ஒவ்வொருவனும் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

'தனது உள்ளத்தில் இன்ன இன்ன எண்ணங்களைத் தான் வளரவிடவேண்டும்; இன்ன இன்ன எண்ணங்களை வளரவிடக்கூடாது' என்று நிச்சயிக்கும் அதிகாரம்—திறமை ஒவ்வொருவனுக்குமியற்கையிலேயே ஏற்பட்டிருக்கின்றது. இதை அநுபவத்துக்குக் கொண்டுவரும் போது ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் உண்டாகும். உன்னை எதிர்த்துச் சில விகாரமான சிந்தனைகள் அறிவிற்குள் வந்து நுழைந்து கொண்டு, 'வெளியே பிடித்துத் தள்ளினாலும் போகமாட்டோம்' என்று பிடிவாதஞ் செய்யும். அங்ஙனம் சிறுமைக்கு உரிய எண்ணங்கள் உன் அறிவில் புகுந்துகொண்டு தொல்லைப்படுத்துமானால், நீ அவற்றை வெளியே தள்ளுவதில் நேராக வேலை செய்ய வேண்டாம். நீ அதைத் தள்ளத் தள்ள, அது அங்கே தான் இருக்கும். அதற்கு யுக்தி வேறு. நீ அந்த எண்ணத்திற்கு நேர்மாறான வேறொரு நல்ல சிந்தனையில் அறிவு செலுத்துக. அப்போது அந்த நல்ல சிந்தனை வந்து அறிவில் இருந்துகொள்ளும். உன்னைத் தொல்லைப் படுத்திய குட்டிச்சாத்தான் தானாகவே ஓடிப்போய்விடும். தெய்வபக்தி உள்ளவர்களாயினும், நாஸ்திகர்களாயினும், எந்த மார்க்கஸ்தர்களாக இருந்தாலும், ஒரு மார்க்கத்தையும் சேராதவர்களாக இருந்தாலும், அவர்களுக்குத் தியானம் அவசியம். பாரத தேசத்தில் ஒவ்வொருவனுக்கும் தற்காலத்தில் நல்ல தியானம் உணவைக் காட்டிலும் இன்றியமையாதது. சோற்றை விட்டாலும் விடு; ஒரு தனியிடத்தே போயிருந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக்கூடிய சிந்தனைகள், பலம் தரக்கூடிய சிந்தனைகள், துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள் இவற்றால்

அறிவை நிரப்பிக்கொண்டு தியானம் செய்வதை ஒரு நாளேனும் தவறவிடாதே. தெய்வ பக்தியுடையவர்கள் இஷ்ட தெய்வத்தை அறிவில் நிறுத்தி, அதனிடம் மிகுந்த தாகத்துடனும் உண்மையுடனும் மேற்கூறியவாறு பெருமைகள் உண்டாக்குமாறு ப்ரார்த்தனை செய்ய வேண்டும். வாயினால் பழங்கதை ஒன்றை முணுமுணுப்பது அதிகப் பயன் தரமாட்டாது. உன்னுடைய உள்ளுயிரிலிருந்து அந்தப் பிரார்த்தனை வெளியேறவேண்டும். நீயாக உனது சொந்தக் கருத்துடன், சொந்த வசனங்களில் உயிர்கலந்து தியானம் செய்வதே பயன்படும். நாஸ்திகர்கூட, இஷ்ட தெய்வம் இல்லாவிட்டாலும் வெறுமே தியானம் செய்வது நன்று. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்பது குறள்.

பரிபூர்ண விருப்பத்துடன் தியானம் செய். சோர்வும் அதைரியமும் விளைவிக்கத்தக்க எண்ணங்களுக்கு இடம் கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருவதுபோல, உனக்குள்ளிலிருந்து தெளிந்த அறிவும், தீரத்தன்மையும், சக்தியும் மேன்மேலும் பொங்கிவரும். உன் இஷ்டசித்திகளெல்லாம் நிறைவேறும். இது சத்தியம்; அநுபவத்திலே பார்.

## 14. மூட பக்தி

[குறிப்பு : பாரதியார் இதிலே நகைச் சுவை ததும்பக் கூறியிருக்கிறார். ஆங்கிலப்படிப்பு ஒரு பயனும் அளிப்பதில்லை என்பதை மீண்டும் சாடுகின்றார். "பேச்சுக்கும் செய்கைக்கும் இடையே லக்ஷம் யோசனை தூரமாக நடப்பவர்களுக்கு

திருஷ்டாந்தம் காட்டப் புகுமிடத்தே, நமது நாட்டில் 'இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் தேறி வரும் மனிதரைப்போல் இத்தனை சிறந்த திருஷ்டாந்தம் வேறெங்கும் கிடைப்பது மிகவும் துர்லபமென்று தோன்றுகிறது" என்று எள்ளி நகையாடுகின்றார்.]

நம்முடைய ஜனங்களுக்கிடையே இந்த நிமிஷம் வரை நடைபெறும் மூட பக்திகளுக்குக் கணக்கு வழக்கே கிடையாது. இதனால் நம்மவர்களின் காரியங்களுக்கும் விவஹாரங்களுக்கும் ஏற்படும் விக்கினங்களுக்கு எல்லை இல்லை.

இந்த மூட பக்திகளிலே மிகவும் தொல்லையான அம்சம் யாதெனில், எல்லாச் செய்கைகளுக்கும் நாள், நக்ஷத்திரம், லக்னம் முதலியன பார்த்தல். க்ஷவரம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்றால், அதற்குக்கூட நம்மவர் மாஸப்பொருத்தம், பக்ஷப்பொருத்தம், திதிப் பொருத்தம், நாட் பொருத்தம் இத்தனையும் பார்த்தாக வேண்டியிருக்கிறது. க்ஷவரத்துக்குக்கூட இப்படியென்றால், இனிக் கலியாணங்கள், சடங்குகள், வியாபாரங்கள், யாத்திரைகள், விவசாய ஆரம்பங்கள் முதலிய முக்கிய காரியங்கள் பல்லாயிரத்தின் விஷயத்திலே நம்மவர் மேற்படி பொருத்தங்கள் பார்ப்பதில் செலவிடும் கால விரயத்துக்கும் பொருள் விரயத்துக்கும் வரம்பே கிடையாது. சகுனம் பார்க்கும் வழக்கமும் காரியங்களுக்குப் பெருந் தடையாக வந்து மூண்டிருக்கிறது. இதில் நேரும் நேர அழிவுகளும், அவற்றால் பொருள் அழிவுகளும் எவ்வளவு உண்டாகின்றன என்பதை நம்மவர் கவனிப்பதே கிடையாது. சகுனம் பார்ப்பதனால் காரிய நஷ்டம் மாத்திரம் உண்டாகிறது. நாட்பொருத்தம், லக்னப் பொருத்தம்

முதலியன பார்க்குமிடத்தே, காரிய நஷ்டம் மட்டுமன்றி, மேற்படி லக்னம் முதலியன பார்த்துச் சொல்லும் சோதிடருக்கு வேறு பணம் செலவாகிறது.

"காலம் பணவிலை உடையது" என்ற குறிப்புடைய இங்கிலீஷ் பழமொழி ஒன்று இருக்கிறது. இந்த சமாசாரம் நம்மவருக்குத் தெரிவதே கிடையாது. பொழுது வீணே கழிக்கப்படுமாயின், அதனால் பணலாபம் கிடையாமற் போகும். இன்று செய்யக்கூடிய காரியத்தை நாளைக்குச் செய்யலாமென்று தாமஸப்படுத்தி வைப்பதனால், அந்தக் காரியம் பலமான சேதமடைந்துபோகும். எதையும் தோன்றிய மாத்திரத்திலே சூட்டோடு செய்யும் போது, அதில் வெற்றி பெரும்பாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அதைத் தூங்கப் போட்டுவிட்ட பிறகு செய்யப்போனால், அதில் ஆரம்பத்தில் இருந்த ரஸம் குறைந்து போகும். அதற்குத் தக்கபடி பயனும் குறைவெய்தும்.

'இத்தகைய மூட பக்திகளெல்லாம் படிப்பில்லாமையால் ஏற்பட்டிருக்கின்றன' என்றும், 'ஜனங்களுக்குப் படிப்புக் கற்றுக் கொடுத்தால் இவை அழிந்து போய்விடும் என்றும் இங்கிலீஷ் படிப்பாளிகள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். நானும் ஒருவாறு அது மெய்யென்றே நம்புகிறேன். ஆனால், அதற்குத் தற்காலத்தில் நமது தேசத்துப் பாடசாலைகளில் பயிற்றுவிக்கப்படும் இங்கிலீஷ் படிப்பு, சுத்தமாகப் பிரயோஜனமில்லை என்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. சென்ற நூறு வருஷங்களாக இந் நாட்டில் இங்கிலீஷ் படிப்பு நடத்துவருகிறது. ஆயிரக் கணக்கான பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றுள் லக்ஷக்கணக்கான, கோடிக்கணக்கான ஜனங்கள் படித்துத் தேறியிருக்கிறார்கள். இவர்கள் மூடபக்திகளை எல்லாம் விட்டு விலகி நிற்கிறார்களா? இல்லை. நமது தேசத்தில்

முப்பத்து மூன்று கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். இத்தனை ஜனங்களுக்கும் ஒருவர் மிச்சமில்லாமல் உயர்தரக் கல்வி கற்றுக் கொடுத்த பின்புதான் மேற்கூறிய ஸாமான்ய மூடபக்திகள் விலக வேண்டுமென்பது அவசியமில்லை. ஏற்கனவே, இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் படித்துத் தேறியவர்கள் இந்த விஷயத்தில் தமது மனச்சாக்ஷிப்படி யோக்யமாக நடந்து வந்திருப்பார்களானால், மற்றவர் களிலும் பெரும்பாலர் நடை திருந்தியிருப்பார்கள். இன்னும் எத்தனையோ விஷயங்களில் நம்மவர் இங்கிலீஷ் படித்தவரின் நடையைப் பின்பற்றித் தங்கள் புராதன வழக்கங்களை மாற்றிக் கொண்டிருக்கக் காண்கிறோம். அது போலவே இந்த விஷயத்திலும் நடந்திருக்கும்.

ஆனால், இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்குப் போய்த் தேறினவர்களிடம் மனச்சாக்ஷிப்படியும் தன் அறிவுப் பயிற்சியின் விசாலத்திற்குத் தகுந்தபடியும் நடக்கும் யோக்யதை மிக மிகக் குறைவாக இருக்கிறது. இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் எத்தனையோ சாஸ்திரங்கள்—நிஜ சாஸ்திரங்கள், பொய் சாஸ்திரங்கள், இரண்டுங் கலந்தன, எத்தனையோ விதச் சாஸ்திரங்கள் பயிற்றுகிறார்கள்.

ஆனால் ஸ்வதந்திரம், ஆண்மை, நேர்மை, உண்மை, வீர்யம்- இவை அத்தனை ஜாக்கிரதையாகக் கற்றுக்கொடுப்பதில்லை. அதிலும் ஒருவன் தன் மனமறிந்த உண்மையின் படி ஒழுகவேண்டுமென்றும், அங்ஙனம் ஒழுகாதிருத்தல் மிக்வும் அவமானமும் பாவமுமாகும் என்றும் கற்றுக் கொடுக்கும் வழக்கமே இல்லை. இந்த விஷயத்தைக்கூட வாய்ப்பாடமாய்ப் படிப்பித்துக்கொடுக்கிறார்கள். ஆனால் ஒழுக்கப்பயிற்சி இல்லை. புஸ்தகத்துக்கும் வாய்ப்பேச்சுக்கும் செய்கைக்கும் இடையே லக்ஷம் யோசனை தூரமாக நடப்பவர்களுக்கு த்ருஷ்டாந்தம் காட்டப் புகுமிடத்தே,

நமது நாட்டில் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் தேறிவரும் மனிதரைப்போல் இத்தனை சிறந்த த்ருஷ்டாந்தம் வேறெங்கும் கிடைப்பது மிகவும் துர்லபமென்று தோன்று கிறது

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு"

என்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார்.

இதன் பொருள் - வாய்ப்பேச்சு ஒரு மாதிரியாகவும் செய்கை வேறொரு மாதிரியாகவும் உடையோரின் உறவு கனவிலும் கொள்ளுதல் தீது- என்பதேயாம். பீ. ஏ.. எம். ஏ. பரீக்ஷைகள் தேறி, வக்கீல்களாகவும், உபாத்தி யாயராகவும், என்ஜினீர்களாகவும், பிற உத்தியோகஸ்த ராகவும் வாழும் கணக்கில்லாத ஐயர், ஐயங்கார், பிள்ளை முதலியவர்களில் எவராவது ஒருவர் தம் வீட்டுக் கல்யா ணத்துக்கு லக்னம் பார்க்கவேண்டிய அவசியமில்லை என்று நிறுத்தியிருப்பாரா? "பெண் பிள்ளைகளின் உபத்திரவத் தால் இவ்விதமான மூட பக்திகளுக்குக் கட்டுப்பட்டு வாழும்படி நேரிடுகிறது" என்று சிலர் முறையிடுகிறார்கள். பெண் பிள்ளைகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுக்கவேண்டும். மூடத்தனமான, புத்தி மான்கள் கண்டு நகைக்கும்படியான செய்கைகள் செய்ய வேண்டுமென்று ஸ்திரீகள் பலனின்றிப் பிதற்றுமிடத்தே, அவர்களுடைய சொற்படி நடப்பது முற்றிலுந் தவறு, மேலும் அது உண்மையான காரணமன்று. போலிக் காரணம். நம்மவர் இத்தகைய ஸாதாரண மூடபக்திகளை விட்டு விலகத் துணியாமலிருப்பதன் உண்மையான காரணம் 'வைதிகரும் பாமரரும் எம்மை ஒருவேளை பந்தி போஜனத்துக்கு அழைக்காமல் விலக்கி விடுவார்கள்' என்பதுதான். இங்கிலீஷ் படித்த மேற்குலத்து ஹிந்துக்கள்

கணக்கில்லாத மூட பக்திகளைக் கை விலங்குகளாகவும், கால் விலங்குகளாகவும், கழுத்து விலங்குகளாகவும் பூட்டிக் கொண்டு தத்தளிப்பதன் தலைமைக் காரணம் மேற்படி பந்தி போஜனத்தைப் பற்றிய பயந்தான். அதைத்தவிர வேறொன்றுமில்லை. அந்த மெய்யான காரணத்தை மறைத்துவிட்டு, ஸ்திரீகளின்மீது வீண்பழி சுமத்தும் இந்த வீரர்கள், மற்றும் எத்தனையோ வியவகாரங்களில் தம் மினத்து மாதரை விலையடிமகள் போலவும், விலங்குகள் போலவும் நடத்தும் விஷயம் நாம் அறியாததன்று. எண்ணில்லாத பொருள் நஷ்டமும் கால நஷ்டமும் அந்தக் கரணத்தின் இகழ்ச்சியும் உலகத்து அறிஞரின் நகையாடலும் ஸத்ய தெய்வத்தின் பகைமையும் சிறிதென்று கொண்டீர்! பந்திபோஜன ஸ்வதந்திரம் பெரிதென்று கொண்டீர்! தைர்யமாக நீங்கள் உண்மை என்று உணர்ந்த படி நடவுங்கள். பந்திபோஜனம் சிறிது காலத்துக்குத்தான் உங்களுக்குக் கிடைக்காதிருக்கும். பிறகு உங்கள் கூட்டத் தொகை அதிகமாகும்; ஸத்யபலம் முதலிய பல காரணங் களால் மேற்படி பந்தி போஜனமும் உங்களுக்கு ஸித்தியாய்விடும். தைர்யமாக வேலை செய்யுங்கள்.

## 15. சக்தி தர்மம்

[குறிப்பு : ஆதிசங்கரர் ஹிந்துமதத்தை பல வேறு வகையாக பிரிக்கப்பட்டிருந்ததை எவ்வாறு ஆறு மதங்களாக அமைப்பதில் எவ்வாறு வெற்றி கண்டார் என்பதைப்பற்றி பாரதியார் கூறு கின்றார். ஆறு மதங்கள் எவ்வாறு உண்டாயின என்றும் இவற்றில் விளக்குகிறார். ஆனால் 'ஒன்றே மெய்ப்பொருள்; அதனை ரிஷிகள் பலவிதமாகச்

சொல்லினர்' என்று வேதமே சொல்லுகிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது என்றும் எச்சரிக்கிறார். பிற்காலத்தில்தான் விஷ்ணு உயர்வு என்றும் சிவன் உயர்வு என்றும் பொய்ப் புராணங்கள் தோன்றின என்றும் பாரதியார் கூறுகின்றார்.

"நாராயணன் பரிபாலன மூர்த்தி. பரப் ரஹ்மம் அவரே. சிவன் ஸம்ஹாரமூர்த்தி, பரப் ரஹ்மம் அவரே. பிரம்மா சிருஷ்டிமூர்த்தி; அவரே ஸாக்ஷாத் பரப்ரஹ்மம். அவருடைய பெயரைத்தான் ப்ரஹ்மத்திற்கு வைத்திருக் கிறது. இதுவே உண்மையாகும்." என்று பாரதியார் தீர்மானமாகக் கூறுகின்றார்.]

ஆத்மா உணர்வு; சக்தி செய்கை.

உலகம் முழுதும் செய்கைமயமாக நிற்கிறது. விரும் புதல், அறிதல், நடத்துதல் என்ற மூவகையான சக்தி இவ்வுலகத்தை ஆளுகின்றது. இதைப் பூர்வ சாஸ்திரங்கள் இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்று சொல்லும்.

ஆறு மதங்கள்

ஆதிசங்கராசார்யார் பௌத்த மதத்தை எதிர்த்த போது, தமக்குச் சார்பாக வேதத்தை ஒப்புக்கொள்ளும் எல்லா வகுப்புக்களையும் ஒன்றாக்கிக்கொண்டனர். அக் காலத்தில் பௌத்தம், ஜைனம் என்ற வேத விரோதமான மதங்களில் சேராமல் வேதத்தை ஆதாரமாகக் கொண் டோர் ஆறு மதங்களாகப் பிரிந்து நின்றனர்.

இந்த ஆறு மதங்களில் எதையும் கண்டனம் செய் யாமல், சங்கராசார்யார் இவ்வாறும் வெவ்வேறு வகை

யான வைதிகப் படிகளென்றும், வேதாந்தமே இவையனைத்திற்கும் மேலான ஞானமென்றும் சொன்னார். இது பற்றியே, அவருடைய கூட்டத்தார் அவருக்கு "ஷண்மத ஸ்தாபனாசாரியார்" என்று பெயர் சொல்லுகிறார்கள்.

இந்த ஆறு மதங்களாவன:

1. ஐந்திரம்—தேவர்களிலே இந்திரன் தலைவன் என்று சொல்லி, பரமாத்வை "இந்திரன்" என்ற பெயரால் வழிபடுவது.

2. ஆக்னேயம்-அக்னியே முதற் கடவுள் என்பது.

3. காணாபத்தியம்-பரமாத்மாவைக் கணபதி என்ற நாமத்தால் வழிபடுவது.

4. சைவம்—சிவனே தேவர்களில் உயர்ந்தவன் என்பது.

5. வைஷ்ணவம்—விஷ்ணுவே மேலான தெய்வம் என்பது.

6. சாக்தம்—சக்தியே முதல் தெய்வமென்பது.

வேதம் உபநிஷத் இரண்டையும் இந்த ஆறு மதஸ்தரும் ஒருங்கே அங்கீகாரம் செய்தார்கள். ஆனால் புராணங்கள் வெவ்வேறாக வைத்துக்கொள்ளுதல் அவசியமாயிற்று. திருஷ்டாந்தமாக, வைஷ்ணவர் சிவபுராணங்களையும், சைவர் வைஷ்ணவ புராணங்களையும் உண்மையாக ஒப்புக் கொள்ளுவதில்லை. பொதுக் கதைகளை எல்லாப் புராணங்களிலும் சேர்த்துக்கொண்டார்கள்.

இதிகாசங்களையும் பொதுவாகக் கருதினர் எனினும், பழைய சாக்த தர்மத்தின் அழுத்தம் பொதுஜனங்களின் சித்தத்தை விட்டுப் பிரியவில்லை. மதுரை சுந்தரேசர், காஞ்சி ஏகாம்பர மூர்த்தி என்ற பெயர்களைக் காட்டிலும்,

மதுரை மீனாக்ஷி, கஞ்சிக் காமாக்ஷி என்ற பெயர்கள் அதிகப் பெருமை கொண்டு நிற்கின்றன. மாரி, காளி என்ற பெயர்களுடன் சக்தித் தெய்வத்தையே மஹாஜனம் மிகுதியாகக் கொண்டாடி வருகிறது.

## நவசக்தி மார்க்கம்

சக்தி வணக்கம் இத்தனை சாதாரணமாக இருந்த போதிலும், அந்த மதத்தின் மூல தர்மங்களை ஜனங்கள் தெரிந்துகொள்ளவில்லை. வெறுமே பொருள் தெரியாமல் சிலைகளையும் கதைகளையும் கொண்டாடுவோர்க்குத் தெய்வங்கள் வரங் கொடுப்பதில்லை.

பரமாத்மா வேறாகவும் பராசக்தி வேறாகவும் நினைப்பது பிழை. சர்வ லோகங்களையும் பரமாத்மா சக்திரூபமாக நின்று சலிக்கச்செய்வதால், சாக்த மதஸ்தர் நிர்குணமான பிரம்மத்தை ஸகுண நிலையில் ஆண்பாலாக்காமல் பெண்பாலாகக் கருதி "லோக மாதா" என்று போற்றினர். ராமகிருஷ்ண பரமஹம்ஸர் "என் தாய் காளி" என்றுதான் பெரும்பாலும் பேசுவது வழக்கம். ஜனங்கள் வணங்கும் 'லோக மாதா' இன்ன பொருள் என்று நாம் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். நவசக்தி என்பது புதிய தெய்வமன்று. அதனைப் பொருள் தெரிந்து போற்றும் முறையே நவசக்தி மார்க்கம். இந்தத் தர்மத்தின் பலன்களைத் தாயுமானவர் பின்வருமாறு சொல்லுகிறார் :

> "பதியுண்டு, நிதியுண்டு, புத்திரர்கள் மித்திரர்கள்
> பக்கமுண் டெக்காலமும்,
> பவிசுண்டு, தவிசுண்டு, திட்டாந்தமாக யம
> படர் எனும் திமிரம் அணுகாக்
> கதியுண்டு, ஞானமாங் கதிருண்டு, சதுருண்டு,
> காயச் சித்திகளு முண்டு.'!
>
> —மலைவளர் காதலி, முதற்பாட்டு.

இந்த மதம் ஸந்யாசத்தை ஆதரிப்பதன்று; இஹலோஹத்தில் இருந்து தேவ வாழ்க்கை வாழவேண்டும் என்றே நாக்கமுடையது.

குருக்களுக்குள்ளே மேற்படி மத வேற்றுமைகள் தீவிரமாக இருந்திருக்கலாமாயினும், பொதுஜனங்கள் எல்லாத் தெய்வங்களையும் தம் தம் மனப்படி வைத்து வணங்கி வந்தனர். சங்கராசார்யார் கொள்கையை அனுசரிப்போர், 'எல்லாத் தெய்வங்களையும் ஒன்று போலவே வணங்கலாம்' என்று சொல்லியது பொது ஜனங்களின் வழக்கத்துக்கு நல்ல பலமாயிற்று. மேலும், ஞானிகளும் சித்தர்களும் இடைக்கிடையே தோன்றி, 'ஓரே பரம்பொருளைத்தான் ஆறு மதங்களும் வெவ்வேறு பெயர் கூறிப் புகழ்கின்றன' என்ற ஞாபகத்தை, ஜனங்களுக்குள்ளே உறுதிப்படுத்திக் கொண்டு வந்தார்கள்.

மேற்கூறப்பட்ட ஆறு மதங்களில் இப்போது வைஷ்ணவம், சைவம் என்ற இரண்டுமே ஓங்கி நிற்கின்றன. மற்ற நான்கும் ஒருவாறு க்ஷீணமடைந்து போனதாகக் கூறலாம். 'ஒருவாறு' என்றேன்; ஏனெனில் ஐந்திரம் ஒன்றைத்தவிர மற்றவை முழுதும் க்ஷீணமடையவில்லை. ஐந்திர மதமொன்றுதான் இருந்த சுவடே தெரியாதபடி மங்கிப் போய்விட்டது. நாடு முழுதிலும் கணபதி பூஜை உண்டு. ஆனால் கணபதியே முதற் கடவுளென்று பாராட்டும் காணுபத்ய மதம் பரவி நிற்கவில்லை. மஹாராஷ்டிரத்தில் இக்கொள்கை யுடையோர் சிலர் இப்போதும் இருப்பதாகக் கேள்வி. நிச்சயமாகத் தெரியாது. அக்னிபூஜை பிராமணர்க்குள் இருக்கிறது. ஆனால் ஆக்னேய மதம் இல்லை.

## சாக்தம்

இப்போதும் சாக்த மதம் வங்காளத்தில் உயிர் கொண்டு வலிமை பெற்று நிற்கிறது. மற்ற இடங்களில் பொதுஜனங்கள் எங்கும் சக்தியை மிகுந்த கொண்டாட்டத்துடன் வணங்கி வருகிறார்களாயினும், தனியாகச் சாக்தம் என்ற கொள்கை இல்லை. பூர்விக ஹிந்து ராஜாக்கள் காலத்தில் சாக்த மதம் மிகவும் உயர்வு பெற்றிருந்தது. ஹூணர்களை எல்லாம் துரத்தி, மஹா கீர்த்தியுடன் விளங்கி, தனது பெயரைத் தழுவி ஒரு சகாப்தக் கணக்கு வரும்படி செய்த விக்ரமாதித்ய ராஜா மஹாகாளியை உபாஸனை செய்தவன். அவன் காலத்தில் தோன்றி, பாரத தேசத்திற்கும், பூமண்டலத்திற்கும் தலைமைக் கவியாக விளங்கும் காளிதாஸன் சக்தி ஆராதனத்தை மேற்கொண்டவன். சிவாஜி மஹாராஜாவுக்குப் பவானியே தெய்வம்.

(தென்னாட்டிலே இப்போதும் சிலர் சக்தியுபாஸனை என்று தனிமையாகச் செய்துவருகிறார்கள். இவர்கள் புராதன க்ஷத்திரிய வழக்கத்திலிருந்த மது மாமிசங்களை அந்தத் தெய்வத்துக்கு அவசியமான நைவேத்யம் என்ற தப்பெண்ணத்தால் தாமும் வழக்கப்படுத்திக்கொண்டு, ஜாதியாரின் பழிப்புக்கு அஞ்சி ரஹஸ்யமாகப் பூஜை செய்துவருகிறார்கள். எனவே, சில இடங்களில், "சாக்தன்" என்றால் 'ரஹஸ்யமாகக் குடிப்பவன்" என்ற அர்த்தம் உண்டாய்விட்டது. காலத்தின் விந்தை!)

## கணபதி

வேதத்தில் பிரம்மதேவனையே கணபதி என்று ரிஷிகள் வணங்கினர். அவரே ப்ரஹ்மணஸ்பதி; அவரே ப்ருஹஸ்பதி.

விநாயகர் பிரணவ மந்திரத்தின் வடிவம். யானை முகம் பிரவண மந்திரத்தைக் காட்டுவது. அறிவின் குறி. 'கணநாம் த்வா கணபதிம் ஹவாமஹே' என்று ஸாமான்ய வழக்கத்திலுள்ள வேதமந்திரத்திலே பிள்ளையாரைப் பிரம்மதேவனென்று காட்டியிருப்பது தெரிந்து கொள்ளுக.

'ஒன்றே மெய்ப்பொருள்; அதனை ரிஷிகள் பலவிதமாகச் சொல்லினர்' என்று வேதமே சொல்லுகிறது. கடவுளின் பல குணங்களையும் சக்திகளையும் பல மூர்த்திகளாக்கி வேதம் உபாஸனை செய்கிறது. வேதகாலம் முதல் இன்றுவரை ஹிந்துக்கள் தம் தெய்வங்களை மாற்றவில்லை. வேதம் எப்போது தொடங்கிற்றோ, யாருக்கும் தெரியாது. கிரேக்க, எகிப்திய, பாபிலோனீய தெய்வங்களெல்லாம் காலத்தில் மறைந்துபோயின. ஹிந்துக்களுடைய தெய்வங்கள் அழியமாட்டா. இவை எப்போதும் உள்ளன.

படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய முத்தொழிலையும் குறிப்பிட்டுப் புராணங்களில் மூன்று மூர்த்தியாகப் பரமாத்மாவைப் பேசுகிறார்கள். பிரம்மம் என்ற பெயரை விசேஷமாகப் பரமாத்மாவுக்கு வேதாந்த சாஸ்திரம் வழங்குகிறது. பிரம்மம் என்பது வேள்வியையும் மந்திரத்தையும் ஞானத்தையும் குறிப்பிட்டு வேத ரிஷிகளால் வழங்கப்பட்டது: மந்திரநாதனும், ஸரஸ்வதி நாயகனும், வேதமூர்த்தியுமாகிய பிரம்ம தேவனை, வேதம் 'ப்ரஹ்மணஸ்பதி' என்று கூறும்; அதாவது, ப்ரஹ்மத்தின்பதி, அல்லது தலைவன் என்று அர்த்தம். மூன்று மூர்த்திகளில் ஒவ்வொன்றையும் உபாஸனையின் பொருட்டுப் பிரிவாகக் காட்டினாலும், அந்த அந்த மூர்த்தியையே ஸாக்ஷாத் பரமாத்மாவுமாகவும் தெரிந்துகொள்ள வேண்டும். நாராயணன் பரிபாலன மூர்த்தி, பரப்ரஹ்மம் அவரே.

சிவன் ஸ்ம்ஹார மூர்த்தி பரப்ரஹ்மம் அவரே. பிரம்மா சிருஷ்டி மூர்த்தி; அவரே ஸாக்ஷாத் பரப்ரஹ்மம். அவருடைய பெயரைத்தான் ப்ரஹ்மத்திற்கு வைத்திருக் கிறது.

இந்திரன், அக்னி, வாயு, வருணன் என்ற நாமங்கள் வேதத்தில் பரமாத்மாவுக்கே வழங்குகின்றன. மேலே, 'ஏகம் ஸத்' என்ற ரிக்வேத மந்திரத்தின் பொருள் குறிப் பிட்டிருக்கிறோம். மூர்த்தியுபாஸனைக் கூட்டத்தாருக் கிடையே, லௌகிக காரியங்களை அனுசரித்துப் பிற்காலத் தில் பல சண்டைகள் உண்டாயின. தக்ஷயாகத்தில் வீரபத்திரன் வந்து, இந்திரன், அக்னி, சூரியன், பகன், விஷ்ணு முதலிய தேவர்களைத் தண்டனை செய்ததாக ஒரு புராணம் சொல்லுகிறது. இப்படியே, பல புராணங்கள் தாம் உபாஸனைக்குக் காட்டும் மூர்த்தி மற்ற மூர்த்திகளைப் பல விதங்களில் விரோதித்துத் தண்டனை செய்ததாகச் சொல்லுகின்றன. இப்படிப்பட்ட கதைகள் பழைய புராணங்களில் பிற்காலத்தாரால் நுழைக்கப்பட்ட பொய்க் கதைகளேயன்றி வேறில்லை. இந்தக் கதைகள் வேதக் கருத்துக்கு முற்றிலும் விரோதம். வேதத்தில் ஹிந்துக் களுடைய தேவர்கள் ஒருவரையொருவர் பழிப்பதும் அடிப்பதும் இல்லை.

## 16. புராணங்கள்

[குறிப்பு : புராணங்கள் முதலிலே நமது நன்மைக்காகத் தோன்றின. ஆனால் பின்னால் வரவர இப்புராணக் கொள்கை திசைமாறிப் போய்விட்டது. அந்தந்தக் காலத்து ராஜாக்கள் தங்கள் சுயநன்மை கருதி ஜனங்களின் கோட்பாடு

களை உயர்த்தும் பொருட்டாக எழுதப்படலாயின. விளைவு என்னவென்றால், சைவ புராணங்களில் விஷ்ணு தூஷணைகளும், வைஷ்ணவ புராணங்களில் சிவதூஷணைகளும் ஏராளமாகச் சேர்க்கப் பட்டன. அதற்கிசையவே புதிய கதைகளும் கற்பிக்கப் பட்டன.

எனவே, இந் நூல்கள் பெரும்பாலும் நம்முடைய தெய்வத்தன்மையையும் வைதிக மாண்பையும் இழந்துபோய், வெட்கமற்ற அவைதிகதூஷணைகள் நிரம்பிக் கக்ஷிச் சண்டைகளை மிகுதியாகச் சேர்த்து ஜனங்களுக்குள்ளே பகைமைத் தீயை மூட்டிவிடலாயினர். இங்ஙனம் பரம சத்தியமாகிய ஹிந்துமதம் சிதைவு பெற்றுப் போயிற்று.

இங்ஙனம் நமது நன்மைக்காகவே தோன்றிய புராணங்கள், புராணம் என்றாலே மதிப்பிழந்து போனதாகப் போயிற்று.

நாம் மீண்டும் மேம்பாடு பெற்று உயர்வடைய வேண்டுமாயின் பாரதியார் நல்ல வழிகளைச் சொல்கிறார்.

"ஹிந்துக்களே பிளவுண்டு மடியாதீர்கள்! வேதத்தின் பொருளை உணர்ந்து மேம்பட்டு வாழ வழிதேடுங்கள் என்று எச்சரிக்கிறார் பாரதியார்."]

வேதக் கொள்கைகளை எல்லா ஜனங்களுக்கும் தெளிவாக உணர்த்தும் பொருட்டு முன்னோர்களால் புராணங்கள் ஏற்படுத்தப்பட்டன. 'நான்' 'எனது' என்ற அகந்தையாலும் பிறருக்குப் பலவிதங்களில் தீங்கிழைப்பதும், தமக்குத்தாமே பலவிதமான அச்சங்களும் தீங்குகளும்

வருவித்துக் கொள்ளுதலும் ஜீவர்களின் இயற்கை. இந்த இழிவு கொண்ட இயற்கையை ஞானத்தீயிலே போட்டுப் பொசுக்கி விடுதல் வேதரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட யக்ஞம் அல்லது வேள்வியின் கருத்து.

எல்லாம் ஈசன் செயல்; எல்லாம் அவனுடைய ரூபம். கம்ப ராமாயணத்தில் ஹிரண்யனுக்கு ப்ரஹ்லாதாழ்வான் உபதேசித்தருளியபடி, அவன்.

சாணிலு முளன் : மற்றுங்கோர்
அணுவினைச் சத கூறிட்ட
கோணிலும் உளன்; மாமேருக்
குன்றிலும் உளன்: இந்நின்ற
தூணிலும் உளன்; யான் சொன்ன
சொல்லிலும் உளன்.

அவனைத் தவிர வேறு பொருளே கிடையாது. 'அவனன்றி ஓர் அணுவுமசையாது' ஆதலால், இந்த உலக முழுவதும் பரிபூரண அழகுடையது; பரிபூரண மங்களத் தன்மை யுடையது: அந்தக் கடவுள் ஸர்வ சக்தியுடையவன். ஆதலால் கீதையிலே சொல்லியபடி, எல்லாப் பொறுப்புக் களையும் அவன் பாதங்களிலே சுமத்திவிட்டு, நாம் எப்போதும் கவலையின்றி ஆனந்தத்துடன் வாழும்படியாக நம் மனத்தைத் திருத்திக்கொள்ளக் கடவோம் என்ற துணிவே, ஞானத் தீ என்று சொல்லப்படும். அது வேதாக்நி.

இங்ஙனம் நிச்சயிக்கப்பட்ட கடவுளிடத்தும், அவனுடைய கலைகளாகிய எல்லா ஜீவர்களிடத்தும், தீராத மாறாத அன்பு செலுத்துதலே பக்தி என்று சொல்லப்படும். இந்தப் பக்திதான் முடிவான ஸாதனம். இதனால் ஈசன் நம்மிடத்தே கருணை பூண்டு நமக்கு மோக்ஷ ஸாம்ராஜ்யத்

தைக் கொடுப்பான். இது அமிர்த பானம். துதான் நான்கு வேதங்களின் தீர்ப்பு.

இந்தக் கடவுளை முழுமையாக நோக்(,மிடத்தே, வேதம் அவனுக்கு ''தத்'' (அஃது) அதாவது பரப்ரஹ்மம் என்ற பெயரும், ''ஸத்'' (உண்மைப் பொருள்) முதலிய பெயர்களும் கொடுக்கிறது.

படைத்தல், காத்தல், மாற்றுதல், அருள் செய்தல், வலிமையுடைமை, தெளிவுடைமை, ஒளியுடைமை, எங்கும் பரந்திருக்குந் தன்மை, பலபடத் தோன்றுந் தன்மை, ஆனந்த இயல்பு முதலிய கடவுளின் எண்ணிறந்த குணங்களையும் இயல்புகளையும் பிரிவுபடுத்தி நோக்கு மிடத்தே, வேதம் அந்தந்தக் குணங்களுக்கும் இயல்பு களுக்கும் தக்கபடி, அவன் ஒருவனுக்கே பிரமன், விஷ்ணு, சிவன், இந்திரன், வாயு, ஸோமன், ஸூர்யன், வருணன், அக்நி,பகவான் முதலிய பலவேறு நாமங்களை வழங்குகிறது.

இந்த விஷயத்தை ரிக் வேதம் "ஏகம் ஸத்" என்று தொடக்கமுடைய மந்திரத்தில் மிகவும் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது.

எனவே, வேதத்தின் வழிநூல்களாகிய புராணங் களில், இக்கடவுளை உணர்வதற்கு ஸாதனங்களாகிய தவம், பக்தி, யோகம் முதலியனவற்றை அனுஷ்டிக்கும் நெறி களும், இந்த வழியே செல்ல விரும்புவோனுக்கு இன்றி யமையாதனவாகிய திடசித்தம், நேர்மை, ஜீவகாருண்யம் முதலிய குணங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் நெறி களும், இந்தக் குணங்கள் ஏற்படாதபடி தடுக்கும் பயம், கர்வம், கோபம், நிஷ்டூரம் முதலிய அசுர குணங்களை அறுக்கும் நெறிகளும், பல திருஷ்டாந்தங்களாலும் சரித்திரங்களாலும், உவமைக்கதைகளாலும் உபதேசங் களாலும் விஸ்தாரமாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

உபாஸனை புரிவோரின் இயல்புகளுக்கும் வேண்டுதல்களுக்கும் தக்கபடி, அப் புராணங்கள் பரமாத்மாவின் முக்கியமான மூர்த்திபேதங்கள், அதாவது குண பேதங்களைச் சிறப்பாகக் காட்டவேண்டி, சில இடங்களில் அக்கினியையும், சில இடங்களில் இந்திரனையும், இங்ஙனமே மற்ற மூர்த்திகளையும் முதன்மையாகக் கூறும் வேத வழியை அனுசரித்து, புராணங்களுள் சில அக்கினியை மேம்படுத்தியும், சில விஷ்ணுவை மேம்படுத்தியும், சில சிவனை மேம்படுத்தியும் காட்டுகின்றன.

ஆயினும், கால நடையிலே இப் புராணங்களை மாத்திரமே ஆதாரமாகக் கொண்ட மதபேதங்கள் நம்முடைய தேசத்தில் ஏற்பட்டுவிட்டன. வேதக் கல்வியும் வேத ஞானமும் குன்றிப்போயின. வேத ஆராய்ச்சி ஒரு வகுப்பினருக்கே விசேஷ உரிமையாகக் கொண்டாடப்பட்டது. இதனால் பொது ஜனங்களுக்குள்ளே வேத ஆராய்ச்சி சூன்யமாய்விட்டது. புராணங்களில் வேறு வேறு மூர்த்திகளுக்கு ஆதிக்யம் சொல்லப்பட்டிருப்பதையொட்டி, மதபேதங்கள் கட்சிபேதங்களாகி முடிந்தன. இதனால் வைதிக மதமாகிய ஹிந்துமதம் பல பிளவுகளுடையதாய் விட்டது. ஜனத்தொகை, அவ்வக்காலத்து அரசர்களின் கொள்கை—இவற்றிற்குத்தக்கபடி ஹிந்து மத பேதங்களுக்கு மேன்மையும் தாழ்வும் ஏற்படலாயின. பெயரளவில் எல்லா மதங்களும் வேதம் ஒன்றையே பிரமாணமாகப் பேசியபோதிலும், நடையிலே ஹிந்துமதஸ்தர்கள் தத்தம் புராணங்களையே தலைமையாகக்கொண்டு, அவற்றின் கருத்துக்குக் தக்கபடி வேதத்தை மாற்றிப் பொருள் செய்யலாயினர். தம்தம் மூர்த்திகளை உயர்வாகக் கூறுவதின் உண்மைப் பொருளை மறந்து இந்த மதஸ்தர்கள் மிகப் பெரிய அஞ்ஞானத்தில் ஆழ்ந்து வேதத்திற் காட்டிய இந்த

மூர்த்திகளை இழிவுபடுத்திப் பேசலாயினர். இந்திரன், அக்கினி, வாயு, வருணன் என்ற மூர்த்திகளே வேதத்தில் முக்கியமானவை. பின்னிட்டு இந்த மூர்த்திகளைத் தாழ்ந்த தேவதைகளாக மதிக்கத் தொடங்கிவிட்டார்கள். காலக் கிரமத்தில் வைஷ்ணவம், சைவம், சாக்தம் முதலிய சில மதங்களே நாட்டில் மிஞ்சி நின்றன. எனவே, வேதத்தில் முக்கிய மூர்த்திகளாகிய வாயு, வருணன், சூரியன், இந்திரன் முதலியவர்களைப் பிற்காலத்துப் புராணங்கள் தூஷணை செய்யத் தொடங்கிவிட்டன. முற்பகல் செய்தது பிற்பகல் விளையும். பின்னிட்டுச் சைவ வைஷ்ணவ புராணங்களில் அவ்வக்காலத்து ராஜாக்கள் ஜனங்களின் கோட்பாடுகளை உயர்த்தும் பொருட்டாக மேற்படி கட்சி பேதங்கள் பஹிரங்க விரோதங்களாக முடிந்து, சைவ புராணங்களில் விஷ்ணு தூஷணைகளும் வைஷ்ணவ புராணங்களில் சிவ தூஷணைகளும் ஏராளமாகச் சேர்க்கப்பட்டன. அதற்கிசையவே புதிய கதைகளும் கற்பிக்கப்பட்டன.

எனவே, இந்நூல்கள் பெரும்பாலும் நம்முடைய தெய்வத்தன்மையையும் வைதிக மாண்பையும் இழந்து போய், வெட்கமற்ற அவைதீக தூஷணைகள் நிரம்பிக் கக்ஷிச் சண்டைகளை மிகுதியாகச் சேர்த்து ஜனங்களுக்குள்ளே பகைமைத் தீயை மூட்டிவிடலாயின. இங்ஙனம் பரம சத்தியமாகிய ஹிந்து மதம் சிதைவுப் பெற்றுப் போயிற்று, ஹிந்து ஜாதியார் வீழ்ச்சியடைந்தனர். வேதம் ஒளி மறைந்து, பிற்காலத்தில் வேதத்துக்கு நாம் மாத்திரையாகக் கொடுக்கப்பட்ட உயர்வைக்கூட இந்தக் கக்ஷிக்காரர் சிலர் மறுக்கலாயினர். திருஷ்டாந்தமாகப் பிற்காலத்துச் சைவர்களிலே சிலர் வேதங்களைக் காட்டிலும் சிவாகமங்களை மேலென்று சொல்லத் தலைப்பட்டார்கள், இங்ஙனம் ஏற்பட்ட புராணச் சண்டைகளுக்கு வேதமே

காரணமாக இருந்ததென்று தவருகக் கருதி, வைதிக ஞானி களே, சிலர் வேதத்தைக் கர்ம காண்டமென்றும், உபநிஷத்தை ஞானகாண்ட மென்றும் சொல்லலாயினர்.

வஸிஸ்டர் முதலியவர்களைக் 'கர்மிக'ளென்றும், பிற்காலத்துப் பண்டாரங்களை 'ஞானி'களென்றும் ஜனங்கள் மதிக்கலாயினர்.

இந்த அலங்கோலங்களெல்லாம் தீர்ந்து, ஹிந்து மதம் ஒருமை நிலையெய்தி, ஹிந்துக்கள் ஒற்றுமையும் வைதிக ஞானமும் எய்தி, மேம்பாடு பெற்று, பூமண்டலத்தின் ஆசார்ய பதவிகொண்டு வாழவேண்டுமாயின், அதற்கு நாம் கையாள வேண்டிய உபாயங்கள் பின்வருவன :—

(1) வேதம், உபநிஷத்துக்கள், புராணங்கள்— இவற்றை இக்காலத்தில் வழங்கும் தேச பாஷைகளில் தெளிவாக மொழி பெயர்க்கவேண்டும்.

(2) புராணங்களில் தத்தம் தேவர்களை மேன்மைப் படுத்தும் அம்சங்களையும், மேற்படி பொது வேதக் கொள்கைகளாகிய தவம், உபாஸனை, யோகம் முதலிய வற்றை விளக்கும் அம்சங்களையும், உலகநீதி, பூர்வ சரித்திரம் இவற்றை விளக்கும் அம்சங்களையும் மாத்திரமே ப்ரமாணமாகக் கொண்டு, இதர தேவ தூஷணை செய்யும் அம்சங்களை ப்ரமாணமில்லாதன வென்று கழித்துவிட வேண்டும்.

(3) வேதத்தின் உண்மைக் கருத்தை உணர்ந்தோரும், ஸமரஸ ஞானிகளுமான பண்டிதர் மூலமாக நாடு முழுதும் புஸ்தகம், பத்திரிகை, உபந்யாஸங்கள் முதலியவற்ருல் பிரமாண்டமான ப்ரசாரத் தொழில் நடத்தவேண்டும்: ஹிந்துக்களே, பிளவுண்டு மடியாதீர்கள்! வேதத்தின் பொருளை உணர்ந்து மேம்பட்டு வாழ வழி தேடுங்கள்!

# 17. இரண்டாம் காட்சி

(இந்திர சபை)

[குறிப்பு : அறிவு பூர்வமாக பாரதியார் சுகமும் துக்கமும் ஒன்று, சாதுவும் துஷ்டனும் ஒன்று, ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத் என்று நாரதர் பாடிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிறார். சுகமும் துக்கமும் ஒன்று என்று உணர்ந்த ஞானியின் நோக்கே வேறு. இல்லாவிட்டால் தமது அன்பிற்குரிய சகுந்தலை என்ற மகள் நோய்வாய்ப் பட்டிருந்த போது அத்தனை கவலைப் பட்டிருக்க மாட்டார். 'பராசக்தி குழந்தையைக் காப்பாற்று' என்று சுவரில் மோதிக் கொள்ள மாட்டார். அறிவு சொல்லுகிறது; ஆனால் உள்ளுணர்வு அந்த அறிவு சொல்வதை மெய்யென்று உணர்ந்த காலத்தில்தான் உண்மை ஞானம் வெளிப்படுகிறது. ஆகவே "படிப்படக்கி" என்று தாயுமானவர் சொல்வது சரியென்று புலனாகின்றது. படிப்பதால் என்ன பயன்? அப் படிப்பினால் உள்ளுணர்வு என்ற தெளிந்த ஞானம் வெளிப்படவேண்டும். ரமண மகரிஷிகள் தன் குடிசையிலே திருட்டு நடந்த போது யாதொரு கவலையுமின்றி சும்மா பார்த்துக் கொண்டிருந்தார். தம் குடிசையிலே நிறையப் பொருள் கிடைக்கும் என்று எதிர் பார்த்து ஏமாற்ற மடைந்ததால் திருடர்களுக்குக் கோபம் உண்டாகவே தொடையில் ஓங்கி அடித்து விட்டுச் சென்று விட்டார்கள். "ரமண

மகரிஷிகள் "இந்தத் தொடை என்ன பாவம் செய்தது? இதற்கும் ஒரு அடி கொடுத்துப் போங்கள்" என்று அமைதியாகப் பதில் அளித்தாராம். திருடன் அப்படியே ஓர் அடி கொடுத்து விட்டுச் சென்றானும். அதனால் கோபமடைந்த சீடர் ஒருவருக்கு, "நீ சும்மா இரு" என்று நகைத்துக் கொண்டே கூறினாராம். இதுவே ஜீவன் முக்தனுக்கு அடையாளம்.]

வானுலகம்-இந்திர சபை

தேவேந்திரன் கொலுவீற்றிருக்கிறான்.

தேவ ஸேவகன் : தேவ தேவா!

இந்திரன் : சொல்.

தேவ ஸேவகன் - வெளியே நாரதர் வந்து காத்திருக்கிறார். தங்களைத் தரிசிக்க வேண்டுமென்று சொல்கிறார்.

இந்திரன் : - வருக.

(நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்.)

"நாராயண, நாராயண, நாராயண, ஹரி, ஹரி, நாராயண, நாராயண."

இந்திரன் : - நாரதரே! நாராயணன் எங்கிருக்கிறான்?

நாரதர் : - நீ அவனைப் பார்த்தது கிடையாதோ?

இந்திரன் : - கிடையாது.

நாரதர் : - ஸர்வ பூதங்களிலும் இருக்கிறான்.

இந்திரன் : - நரகத்திலிருக்கிறானா?

நாரதர் : - ஆம்.

இந்திரன் : - துன்பத்திலிருக்கிறானா?

நாரதர் : - ஆம்.

இந்திரன் : - மரணத்திலிருக்கிறுனு?

நாரதர் : - ஆம்.

இந்திரன் : - உங்களுடைய ஸர்வ நாராயண ஸித்தாந்தத்தின் துணிவு யாது?

நாரதர் : - எல்லா வஸ்துக்களும், எல்லா லோகங்களும், எல்லா நிலைமைகளும், எல்லாத் தன்மைகளும், எல்லா சக்திகளும், எல்லா ரூபங்களும், எல்லாம் ஒன்றுக்கொன்று ஸமானம்.

இந்திரன் : - நீரும் கழுதையும் ஸமானம்தானு?

நாரதர் : - ஆம்.

இந்திரன் : - அமிருதபானமும், விஷபானமும் ஸமானமா?

நாரதர் : ஆம்.

இந்திரன் : - ஸாதுவும், துஷ்டனும் ஸமானமா?

நாரதர் : - ஆம்.

இந்திரன் : - அசுரர்களும், தேவர்களும் ஸமானமா?

நாரதர் : - ஆம்.

இந்திரன் : - ஞானமும், அஞ்ஞானமும் ஸமானமா?

நாரதர் : - ஆம்.

இந்திரன் : ஸுகமும், துக்கமும் ஸமானமா?

நாரதர் : - ஆம்.

இந்திரன் : - அதெப்படி?

நாரதர் : - ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்—

(பாடுகிறுர்) நாராயண, நாராயண, நாராயண,
நாராயண.

# 18. இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

*குறிப்பு : இக்கட்டுரை 20-6-1920 இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமையைப்பற்றி பாரதியார் செய்த சொற்பொழிவின் ஸாரமாகும். பாரதியார் பாண்டிச்சேரியிலிருந்து சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை பெற்றுத் திரும்பி கடயத்திலே சில காலம் வசிக்கிறார். அப்பொழுது பொட்டல் புதூரிலே தெற்குப் புதுமனைத் தெருவில் இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமையைப் பற்றிப் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்கள். அதற்கு இணங்கி, எல்லா வகைகளிலும் பெருமை பொருந்திய ஒரு முஸ்லீம் ஸபை முன்னே சொற்பொழிவு நிகழ்த்துகிறார். அப்பொழுது "அல்லா, அல்லா, அல்லா" என்று தொடங்கும் பாட்டுடன் சொற்பொழிவைத் தொடங்குகிறார். அநேகமாக இப்பாடல் பாடிய காலம் அதுவே யாகும்.*

*எல்லா மதமும் ஒன்றே என்ற பாரதியார் கொள்கைக்கு இது மற்றுமொரு சான்றாகும்-]*

[20—6—20, ஞாயிற்றுக்கிழமை மாலையில், பொட்டல் புதூரிலே தெற்குப் புதுமனைத் தெருவில் எல்லா வகைகளிலும் பெருமை பொருந்திய ஒரு முஸ்லீம் ஸபையின் முன்னே, "இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை" என்ற விஷயத்தைக் குறித்து ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியார் செய்த பிரசங்கத்தின் ஸாரம்.]

இன்று மாலை எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பற்றிப் பேசு முன்பு, நான் அல்லாவின்மீது பாடிக்

கொணர்ந்திருக்கும் தமிழ்ப்பாட்டை இங்கு வாசித்துக் காட்ட அனுமதி தரும்படி வேண்டுகிறேன். ஏற்கெனவே அரபி பாஷையில் 'பாத்திஹா' (ஜபம்) ஓதி முடிந்து விட்டது. அதற்கு அனுஸரணையாக இந்தத் தமிழ்ப் பாட்டைப் பாடுகிறேன்.

பல்லவி

அல்லா, அல்லா, அல்லா!

சரணங்கள்

பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி அண்டங்கள்
எல்லாத் திசையிலுமோ ரெல்லை யில்லா வெளி வானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்,
சொல்லாலு மனத்தாலுந் தொடரொணாத பெருஞ்ஜோதி
(அல்லா, அல்லா, அல்லா!)

2. கல்லாதவ ராயினும் உண்மை சொல்லாத வராயினும்
பொல்லாதவ ராயினும் தவமில்லாதவ ராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவ ராயினும்
எல்லாரும் வந்தேத்து மளவில் யமபயங் கெடச்செய்
(அல்லா, அல்லா, அல்லா!)

எனக்கு முதல் முதல் இஸ்லாம் மார்க்கத்தில் அன்பு உண்டானதான் காரணம் பின்வருமாறு:—

பல வருஷங்களின் முன்பு நான் ஒரு ஆங்கிலேய பண்டிதர் எழுதிய புஸ்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் முஹம்மது நபியின் சரித்திரத்தைக் குறித்த சில விஷயங்கள் காணப்பட்டன. அவற்றைப் படித்துப் பார்த்தபோது, நான் அற்புதமுண்டாய்ப் பரவச மடைந்தேன்.

மக்கா நகரத்தில், பூஜாரிகளின் ஸபை கூடியிருக்கிறது. பிரம்மாண்டமான ஸபை. நாட்டிலுள்ள பூஜாரிகள் அத்தனை பேரும் சேர்ந்து கூடும் வருஷாந்தக் கூட்டம் திருவிழாக் காலத்தை ஒட்டி நடந்தது. முஹம்மது நபி பூஜாரிகளின் வம்சத்தில் பிறந்தவர். அரபி தேசத்து ஜனங்கள் அந்தக் காலத்தில் விக்கிர ஹாராதனையிலும் பல தேவ உபாஸனையிலும், தற்காலத்தில் தணிந்த ஜாதி ஹிந்துக்கள் எத்தனை மூழ்கிக் கிடக்கிறார்களோ, அத்தனை மூழ்கிக் கிடந்தார்கள். அவர்களிடையே முஹம்மது நபியின் குடும்பத்தார்கள், கோவிற் குருக்களையும் பட்டர்களையும் ஒத்திருந்தனர். இவர்களுடைய வைதிக கோஷ்டியின் ஸபைக்கு நடுவே முஹம்மது நபி எழுந்து நின்று சொல்லுகிறார்:—"நான் அல்லாவை நேரே பார்த்திருக்கிறேன். அவர் என்னைத் தமது முக்கிய பக்தராகவும், பிரதிநிதியாகவும் நியமனம் செய்திருக்கிறார். நீங்கள் இனிமேல் அவரைத் தொழுங்கள். அவரை மாத்திரம் தொழுதால் போதும். கடவுள் ஒருவர்தான் இருக்கிறார். பல ஈசுவரர் இல்லை. ஈசனைத் தவிர ஈசன் வேறில்லை. லா இலாஹா இல் அல்லா. அல்லாவைத் தவிர வேறு அல்லா கிடையாது. (அரபி பாஷையில் அல்லா என்ற பதத்திற்குக் கடவுள் என்று அர்த்தம்.) அவர் நம்மைப்போல் தோலுடம்பும் கை கால் முதலிய உறுப்புக்களும் உடையவரல்லர். அவரைச் சிலைகள் வைத்துத் தொழுவதிலும் அவருக்கு உங்களுடைய ஆகாரங்களை நைவேத்தியம் பண்ணுவதிலும் பயனில்லை. அவர் எல்லாவற்றையும் படைத்து, எல்லாவற்றையும் இயக்கிக் காத்து, எல்லாவற்றையும் வடிவு மாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் எல்லாவற்றையும் தம்முடைய உடம்புகளாகவும் தம்முடைய ரூபங்களாகவும் உடையவர். அறிவு வடிவமாக நிற்பவர். அருள் வடிவமாக நிற்பவர். அவரை மனமாகிய கோயிலில் நிறுத்தி, வீரியம் பக்தி

என்ற பூக்களால் அர்ச்சிப்பதே சரியான பூஜை. இடைவிடாமல், அசையாமல் அவரிடம் தீராத மாருத பக்தி செலுத்துங்கள். அவ்விதமான பக்தி "இஸ்லாம்" என்று சொல்லப்படும். இந்த இஸ்லாமைத் தரித்திருப்போர் நித்தியானந்த வாழ்க்கையாகிய முக்தி வாழ்க்கையை எய்துவார்கள். ஆதலால், நீங்கள் இந்தப் புராதனக் கிரியைகளையும் கொள்கைகளையும் விட்டுவிட்டு, என் மதத்தில் சேர்ந்து அல்லாவின் திருவடி நிழலை அடைந்துவாழ முற்பட்டு வாருங்கள்" என்று முஹம்மது நபி யாண்டவர் திருவாய்மலர்ந்தருளினர்.

இதைக்கேட்ட மாத்திரத்தில் அங்கிருந்த பெருச்சாளிக் குருக்களெல்லோரும், தங்கள் சிஷ்யர் ஸஹிதமாக முஹம்மது நபியைப் பரிஹாஸம் பண்ணினர்கள். அந்த சமயத்தில் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலை வஸல்லம்) அவர்களின் மருமகனுகிய அலி என்பவர் எழுந்து, "மாமா, உங்கள் கொள்கையை யார் நம்பினுலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, நான் நம்புகிறேன். லா இலாஹா இல் அல்லா முகம்மதுர் ரஜுல் உல்லா, அல்லாவைத் தவிர வேறு கடவுளில்லை. அவருக்குச் சிறந்த நபி முஹம்மது" என்று பிரதிக்கினை செய்து கொடுத்தார். இது ஒரு செய்தி.

இரண்டாவது செய்தி, முஹம்மது நபியை தமது குமஸ்தாவாகப் பல வருஷம் வைத்திருந்தபிறகு அவருக்கு மாலையிட்டவராகிய கதீஜா பீவியம்மை அவருடைய மதத்தில் சேர்ந்து கொண்டது. ஒருவன் தான் நேரே கடவுளைத் பார்த்ததாகவும், அதினின்றும் தெய்வங்கள் தன்னிடத்தில் விளங்குவதாகவும் வெளியூராரிடம் சொல்லி, அவர்களை நம்பும்படி செய்தல் எளிது. இரவு பகல் கூடவேயிருந்து, நீ நோய் வேதனை பொறுக்க

மாட்டாமல் அழுவதையும், இன்னும் உன்னுடைய பலஹீனங்கள், அதைரியங்கள், அச்சங்கள், அநீதிகள், குரூரங்கள், பொருமைகள், அதர்மங்கள், குறைகள் எல்லாவற்றையும் ஸஹிப்போராகிய உன் சுற்றத்தாரும், அத்யந்த நண்பர்களும், பக்கத்து வீட்டாரும் உன்னைக் கடவுளின் அருளும் அம்சமும் அடைந்த மஹானென்று நம்பவேண்டுமானல், நீ உண்மையிலேயே தெய்வத்தைக் கண்டால் முடியும். மற்றபடி ஏமாற்றலினுலும், வேஷங்களாலும், நடிப்புக்களாலும் இவர்களை நம்பும்படி செய்தல் சாத்தியமில்லை. இதுபற்றியே, இங்கிலீஷில் "எந்த மனிதனும், தன் சொந்த ஊரில் தீர்க்கதரிசியாக மாட்டான்" என்றொரு வசனம் சொல்லுகிறார்கள்.

முஹம்மது நபியை முதல் முதல் அலியும், அதைக் காட்டிலும் ஆச்சர்யந் தோன்றும்படி கதீஜா பீவியும் கடவுளின் முக்கிய பக்தரென்றும், தெய்வ அருள் பெற்றவரென்றும், பூமண்டலத்தில் கடவுளுடைய பிரதிநிதியாக அவதரித்த மஹானென்றும் அங்கீகாரம் செய்து கொண்டதைக் கவனிக்குமிடத்தே, அவர் நிகரில்லாத ஞானியென்பதும், பக்தகுல சிரோமணியென்பதும் மிக்த் தெளிவாக விளங்குகின்றன.

மக்கத்தில் முஹம்மது நபிக்கு அநேகர் சீடராகச் சேர்ந்து விட்டார்கள். அவருடைய மதம் நாளுக்குநாள் பிரபலமாகத் தொடங்கிவிட்டது. இதைக் கண்டு பழைய விக்ரஹாராதனைக்காரருக்குப் பொருமையும் அச்சமும் மிகுதிப்படலாயின. மக்கத்து அதிபதி, நபியவர்களையும் அவருடைய முக்கிய நண்பர்களையும் சீடரையும் பிடித்துச் சிறையிலிடும்படி, தன் சேவகரிடம் கட்டளையிட்டான். இந்தச் செய்தி நபி ஆண்டவனுடைய செவிக்கு எட்டி விட்டது. இது 622 கி. பி. வருஷத்தில் நடந்தது. அப்பால்,

சில நண்பரின் வேண்டுகோளுக்கும், அல்லாவின் உத்தரவுக்கும் இணைந்த முஹம்மது ஒரே ஒரு சீடருடன் மதிஞவுக்குப் புறப்பட்டார். போகிற வழியில் காடு; இவ்விருவரும் தனியே சென்று கொண்டிருந்தனர். இவர்கள் ஊரைவிட்டுத் தப்பிய செய்தியறிந்து, மக்கத்து அதிபதி இவர்களின் பின்னே ஒரு குதிரைப் படையை அனுப்பினன். இவ்விருவரும் காட்டுவழியே போகையில், பின்னே குதிரைப்படை வரும் சத்தம் இவர்களுடைய காதிற்பட்டது. அங்கொரு புதருக்குள்ளே போய் பதுங்கிக் கொண்டார்கள். குதிரைப் படையின் பாத ஒலி மிகவும் சமீபத்தில் கேட்டது. அப்போது நபியுடன் இருந்த சீடர்;—"ஐயோ, இனி என்ன செய்யப் போகிறோம்? ஏது, நாம் தப்புவது கிடையாது. நம்மை இவர்கள் பார்த்துத் தான் போடுவார்கள். மக்கத்திற்குப் போனல் நம்மை வெட்டிக் கொல்வார்களோ, தூக்குத்தான் போடுவார்களோ!" என்று சொல்லிப் பலவாறு பரிதபிக்கலானன். அப்போது முஹம்மது நபி (ஸல்லல்லா ஹு அலைஹி வஸல்லம்) அவர் சொல்லுகிறார்:—

"கேளாய், நண்பனே; நான் இந்த உலகத்தில் அல்லாவின் காரியஸ்தனுகை வேலை செய்து வருகிறேன். அல்லாவினல் எனக்கு மானுஷ லோகத்தில் நிறைவேற்றும்படி விதிக்கப்பட்டிருக்கும் காரியங்களெல்லாம் நிறைவேறி முடியும்வரை, என்னை உலகத்து மன்னர்களெல்லோரும் ஒன்றுகூடிக் கொல்ல விரும்பினலும், எனக்கொரு தீங்கும் வரமாட்டாது. என் தலையில் ஆயிரம் இடிகள் சேர்ந்து விழுந்தபோதிலும் எனக்கு மரணம் நேரிடாது. அல்லா ஸர்வ வல்லமையுடையவர். அவருடைய சக்திக்கு மேற்பட்ட சக்தி இந்த ஜகத்தில் வேறில்லை. ஆதலால் எனக்கு பயமில்லை. என்னுடன் இருப்பதனல் உனக்கும் ஆபத்து வராது. நீயும் பயப்படவேண்டிய அவசியமில்லை" என்றார்.

அப்பால் அந்தக் குதிரைப்படை அவர்களைப் பாராமலே போய்விட்டது.

இந்த சமாசாரத்தை நான் வாசித்துப் பார்த்தவுடனே, என் மனதில் முஹம்மது நபியிடமிருந்த மதிப்பு ஆயிரம் மடங்கு மிகுதியாயிற்று. ஸாதாரண காலங்களில் தைரியத்துடனிருப்பது ஸுலபம். ஆபத்து நேரே தலையை நோக்கி வரும்போது, "கடவுள் துணை செய்வார். எனக்கு பயமில்லை" என்று மனதுடன் சொல்வோன் உண்மையான தெய்வ பக்தன். தெய்வ பக்தி ஒன்றைத்தவிர வேறெந்த சக்தியும் மனிதக் குண்டின் முன்னே தைரியம் கொடுக்காது. சீறிவரும் பாம்பை நோக்கி அஞ்சாமல் நகைக்க வல்ல தீரர் கடவுளின் கருணை பெற்றோரேயாவர். மற்றப்படி வேறெந்த பலமும் அவ்விதமான தைரியத்தைத் தராது. பாம்பென்றால் படையும் நடுங்கும். இன்னும், மதீனாவுக்கு நபி சென்ற பிறகு இதுவரை பல தடவைகளில் மக்கத்தாரின் கொரேஷ் படைகள் எதிர்த்து வந்தன. முஹம்மது நபியிடம் சேர்ந்தவர்கள் தக்க ஸைன்யப் பயிற்சி பெறவில்லை. பயிற்சி பெற்று வந்த படைகளைப் பயிற்சியற்ற மனிதர்களைத் துணைக்கொண்டு முஹம்மது நபி வென்றார். 'கலங்காத நெஞ்சுடைய ஞானதீரமும் அழியாத நம்பிக்கையும்' அவரிடத்தே யிருந்தன. ஆதலால் அவருக்கு,

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி
விடுத்ததாய் மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டு முன்னர் அருளினர் அல்லா.

இடையிடையே நான் என் மனத்திற்குள் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப்பற்றிச் சித்திரம் போட்டுப் பார்ப்பது வழக்கம். நடுப் பாலை

வனத்தில், நள்ளிரவிலே, தனி மணல் வெளியிலே, ஒட்டகையின்மீது தனியாக ஏறிக்கொண்டு போகிறார். அல்லது, அங்கொரு குன்றின்மேல் ஏறி நிற்கிறார். கேள்வியாலும், நெடுங்காலத்து பக்தியாலும், நிகரற்ற அன்பினாலும், ஞானத்தாலும் பக்குவப்பட்ட இவருடைய ஹ்ருதயம் அப்படிப்பட்ட இடத்தில் அல்லாவை நாடுகிறது. வேறு நினைப்புக்கு இடமில்லை. அப்போது அங்கு ஞானவொளி வீசிற்று. நபி அல்லாவைக் கண்டார். சுகப் பிரம்ம ரிஷிக்கு நேர்ந்த அனுபவம் முஹம்மது நபிக்கு எய்திற்று.

அங்கமே நின் வடிவமான சுகர் கூப்பிட நீ
எங்கும் ஏன் ஏன் என்றதென்னே, பராபரமே

என்று தாயுமானவர் பாடியிருக்கிறார்.

இந்தக் கதை எப்படியென்றால், சுகப் பிரம்ம ரிஷி காட்டு வழியாகப் போய்க் கொண்டிருக்கையில், கடவுளைப் பார்க்க வேண்டுமென்ற தாகமேலீட்டால், "கடவுளே கடவுளே" என்று க்தறிக்கொண்டு போனாராம். அப்போது காட்டிலிருந்த கல், மண், மணல், நீர், புல், செடி, மரம், இலை, பூ, காய், காற்று, ஜந்துக்கள் எல்லாவற்றினின்றும், "ஏன், ஏன்" என்ற மறுமொழி உண்டாயிற்று. அதாவது, கடவுள் ஞான மயமாய் எல்லாப் பொருள்களிலும் நிரம்பிக் கிடப்பதைச் சுக் முனிவர் கண்டார் என்பது இக்கதையின் பொருள். முஹம்மது நபி மஹா ஸுந்தர புருஷர், மஹா சூரர், மஹா ஞானி, மஹா பண்டிதர், மஹா பக்தர், மஹா லௌகீக தந்திரி. வியாபாரமானாலும் யுத்தமானாலும் முஹம்மது நபி கவனித்தால், அந்த விஷயத்தில் வெற்றி மிகவும் உறுதி. ஆதலால் அவர் மிகவும் அபிமானிக்கப் பட்டார்,

எனினும், புதிய மதமொன்று கொண்டு வந்ததினின்றும் அவர் சுற்றத்தாரும் அத்யந்த நண்பர்களும் பகைமை செலுத்தலாயினர். ஆனால், நபி பொருட்டாக்கவில்லை. முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், உலகத்தின் பொது நன்மைக்கும் தர்மத்திற்கும் நீதிக்கும் ஸத்தியத்திற்கும் அல்லாவிற்கும் முன்னே, தம்முடைய சொந்த ஸுகங்களையும், ஸௌகர்யங்களையும், வாழ்வையும், செல்வத்தையும், அதனால் விளையும் பெருமைகளையும், இன்பங்களையும், ரக்ஷணைகளையும், உயிரின் பாதுகாப்பையுங்கூடச் சிறிய பொருளாகக் கருதினர்.

இவரிடத்தில் இத்தனை உறுதியான பக்தியிருப்பதை நோக்கியே, அல்லா இவரைத் தமக்கு மிகவும் பிரியமான நபியாகத் தெரிந்தெடுத்தார்.

அரபியா தேசத்தில் மக்கா நகரத்தில் அப்துல்லா என்ற மஹானுக்கும் அவருடைய தர்ம பத்தினியாகிய ஆமினாவுக்கும் குமாரராக கி. பி. 570ம் ஆண்டில் நமது நபி ஜனித்தார். புஸ்தகப் படிப்பு கிடையாது. கேள்வியால் மஹா பண்டிதரானார்; ஸஹவாஸத்தால், உயர்ந்த ஞானியானார்; நிகரில்லாத பக்தியால் அரசனும், கலீபும், தீர்க்கதரிசியுமானார். மக்கத்தில் பெருஞ் செல்வியாகிய கதீஜா பீவியையும் வேறு எட்டு ஸ்திரீகளையும் மணம் புரிந்தார். தம்முடைய ஒன்பது பத்தினிகளிலே அபூ பக்கரின் குமாரியான ஆயிஷா பீவியைப் பிரதான நாயகியாகக் கொண்டிருந்தார். நாற்பதாம் ஆண்டில் தம்மை ஈசன் நபியாக்கி விட்டதாக உலகத்துக்குத் தெரிவித்தார். கி. பி, 632-இல் இந்த மண்ணுலகை விட்டு முஹம்மது நபி வானுலகம் புகுந்தார்.

மக்கத்தை விட்டு, இளமையிலேயே இவர் வியா பாரத்துக்காக வெளி நாடுகளில் ஸஞ்சரிக்கும்படி நேர்ந்த ஸமயங்களில், யூத கிருஸ்தவ பண்டிதர்களைக் கண்டு, அவர்களுடைய மதக் கொள்கையைப்பற்றி விசாரணை செய்வது வழக்கம். அதனின்றும் விக்ரஹாராதனை விஷயத்திலும் பல தேவர் வணக்கத்திலும் இவருக்குப் பற்றுதலில்லாமற் போக ஹேது உண்டாயிற்று. ஏகேசுவர மதத்தைக் கைக் கொண்டார். யூதருக்கும் கிறிஸ்தவருக்கும் பொதுவாகிய "பழைய ஏற்பாடு" என்ற பைபிலின் பூர்வ பாகத்தை இவர் உண்மையாகவே அங்கீகாரம் செய்துகொண்டார் கிருஸ்துவ நாதரையும் இவர் ஒரு சிறந்த நபியாகக் கொண்டார்; கடவுளின் அவதாரமாக ஒப்புக் கொள்ள வில்லை. விக்ரஹங்களிடத்தே கடவுளைக் காட்டி வணங்குதல் பொருந்தாத கார்யமென்று யூதருக்கும் கிறிஸ்தவருக்கும் தோன்றியது போலவே, ஒரு மனிதன் பக்தி ஞானங்களில் எவ்வளவு சிறப்பெய்திய போதிலும், அவன் கடவுளை நேருக்கு நேரே கண்டறிந்த வரையிலும் அதுபற்றி அவனை மிக உயர்ந்த பக்தனென்றும் முக்த னென்றும் போற்றலாமேயல்லாது, மனித வடிவத்தில் ஸாக்ஷாத் கடவுளையே சார்த்துதல் பொருந்தாதென்று முஹம்மது நபி எண்ணினர் போலும். இந்த அம்சத்தில் என்னுடைய சொந்தக் கருத்து பின்வருமாறு ;—

இந்த உலகம் முக்காலத்திலும் உள்ளது; இது அசைகிறது; அண்டங்களாக இருந்து சுழன்றோடுகிறது; காற்றாகத் தோன்றி விரைகின்றது; மனமாக நின்று சலிக்கிறது! ஸ்தூல அணுக்களும் ஸூக்ஷ்ம அணுக்களும் ஸதா மஹா வேகத்துடன், மஹா மஹா மஹா மஹா வேகத்துடன், இயங்கிய வண்ணமாகவே இருக்கின்றன. இந்த உலகத்திலிருந்துகொண்டு இதனை அசைக்கிற சக்தியையே

கடவுளென்கிறோம். எல்லாம் அவன்; உலகத்தின் செயல்களெல்லாம் கடவுளுடைய செயல்கள்.

அவனுடைய நிஜ வடிவம், அதாவது, பூர்வ வடிவம் யாது? சைதன்யம் அல்லது சுத்தமான அறிவே கடவுளின் மூல ரூபம். மனிதருடைய ஸாதாரணச் செயல்கள் யாவுமே கடவுளின் செய்கைகளே யன்றி வேறில்லை. எனினும், ஜகத்தில் ஞானமயமான கடவுள் எங்கும் நிரம்பிக் கிடப்பதை நேரே ஒருவன் கண்ட பிறகு, அந்த மனிதனுடைய செயல்களிற் பல, கடவுளின் நேரான கட்டளையின்படி செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலைமையை யெய்தின மனிதனை நபி அல்லது தீர்க்கதரிசி என்கிறோம். அப்பால் அல்லா, எப்போதுமே ஒருவனுடைய ஹ்ருதயத்தில் அந்தக்கரணத்துக்கு நன்றாக விளங்கும் வண்ணம் குடி புகுந்து கற்றறிந்தவனுடைய அறிவு முழு வதையும் தாம் விலை கொடுத்து வாங்கிய கருவி போலே யாக்கிக்கொண்டு, புறச் செயல்களும் உலகத்தாருக்கு வழி காட்டிகளாகும்படி பரிபூர்ண சைதன்ய நிலையிலே நடத்திக் கொண்டுவரத் திருவுளம் பற்றுவராயின், அப்படிப்பட்ட மனிதனைக் கடவுளின் அவதாரமென்று சொல்லலாம். ஆனால், கிருஸ்து நாதர் இந்நிலை அடைந்ததாக முஹம்மது நபி நம்பவில்லை போலும். இது நிற்க.

இஸ்லாம் மார்க்கத்தின் முதலாவது கலீபாவாக முஹம்மது நபி அரசாண்டார். அவருக்குப்பின் அபுபகர் அந்த ஸ்தானத்தை ஐந்து வருஷம் வகித்தார். அப்பால் ஏழு வருஷம் உமர் கலீபாவாக ஆண்டார். அந்தக் காலத் திற்குப் பின்பு, முஸல்மான்களிலே, ஷியா ஸுந்நி என்ற இரண்டு பிரிவுகள் உண்டாயின.

குரான் இஸ்லாம் மார்க்கத்திற்கு வேதம். இதை முஹம்மது நபி தம்முடைய வாக்காகச் சொல்லவில்லை,

கடவுளுடைய வாக்கு தேவதூதரின் மூலமாகத் தமக்கு எட்டியதென்றும் தாம் அதை ஒரு கருவி போலே நின்று உலகத்தாருக்கு வெளியிடுவதாகவும் சொன்னார்.

## 19. நவராத்திரி

[குறிப்பு : இத்தலைப்புடன் 1916-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ந் தேதி இரண்டு கட்டுரைகள் வெளியாகி உள்ளன. இக்கட்டுரை அந்த இரண்டில் எது என்று நிச்சயமாகத் தெரியவில்லை. அநேமாக அக்டோபர் மாதத்தில் வெளியாகி உள்ளதால் தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரை என்றே கருதவேண்டும். ஆனால் திட்ட வட்டமாகக் கூறமுடியாது. பாரதியார் தமது இஷ்ட தெய்வமான பராசக்தியைக் குறித்து எவ்வாறு நவராத்திரியைப் பூஜை செய்கிறோம் என்று சொல்லுகிறார். லக்ஷ்மி என்றும், சரஸ்வதி என்றும், பார்வதி என்றும் மூன்று மூர்த்தியாக நிற்பது பராசக்தி. இவ்வுலகத்தை ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற மூன்று தொழில் நடத்துவது பராசக்தியே என்கிறார் பாரதியார்.]

ஒன்பதிரவு பராசக்தியை பூஜை செய்கிறோம். லக்ஷ்மியென்றும், ஸரஸ்வதியென்றும், பார்வதியென்றும் மூன்று மூர்த்தியாக நிற்பது பராசக்தி. இவ்வுலகத்தை ஆக்கல், அழித்தல், காத்தல் என மூன்று தொழில் நடத்துவது.

ஹிமாசலந் தொடங்கிக் குமரி முனை வரை, வேதத்தை நம்பும் கூட்டத்தார் எல்லாம் இந்தப் பூஜை செய்கிறோம்.

ஏழைகளாக இருப்போர் பராசக்திக்கு மலரையும் நீரையும் உள்ளத்தையும் கொடுத்து வலிமை பெறுகிறார்கள். செல்வமுடையோர் விருந்துகளும் விழாக்களும் செய்கின்றனர். பக்தி செய்யும் செல்வரும் உண்டு.

மஹாளய அமாவாஸ்யை கழிந்தது.

இருளும் ஒளியும் மாறி வருவது இவ்வுலக இயற்கை. பகலிலே பெரும்பாலும் ஒளியுண்டு; மேகங்கள் வந்து சூர்யனை மறைத்தாலொழிய; சில சமயங்களில் கிரஹணம் பிடிக்கும். அதையும் தவிர்த்து விட்டால், இரவிலேதான் ஒளியின் வேறுபாடுகளும், மறைவுகளும் அதிகப்படுகின்றன. பகல் தெளிந்த அறிவு; இரவென்பது மயக்கம். பகலாவது விழிப்பு; இரவாவது தூக்கம். பகலாவது நல்லுயிர் கொண்டு வாழ்தல்; இரவு லயம். மஹாளய அமாவாசை ஒழிந்து போய்விட்டது.

சக்தி—நல்ல வல்லெழுத்துச் சேர்ந்த மொழி. விக்ரமாதித்யனும், காளிதாஸனும் வணங்கிய தெய்வம். "உலகத்தார் இந்த பராசக்தியை நல்ல மழையருள்புரியும் சரத்காலத்தின் முதல் ஒன்பதிரவும் வணங்கி பூஜைகள் செய்யவேண்டும்" என்பது பூர்வீகர் ஏற்பாடு. மிகப் பயனுடைய காரியம். மேலான வழி. கும்பகோணம் சங்கரமடத்தில் இந்த பூஜை மிகவும் கோலாஹலமாக நடத்தப்போவதாகப் பத்திரிகையில் ஒரு தந்தி போட்டிருந்தது. ஸஹஜமான விசேஷம். தேச முழுதும் [இப்படி] நடப்பது [நல்லது] சங்கர மடத்திலும் நடக்கிறது. [எனக்கு] ஒருவிதமான ஆவல் உண்டானதால் தந்தியை வாசித்துப்பார்த்தேன். அந்தத் தந்தியிலே பாதி சாஸ்திரம். வர்த்தமானத் தந்திக்குள்ளே சாஸ்திரத்தை நுழைத்தது ஒரு விநோதம். ஆனால், அதிற்கண்ட சாஸ்திரம் உண்மை

யாக இருந்தது. நான் எதிர்பார்க்கவில்லை. எனவே, தந்தியைப் படித்தபோது எனக்கு மகிழ்ச்சி யுண்டாயிற்று.

கும்பகோணத்துத் தந்தி பேசுகிறது:—"இந்தப் பூஜைகளின் நோக்கம் உலக நன்மை. நவராத்திரிக் காலத்தில் யோகமாயை துர்க்கை, லக்ஷ்மி ஸரஸ்வதி என்ற மூன்றுவித வடிவங்கொண்டு துஷ்டரை யெல்லாம் அழித்து, மனித ஜாதிக்கு மகிழ்ச்சி பெருக வைத்தாள். மனிதர் படும் துன்பத்தைத் தீர்க்கும் பொருட்டாக தேவி அவ்வாறு அவதாரம் செய்த காலமுதல் இன்றுவரை, பாரததேசத்தில் எல்லாப் பக்கங்களிலும் ஆரியர் இந்தத் திருவிழாவைக் கொண்டாடி வருகிறார்கள். தேவி உலகம் முழுவதிலும் பரவி யிருக்கிறாள். ஒவ்வொரு தனிப் பொருளிலும் நிறைந்து நிற்கிறாள். இவளே மாயை, இவளே சக்தி; செய்பவளும், செய்கைப் பயனும் இவளே; தந்தையும் தாயும், இவள்; இவளே பரப்பிரம்மத்தின் வடிவம். இவள் காத்திடுக" என்பது தந்தி.

உண்மைதான். ஆனால், "தேவி அவ்வாறு அவதாரம் செய்த காலம் முதல்" என்ற வாக்கியம் மாத்திரம் கதை. தேவி எப்போதும் அந்த வடிவங்களிலே நிற்கிறாள். ஆக்கல்; அழித்தல், காத்தல் என்ற முத்தொழிலும் எப்போதும் நடக்கின்றன. லோக ஸம்ரக்ஷணை எப்போதும் செய்யப் படுகிறது. எப்போதுமே ஆராதனை செய்யவேண்டும். சரத்காலத் துடக்கத்திலே பேரருளைக் கண்டு விசேஷ விழா நடத்துகிறோம். 'தவம், கல்வி, தெய்வத்தைச் சரண் புகுதல்,—இம்மூன்றும் கர்ம யோகம் (கிரியா யோகம்) 'என்று பதஞ்சலி முனிவர் சொல்லுகின்றார். லௌகிகக் கவலைகளாலே இம்மூன்று தொழிலையும் எப்போதும் செய்துகொண்டிருக்க முடியாமல் தடுக்கப்படும் சாமானிய ஜனங்கள் நவராத்திரி ஒன்பது நாள் இரவும் பகலும் மேற்

கூறிய மூவகை நெறியில் நிலைபெறும் வண்ணமான விதிகள் ஆகமங்களிலே கூறப்பட்டன.

ஒன்பது நாளும் தியானம், கல்வி, தவம் இவற்றிலே செலவிடத் திறமையில்லாதோர், கடைசி ஒன்பதாம் நாள் மாத்திரமேனும் விரதம் காக்க வேண்டும்; இந்தப் பூஜையின் பொருள் மிகவும் தெளிந்தது.

**சக்தியால் உலகம் வாழ்கிறது;**
**நாம் வாழ்வை விரும்புகிறோம்;**
**ஆதலால் நாம் சக்தியை வேண்டுகிறோம்.**

★